T01466
R001D02
T
1466

1659

ஸ்ரீ:

# சேரன் - செங்குட்டுவன்

1466

சென்னை யூனிவர்ஸிடி 'தமிழ் - லெக்ஸிகன்' ஆபீஸ்
தலைமைப் பண்டிதர்
இராமநாதபுரம்
**மு. இராகவையங்கார்**
எழுதியது.

THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATI ... TANJORE
RECEIVED
27 OCT 1956

[நான்காம் பதிப்பு]

1937

All rights Reserved.

[விலை ரூபா 1.]

| | | |
|---|---|---|
| First Published | ... | 1915 |
| Second Edition | ... | 1929 |
| Third Edition | ... | 1933 |
| Reprinted | ... | 1937 |

Printed at the R. G. Press,
G. T. Madras.

1466



பத்தினிதேவி ஆகிய கண்ணகி.

[முதற்பதிப்பின் முகவுரை பார்க்க.]

குரு. வேலுசாமி.

1659
1466

MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY
RECEIVED
27 OCT 1956
THE TANJORE · TANJORE ·

ஸ்ரீ:

# உரிமையுரை.

சிந்தைவரு புகழ்ச்சேரன் செங்குட்டுவன்
சரிதந் திகழு மிந்நூல்
விந்தைமிகு தருமதுரை வியனகரிற்
றமிழ்ச்சங்கம் விழைந்து கூட்டிச்
செந்தமிழின் வளம்பெருக்கிச் சிறியேனும்
பெருமைபெறச் செய்த வண்மைச்
சுந்தரனுந் தமிழ்ப்பாண்டித் துரைக்குரிமை
யாகிநலந் துலங்க மன்னோ.

ஆக்கியோன்.

# பொருளடக்கம்.

முகவுரைகள்.


அதி. 1. முன்னுரை பக்கம் 1

,, 2. சேரவமிசத்தோர் 5

செங்குட்டுவன் தந்தையும் அவன் மாற்றாந் தாயின் மக்களும் ... 10

சேரரின் மற்றொரு கிளையினர் ... 15

செங்குட்டுவன் சகோதரர் ... 20

——மனைவிமக்கள் முதலியோர் ... 24

——சுற்றத்தார் ... 25

,, 3. செங்குட்டுவன் போர்ச்செயல்கள் ... 26

,, 4. —காலத்து இரண்டு சரிதநிகழ்ச்சிகள் ... 34

1. கோவலன் கண்ணகிகள் வரலாறு ... ,,

2. மணிமேகலை வரலாறு ... 43

,, 5. செங்குட்டுவன் வடநாட்டியாத்திரை ... 47

வேடுவர் தங்கள் குறிச்சியிற் கண்ணகி பொருட்டுக் குரவைக்கூத்தாடியது ,,

செங்குட்டுவன் இமயத்தினின்று பத்தினிக் கல்லெடுத்துவர எண்ணியது 49

—வடநாட்டிற்செய்தபோரும், பத்தினிக்குக் கல்லெடுப்பித்ததும் 56

—பத்தினிப் படிவத்தைக் கங்கை நீராட்டித் தன்னாடு திரும்புதல் ... 65

அதி. 6. செங்குட்டுவன் பத்தினிக்கடவுளைப் பிரதிஷ்டித்தல்

நடுகல் ... 75

செங்குட்டுவன் பத்தினியை அவளூற்ரு ரோடும் வாழ்த்தியது ... 83

பத்தினி செங்குட்டுவனையும் பிறரையும் அநுக்கிரகித்தது ... 86

,, 7. செங்குட்டுவன் சமயநிலை ... 96

,, 8. செங்குட்டுவன் சமகாலத்தரசர் ... 100

சோழர் ... ,,

பாண்டியர் ... 104

சேரர்கிளையினர் ... 106

வேற்றரசர்கள் ... 108

,, 9. செங்குட்டுவனைப்பாடிய இருபெரும்புலவர்கள் 114

பரணர் ... 115

சாத்தனுர் ... 117

,, 10. செங்குட்டுவன் அரசியல் ... 124

,, 11. துறைதிசயங்கள் ... 139

,, 12. நாடும் தலைநகரமும் ... 154

சேரநாடு ... ,,

சேரர் தலைநகர் ... 157

,, 13. காலம் ... 192

,, 14. முடிவுரை ... 194

பொருட்குறிப்பு.

# PREFACE.

It doesn't require any very detailed statement of the reasons why a very correct knowledge and appreciation of the literature of a country are needed. For, the literature of a country is a mirror which reflects the civilization and institutions of a country very vividly in all its stages of development. That a knowledge of the country's past and of its progress or transition is essential by way of stimulus to future progress, is conceded by all. The Tamil land owes a deep debt of gratitude to Mahamahopadhyaya V. Swaminatha Ayer, for reintroducing the great classical epics and pieces of heroic poetry, that possess in a pre-eminent degree the merits and excellences due to literary masterpieces. Of them Pathirruppattu wholly, and Silappathikaram partly, deal with the Chera dynasty of the immortal lines of Tamil Kings. The History of that dynasty is still shrouded in considerable obscurity. Any works that bear upon them, and any exposition of works that would serve to enlighten the public as regards their history and the achievements of their Kings in peace and war, and any narrative that would popularise the stories of those kings would meet with a sure welcome from the eager Tamil-reading public

It gives me considerable pleasure to write a short prefatory note to the work of my friend, who, in undertaking to write in an easy elegant and classic prose, the life and times of such of the Chera Kings as can be gleaned from the said works and from the other historical sources, has rendered a public service. Mr. Pethachi Chettiar's love of Tamil, and

his readiness to help Tamil writers, and institutions, are well-known to the public. And his encouragement of the author in bearing the cost of this publication is highly praiseworthy.

This short work is certain to give a correct insight into the social and governmental polity of those times, and in particular, those of Cheran Senguttuvan. His prowess, his knightly virtues, his generous appreciation of his rival kings, his sense of the responsibilities of a king for the welfare, prosperity, and progress of his subjects, and his solicitude for the same, his piety, his councils of ministers, generals and learned men, and his deference to their advice, the equipment of his army, and his victorious march right up to the Himalayas and his generous recognition of the heroism of his victorious troops by personally conferring on them decorations and honours on the banks of the Ganges are described by Mr. M. Raghava Ayengar in the present work in easy and interesting prose with apt quotations at intervals. The major portion of his work is based on some of the chapters of the third book of Silappathikaram. The illuminating commentary of Adiyarkkunallar not being available for the Vanchikkandam of Siladpathikaram, the students that seek to study that portion of the epic are sure to find instruction and guidance in the pages of this book. And it goes without saying that Silappathikaram is itself a unique work in the literature of the world; for we have no instance of a similar work in any other literature by a Royal author who had given up the worldly pursuits, and taken holy orders. and yet was called upon to compose an epic dealing with many lay and temporal institutions, pleasures, and pastimes, the lives and habits and ideals of various castes and professions, in commemorating

the life of an ideally chaste and virtuous woman. Nor can we find a similar instance anywhere of a same Royal auth-or dealing impartially with the life and times of his brother and King Senguttuvan as also those of his rival kings. The moral fervour and the aesthetic perfection of that work are unsurpassed; and the descriptions of natural scenery are vivid and his narration of the story is entrancing. A stimulus to the study of that work and similar works is greatly added to by Mr. M. Raghava Ayengar in writing and publishing this work.

His dedication of the book to the memory of the founder and first President of the Madura Tamil Sangam, while it expesses the author's gratitude for him, is also appropriate in illustrating the principle for which the late Mr. Pandithurai Thevar, lived and worked, namely, the popularisation and improvement of the Tamil Language and Literature. Further, Mr. Pandithurai's labours in the vindication of the claims of the Tamil Language and Literature somewhat bear an analogy to the achievement of the hero of this work in vindicating the greatness of the Tamil Kings of those times.

Madura,
10—7—1935.

T. C. SREENIVASA AYENGAR,
*Secretary,*
The Madura Tamil Sangam.

ஸ்ரீ:

# முகவுரை.

[முதற்பதிப்பு.]

சேரன்-செங்குட்டுவனைப்பற்றி முன்னூல்களிற்கண்ட விஷயங்களை, நவீனமுறையில் ஆராய்ந்து ஒரு சரித்திரமாகத் தொகுத்தெழுதவேண்டும் என்பது எனது நெடுநாளவா ஆகும். இச்சேரனை நான் எடுத்துக்கொண்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது—பண்டைத் தமிழ்வேந்தருள்ளே இவன் பெருமைபெற்றவன் என்பதுடன், ஏனைத் தமிழரசரினும் இவன் வரலாறு சிறிது அதிகமாகவும் காணப்பட்டது. இரண்டாவது, என்னாராய்ச்சியிற்கண்ட சிலகருத்துக்களை வெளியிடுதற்கு இவன்சரித்திரமே ஏற்றதாயிருந்ததாகும். இவ்விருவகையாலும் நிகழ்ந்த என் சிறுவிருப்பத்தை இப்போது கைகூட்டுவித்த திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன். இவ்வாராய்ச்சிக்குச் செங்குட்டுவனைப்பற்றிய சிலப்பதிகாரவஞ்சிக்காண்டம் சிறந்த கருவியாயிற்று. அடியார்க்குநல்லாருரை இப்பகுதிக்குக் கிடையாதது விசனிக்கத்தக்கதாயினும், அவர்க்கும் முற்பட்ட அரும்பதவுரையொன்று வெளிவந்திருப்பது ஒருவாறு மகிழத்தக்கதே. இவ்வரும்பதவுரையைப் பெரும்பான்மை தழுவி, அக்காண்டத்தின் செய்யுணடையை இயன்றவரை உரைநடைப்படுத்தலானேன். செந்தமிழ்வளஞ் செறிந்துள்ள இளங்கோவடிகளது "பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின் - றெழுதத் தொடங்கினேன்" இல்லையாயினும், அவ்வடிகளது அரும்

பெருங்கருத்துக்களைத் தமிழபிமானிகளெல்லாம் அறிந்து மகிழவேண்டும் என்னும் பேரவாவே இம்முயற்சியில் என்னைத் தூண்டியது. இவ் வுரைநடையை "வடநாட்டியாத்திரை" "பத்தினிக்கடவுளைப் பிரதிஷ்டித்தல்" என்ற இரண்டதிகாரங்களாலும் அறியலாம். "வஞ்சிமாநகரம்" "செங்குட்டுவன் காலவாராய்ச்சி" என்ற விஷயங்கள் விவாதப்பட்டவையாதலால், அவற்றைப்பற்றிய என்னபிப்பிராயங்களைச் சிறிது விரித்தெழுதல் ஆவசியமாயிற்று. இவ்வதிகாரங்களில் விவரிக்கப்பட்ட என்கொள்கைகளை அறிஞர்கள் சோதித்துக்கொள்வார்களாயின், தமிழ்ச்சரித்திரத்தின் முக்கியமான பகுதியொன்று முடிவுபெற்றதாகும்.

செங்குட்டுவனைப்பற்றி ஆராய்வதற்கு இன்றியமையாத கருவிகளெல்லாம், எவர்கள்வாயிலாக நமக்குக் கிடைத்தனவோ, அப்பெரியாரை இங்கே மறவாதுவந்தித்தல் நம் கடமையாகும். மஹாமஹோபாத்யாய-ஐயரவர்கள் நம்பாஷைக்குப் புரிந்துள்ள மகோபகாரமன்றோ, இத்தகைய ஆராய்ச்சிகட்கெல்லாம் காரணமாகும்? இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாத அகநானூற்றுக்குறிப்புக்களை உதவிய ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீ-ரா. இராகவையங்கார் அவர்கட்கு என் வந்தனங்களை ஸமர்ப்பிக்கின்றேன். இவற்றுடன் யானெழுதிய இச் சிறுநூலை அபிமானித்துத் தம்மியற்கையான உதாரகுணத்தாலும் தமிழபிமானத்தாலும் இதன் பதிப்புக்குவேண்டிய உதவிபுரிந்த ஸ்ரீமாந். S. Rm. M. Ct. பொத்தாச்சிச்செட்டியாரவர்கள் பெருந்தகைமை என்னால் ஒருபொழுதும் மறக்கத்தக்கதன்று. இச்சரித்திர நாப

கனை சேரர்பெருமான் வீற்றிருந்தாட்சிபுரிந்த வஞ்சிமா நகரின் பரிபாலனத்தலைமை பூண்டுள்ள இப்பிரபுவுக்கு, அவ்வனது சரித்திர நூலை ஆதரிக்கும் உரிமையும் இயல்பினுண்டன்றோ? இவர்கள், அறிவுதிருவாற்றல்களுடன் நீடு வாழ்ந்து தமிழ்வளர்ச்சி புரிந்துவரும்படி திருவருள் பெருகுவதாக.

இச்சரித்திரநாயகனால் தெய்வமாக வணங்கப்பெற்ற பத்தினிதேவி(கண்ணகி)யின் செப்புத்திருமேனி யொன்று "லண்டன்-பிரிட்டிஷ்-மியூஸிய"த்தில் இருந்ததை டாக்டர். ஆநந்தகுமாரஸ்வாமியவர்கள் பிரதிசாயையெடுத்துப் பிரசுரித்திருக்கிறார்கள்.[1] அப்பிரதிமை, இலங்கையினின்று 1830-ம் வருஷம் இங்கிலாந்துக்குக் கொண்டுபோகப்பட்டதாம். அப்பத்தினிதேவிபடிவத்துக்கு ஒரு பிரதியெடுத்து இந்நூலுட் சேர்த்திருக்கின்றேன். இளங்கோவடிகள் கூறியபடி செங்குட்டுவன்காலத்தே இலங்கையிற் கயவாகுவால் பிரதிஷ்டிக்கப்பட்ட பத்தினியின் சரியானசாயலை இது காட்டுவதுபோலும்.

சிலப்பதிகார மணிமேகலைப்பதிப்புக்களில், ஐயரவர்களால் நன்கெழுதப்பட்டுள்ள கண்ணகி மணிமேகலைகளின் சரித்திரச்சுருக்கங்களைப் பெரும்பான்மை தழுவியே, "செங்குட்டுவன்காலத்து இரண்டு சரிதநிகழ்ச்சிகள்" என்ற அதிகாரம் வரையப்பட்டது. இப்பதிப்பினிறுதியிற் சேர்த்

1. Selected Examples of Indian Art. Plate XXXIII —Pattini Devi.

திருக்கும் அநுபந்தமுதலியவற்றை நூலுடன் சேர்த்துப் படித்துக்கொள்ளுதல் முக்கியமாகும். இவற்றுள், பொருட் குறிப்பிலே சில அரும்பதங்கட்கு அருத்தங்களும் காட்டப் பட்டிருக்கின்றன.

இந்நூற்பதிப்பைச் சிறப்பித்தற்குரியவற்றை யெல் லாம் அன்புடன் செய்துதவிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்க்கு என்றும் நன்றியறிதற் கடப்பாடுடையேன். இதுபோலும் சரித்திரகிரந்தங்களில் அபிப்பிராயபேதங்கள் நிகழக்கூடி யது இயல்பாதலால், அறிஞர் என் குற்றங்குறைகளைப் பொறுத்தருள்வாராக.—மதுரை, 1—2—15.

———

[இரண்டாம்பதிப்பு]

சேரர்பெருமானுன செங்குட்டுவன்வரலாறுபற்றி இற் றைக்கு 14-ஆண்டுகட்குமுன் யான் எழுதிவெளியிட்ட சரித நூல், அறிஞர்களின் மதிப்பிற்கும் விமரிசனத்துக்கும் உரிய தாயமைந்ததற்குப் பெரிதும் மகிழ்கின்றேன். இவ்வேந்த னதுவாழ்க்கையின் ஒருபகுதியை இனிதுவிளக்குவதும், அடியார்க்குநல்லாருரை இன்மையால் அறிதற்கரியதும் ஆகிய சிலப்பதிகார வஞ்சிக்காண்டமுழுமையும் செவ்விதின் ஆராய்ந்து முதன்முதலாக நான் உரைநடைப்படுத்தியதி னின்றும், புதிய சரித்திரச்செய்திகள் பலவற்றை அதனில் வெளியிட்டதினின்றும் செங்குட்டுவன் விளங்கிய சங்க காலநிலையைப்பற்றிய தமிழாராய்ச்சி பின்பு பெருகுவதா

யிற்று என்பது தமிழ்மக்கள் பலரும் நன்கறிவர். இத்தகைய பயன் என் நூலால் விளைந்ததற்கு உண்மையில் உவக்கின்றேனாயினும், அவ்வுவப்பினிடையே உண்டாகிய வெறுப்பு நிகழ்ச்சியொன்றையும் இங்கு யான் வெளியிடாமலிருக்கக் கூடவில்லை. செங்குட்டுவன்வரலாற்றை நான் வெளியிட்டதற்குமுன், அவ்வேந்தன் சரிதத்தை விரிவாக ஆராய்ந்தெழுதியவரேனும், வஞ்சிக் காண்டத்தை இளங்கோவடிகளது கருத்துப்பிறழாது வசனநடைப்படுத்தியவரேனும் எவருமே இலர். என் நூல் வெளிவந்து பலவாண்டு கழிந்த பின்பு, இச்சோன்வரலாறுகளைத் தாமே ஆராய்ந்து எழுதியவர் போலவும், சிலப்பதிகாரத்தின் இறுதிக் காண்டத்தை நடைப்படுத்தியவர்போலவும் என் கருத்துக்கள் பலவற்றைத் தங்கள்நடையில் மாற்றியெழுதி—'பத்தினிப் பிரதிஷ்டை' 'செங்குட்டுவன்' முதலிய பெயர்களால் என் பெயர் குறியாமலே புத்தகமச்சிட்டுப் பரப்பிவருகின்றனர் சிலர். இளங்கோவடிகளது கருத்துப்பிறழவும், மூலநயங் கெடவும் பொருள்வருவாயொன்றே கருதிப் பிறரதுழைப்பையும் கருத்தையும் இவ்வாறு தம்மவையாக்கிக் கொண்ட இன்னோர்செயலை அறிஞர்கள் என்னென்பரோ, அறியேன்! இது கிடக்க.

'சேரன் - செங்குட்டுவ'னது முதற்பதிப்புத் தமிழ்மக்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டவாறே, சென்னைச் சர்வகலா சங்கத்தாராலும் பலவருஷங்கட்குமுன் பரீக்ஷா பாடமாக நியமிக்கப்பெறும் கௌரவம் அடைந்தது. அச் சங்கத்தாரை அடியொற்றி, மைசூர் கொழும்பு யூனிவர்ஸிடி

யார்களும் அவ்வாறே பாடமாக நியமிக்கலாயினர். இப்போது மறுமுறையும் நம் யூனிவர்ஸிடியார் 1931-ஆம் ஆண்டு இன்டேர் - மீடியேட் (Intermediate Examination) பாடங்களுள் ஒன்றாக இச்சரிதத்தைத் தெரிந்தெடுத்திருப்பது, ஆராய்ச்சிநூல்களில் அவர்கட்குள்ள அபிமானத்தைப் புலப்படுத்துகின்றது. நம் சேரன்-செங்குட்டுவன் இங்ஙனம் இரண்டாமுறை தமிழகத்தே உலாவருதற்கு அச்சங்கத்தார் காட்டிய பேரபிமானமே சிறந்தகாரணம் என்பதை நான் கூறவும் வேண்டுமோ?

இவ்விரண்டாம் பதிப்பில் இன்றியமையாத திருத்தங்களும், கீழ்க்குறிப்புக்களும், அரியவாகக் கண்ட புதிய செய்திகளும் ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ளன. அன்றியும், சேரர் தலைநகராகிய வஞ்சிமாநகர்பற்றி யான் முதலில் எழுதிய ஆராய்ச்சிப்பகுதி தமிழறிஞரால் தக்கவாறு விமரிசனஞ் செய்யப்பட்டுவந்ததில், யான்கண்ட முடிபே தமிழ் மக்கள் பலராலும் ஏற்கப்பெற்று உறுதி பெறுவதாயிற்று. இவ்விமரிசனங்களுள், ஸேதுஸம்ஸ்தானம் மஹாவித்வானும், என் அரும்பெறல் அத்தைமகனுருமாகிய ஸ்ரீமாந்: ரா. இராகவையங்கார் அவர்கள் வெளியிட்ட வஞ்சிமாநகர் என்ற நூலை உண்மைகள் பலவற்றை ஒருமுகமாக விளக்கிநிற்பது என்பது யான் சொல்லவேண்டாததாம். 'கொங்குநாட்டுக் கருவூரே ஆதிச் சேரர்தலைநகர்' என்று யான் முதலிற்காட்டிய முடிபினைத் தம் அரியபெரிய நூலறிவாலும் நுட்பமதியாலும் நிலைபெறநாட்டிய ஐயங்காரவர்களது அருங்கருத்துக்களில் வேண்டியவற்றையும், அவர்கள்

நேரில் தெரிவித்திருந்த புதியசெய்திகளையும் 'சேரர்தலை நகர்' என்ற இந்நூலதிகாரத்தே சேர்த்திருக்கின்றேன். செங்குட்டுவனது காலம்பற்றி யான் முதற்பதிப்பில் எழுதியவற்றைப் புதியவாகக்கண்ட செய்திகளுடன்வைத்து இப்போது சோதனைசெய்து வருதலால், அதனைத் தனியே வெளியிடக்கருதி இங்கு நிறுத்திக்கொள்ளலாயிற்று. இவ்வாறாகச் சேரன் - செங்குட்டுவன்சரித்திர நூலின் இரண்டாம்பதிப்பை இனிது நிறைவேறும்படி செய்வித்த எம்பெருமான் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.—திருவல்லிக்கேணி, 1 - 6 - 29.

[மூன்று நான்காம் பதிப்புக்கள்.]

இரண்டாம் பதிப்பில் உள்ளபடியே பெரும்பாலும் மூன்றாம்பதிப்பு அமைந்துளதாயினும், சிற்சில திருத்தங்களும் குறிப்புக்களும் புதியவாகத் தெரிந்தசெய்திகளும் அங்கங்கே இதனில் அமைக்கப்பட்டுள்ளன. அவை அறிஞர் ஆராய்ச்சிக்கு உரியனவாம்—திருவல்லிக்கேணி, 10-11-'33

நான்காம்பதிப்பு அம்மூன்றாம்பதிப்பில் உள்ளவாறே அமைந்ததாகும்.

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்,
"தமிழ் - லெக்ஸிகன் கமிட்டி"
தலைமைப்பண்டிதர்.

திருவல்லிக்கேணி
15—7—'37.

ஸ்ரீ:

# சேரன் - செங்குட்டுவன்.

## 1-ம் அதிகாரம்

## முன்னுரை.

புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்து அமைந்த புராதன ராஜ்யங்களுள்ளே, சேர சோழ பாண்டிய நாடுகள், தக்ஷிணத்தில் விளங்கிய சிறந்ததேசங்களென்பது யாவரும் அறிந்ததாம். இவ்வரசுகளை முதன்முதல் நாட்டிய முன்னோர் இன்னாரென்றேனும், இவை தாபிக்கப்பெற்ற காலம் இஃதென்றேனும் இதுவரை எவரும் அளந்து கண்டவரல்லர். வான்மீகம்போன்ற புராதன வடமொழிக்காவியங்களிலும், அசோக சக்கரவர்த்தியதுபோன்ற ஆதி சிலாலிகிதங்களிலும் இம் முத்தமிழ்நாட்டு மக்களையும் பற்றிக் கௌரவமாகவே பிரஸ்தாபிக்கப்படுதலால், இன்னோரது பழமையும் பெருமையும் அறிஞர்களால் ஐயமின்றிக் கொள்ளப்படுகின்றன. அதனால் 'படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டுவருங் குடிகள் இம் மூவேந்தரும்' என்று பரிமேலழகியார் எழுதிய முறையே [1] நாமுங் கூறிவிடுதல் பொருந்துமெனலாம். இவ் வேந்தர்களாட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பு முழுதும் வடவேங்கடந் தென்குமரிகட்கு இடைப்பட்டதாகும். "வண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்பின்" [2]

---

1. திருவள்ளுவர், குடிமை, 5. உரை.
2. தொல்காப்பியம், பொருளதி. செய். 78.

என்றார் தொல்காப்பியனாரும். இந் நிலப்பரப்பு, தமிழ்நாடு தமிழகம்[1] என வழங்கப்படும்.

இங்ஙனம் பழமையும் பெருமையும் படைத்த சேர சோழ பாண்டியர்களுள், முதற்கணுள்ளவரே இச் செங்குட்டுவனது சரித்திர நூலுக்கு ஏற்புடையராவர். இவர்கள், சேரர், சேரலர் எனத் தமிழினும், கேரளர் என வடமொழியினும் வழங்கப்படுவர். இவ் வேந்தரது பூர்வசரித்திரமானது, ஏனைச் சோழபாண்டியருடையன போலவே செவ்விதின் அறியப்பட்டிலதேனும், பண்டை யிலக்கியங்களிற் கூறப்படுமளவில், இவரது அருமையும் பெருமையும் வேண்டியவளவு விளங்குகின்றன. செந்தமிழ் வளர்த்தவர் என்ற சிறப்புப் பாண்டியர்க்குரியதாகப் பழைய வழக்குள்ளதென்பது உண்மையே. ஆயினும், இக்காலத்து வெளிவந்துள்ள சங்கநூல்களை ஆராய்வோமாயின், தமிழ்வளர்த்த பெரும் புகழிற் சேரருந் தக்கபகுதி பெறுதற்குரியர் என்பதோடு, அறிவுதிருவாற்றல்களில் இன்னோர் ஏனைத் தமிழ்வேந்தர்க்குச் சிறிதும் குறைந்தவரல்லர் என்பதும் புலப்படும். இங்ஙனம் நூல்களிற்கண்ட சேரர் பெருமை யனைத்தையும் இங்கே விவரிப்பது எம் கருத்தன்று. ஆனால், இவ் வம்சத்தவருள்ளே, கடைச்சங்கநாளில் விளங்கிய பிரசித்த வேந்தரொருவனைத் தமிழறிஞரும் சரித்திர நூலோரும் சிலகாலமாக நன்கு தெரிந்திருக்கின்றனர். இவன் பெயர் சேரன் - செங்குட்டுவன் என்பது.[2] தமிழ் நாட்டின் பழைய நிலைகளை ஆராயப்புக்க பண்டிதர் சிலர் தமிழ்ச்சரிதவுண்மை சிலவற்றைக் கண்டு வெளியிட்டதற்குப் பேருதவியாக நின்றது, இச் சேரவேந்தனது வரலாறேயாம். அதனால், வழிதிசை தெரியாமலிருந்த தமிழ்ச்சரிதத் துறையொன்றைக் காட்டி

1. சிலப். 3. 37; பதிற்றுப். 2-ம் பதிகம்; புறம் - 168.

2. 'சேரன் செங்குட்டுவனார்' என்று இளம்பூரணவடிகள் வழங்குதலுங் காண்க (தொல். அகத். 30, உரை).

திற்கும் தீபஸ்தம்பம் போன்றவனாகிய இச் செங்குட்டுவனைக் கூறல் தகும். இவ்வரசனது வரலாறுகளாக முன்னூல்களுட் கூறப்பட்டவற்றை ஒருசேர ஆராய்வதனால், சேரவமிசத்தின் பழைய செய்திகள் மட்டுமன்றி, தமிழ்ச்சரித்திரத்தின் முக்கியமான பகுதியையும் நம்மவர் அறிந்துகொள்ள இடமுண்டாம். ஆனால், செங்குட்டுவன் சரித்திரத்திற்குப் பழைய நூல்கள் சிலவேயன்றிச் சாஸன உதவியொன்றும் இதுவரை நமக்குக் கிடைத்திலது. இதனால், எத்துணை இலக்கியப் பிரமாணங்கொண்டு விளக்கினும், சாஸனபரிசீலனை ஒன்றேயுடையார்க்கு நம்மாராய்ச்சியில் முழுநம்பிக்கையும் உண்டாதல் அரிதேயாம். ஆயினும், பண்டை நூல்கள் ஒற்றுமையுடன் கூறுஞ் செய்திகளை மதித்துத் தழுவிக்கொள்ளுதல் இன்றியமையாதது என்பதை நல்லறிஞரெவரும் மறுக்கார். பழைய இலக்கியங்களிற் கண்ட சரித்திரவுண்மைகள் காலாந்தரத்திற் கிடைக்கும் சாஸனவுதவியால் வலிபெற்றுவருதலை நாம் கண்டுவருதலால், சங்கச் செய்யுட்களையே சிறந்த ஆதாரமாகக்கொண்டு நிகழ்த்தப்பெறும் இவ்வாராய்ச்சியும் பயன்றரத்தக்கதென்றே நம்புகின்றோம்.

இனி, செங்குட்டுவனது வரலாறுகளை அறிவதற்குச் சாதனமாகக் கிடைத்துள்ள இலக்கியக்கருவிகளை நோக்குமிடத்து, அவை பெரிதும் மதிப்புக்குரியன என்பதில் ஐயமில்லை. என்னெனின், இவ் வேந்தர்பெருமானுடன் பிறந்தவரான இளங்கோவடிகள் தாமியற்றிய சிலப்பதிகாரத்தில் ஒரு காண்டமுழுதும், தம் தமையனது வாழ்க்கையின் ஒரு பகுதியை நேரிலறிந்தவாறு விளக்கியிருக்கின்றார். இவ்வாறு வெற்றிவேந்தனொருவன் செய்திகள் அவன் சகோதரராலே விரித்துரைக்கப்படுமாயின் நாம் அவற்றை நம்பத் தடையுமுண்டோ? அன்றியும், அங்ஙனம் பாடியவர் தமது பெரும் பதவியையும் துறந்துநின்ற ராஜருஷியா

யிருப்பது, அவரது வாக்கின் தூய்மையையே வற்புறுத்து வல்லதீ: "முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது - அடிகள் நீரே யருளுக" என்று, அவரது நடுநிலைமையைப் புகழ்ந்தனர் அவர் காலத்துப் புலவரும். இதற்கேற்ப, செங்குட்டுவன் வரலாறுபற்றிய சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்தைப் படித்து வருவோரெவர்க்கும் கற்பனைகள் பெரிதுங் கலவாதது அப்பகுதி என்பது விளங்கத் தடையில்லை. இனிச் செங்குட்டுவனாலும் இளங்கோவடிகளாலும் நன்கு மதிக்கப்பெற்றவரும் புலவர்பெருமானுமாகிய சாத்தனாரால் இயற்றப்பெற்ற மணிமேகலையென்னும் நூலினும், இளங்கோவடிகள் கூறியவற்றோ டொத்தசெய்திகள் பல காணப்படுகின்றன. இவற்றுடன், பழைய புலவர் பலரால் சேரவரசர் பெருமைகள் புகழ்ந்து கூறப்பட்ட பதிற்றுப்பத்து என்னுந் தொகைநூலுள், பரணர் பாடிய ஐந்தாம்பத்து முழுமையும் இச்சேரனைப்பற்றி அமைந்துள்ளது. இப்பத்தினை, அப்புலவர்பெருமான் செங்குட்டுவன்முன்னர்ப் பாடி, அவனால் மிகுதியும் சம்மானிக்கப்பெற்றவர் என்பது, அதனிறுதிப் பதிகத் தொடர்களால் தெளிவாகின்றது. ஆகவே, இவ்வாராய்ச்சிக்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை, பதிற்றுப்பத்து என்பவை சிறந்த சாதனங்களாகும். இவையன்றிச் சங்கச் செய்யுட்கள் சிலவும் வேறு புறக்கருவிகளும் உரிய வளவில் உபகாரப்படுவன. இங்ஙனங் கிடைத்துள்ள சாதனங்களைக்கொண்டு செங்குட்டுவன் வரலாற்றையும், அவன் முன்னோரைப்பற்றிய செய்திகளையும், அவன்காலத்து அரசர் புலவர்களின் சரிதங்களையும், மற்றும் பல நிகழ்ச்சி நிலைமைகளையும் இனி விரித்துக்கூற முயல்வோம்.

## 2-ம் அதிகாரம்

## சேர வமிசத்தோர்.

செந்தமிழ் வேந்தர் மூவருள்ளே, செங்குட்டுவன் பிறந்த சேரவமிசத்தின் ஆதியுற்பத்தி எதனிலிருந்து தொடங்கியது என்பதை அறிதல் இப்போது அரிதாகும். சோழர் சூரியவமிசத்தவராகவும்[1] பாண்டியர் சந்திரவமிசத்தவராகவும்[2] பண்டை நூல்களிற் கூறப்பட்டிருத்தல்போலச் சேரவரசர் இன்னமரபினர் என்பதை நூல்கள் தெளிவுபடுத்தினவல்ல. பிற்காலத்தோர் இவ்வேந்தரை அக்கினிகுலத்தவராக[3] வழங்கினரேனும், அக்கொள்கைக்குப் பழைய தமிழாதாரங் கிடையாதிருத்தல் வியப்பாயுள்ளது.[4] ஆயினும், இவரை வானவர் என்ற பெயராற் பண்டை நூல்களும் நிகண்டுகளும் குறிக்கின்றன. இதனால், இவ்வமிசம் ஆதியில் தெய்வசம்பந்தம் பெற்றதென்பதுமட்டில் தெளிவாகும்.[5] சோழபாண்டியர் வமிசங்கள் இன்ன என்பதைக் குறித்துப்போந்த பண்டைநூல்கள், சேர வமிசத்தின்

---

1. "செங்கதிர்ச் செல்வன் றிருக்குலம்" (மணிமே. பதிகம். 9.)

2. "திங்கட் செல்வன் றிருக்குலம்" (சிலப். 11. 23.)

3. "இவன்செந் தழலோன் மரபாகி யீரேழுலகும் புகழ்சேரன்" (வில்லிபாரதம், திரௌபதிமாலை. 45.) எனக் காண்க. பிற்காலத்தவரான கொங்குச்சேரர்கள் தம்மைச் சந்திராதித்தியகுலத்தவராகக் கூறிக்கொள்வர் (ஆழ்வார்கள் காலநிலை, 171-ஆம் பக்கம் பார்க்க).

4. சோழ பாண்டியரைச் சந்திரவமிசத்து யயாதிவழியிலுதித்த ஒருகிளையினராக ஹரிவம்சம் கூறும். ஆனால் இதற்குப் பண்டைத் தமிழாதாரம் காணப்படவில்லை.

5. வானவர் (Celestials) என்ற பெயர் சீனர்க்கு இன்றும் வழங்கி வருதலால், சேரர் ஆதியில் சீனதேசத்தினின்று வந்தவராக ஸ்ரீ. வி. கனகசபைப்பிள்ளையவர்கள் கருதினர் (The Tamils 1800-years ago, p. 52).

மூலத்தைமட்டும் அறியாதொழிந்ததை நோக்குமிடத்து, இம்மரபு ஏனையவற்றினும் புராதனமானதென்றே புலப்படு கின்றது. இக்கொள்கையை வலியுறுத்தும் மற்றொரு குறிப்பு முண்டு. அஃதாவது, வழக்கிலுள்ள 'சேர சோழ பாண்டியர்' என்னுந் தொடரில் சேரர் முற்படக் கூறப்படுதலேயாம். இங்ஙனங் கூறுவது, உலகவழக்கில் மட்டுமன்றிச் செய்யுள்வழக்கிலும் அடிப்பட்டதொன்றாகும். புறநானூறு தொகுத்த புலவர் மூவேந்தருட் சேரரைப்பற்றிய பாடல்களை முன்னரும், ஏனையிருவர் பாடல்களைப் பின்னரும் வைத்து முறைப்படுத்திருத்தலும், சிறுபாணாற்றுப்படையுள்ளும் இங்ஙனமே குட்டுவன் (சேரன்), செழியன், செம்பியன் என்னுமுறை கூறப்படுதலும்[1] இங்கு நோக்கத் தக்கன. "போந்தை வேம்பே யாரென வரூஉ - மாபெருந் தானையர்"[2] என, இச்சேரர்மாலையினையே முதற்கண் ஓதுவாராயினர் தொல்காப்பியனாரும். மேற்காட்டியவற்றுள், சேர பாண்டிய சோழர் என்னும் முறைவைப்பும் காணப்படினும், முன்னோரெல்லாம் சேரரை முதற்கண்வைத்துக் கூறுவதில் ஒத்திருத்தல் குறிப்பிடற்பாலதாம்.[3]

இனி, இச்சேரரது நாடும் ஊரும் புராதனவடநூல்களினும் கூறப்பட்டுள்ளன. வடமொழியாதிகாவியமாகிய வான்

1. அடி - 49, 65, 82.

2. தொல்காப்பியம், பொருளதி. புறத். 5. 3. மூவரசருள்ளும் பாண்டியனை முற்படவைத்து இளங்கோவடிகள் பாடியதைப் பற்றிக் கூறுமிடத்து—"இவ்விற்றுட் சேரனை முற்கூறாது பாண்டியனை முற்கூறிய தென்னை யெனின், இது மதுரைக் காண்டமாதலானும், இக்காப்பியஞ் செய்தவர் விழைவு வெறுப்பற்ற சேரமுனியாதலானும், 'முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது' எனச் சாத்தர்கூறினமையானும் என்க" என்று அடியார்க்குநல்லார் எழுதியதும் காண்க (சிலப். 17, 'முந்நீரினுள்'-உரை).

ஸ்ரீராமாயணத்தே, சீதாதேவியை வானரவீரர் தேடிவரும்படி சுக்ரீவன் குறிப்பிட்ட இடங்களுள் கேரளநாடும் முரசீபத்தனமும்[1] உரைக்கப்பட்டுள்ளன. இவற்றுள், முரசீபத்தனமென்பது மேல்கடற்கரையிலுள்ள முசிரிஎன்னும் பட்டினமாகக் கருதப்படுகின்றது. இது முற்காலத்தே சுள்ளியென்னும் பேரியாறு கடலுடன்கலக்குமிடத்து விளங்கிய பெருந்துறைமுகமாகவும், சேரனுடைய தலைநகரங்களுள் ஒன்றாகவும் இருந்ததென்பதும், மேனாட்டு யவனாதி மரக்கலங்கள் மிளகு முதலிய பண்டங்களை ஏற்றிச்செல்வதற்கு இதுவே அக்காலத்தில் ஏற்ற நகராயிருந்த தென்பதும் தமிழ்நூல்களாலும்[2] தாலமிமுதலிய பழைய யவனாசிரியர் குறிப்புக்களாலுந் தெளிவாகின்றன. இம்முசிரியிருந்தவிடத்திற் பிற்காலத்துத்தோன்றிய நகரமே மகோதை என்ற கொடுங்கோளூராகும். ஆகவே சேரநாட்டையும் அதன்முக்கியநகரமொன்றையும் வான்மீகிமுனிவருங் குறிப்பிட்டமை தெரியலாம். இனி மற்றொரு புராதன இதிகாசமாகிய மகாபாரதத்தும் சேரர் செய்திகளை நாம் காணக்கூடும். பாரதப்போரில், பாண்டவர் பக்கத்தினின்று சேரர் துணைபுரிந்தவரெனப் பொதுவாக அவ்விதிகாசத்தால் அறியப்படினும் உதியஞ் சேரல் என்பான் அப்பெரும்போர் முடியுங்காறும் அச்சேனைகட்கு உணவளித்தவ னென்று தமிழ்நூல்களிற் சிறப்பிக்கப்படுகின்றான். இதனையே தலைச்சங்கப் புலவராகக் கருதப்படும் முரஞ்சியூர் முடிநாகராயர் என்பார்—

"அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை

---

1. கிஷ்கிந்தாகாண்டம், 43 ம் ஸர்க்கம், 12-ம் சுலோகம்.

2. அகநா. 149; இதனை மரீசிபத்தனம் என்பர், வராகமிகிரர் (பிருஹத்ஸம்ஹிதை).

யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்." 1

என அவ்வரசனை நேரிற்பாடுதலால் அறிக. இச்செய்தி யையே இளங்கோவடிகளும்—

"ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த, சேரன்"2

எனக் கூறுவாராயினர். இனிச் சாஸனவழியே நோக்கு மிடத்தும், இச்சேரவமிசத்தின் பழைமை தெளியப்படும். இற்றைக்கு 2160-வருஷங்கட்கு முன் விளங்கியவனும் மௌரிய சக்கரவர்த்தியுமாகிய அசோகனது காலத்தே இவ் வமிசத்தவர் கேரளபுத்திரர் என வழங்கப்பெற்றுத் தென் னாட்டில் பிரபலம் பெற்றிருந்த செய்தி அவன் சாஸனத் தால் நன்கறிந்தது.[3] இச்சக்கரவர்த்தியின் குடைக்கீழ் இப் பரதகண்டத்தின் பெரும்பாகம் அடங்கியிருந்த காலத்தும், தமிழ்நாடு தனியே சுதந்தரம் பெற்றிருந்ததெனின், சேரர் முதலிய பழைய தமிழரசரின் பெருமை இத்தகைத்தென் பது கூறவும் வேண்டுமோ?

இனி, இவற்றை விடுத்துச் சங்கச்செய்யுட்களிற் கூறப் பட்ட சேரவரசரை நோக்குவோம். பதிற்றுப்பத்து, புறநா னூறுமுதலிய நூல்களிலே சேரவரசர் பலரைக் காணலாம். இவற்றுட் பதிற்றுப்பத்துமுழுமையும் சேரவமிசத்தவரைப் பற்றியதென்பது முன்னரே கூறப்பட்டது. இதுவரை அகப்படாத இதன் முதலும் இறுதியுமாகிய பகுதிகள் நீங்க, எனையெட்டுப் பத்துக்கள் மஹாமஹோபாத்தியாய

1. புறம். 2.
2. சிலப்பதிகார வாழ்த்துக் காதை, ஊசல்வரி.
3. V. A. Smith's Early History of India. p. 173.

ஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்களால் நமக்குக் கிடைத்துள்ளன. ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு சேரனது அருமை பெருமைகளைக் கூறுவதாய், ஒரொரு புலவராற் பாடப்பெற்றதாம். இப்பத்துக்கள் ஒவ்வொன்றன் முடிவிலும் பதிகங்களும் வாக்கியங்களும் இந்நூலைத் தொகுத்த புலவரால் அமைக்கப்பட்டுள்ளன. தொகுத்த புலவர் இன்னாரென்பது தெரியவில்லையேனும் பழமையுடையராகவே தோற்றுகின்றார். அவர் கூற்றாகவுள்ள பதிகங்களும் வாக்கியங்களும் அவ்வச்சேரனைப்பற்றிய செய்திகள் பலவற்றை அறிவிப்பதோடு, பாடினோர்பெயர் முதலிய வரலாறுகளையும், அப்புலவர் பெற்ற பரிசில்களையும், பாடல்பெற்ற அரசரது ஆட்சிக் காலங்களையும் நன்கு விளக்குவனவாம். இந்நூலிற்கண்ட செய்திகளால், செங்குட்டுவனுட்படச் சேரர் எண்மர் வரலாறுகளைச் சுருக்கமாக நாம் தெரியலாம். அவர்களை அடியில் வருமாறு காண்க.

(1) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.
(2) பல்யானைச் செல்கெழுகுட்டுவன்.
(3) களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்.
(4) கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்.
(5) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.
(6) செல்வக் கடுங்கோ வாழியாதன்.
(7) பெருஞ்சேர லிரும்பொறை.
(8) இளஞ்சேர லிரும்பொறை.

[தந்தையும் மாற்றாந்தாய் மக்களும்.]

மேற்கூறிய சேரர்கட்கும் செங்குட்டுவனுக்கு முள்ள தொடர்பை இனி ஆராய்வோம். பதிற்றுப்பத்தினுள் செங்குட்டுவனைப்பற்றிய ஐந்தாம்பத்துப் பதிகத்துள், அவன், "வடவ ருட்கும் வான்றோய் நல்லிசைக் - குடவர் கோமான் நெடுஞ் சேரலாதனுக்கு" மகன் என்று கூறப்படுகின்றான். இதனால் இரண்டாம்பத்தில் புகழப்படும் இமயவரம்பன் - நெடுஞ்சேரலாதனே நம்சேரன் தந்தை என்பது விளங்கும். "ஆரியர் துவன்றிய பேரிசை யிமயந் - தென்னங் குமரியொ டாயிடை, மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே" [2] என இவனது வடதிசை வெற்றியை அவ்விரண்டாம்பத்தே குறிப்பிடுதல் காண்க. செங்குட்டுவன் உடன்பிறந்தவரான இளங்கோவடிகள், இமயம்வரை வெற்றிப்புகழ் பரப்பிய தம் தந்தை செயலை இணைத்துக் "குமரியொடு வடவிமயத் - தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்கு...சோழன்மக ளீன்ற மைந்தன்" எனத் தம் தமையனைக்கூறுதலும் இங்கு அறியததக்கது.

இந் நெடுஞ்சேரலாதன், உதியஞ்சேரல் என்ற வேந்தனுக்கு வெளியன்வேண்மான்மகள் நல்லினியிடம் பிறந்தவன். இவனது அரிய செயல்களாவன:—இமயம்வரை படையெடுத்துச் சென்று அம்மலைமேல் தன் இலாஞ்சனையாகிய வில்லைப் பொறித்தது; தமிழகமுழுமையுந் தன் செங்கோலின்கீழ் வைத்தாண்டது; தன்னுடன் பொருத ஆரிய அரசரை வென்று அவரை வணங்கச் செய்தது; யவன அரசரைப் போரிற்பிடித்து, அக்காலவழக்கின்படி நெய்யை

1. இங்ஙனங் குறிக்குமிடமெல்லாம், பதிற்றுப்பத்தினையே கொள்க. 2. பதிற்றுப். 11.

அவர் தலையிற்பெய்து கையைப் பின்கட்டாகக்கட்டி, அவரி டத்தினின்றும் விலையுயர்ந்த அணிகளையும் வயிரங்களையும் தண்டமாகப்பெற்று, அவற்றைத் தன் தலைநகராகிய வஞ்சியி லுள்ளார்க்கு உதவியது; கடலிடையே தீவொன்றில் வசித்த தன் பகைவர்மேற் கப்பற்படையுடன் சென்று, அவரது காவன்மரமான கடம்பை வெட்டியெறிந்து, அப்பகைவரைப் போர்தொலைத்தது முதலியனவாம்.[1] இவற்றுள் இறுதியிற் கண்ட சேரலாதன்பகைவர், கடம்பைத் தம் குலமரமாகக் கொண்டு, மைசூர்த்தேசத்தின் மேல்பாலை ஆண்ட க்தம்ப வேந்தராகக் கருதப்படுகின்றனர்.[2] இக்கடம்பெறிந்த அரிய செயலைச் செங்குட்டுவன் காலத்தவரான மாமூலனார் என்ற புலவரும் சிறப்பித்தனர்.[3]

இச்சேரனை 2-ம் பத்தாற்பாடிய அந்தணரான குமட் டூர்க்கண்ணனார், இவனால் உம்பற்காட்டில்[4] ஐந்நூறூர் பிரம தாயமும்[5] தென்னாட்டுவருவாயிற் பாகமும் பெற்றனர். இவ் வேந்தன் 58-வருஷம் வீற்றிருந்தான்.[6] இனிச் சேரலாதர் இருவராகக்கொண்டு, இமயவரம்பனும் செங்குட்டுவன்தந் தையும் வேறுவேறானவர் என்று கருதற்குச் சிறந்த சான் றொன்றும் காணப்பட்டிலது. செங்குட்டுவனை அவன் சகோ தரர்—"மாநீர் வேலிக் கடம்பறுத் திமயத்து, வானவர்மருள

1. பதிற்றுப்பத்து, 2-ம் பதிகம்.
2. Mysore and Coorg from the Inscriptions. p. 21
3. "வலம்படு முரசிற் சேரலாதன், முந்நீ ரோட்டிக் கடம் பறுத் திமயத்து, முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து, நன் னகர் மாந்தை முற்றத் தொன்னார், பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்" (அகநா. 127.)
4. அகநானூறு, 264, 357.
5. அந்தணர்க்கு இறையிலியாக விடப்பட்டது.
6. பதிற்றுப்பத்தின் 2-ம் பதிகம்.

மலைவிற் பூட்டிய, வானவர் தோன்றல்'' என்றுகூறுதலானும்[1] அங்ஙனங் கடம்பறுத்த இமயவரம்பன்மகனே நம்சேரன் என்பது உணரப்படும்.

இந் நெடுஞ்சேரலாதனுக்குத் தம்பியாக விளங்கியவன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்பான்; எனவே, செங் குட்டுவனுக்கு இவன் சிறியதந்தை என்பது தானே விளங் கும். இச்செல்கெழுகுட்டுவனை 3-ம்பத்தாற் பாடிய பாலைக் கௌதமனார் வேண்டுகோளின்படி இவன் பத்துப்பெரு வேள்விகளை நடப்பிக்க, முடிவில் அப் பார்ப்பனப்புலவரும் அவர் மனைவியுஞ் சுவர்க்கம் புக்கார் என்பர். இவன் மலை யாள நாட்டின் பகுதியை ஆண்டவன் என்பது சிலப்பதி காரத்தால் தெரியலாகும்.[2] இவ்வேந்தன் வீரனும் ஞானியு மாக இருபத்தையாண்டு வீற்றிருந்தான்.[3]

இனி, இமயவரம்பனுக்கு மனைவியர் இருவராவர். இவ ருள் ஒருத்தி சோழன் - மணக்கிள்ளியின் மகளாகிய நற் சோணை என்பாள். இந் நற்சோணையிடம் பிறந்த மக்களே, செங்குட்டுவனும் இளங்கோவடிகளும்; "நெடுஞ்சேரலாதற் குச் சோழன் மணக்கிள்ளியீன்ற மகன்"[4] "சேரலாதற்குச் சோழன் மகள் நற்சோணையீன்ற மக்களிருவருள்"[5] எனப் படுதல் காண்க. இந்த நெடுஞ்சேரலாதனுடைய மற்றொரு மனைவி, வேளாவிக்கோமானான பதுமன் என்பவன் மகள். இவளிடம் அச் சேரனுக்குப் பிறந்த மக்கள், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனு

1. சிலப். 25, 1-3. 2. ஷை, 23, 63—6; பழமொழி. 316. 3. பதிற்றுப். 3-ம் பதிகம். 4. ஷை, 5-ம் பதிகம். 5. சிலப்பதி காரம் பதிகம், அடியார்க்கு நல்லாருரை.

மாவர்.[1] இவருள், முன்னவன் முடிசூடுகின்ற சமயத்தில் முடித்தற்குரிய கண்ணியுங் கிரீடமும் பகைவர் கவர்ந்தீதனால் உதவாமைபற்றி, அவற்றுக்குப் பிரதியாகக் களங்காயாற்கண்ணியும் நாரால் முடியுஞ்செய்து புனைந்துகொண்டு பட்டம் பெற்றமையின் 'களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்' என்னும் பெயர்பெற்றான்.[2] இச்சேரனுக்குப் பெரும்பகைவனாகி அவனாட்டைக் கவர்ந்தவன், கடம்பின் பெருவாயில் என்ற ஊர்க்குரிய நன்னன்என்பவன். இவனை, மேற்றிசையிலுள்ள வாகைப் பெருந்துறை என்னுமிடத்தில் நடந்த பெரும் போரிற் கொன்று, தானிழந்த நாட்டை இவ்வேந்தன் திரும் பப்பெற்றான் என்று கல்லாடனார் கூறுவர்.[3] இங்ஙனம் இவன் பெற்றது பூழிநாடென்பது, "பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ[1]" என் இவன்பதிகங் கூறுதலினின்று புலப்படுகின்றது. இவனை 4-ம் பத்தாற்பாடிய புலவர், காப்பியாற்றுக்காப்பியனார் என்னும் அந்தணர். அவர் இவனைப்பாடி 40-நூறாயிரங் காணமும்[4] இவனாட்டிற் பாகமும் பரிசுபெற்றார். இச்சேரன் இருபத்தைந்தாண்டு வீற்றிருந்தான்.[5]

---

1. 4,6-பத்துப் பதிகங்கள்.

2. பதிற்றுப்பத்து, 38-உரை.

3. "குடாஅது, இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற், பொலம்பூ ணன்னன் பொருதுகளத் தொழிய, வலம்படு கொற்றந் தந்த வாய்வாட், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், இழந்தநாடு தந்தன்ன" (அகநானூறு. 199.)

4. இது, சேரரின் பழைய நாணயமாகப் பதிற்றுப்பத்துப் பதிகங்களால் தெரிகிறது. மலைநாட்டில் 3 - கழஞ்சு அல்லது $1\frac{1}{2}$-பணம், காணம் என இப்போது வழங்குகின்றது. (Dr. Gundert's Malayalam Dictionary.)

5. 4 - ம் பத்துப்பதிகம்.

இந்நார்முடிச் சேரலின் தம்பியாகிய சேரலாதன் செங்கோற் பெருமையாற் சிறந்தவன். இவனது வீரச்செயல்களிலே, தண்டாரணியத்துள்ளவரால்[1] கவரப்பட்ட ஆட்டுநிரைகளை மீட்டுத் தொண்டியிற்கொணர்ந்து சேர்ப்பித்ததே சிறப்புடையது; இதுபற்றியே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் எனப்பட்டான். இவன் மேல்கடற்பக்கத்து நறவு என்ற நகரில் இருந்தாண்டவன்.[2] இவ்வேந்தன் தன்னை 6-ம் பத்தாற் பாடிய காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண் புலவர்க்கு, அணிகலன் செய்துகொள்வதற்காக ஒன்பது காப்[3] பொன்னும் நூறாயிரங்காணமுங் கொடுத்து அவரைத் தன் ஆஸ்தானத்தில் வைத்துக்கொண்டு அபிமானித்தனன். இச்சேரலாதன் முப்பத்தெட்டாண்டு வீற்றிருந்தான்.[4]

இனி, பதிற்றுப்பத்துத் தொகுத்த புலவர் நார்முடிச் சேரலைப்பற்றிய பகுதியை நான்காவதாகவும், அவன் தம்பி ஆடுகோட்பாட்டுச் சேரலாதனது பகுதியை ஆறாவதாகவும் வைத்து, இடையிற் செங்குட்டுவனைப் பற்றியதை அமைத்திருக்கின்றார். இதனால் நார்முடிச்சேரல் செங்குட்டுவனுக்கு முற்பட்டவனாகவும், அவன் தம்பி சிறிது பிற்பட்டவனாகவுங் கருத இடமுண்டாகின்றது. காலமுறையில் வைத்தே பதிற்றுப்பத்துத் தொகுக்கப்பட்டிருத்தலை அதனுட்கண்ட பதிகங்களாலும் வாக்கியங்களாலும் உய்த்துணரலாகும்.

செங்குட்டுவனது 5-ம் பத்துப் பதிகத்தால் அவன் தாய்ப்பாட்டனாகத் தெரியும் மணக்கிள்ளி, உறையூரிலிருந்

---

1. தண்டாரணியம், ஆரியநாட்டிலுள்ளதோர் நாடு. இஃது இப்போது பம்பாய் மாகாணத்தைச் சார்ந்ததாகும் (Dr. Bhandarkar's History of Dekkan. p. 136).

2. பதிற்றுப்பத்து. 60—நௌரா (Naura) என்ற பெயரால் யவனாசிரியர்குறிப்பிட்ட மேல்கடற்கரையூர், இந்நறவூரே ஆகும் என்பர்(வஞ்சிமாநகர், பக். 65).

3. கா - துலாம் என்னும் நிறையளவு.

4. 6 - ம் பத்துப்பதிகம்.

தாட்சிபுரிந்த சோழனுவன். செங்குட்டுவன்மாற்ருந்தாயைப் பெற்றவனுக 4,6-ம் பத்துப் பதிகங்கள் கூறும் வேளாவிக்கோ மான்பதுமன் என்பவன் பொதினியமலேக்குரிய[1] ஆவியர்குலத் தோன்றல். இவ்வேளாவியின் பெயரால் வஞ்சியின்புறத்தே ஒரு மாளிகை அமைக்கப்பட்டிருந்ததென்று தெரிகின்றது.[2]

[சேரரின் மற்ருெரு கிளேயினர்.]

இனி, பதிற்றுப்பத்தின் இறுதிமூன்று பத்துக்களாற் புகழப்பட்ட அரசர், சேரமரபின் மற்ருெரு கிளேயினராகத் தோற்றுகின்றனர். அந்துவஞ்சேரல் இரும்பொறை என்ப வன் இம்மரபின் தலேவன் என்பதும், இவன்மகன் செல்வக் கடுங்கோ வாழியாதனென்பதும், 6-ம்பத்துப்பதிகத்தால் அறி யப்படும். இவ்வந்துவஞ்சேரல், முடித்தலேக்கோப் பெருநற் கிள்ளிஎன்ற சோழனுக்குப்பகைவன்.[3] இச்சேரன் மகனுன செல்வக்கடுங்கோ, பெருங்கொடையாலும் அருங்குணங் களாலும் பெயர்பெற்றவன்; திருமால் பத்தியிற் சிறந்து விளங்கியோன்[4]; கபிலர் என்னும் புலவர்பெருமான் தம் உயிர்த்துணேவனுக விளங்கிய வேள்-பாரி உயிர்நீத்ததும், அப்பாரியின் உத்தமகுணங்கள் பலவும் இச் செல்வக்கடுங் கோவிடம் உள்ளனவாகக் கேள்வியுற்று இவனேக் காணச் சென்று ஏழாம்பத்தை இச்சேரன்முன் பாடினர்.[5] அவர்

---

1. பொதினி என்பது பழனியின் பழையபெயர். இவ்வாவியர் இதனேயாண்டமைபற்றியே, இஃது ஆவிநன்குடி என வழங்கப் பெற்றது. இவ்வாவியர்குடியில் உதித்தவருள்ளே, வள்ளலான பெரும்பேகனும் ஒருவன். (யாமெழுதிய வேளிர் வரலாறு 33-4-ம் பக்கம் பார்க்க).

2. சிலப்பதிகாரம், 28; 196—8; புறநானூற்றில் (13) 'வேண்மாடம்' எனப்பட்டது இதுவேயாதல்வேண்டும்.

3. புறநானூறு, 13. 4. 'மாயவண்ணனே மனனுறப்பெற்று' என இவன்பதிகங் கூறுதல் காண்க. 5. இவ்வேழாம்பத்தின் முதற்பாட்டில், இச்செய்தியைக் கபிலரே கூறுவர்.

பாடலைக்கேட்ட செல்வக்கடுங்கோ அவ்வந்தணப்பெரியார்க்குச் சிறுபுறமாக[1] நூறாயிரங் காணம் அளித்ததோடு, நன்றா[2] என்னுங்குன்றில் தானும் அவரும் ஏறிநின்று தன் கண்ணிற்கண்ட நாடெலாங்காட்டி அப்புலவர்க்களித்தான்.[3] இவ்வருங்கொடையை "நனவிற் பாடிய நல்லிசைக் - கபிலன் பெற்ற ஊரினும் பலவே" எனப் பிற்காலத்தவரும் புகழ்தல் காண்க.[4] இவன்மனைவி, நெடுஞ்சேரலாதற்கு மகட்கொடுத்த வேளாவிக் கோமானுடைய மற்றொரு மகளாவள்.[5] ஆகவே நெடுஞ்சேரலாதனும் செல்வக்கடுங்கோவும் சகல முறையினரென்பது விளங்கும். இவ்வேந்தர்பிரான் இருபத்தைந் தாண்டு வீற்றிருந்தவன்.[6] இவன் சிக்கற்பள்ளி என்னுமிடத்திற் காலஞ்சென்றவனென்று தெரிகின்றான்.[7]

இச் செல்வக்கடுங்கோவுக்குப் பிறந்த வீரமகன் பெருஞ்சேரலிரும்பொறை என்பான். இவன் அதியமானது தகடூர் மேற் படையெடுத்துச் சென்று பெரும்போர் புரிந்து, அவ்வூரையழித்து அவ்வதியமானையும் கொன்றனன். இப்போர்ச் செயலே தகடூர் யாத்திரை[8] என்னும் பண்டைநூலிற் சிறப்பித்துக் கூறப்படுவது. இவ் வெற்றிபற்றித் 'தகடூரெறிந்த' என்னும் அடையுடன் இவன் வழங்கப்படுவன். இப்பெருஞ்

1. சிறுபுறம் - சிறுகொடை. 2. இஃது, இக்காலத்துத் தேனன்றமலை என வழங்கும்; சேலம் ஜில்லா ஊற்றங்கரைத் தாலுகாவின் தென்பகுதியில், மஞ்சவாடிக்கணவாயின் வடபாலுள்ளது. நன்றாகுன்றத்துஜீயர் என்ற வைஷ்ணவப் பெரியார் திருநாமமும் இம்மலையூரடியாகவே வந்ததாகும். 3. 7 - ம் பத்துப்பதிக வாக்கியம். 4. பதிற்றுப். 85. 5. 8 ம் பதிகம். 6. 7-ம் பதிக விறுதி. 7. புறநானூறு, 387.

8. இதன் பாடல்கள் சில, தொல்காப்பியவுரை புறத்திரட்டு முதலியவற்றிற் காணப்படுவதன்றி, நூன்முழுதும் இதுவரை அகப்பட்டதில்லை.

சேரலை எட்டாம்பத்தாற் புகழ்ந்தவர் அரிசில்கிழார் என்ற புலவர்பெருமான். இவர் பாடல்களைக்கேட்டு மகிழ்ந்த இச் சேரன், தானுந் தன்மனைவியும் வெளியே வந்துநின்று 'தன் கோயிலிலுள்ளனவெல்லாம் கொள்க' என்று ஒன்பதுநூறாயிரங் காணத்தோடு தன் அரசுகட்டிலையும்[1] புலவர்க்குக் கொடுப்ப, அவர் 'யானிரப்ப நீ யாள்க' என்று அவற்றைத் திரும்பக்கொடுத்து அவ்வரசனுக்கு அமைச்சுப் பூண்டார். இச்சேரன் பதினேழாண்டு வீற்றிருந்தான்.[2] இப்பெருஞ் சேரனுக்கு மனைவியாகிய அந்துவஞ்செள்ளை வயிற்றில் உதித்தவன் இளஞ்சேர லிரும்பொறை என்பான். இவன், தன்னை ஒன்பதாம்பத்தாற் பாடிய பெருங்குன்றூர்கிழார் என்ற புலவர்க்கு "மருளில்லார்க்கு மருளக்கொடுக்க என்று உவகையின் முப்பத்திராயிரங் காணங்கொடுத்து, அவரறியாமை ஊருமனையும் வளமிகப்படைத்து, ஏருமின்பமும் இயல்வரப் பரப்பி, எண்ணற்காகா அருங்கல வெறுக்கையொடு, பன்னீராயிரம் பாற்படவகுத்துக், காப்புமறந் தான்விட்டான்" என்று கூறப்பட்டுளது.[3] இவ்வளவு சிறப்பாகப் புலமையைக் கௌரவித்த அரசர் முற்காலத்தே வேறெவருங் காணப்பட்டிலர்.[4] இவ்விளஞ்சேரல் பதினாறாண்டு வீற்றிருந்தவன்.

---

1. சிங்காதனம். 2. 8 ம் பத்துப்பதிகம். 3. 9-ம் பத்துப்பதிகம். காப்புமறம் - காவல்வீரர்.

4. பெருங்குன்றூர் கிழார் இவ்வேந்தனைப் பாடியனவாகப் புறநானூற்றிற் காணப்படும் உ௧௦, உ௧௧-ம் பாடல்களால், அப்புலவரை நெடுங்காலங் காக்கும்படி வைத்துப் பின் ஒன்றுங்கொடாமலே இவ்வேந்தன் அனுப்ப, அதுபற்றி மனமுடைந்துசென்றனர் அப்புலவர் என்பது தெரிகின்றது. இதனால், பெருங்குன்றூர்கிழாரது நல்வாழ்வுக்கு வேண்டியவனைத்தையும் அவரூரில் அவரறியாமலே அமைத்துவைத்துப் பின்னர் வெறுங்கையோடு அவரைவிடுத்தனன் இவ்விளஞ்சேரல் என்பது உய்த்துணரப்படும். இச்சரிதம்போலப் பிற்காலத்து வழங்குவது சத்திமுற்றப் புலவர் என்பவர் வரலாறொன்றேயாம்.

இனி, இவ்விளஞ்சேரலின் முன்னோருள், மாந்தரன்[1] என்பவனும், கருவூரேறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேர லிரும்பொறை என்பவனும் பிரபலர்களாகக் காணப்படுகின் றனர். இவருள் முன்னவனே 'மாந்தரம் பொறையன் கடுங்கோ' எனப் பரணராலும் பாடப்பட்டவனாதல் வேண் டும்.[2] மற்றொருவனாகிய கோப்பெருஞ்சேர லிரும்பொறையை நரிவெரூஉத்தலையார் என்ற புலவர் சென்றுகண்டதும் அவர் தம் பழைய நல்லுடம்பு பெற்றனர் எனப்படுகின்றார்.[3] மேற் குறித்த மாந்தரனின் வேறாக, யானைக்கட்சேய் மாந்தரஞ் சேர லிரும்பொறை என்பவனொருவன் புலவனும் வள்ளலும் போர்வீரனுமாக நூல்களால் அறியப்படுகின்றான். இவன் கபிலர்காலத்திற்குச் சிறிது பிற்பட்டிருந்தவனாவன்.[4] ஐங்குறுநூறு இவனால் தொகுப்பிக்கப்பட்ட தென்பர். இவன் மேற்குறித்த இளஞ்சேரலிரும்பொறைக்கு மகன் போன்ற நெருங்கிய உறவினன் என்பது 'சேய்' என இவன் சிறப்பிக்கப்படுதலினின்று கருதக்கூடியது. இவர்களன்றிப் பிற்காலத்தில் கணைக்காலிரும்பொறை[5] என்பவனொருவனும் இவர்வழியில் ஆண்டனன். இவரையெல்லாம் இரும்பொறை மரபினர் என்று நாம் கூறுதல் தகும். செங்குட்டுவனை, இவ் விரும்பொறைமரபின் முன்னோருள் ஒருவனாகப் பதிற் றுப்பத்துக் கூறுதலால்,[6] இம்மரபினரும் நம்சேரன் மரபின ரும் நெருங்கிய தாயத்தார் என்பது தெளிவாகின்றது.

---

1. 'அறன்வாழ்த்த நற்காண்ட, விறன்மாந்தரன் விறன்மருக' எனக் காண்க (பதிற். 90).

2. அகம்-142. 3. புறம்-5. 4; ஷை, 53.

5. புறம். 74; களவழி நாற்பது என்னுஞ் சிறுநூல், இவ்விரும் பொறைக்கும் சோழன் செங்கணானுக்கும் நிகழ்ந்த கழுமலப்போரைப் பற்றிப் பொய்கையாராற் பாடப்பெற்றது.

6. 'கடலிகுப்ப வேலிட்டும்' என அந்நூலுள் இவன்முன்னோர் செயலாகக் கூறப்படுவது செங்குட்டுவன் செய்தியேயாகும். (பதிற். 90.)

[இரும்பொறை மரபினர்.]

1. மாந்தரம் பொறையன் கடுங்கோ.

⋮

2. கருவூரேறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேர லிரும்பொறை.

⋮

3. அந்துவஞ்சேர லிரும்பொறை.

|

4. சொல்வக் கடுங்கோ வாழியாதன் × பதுமன்றேவி.

|

5. தகடூரெறிந்த பெருஞ்சேர லிரும்பொறை × அந்துவஞ் செள்ளை.

|

6. இளஞ்சேர லிரும்பொறை.

⋮

7. யானைக்கட் சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை.

⋮

8. கணைக்கா லிரும்பொறை.

மேற்குறித்தவர் அல்லாத வேறு சேரவரசர் சிலரும் புறநானூறு முதலிய சங்கச்செய்யுட்களிற் கூறப்படுகின்றா ரேனும், அவர்கட்கும் செங்குட்டுவனுக்குமுள்ள தொடர்பு நன்கு விளங்கவில்லை. இச்சேரர்கிளையினருள், அதியர் அதிகமான்கள் என்பவரும் ஒருவர். கடைச்சங்க நாளில் அதிகமான் நெடுமானஞ்சி என்பவன், வீரனும் வள்ளலுமாக விளங்கியவன். இவன்வழியிற் பிற்காலத்தும் பலர் வாழ்ந்த செய்தி சாஸனங்களால் தெரிகின்றது.[1]

---

1. இவ்வதியரது தலைநகரம் தகடூர் என்பது. இது சேலம் ஜில்லாவிலுள்ள தர்மபுரி என்ற ஊராகும். 8-ம் நூற்றாண்டினனான தகடூரதிகமா னொருவன் நாமக்கல்லில் அதியேந்திர விஷ்ணுக்கிருகம் என்ற திருமால்கோயிலொன்று கட்டியவன். 13-ம் நூற்றாண்டில் விடுகாதழகிய பெருமாள் என்ற சிற்றரசன் தன்னைச் "சேரவமிசத்து அதிகமான் எழினி" என்றும், 'வஞ்சியர் குலபதி' என்றும் கூறிக்கொள்ளுகின்றான் (S. I. I. i, 106).

இனி, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய மக்களும் இரும்பொறைமரபினரும், சேரநாட்டில் வேறுவேறு தலைநகரங்களில் ஆட்சிபுரிந்தவர்கள். அம் முறையில், கருவூராகிய வஞ்சிமாநகரம் தலைமையரசனாகிய செங்குட்டுவனுக்கு உரியதாக விளங்க, மாந்தை, தொண்டி, நறவூர் முதலியன அவன் தாயத்தாரான சேரர்க்குத் தலைநகரங்களாகவிருந்தன எனத் தெரிகின்றது. மாந்தையுந் தொண்டியும் சேரதேசத்திற் சிறந்த நகரங்கள் என்பது, "சேரலாதன்...நன்னகர் மாந்தை முற்றத்து"[1] "குட்டுவன் மாந்தை"[2] எனவும், "குட்டுவன்...தொண்டி"[3] எனவும் நூல்கள் கூறுதலால் அறியலாம். நறவூரைப்பற்றி மேலே குறிப்பிட்டேம். இம் மூன்று தலைநகரங்களும் கடற்கரையில் அமைந்தவை[4].

மேற்கூறிப்போந்த சேரமரபினரெல்லாம் அறிவுதிரு ஆற்றல்களால் தங்காலத்தே ஒப்புயர்வற்று விளங்கியவரென்பதும் செந்தமிழ்வளர்ச்சிசெய்தவருள் இன்னோரே அக்காலத்துச் சிறந்துநின்றவரென்பதும் இவர்களைப்பற்றிய பழம் பாடல்களால் நன்குவெளியாகின்றன.

[செங்குட்டுவன் சகோதரர்.]

செங்குட்டுவன் தந்தையாகிய நெடுஞ்சேரலாதன், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி என்னுஞ் சோழனுடன்

---

1. அகம். 27. 2. ஷை, 376. 3. ஷை, 290.

4. 'கடல்கெழு மாந்தை' (நற்றிணை, 395) "கானலந்தொண்டி" (புறம். 48.) எனக் காண்க. மாந்தையை மரந்தை என்று படித்தற்கும் இடனுண்டு. இவற்றுள், தொண்டி என்பது முற்காலத்தே பலதேச மரக்கலங்களும் வந்துதங்கும் பெருந்துறைமுகமாக விளங்கியதென்பது முன்னூல்களாலும் தாலமி (Ptolemy) முதலிய யவனாசிரியரது குறிப்புக்களாலும் அறியப்படுகின்றது. இப்போது, அகலப்புழையை அடுத்துள்ள தோண்டிப் பாயில் என்னுஞ் சிற்றூரைப் பழைய தொண்டியாகக் கருதுவர்.

பெரும்போர் புரிந்தபோது, அவ்விருவருமே போர்க்களத்தில் ஒருங்கிறந்தனர் என்பது, அவர்களிறந்துகிடந்த நிலைமை நேரிற்கண்டு கழாத்தலையாரும் பரணரும் மனமுருகிப் பாடியபாடல்களால் தெரியலாகும்.[1] இந் நெடுஞ்சேரலாதன் 58-ஆண்டு வீற்றிருந்தவன். இவன் பேராற்றலுடன் விளங்கியதற்கேற்ப, இவன்மகன் செங்குட்டுவனும் பெருவீரனாய் அவனது சிங்காதனத்துக்குரியனாயினான். நெடுஞ்சேரலாதன் சிவபிரானைநோக்கி நோற்று அப்பிரானருளாற் செங்குட்டுவனைப் பெற்றவனென்பது உய்த்துணரப்படுகின்றது.[2] இவன் அரசாட்சிபெற்றதில் விசேடச்செய்தியொன்றும் உண்டு. நெடுஞ்சேரலாதனுக்குமகனாகச் செங்குட்டுவனுடன் இளங்கோ ஒருவனும் பிறந்திருந்தனன். இவ்விளங்கோ பேரறிவும் உத்தமகுணங்களும் வாய்ந்தவன். ஒருநாள் பேரத்தாணியில் மன்னர்கள் புடைசூழ, இந்நெடுஞ்சேரலாதன் தன் மக்களிருவருடனும் வீற்றிருந்தபோது, நிகழ்வது கூறவல்ல நிமித்திகனொருவன் அவ்வத்தாணிமண்டபத்தை அடைந்து, அரசனையும் அவன் மக்களையும் அடிமுதன் முடிவரை நோக்கி— "வேந்தர் வேந்தே! இனி நீ விண்ணுலகு செல்லுங்காலம் நெருங்கியது; நீ தாங்கியுள்ள செங்கோலை நின் மக்களிருவருள் இளையோனே தரித்தற்குரியவன்" என்று பலருமறியக் கூறினான். இதுகேட்ட மூத்தவனான செங்குட்டுவன் மனமுளைந்து நிற்க, அஃதறிந்த இளங்கோ, அந்நிமித்திகன் முறைமைகெடச் சொன்னதற்காக அவனை வெகுண்டு, தன் தமையன்கொண்ட மனக்கவலை நீங்கும்படி அவ்வத்தாணிக்கண்ணே அரசாளுரிமையை முனிந்து துறவுபூண்டு, வீட்டுலகத்தை ஆளுதற்குரிய பெருவேந்தனாக விளங்கினன்—என்பர். கருவிலே திருவுடை

1. புறநானூறு, 62, 63.
2. சிலப்பதிகாரம், 26: 98 9: 30: 141-2.

யராயிருந்தும் இளமையில் தாம் துறவுபூணும்படி நேர்ந்ததைத் தம் அழகிய வாக்கால் இவ்விளங்கோவே கூறியிருத்தல் அறிந்து மகிழற்பாலது. செங்குட்டுவனுடன் பத்தினிக்கடவுளை வழிபட்டுத் திரும்பும்போது, தேவந்தியின் மேல் அக்கடவுள் ஆவேசித்துத் தம்மைநோக்கிக் கூறியதாக இவ்வரசமுனிவர் கூறுவதாவது:—

"வேள்விச் சாலையில் வேந்தன் பெயர்ந்தபின்
யானுஞ் சென்றேன் என்னெதி ரெழுந்து
தேவந் திகைமேற் றிகழ்ந்து தோன்றி
'வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாணிழ லிருந்தோய்! நின்னை
அரைசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்று
உரைசெய் தவன்மே லுருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்லல் நீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து
அந்தமி லின்பத் தரசாள் வேந்து' என
என்றிற முரைத்த இமையோ ரிளங்கொடி"[1] எனக்காண்க.

இவ்வரலாற்றையே அரும்பதவுரையாளரும் அடியார்க்குநல்லாரும் தத்தம் உரைகளிற் சிறிது விரித்துக்கூறினர்.[2] இவற்றால், செங்குட்டுவன் பட்டமெய்துவதற்கு முன்பு நிகழ்ந்த இளங்கோவின் துறவுவரலாறு வெளியாம். இங்ஙனந்துறந்தபின் இளங்கோவடிகள் என வழங்கப்பெற்று, வஞ்சிமாநகரின் கீழ்த்திசையிலுள்ள 'குணவாயிற்கோட்டம்'

1. சிலப்பதிகாரம். 30: 170-83.
2. ஷை, பதிகம்; 30: 174-85, அரும்.

என்ற இடத்தில் வசித்துவந்தனர்.[1] இவர் பெருந்துறவியாக இருந்தது மட்டுமன்றி, அக்காலத்திருந்த உத்தமகவிகளுள் ஒருவராகவும் விளங்கினர். தமிழைம்பெருங் காவியங்களுள் ஒன்றாகச் சிறப்பிக்கப்படும் சிலப்பதிகாரம் இவ்வடிகள் இயற்றிய தென்பதையும், அதன் சொற்பொருள் வளங்களையும் அறிந்து வியவாத அறிஞருமுண்டோ? இந்நூலை அடிகள் பாடுதற்குக் காரணமாகநின்ற பெரும்புலவர், மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்[2] என்பவர். இப்புலவரைத் தலைமையாகக்கொண்ட அவைக்கண்ணே இளங்கோவடிகள் தம் நூலை அரங்கேற்றினர்.[3] அவ்வச் சமயநிலைகளையும் தமிழ் மூவேந்தர் பெருமைகளையும் நடுநிலைபிறழாது கூறிச்செல்வதினும், இயற்கைச்சிறப்புக்களை எடுத்துரைப்பதினும், உத்தம தருமங்களை உணர்த்துவதினும் இவ்வடிகட்கிருந்த பேராற்றல் மிக வியக்கற்பாலது. இவ்வடிகளைச் சைனமதத்திற் பற்றுள்ளவராக இவரது வாக்கின்போக்கால் ஊகித்தற்கு இடமுண்டேனும், வைதிகசமயத்தவராகக் கருதற்குரிய சான்றுகளுமுள்ளன. அதனால், தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரதுபோல, எப்பாலவர்க்கும் இயையும்படி இவரது நூற்போக்கு உள்ளதென்றே சொல்லலாம். இவர்கொள்கை எத்தகையதாயினும், மதாந்தரங்களை ஒப்பநோக்குங் குண

1. 'குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த, குடக்கோச் சேரல் இளங்கோவடிகட்கு' என்பது பதிகம். குணவாயிற் கோட்டம் என்பதற்குத் 'திருக்குணவாயிற் கோயில்' என்பது பொருள். இது, வஞ்சியாகிய கருவூர்க்குக் கீழ்த்திசையில் உள்ள குணவாசல் என்ற தலமாகும்; "கொடுங்கோவலூர் திருக்குணவாயில்" (தேவா. பொது க்ஷேத். 7) "குடவாயில் குணவாயி லானவெல்லாம்" (ஷை, பொது அடைவு. 7) என்ற தேவாரங்களாலும் அறிக.

2. இவர் வரலாற்றை 'இருபெரும்புலவர்' என்னும் இந்நூற் பகுதியுட் காண்க.

3. "உரைசா லடிக ளருள மதுரைக் - கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்" (சிலப். பதி. 88 - 9).

மும் அவற்றில் ஆழ்ந்த ஆராய்ச்சியும் மிக்கவர் இவ்வடிகள் என்பதில் ஐயமில்லை. மற்றும் இவர் அருமை பெருமைகள் இந்நூலில் உரியவிடங்களில் எல்லாம் கூறப்படும்.

[செங்குட்டுவன் மனைவிமக்கள் முதலியோர்.]

சேரன் - செங்குட்டுவனுடைய கோப்பெருந்தேவியாக விளங்கியவள் இளங்கோவேண்மாள்[1] என்பாள். "இளங் கோவேண்மா ளுடனிருந் தருளி"[2] "வதுவை வேண்மாள் மங்கல மடந்தை"[3] எனச் சிலப்பதிகாரம் குறிப்பது காண்க. இதனால், இப்பெருந்தேவி வேளிர்குலத்தவள் என்பது பெறப்படும். இவளொருத்தியையன்றி வேறுமனைவியரைச் செங்குட்டுவன் மணந்திருந்தவனாகத் தெரியவில்லை. நம் சேரனுக்குக் குட்டுவஞ்சேரல்[4] எனப் பெயர்பூண்ட மகனொருவன் இருந்தனன். பரணரென்னும் புலவர்பெருமான் ஐந்தாம்பத்தால் தன்னைப் பாடியதுகேட்டு மகிழ்ந்த செங்குட்டுவன், அவ்வந்தணர்க்குப் பெரும்பொருளோடு இக்குட்டுவஞ்சேரலையும் பரிசாக அளித்தானென்று அப் பத்தின் இறுதிவாக்கியங் கூறுகின்றது. இங்ஙனம் 'மகனைப் பரி

1. இளங்கோ வேண்மாள் என்பது, இளங்கோவேளிர் மரபினள் எனப் பொருள்படும். இருக்குவேள், இருங்கோவேள் (Ep. Rep. 1908, pp. 879) இளங்கோவேள் (Ibid. 315 of 1903) என்பன, பிற்காலச் சோழர்காலத்து விளங்கிய கொடும்பாளூர் வேளிர்க்கு வழங்கிய சிறப்புப்பெயர்களென்பது சாஸனங்களால் தெரிகின்றது. இதனால், இவ் வேளிர்மரபும் செங்குட்டுவன் மனைவியின் மரபும் ஒன்றென்பது பெறப்படுகின்றது. சேரவேந்தர்தாயமுறை என்ற நூலுள் (பக். 34-9) இவற்றை விரித்துள்ளேம்; ஆண்டுக் காண்க. 2. சிலப்பதிகாரம், 25, 5. 3. ஷை. 28, 51.

4. குட்டுவஞ்சேரல் - (செங்) குட்டுவனுக்கு மகனாகிய சேரல் எனப் பொருள்படும்

சளித்தான்' என்பது, பரணரிடங் கற்று வல்லனும்படி அவனைக் குருகுலவாசஞ் செய்ய நியமித்ததைக் குறிப்பது போலவே தோற்றுகின்றது. இக் குட்டுவஞ்சேரல் மேற் குறித்த கோப்பெருந்தேவியினிடம் பிறந்த மகனாதல்வேண்டும். இம்மகன் பட்டம்பெற்ற பின்னர், முற்கால முறைப்படி வேறுபெயரும் இவனுக்கு வழங்கியிருத்தல் கூடும். ஒருகால், சோழன் பெருநற்கிள்ளி, பாண்டியன் உக்கிரப் பெருவழுதி—இவருடன் நட்புப் பூண்டிருந்த சேரமான் மாரிவெண்கோ என்பவன் இக்குட்டுவஞ் சேரலோ என்று கருதற்கு இடமுண்டு (புற. 367).

செங்குட்டுவன்தாயுடன் பிறந்த அம்மான் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி என்பவனென்றும், அவ் வம்மானுக்குமகன் சோழன்-இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியென்றும் புலப்படுகின்றன. இதற்குள்ள காரணங்களைச் "செங்குட்டுவன் காலத்தரசர்" என்ற அதிகாரத்தினுள் விளக்கியுள்ளேம். இவ்வாறு பண்டை நூல்களால் தெரிந்தளவிற் செங்குட்டுவன்சுற்றத்தாரைப் பின்னர் வருமாறு தொகுத்துக் காட்டலாம். இவரைப்பற்றிய விவரங்களை ஆங்காங்கு அறிந்துகொள்க.

[செங்குட்டுவன் சுற்றத்தார்.]

1. தந்தையைப் பெற்றபாட்டன்— உதியஞ்சேரல்.
2. ,, ,, ,, பாட்டி—வெளியன்வேண்மாள் நல்லினி.
3. தந்தை— இமயவரம்பன் - நெடுஞ்சேரலாதன்.
4. தாய்— நற்சோணை.
5. இளைய சகோதரர்— இளங்கோவடிகள்.
6. மனைவி— இளங்கோவேண்மாள்.
7. மகன்— குட்டுவஞ்சேரல்.

8. சிறியதந்தை— பல்யானைச் செல்கெழு குட்டுவன்.
9. தாய்ப்பாட்டன்— சோழன் மணக்கிள்ளி.
10. அம்மான்— காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி.
11. அம்மான் சேய்—இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி.
12. மாற்றாந்தாய்— ,, பதுமன்றேவி.
13. ஷை தாய்வயிற்றுப் பிறந்தோதரர் { நார்முடிச்சேரல். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.
14. ஷை தாய்ப்பாட்டன் —வேளாவிக்கோமான் பதுமன்.
15. தாயத்தார்— { இரும்பொறை மரபினர் அதிகமான்கள்.

---

## 3-ம் அதிகாரம்.

## செங்குட்டுவன்

# போர்ச்செயல்கள்

நெடுஞ்சேரலாதன் விண்ணுலகஞ் சென்றபோது செங்குட்டுவனுக்கு உத்தேசம் 20 - வயது கொள்ளலாம். 55-ஆண்டு செங்குட்டுவன் அரசுபுரிந்தவனென்று பதிற்றுப் பத்துக் கூறுதலால், ஏறக்குறைய 75-வருஷம் இவன் இந்நில வுலகில் வாழ்ந்தவனாதல் வேண்டும். இவனது நீடித்த ஆட்சியில் நிகழ்ந்த செய்திகள் முழுதும் நமக்குத் தெரியக் கூடவில்லை. ஆயினும், சிலப்பதிகாரமும் பதிற்றுப்பத்தும் இவனால் நிகழ்த்தப்பட்ட அருஞ்செயல்கள் சிலவற்றைக் குறித்திருக்கின்றன. அவற்றிற்கண்ட செங்குட்டுவன் வீரச் செயல்களிலே சிறப்புடையவை அடியில் வருவனவாம்.

1. தன் தாயைக் கங்கைநீராட்டச் சென்றபோது ஆங்கெதிர்த்த ஆரியவரசர் பலருடன் நடத்திய போர்.

2. கொங்கர் செங்களத்து நடத்திய போர்
3. கடல்வழியே சென்று நடத்திய போர்
4. பழையனுடன் நடத்திய போர்
5. சோழர் ஒன்பதின்மருடன் நடத்திய போர்

என்பன. இப்போர்களிற் சில, இன்னகாரணம்பற்றி நிகழ்ந்தன என்ற விவரத்தைச் செங்குட்டுவன் சகோதரரே நன்கு விளக்கினரில்லை. ஆயினும் முன்னூல்களின் குறிப்புக்களைக் கொண்டு அடியில்வருமாறு அறியப்படுகின்றன. இப்போர்களுள்—

(1) செங்குட்டுவன் தன் தாயான நற்சோணையைக் கங்காஸ்நானஞ் செய்விக்கக்கருதிச் சென்ற வடநாட்டியாத்திரையில், ஆரியவரசர்பலர் திரண்டுவந்து இவனை எதிர்த்துப் பெரும்போர் விளைத்தனரென்றும், அவரையெல்லாம் அப் பேராற்றங்கரையில் இச்சேரன் தனியனாக நின்று பொருது வெற்றிகொண்டனனென்றும் தெரிகின்றன. இதனை,

> "கங்கைப் பேர்யாற்றுக் கடும்புன னீத்தம்
> எங்கோ மகளை யாட்டிய வந்நாள்
> ஆரிய மன்ன ரீரைஞ் ஞூற்றுவர்க்கு
> ஒருநீ யாகிய செருவெங் கோலங்
> கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்."
>
> (சிலப். 25: 160 - 64)

என்னும் இளங்கோவடிகள் வாக்கால் அறிக. "எங்கோ மகள் என்றது செங்குட்டுவன் மாதாவை; அவளை இவன் கொண்டுபோய்த் தீர்த்தமாட்டினதொரு கதை" என்பர், அரும்பத உரையாசிரியர். இனிச் செங்குட்டுவன்தந்தை நெடுஞ்சேரலாதன், முற்கூறியபடி பெருவிறற்கிள்ளியுடன் பொருது இறந்தபோது, அவன்மனைவியரும் உடனுயிர்நீத்தனர் என்பது, புறநானூற்றின் 62-ம் பாடலாற் புலப்படுகின்றது. இதனால், செங்குட்டுவன்தாய் நற்சோணையும் தன்

கணவன் சேரலாதனுடன் சககமனஞ் செய்தவள் என்பது பெறப்படும்; ஆயின், அத்தாயின்பொருட்டு அமைத்த பத்தினிப்படிமத்தைச்[1] செங்குட்டுவன் கங்கைநீராட்டச் சென்றவனுதல் வேண்டும். கங்கைக்கரையில் செங்குட்டுவன் நிகழ்த்திய இவ்வரியசெயல் அவனது கன்னிப்போராகக் கருதப்படுகின்றது.

(2) இனிக் கொங்கர் செங்களத்தே செங்குட்டுவன் ஒருபோர் நடத்தியதாகத் தெரிகின்றது. இதனில், சோழ பாண்டியருஞ்சேர்ந்து எதிர்த்தனரென்றும், அவரது கொடிபடைகளையெல்லாம் கைக்கொண்டு, அப்போரில் யாவரும் புகழத்தக்க பெரியவெற்றியைச் செங்குட்டுவன் பெற்றனனென்றும் இளங்கோவடிகள் பாடுகின்ருர்.[2] கொடுகூர் என்ற நகரம் இக்கொங்கர்[3] போரிலே செங்குட்டுவனுல் அழிபட்டதாகும். "கொடுகூரெறிந்து" என்பது பதிற்றுப்பத்து.[4] கொடுகூர்நாடு என்பதொன்று, இப்போது மைசூர்ராஜ்யத்தின் தென்பகுதியாகிய புன்னுடு விஷயத்தின் ஒருபிரிவாக

---

1. உடன்கட்டையேறிய பத்தினியின் உருவம்வரைந்த சிலை; இதனை, மாஸ்திகல் (=மஹாஸதி கல்) என்பர், கன்னடநாட்டார்.

2. "நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரி கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தன ராயினு மாங்கவை
திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன."

(சிலப். 25: 152-55)

3. ஈண்டுக் கொங்கர் என்பவர், கங்கவரசர் ஆவர். இவ்வரசரைக் 'கொங்குதேச ராஜாக்கள்' என்றுவழங்குதலும் அறியத்தக்கது.

4. பதிற்றுப். 5-ம் பதிகம்.

வும், சேரமானுக்குரிய பூமியாகவும்[1] இருந்ததென்று பழைய சாஸனமொன்று கூறுகின்றது. இக்கொடுகூர்நாட்டின் தலைநகரே சேரனால் அழிக்கப்பட்டதாதல்வேண்டும்.

(3) இனிப் பரணரென்ற புலவர்பெருமான் பாடிய ஐந்தாம்பத்தில் மிகுதியாகப் பாராட்டப்படும் செங்குட்டுவன் வீரச்செயல்கள், அவன் கடலிற் படைகளைச் செலுத்தியதும், பழையனென்பவனை அழித்ததுமாம். இவற்றுள் முதற்செயல், கடலை அரணாகக்கொண்டு இடர்விளைத்த பகையரசர் கூட்டத்தை, எண்ணிறந்த மரக்கலங்கள்மூலம் படையெடுத்துச் சென்று வெற்றிகொண்டதைக் குறிக்கின்றது.[2] இளங்கோவடிகள்—

---

1. இரவிதத்தனது குமாரலிங்க சாஸனம். ஷை இரவிதத்தன் என்ற சிற்றரசன், சேரன் அநுமதிபெற்றுப் பிராமணனொருவனுக்கு அந்நாட்டிலுள்ள கிராமமொன்றைத் தானஞ்செய்தான் என்பதனால் கொடுகூர்நாடு பிற்காலத்தும் சேரனுரிமையாயிருந்ததென்பது அறியப்படும். (Indian Antiquary, Vol. XVIII, 1889. p. 367.)

2. "இனியா ருளரோ முன்னு மில்லை
வயங்குமணி யிமைப்பின் வேலிடுபு
முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசி னோரே." (பதிற்றுப். 45)
"கோடுநரல் பவ்வங் கலங்க வேலிட்
டுடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்." ( ஷை, 46)
"கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ" ( ஷை, 48)
"படைநிலா விலங்குங் கடன்மரு டானை
மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறாஅது விலங்குசினஞ் சிறந்து
செருசசெய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பவ்வ நீங்க வோட்டிய
நீர்மா ணெஃக நிறத்துச்சென் றழுந்தக்
கூர்மத னழியரோ நெஞ்சே." (அகம். 212)

"நெடுங்கடலோட்டி, உடன்றுமேல் வந்த வாரிய மன்னரைக் கடும்புனற் கங்கைப் பேரியாற்று வென்றோய்" (28. 119-21)

"மறத்துறை முடித்த வாய்வாட் டானையொடு
பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டிக்
கங்கைப் பேரியாற் றுக்கரை போகிய
செங்குட்டுவன்" (சிலப். இறுதிக்கட்டுரை.)

என, கடலோட்டிய செய்தியோடுசேர்த்து ஆரியரை வெற்றிகொண்டதை இருமுறை இணைத்துக் கூறுதலால், செங்குட்டுவன், தன்தாயையோ அவள்படிமத்தையோ நீராட்டற்காகக் கங்காயாத்திரை செய்ததற்குச் சிறிதுமுன்பு இக்கடற்போரை நடத்திப் பகைவென்றவனாகவே தோற்றுகின்றான். கடலிற்செய்த இவ்வருஞ்செயல்பற்றியே "சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன்" [1] "கடல்பிறக் கோட்டியசெங்குட்டுவன்" [2] என இவ்வேந்தன் புகழப்படுவன். இவனது கடற்படையெடுப்பில், தனக்குச்சிறந்த வேலையேற்றிக் கலங்களைச் செலுத்தி, தன்னுள்வாழ்வார்க்கு அரணாயிருந்த கடல்வலியை அழித்தமையால், மேற்குறித்த பெயர்கள் வழங்கலாயின என்பர்.[3] இவன்தந்தை நெடுஞ் சேரலாதனும் இங்ஙனமே கடல்நடுவிலிருந்த தன்பகைவர்மேற் படையெடுத்துச்சென்று வென்றசெய்தி முன்னரே குறிக்கப்பட்டது. இனி இளங்கோவடிகள்,

"கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்
கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது"

(சிலப். 25: 156-59.)

1. புறம் - 369. 2. பதிற்றுப்பத்து, 5-ம் பத்துப்பதிகம்.
3. ஷை. 45, 46-ம் அடிகளின் உரை காண்க.

என்று கூறிய செய்தி, இப்போருடன் தொடர்புடையதோ அன்றித் தனியானதோ தெரிந்திலது. இதனால், தன் காலத் தரசர் பலர்க்குப் பேரச்சம்விளைத்த தனிவீரனாக விளங்கியவன் நம் செங்குட்டுவன் என்பது பெறப்படும்.

(4) இனிச் செங்குட்டுவனது வெற்றிப்புகழ்க் கேதுவாகிய மற்றொரு போர், பழையன் என்பானுடன் நிகழ்ந்ததாகும். பழையன் என்பவன் பாண்டியன் படைத்தலைவனாகிய பெருவீரன். இவன் மோகூர் என்னும் ஊருக்குரியவன்; "பழையன் மோகூ ரவையகம்" என்பது மதுரைக் காஞ்சி (508). இப்பழையனை 'மோகூர்' எனவும் வழங்குவர்; "மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்"[1] "மோகூர் பணியாமையின்"[2] எனக் காண்க. மோரியவரசர் திக்குவிசயஞ்செய்துகொண்டு தென்றிசைநோக்கி வந்தபோது, இப் பழையன் அவர்க்குப் பணியாமையால், அவர்க்கும் இவனுக்கும் பெரும்போர் நிகழ்ந்ததென்று தெரிகின்றது. செங்குட்டுவன் இப்பழையனுடன் பகைமை பூண்டு போர்புரிந்தது, நெடுந்தூரத்திருந்த தன் நட்பரசனாகிய அறுகை[3] என்பவனுக்கு இப்பழையன் பகைவனாயிருந்தமையால், அந் நண்பனுக்கு உதவிசெய்வதற்காகவே என்று பரணர் பாடுவர். ஈண்டு அறுகையெனப்பட்டவன் கோசர் அன்றி வடநாட்டு அரசருள் ஒருவனாதல் வேண்டும். அப்பழையன் பெரும் போரில், அவனது காவன்மரமாகிய வேம்பினைத் துண்டந் துண்டங்களாகத் தறிப்பித்து, அப்பகைவன் யானைகளையே கடாவாகவும், அவன்மகளிரது கூந்தலை அறுத்துத்திரித்து

1. பதிற்றுப்பத்து. 44. 2. அகம். 251.

3. "நுண்கொடி யுழிஞை வெல்போ ரறுகை
சேணனு யினுங் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்
கரண்கடா வுறீஇ யணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு" (பதிற். 44)

அதனையே கயிறாகவுங்கொண்டு வண்டியிலிட்டு இழுப்பித்தனன் எனக் கூறப்பட்டுள்ளது.[1] இப்போரைப்பற்றி, இளங்கோவடிகளும் தம் நூலுட் சிறப்பித்தனர்.[2]

(5) இனி, கடற்கரையிலுள்ள வியலூரை[3] ஒருபோரிற் செங்குட்டுவன் எறிந்தனனென்றும், இதனையடுத்து நேரிவாயிலில் சோழமன்னரோன்பதின்மரை அழித்ததோடு, இடும்பாதவனத்தும்[4] இவன் வெற்றிபெற்றனனென்றும் சிலப்பதிகாரங் குறிக்கின்றது[5]. இவற்றுள் ஒன்பது மன்னரென்றது, சோழர்குடியிற் பிறந்த இளங்கோவேந்தர் ஒன்பதின்மரை[6]. செங்குட்டுவனுக்கு அம்மானாகிய சோழன் இறந்துபோனதும், அவன்மகனும் தன் மைத்துனனுமாகிய இளஞ்சோழன் பட்டத்தை அடைந்தகாலத்தே, அதுபொறுமற் பெருங்கலகம்விளைத்துச் சோணாட்டை அலைத்துநின்ற சோழவமிசத்தோர் ஒன்பதின்மரை உறையூர்க்குத் தென்பக்

1. பதிற்றுப்பத்து - 45, 5-ம் பதிகம்.

2. "பழையன் காக்குங் குழைபயி னெடுங்கோட்டு
வேம்புமுதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய" (சிலப். 27: 124-126.)

3. "கறிவளர் சிலம்பிற் றுஞ்சும் யானையிற், சிறுகுரல் நெய்தல் வியலூர்" (சிலப். 28: 114-5) எனப்படுதலால், இது, கடன் மலை நாட்டுள்ளதோர் ஊர் என்பது புலனாகும். நன்னன் வேண்மானுக்கு இஃது உரியதாயிருந்ததென்று தெரிகின்றது (அகம். 97).

4. இது, சோழநாட்டில் திருத்துறைப்பூண்டியை அடுத்துள்ளதும் தேவாரப்பாடல் பெற்றதுமான இடும்பாவனம் என்ற தலம் போலும். 5. "சிறுகுர னெய்தல் வியலூ ரெறிந்தபின், ஆர்புனை தெரிய லொன்பது மன்னரை, நேரி வாயில் நிலைச்செருவென்று, நெடுந்தேர்த் தானையோ டிடும்பிற்புறத் திறுத்துக், கொடும்போர் கடந்து" (சிலப். 28: 115 - 19.)

6. "ஆராத் திருவிற் சோழர்குடிக் குரியோ, ரொன்பதின்மர் வீழ" என்றார் பதிகத்தும்.

கத்துள்ள நேரிவாயில்[1] என்ற ஊரில் நிகழ்ந்தபோரிலே ஒரு பகலிற்கொன்று, தன் மைத்துனச்சோழனைப் பட்டத்தில் நிறுவினன் செங்குட்டுவன். தம் தமையனது இவ்வரிய செயலை வியந்து:—

"மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பின ரொன்பது மன்னர்
இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
வளநா டழிக்கு மாண்பின ராதலின்
ஒன்பது குடையு மொருபக லொழித்தவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்" (சிலப். 27: 118-23.)

என இளங்கோவடிகளே கூறுதல் காண்க. "ஆராத் திருவிற் சோழர்குடிக் குரியோர் - ஒன்பதின்மர் வீழ வாயிற் புறத் திறுத்து" என்றார் பதிற்றுப்பத்தினும். செங்குட்டுவன் மைத்துனனாகிய இவ் விளஞ்சோழன்பெயர் பெருங்கிள்ளியென்பது சிலப்பதிகாரத்து உரைபெறு கட்டுரையாற் புலப்படும்.[2] இவன் இன்னான் ஆவன் என்பதும் பிறவும் 'செங்குட்டுவன் காலத்தரசர்' என்றபகுதியிற் காண்க. இவ் வரலாறுகளால், நம்சேரர்பெருந்தகை நடத்திய போர்களிற் சில பொதுவாக ஒருவாறு அறியப்படுதல் கண்டுகொள்க.

---

1. 'நேரிவாயில் - உறையூர்த் தெற்கில்வாயிலதோர் ஊர்' என்றார், சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் (சிலப். 28, 117). சோழர்க்குச் சிறந்த நேரிமலைக்குச் செல்லும் உறையூர்வாயிலில் இருந்தமையின், அவ்வூர் இப்பெயர் பெற்றதுபோலும்.

2. இவனைப் பெருநற்கிள்ளி என்பர் அடியார்க்கு நல்லார் (சிலப். பக். 31).

4-ம் அதிகாரம்

## செங்குட்டுவன் காலத்து

# இரண்டு சரித நிகழ்ச்சிகள்.

செங்குட்டுவனது நீடித்த ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த விசேட சம்பவங்களுள்ளே, இரண்டு சரிதங்கள் மிகச் சிறப்புடையன. அவை, கோவலன்கண்ணகிகளைப் பற்றியதும், கோவலனுடைய கணிகைமகள் மணிமேகலையைப் பற்றியதுமாம். இவ்விருசரிதங்களில், முன்னதைச் செங் குட்டுவன் சகோதரரான இளங்கோவடிகள் சிலப்பதிகார மென்ற காவியத்தாலும், பின்னதை அவ்வடிகள் காலத்துப் புலவராகிய மதுரைக் கூலவாணிகன்சாத்தனர் மணிமேகலை யென்ற காவியத்தாலும் மிகவழகாகப் பாடியிருக்கின்றனர். இவ்விரண்டு நூல்களும் அகவற்பாவில் தனித்தனி முப்பது காதைகளுடையனவாக அமைந்துள்ளன. இவற்றிற்கண்ட அவ்விருவேறு சரித்திரச்சுருக்கங்களும் அடியில்வருமாறு:—

### 1. கோவலன் கண்ணகிகள் வரலாறு

சோணாட்டில், காவிரி கடலொடுகலக்குமிடத் தமைந் ததும் சோழரது பழைய இராசதானியுமாகிய புகார் என்ற காவிரிப்பூம்பட்டினத்தில், வணிகர்தலைவனாகிய மாசாத்து வான் என்பவன், தன்மகன் கோவலனுக்கு மாநாய்கன் என்ற வணிகன்மகள் கண்ணகியை மணம்புரிவித்துத் தனி மாளிகையில் வேண்டியனவற்றை அமைத்து அவர்களை வாழ்ந்துவரும்படி செய்ய, அவர்களும் அறவோர்க்களித்தல் அந்தணரோம்பல்முதலிய தருமங்களைச்செய்து இல்லறத்தை இனிது நடத்திவந்தனர்.

இங்ஙனம் நிகழ்ந்துவருங்கால், மிக்க அழகும் ஆடல் பாடல்களில் தேர்ச்சியுமுடைய மாதவி என்னும் நாடகக் கணிகையைக் கோவலன் காதலுற்று, தன்பாலுள்ளபொருள் களை நாளும் அவள்பொருட்டுச் செலவிட்டுக் கண்ணகியைப் பற்றிய சிந்தனையின்றியே தன் காமக்கிழத்தியுடன் கலந்து மகிழ்ந்து வருவானாயினன். கண்ணகி தன் கணவனது பிரி வுக்கு வருந்தினளாயினும், அதனை வெளிக்காட்டாதிருந் தாள். இங்ஙனம் நிகழச் சோழர்கள் இந்திரன்பொருட்டு ஆண்டுதோறும் நடத்தும் இந்திரவிழாவானது அக்காலத் துச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவின் முடிவில், நகரத்துள்ளார் வழக்கம்போலத் தத்தம் பரிவாரங்களுடன் கடலாடுதற்குச் சென்றனர். கோவலனும் தன் காதற் கணிகையுடன் கடற்கரையடைந்து ஓரிடத்திருந்து பல வகைப்பாடல்களைப் பாடிக்கொண்டு யாழை எடுத்து வாசித் தான். அவன் பாடியவை, வெவ்வேறு அகப்பொருட்சுவை தழுவியிருந்தமையால், மாதவி 'இவன் வேறு மகளிர்பால் விருப்புடையன் போலும்' என்றெண்ணிப் புலந்து, அவன் கையாழை வாங்கித், தான் வேறு குறிப்பில்லாதவளாயினும், அக்குறிப்புக்கொண்ட அகப்பொருட்சுவை தழுவிய பாட்டுக் களைப் பாடிக்கொண்டு அவ்யாழை வாசித்தனள். அவள் பாடியவற்றைக் கேட்டிருந்த கோவலன் 'வேறொருவன்மேற் காதல்கொண்டு இவள் பாடினளாவள்' என்றெண்ணி, ஊழ் வசத்தால் அவளை உடனே துறந்து தன்மனையையடைந்து கண்ணகியைக் கண்டு, "பொய்யை மெய்யாகக் காட்டியொழு கும் பரத்தையை மருவி வறுமையுற்றுக் கெட்டேன்; அஃது எனக்கு மிகவும் நாணைத்தருகின்றது" என்றான். கண்ணகி, 'மாதவிக்கு மேலுங்கொடுக்கப் பொருளின்மை யால் இங்ஙனம் கவல்கின்றான்' என்று கருதி 'அடியே னிடத்து இரண்டு உயர்ந்த சிலம்புகள் உள்ளன: அவற்

றைக் கொண்டருள்க' என்றாள். அதுகேட்ட கோவலன், 'ஆயின் மதுரையடைந்து அச்சிலம்புகளையே முதலாக்க் கொண்டு வாணிகஞ்செய்து பொருள்தேட எண்ணுகின்றேன்; நீயும் உடன்வருக' என்றான். அதற்குக் கண்ணகியும் சம்மதிக்க, அவ்விரவின் கடையாமத்தே ஒருவருமறியாவகை அவ்விருவரும் புறப்பட்டுக் காவிரியின் வடகரை வழியே சென்று, ஆங்கொரு சோலையில் மதுரைக்குப் புறப்படச் சித்தமாயிருந்த கவுந்தியடிகள் என்ற சைனத்தவமுதுமகளுடன்கூடிப் பிரயாணஞ்செய்துகொண்டு உறையூர்வந்து சேர்ந்தார்கள்.

இங்ஙனம் வந்தவர்கள், அங்குத் தங்கி இளைப்பாறினராய் மறுநாள் அவ்வூரினின்று புறப்பட்டு இடைவழியில் எதிர்ப்பட்ட அந்தணனொருவனால் மதுரைக்கு மார்க்கந் தெரிந்துகொண்டு அப்பாற் சென்றனர். செல்கையில், காலைக்கடன் கழிப்பதற்காகக் கோவலன் ஒரு பொய்கைக்கரையை அடைந்துநிற்க, ஆங்குத் தன் நாடகக்கணிகையால் விடுக்கப்பட்டுத் தன்னைத் தேடிவந்த கௌசிகன் என்ற பார்ப்பனனைக்கண்டு, தன் தந்தைதாயரின் துயரங்களையும் மாதவியின் பிரிவாற்றுமையையும் அவன் சொல்லக்கேட்டு வருந்தி, தான் புறப்பட்ட காரணத்தைத் தன் பெற்றோர்க்குக்கூறித் தன் வந்தனங்களைத் தெரிவிக்கும்படியும் சொல்லி அவனை அனுப்பிவிட்டு, முன்போலவே கவுந்தியடிகளுடன் பிரயாணமாகி மதுரையை அணுகி, வையையாற்றைத் தொழுது படகேறி, அந்நகரின் மதிற்புறத்துள்ள சமணமுனிவரிருக்கையில் அவ்வடிகளுடன் தங்கினான்.

மறுநாட்காலையில், கோவலன் கவுந்தயடிகளை வணங்கித் தன் துன்பநிலையைக்கூறி வருத்தமடைய அவளால் தேற்றப்பட்டு, கண்ணகியை அவ்வடிகள் பார்வையில்வைத்து

விட்டு, தான் வாணிகஞ்செய்தற்கு ஏற்ற இடமறிந்துவரும் பொருட்டு மதுரையினுள்ளே பிரவேசித்து அந்நகர்வளங் களைக்கண்டு மகிழ்ந்து திரும்பிக் கவுந்தியிடம் வந்துசேர்ந்து மதுரைச் சிறப்பையும் பாண்டியன் பெருமையையும்பற்றிக் கூறிக் கொண்டிருந்தான். அப்போது, தன் பழைய நட்பாளனும், தலைச்செங்கானம் என்னும் ஊரினுள்ளவனும், தீர்த்தயாத்திரைசெய்து வருவோனுமாகிய மாடலன்[1] என்னும் அந்தணன் ஆங்கு வரக்கண்டு மகிழ்ந்து, அவனடி வணங்கி அவனுடன் அளவளாவிக்கொண்டிருந்தான். அவ் வமயம் கவுந்தியடிகள், தம்மிடம் வந்த இடைச்சியர்தலைவி யாகிய மாதரி என்பவளது உத்தமகுணங்களை நோக்கி அவள்பாற் கண்ணகியை அடைக்கலமாக ஒப்பிக்க, அவள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கண்ணகியைக் கோவலனுடன் அழைத்துக்கொண்டு ஆயர்பாடியிலுள்ள தம்மனையொன் றில் அவர்களை அமர்த்தி, சமைத்துண்ணுதற்கு வேண்டிய பண்டங்களுமளித்துத் தன்மகள் ஐயை என்பவளைக் கண் ணகிக்குத் துணையாகவைத்துப் பெரிதும் உபசரித்தனள். கண்ணகியும் தான்பெற்ற உணவுப்பண்டங்களைப் பக்குவ மாகச் சமைத்துத் தன் கணவனுக்கு முறைப்படி பரி மாறக் கோவலன் இனிதாக உண்டு, பின் தன் மனைவியை அருகிலழைத்துத் தான் அவட்குச்செய்த தவறுகளையும் தன் கூடாவொழுக்கங்களையுங்கூறி முன்புரிந்தவற்றுக்கு இரங்கி

1. 'மாடல' என்பது பார்ப்பனரது பழைய கோத்திரங் களுள் ஒன்று. 'கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமர னார்' என்ற பழையபுலவரும் இக்குடியினராவர் (புறம்). "மாடவ கோத்திரத்து ஹிரண்யகேசி சூத்திரத்து" எனவும், மாடலன் பாண்டன் தாமோதரன் (S. I. I. IV, 13, 17), மாடலன் கருடன் கண்ணன் (Ibid. iii, 316) எனவும்வரும் சாஸனத்தொடர்களும் காண்க.

அவளை அருமைபாராட்டிவிட்டு, 'இனி உன் சிலம்புகளில் ஒன்றைக்கொண்டு நகரத்துள்ளே சென்று விற்று விரைவில் வருவன்; அதுவரையில் நீ ஆற்றியிரு' என்றுசொல்லி, அவளது சிலம்புகளிலொன்றை வாங்கிக்கொண்டு சென்று, எதிர்ப்பட்ட துன்னிமித்தங்களையும் அறியாதவனுய் மதுரையின் ஆவணவீதியினுள்ளே புகுந்தனன்.

இங்ஙனம் புகுதலும், பொற்கொல்லர் நூற்றுவர் தன் பின்வர மிக்க ஆடம்பரத்துடன் வருகின்ற பொற்கொல்லர் தலைவனைக் கோவலன்கண்டு 'இவன் அரசனுற் பெயர்பெற்றவன் போலும்' என்றெண்ணி அவனருகிற்சென்று, "அரசன்தேவி அணிதற்குத் தகுதியான சிலம்பொன்றை விலைமதித்தற்கு நீ தகுதியுடையையோ'' என்று அவனை உசாவ, அக்கொல்லனும் மிக்கபணிவுடன் தான் வல்லனுதலைக் குறிப்பிக்க, கோவலன் தான்கொணர்ந்த சிலம்பினை அவனிடங் காட்டினன். அவன் பார்த்து, 'இதனை அரசனுக்கு நான் தெரிவித்துவருமளவும் இவ்விடத்தே நீவிர் இருமின்' என்று தன்மனைக்கருகான ஓரிடத்தைக் கோவலனுக்குக் காட்டிச் சென்ருன். சென்ற பொற்கொல்லன், முன்பு அரசன்மனையுள் சிலம்பொன்றை வஞ்சித்துத் திருடிக்கொண்டவனுதலால், 'யான் கவர்ந்த சிலம்பு என்னிடத்தேயுள்ளது என்று அரசன் அறிதற்கு முன்னை அதனேடொத்த சிலம்பைக் கொணர்ந்த இப்புதியவனுல் என்மீதுண்டாகும் ஐயத்தைப் போக்கிக்கொள்வேன்' என்று தனக்குள்ளே சூழ்ந்து, அரண்மனையையடைந்து, காமபரவசனுய் அந்தப்புரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பாண்டியனைக்கண்டு வணங்கி—'அரசே! கன்னக்கோல் முதலியவையின்றியே அரண்மனையுள்ளிருந்த சிலம்பைத் திருடிய கள்வன் அடியேனுடைய மனையில்வந்துள்ளான்' என்று சொல்ல, பாண்டியன் உடனே காவலாளரை அழைத்து

'என் மனைவியின்சிலம்பு இவன்கூறிய கள்வன் கையிடத்த தர்யின் அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொணருதிர்' என்று ஆராய்ச்சியின்றியே கட்டளையிட்டனன். பொற் கொல்லன் தனதெண்ணம் பலித்ததென்று அகமகிழ்ந்து அக் காவலாளர்களுடன் சென்று கோவலனையடைந்து அவனை நோக்கி, 'இவர்கள் அரசன் கட்டளைப்படி சிலம்புகாண வந் தவர்கள்' என்று கூறவும், கோவலன் முகக்குறி முதலியவற் றைக்கண்டு 'இவன் கள்வனல்லன்' என்று கூறிய காவலா ளர்க்கு 'இவன் கள்வனே' என்பதைத் தனியே வற்புறுத் திப் பக்கத்தில் நின்றான். அப்போது, அவர்களிற் கொலை யஞ்சாதா னொருவன் யோசனையின்றி விரைந்து சென்று தன் கைவாளாற் கோவலனை வெட்டிவீழ்த்தினன்.

இப்பால், கண்ணகியிருந்த இடைச்சேரியிலே பலவித உற்பாதங்கள் உண்டாயின. அவற்றைக்கண்ட மாதரி முதலி யோரால் உற்பாதசாந்தியாகத் திருமாலைக்குறித்துக் குர வைக்கூத்தொன்று நிகழ்த்தப்பட்டது. அதன் முடிவில் மாதரி நீராடுதற்பொருட்டு வையையாற்றுக்குச் சென்றாள். அப்பொழுது, சிலம்பு திருடியவனென்று கோவலனைக் காவ லாளர் கொன்ற செய்தியை மதுரைமாநகருள்ளிருந்துவந்த ஒருத்தி சொல்லக்கேட்ட கண்ணகி, பதைபதைத்து மூர்ச் சித்துப் பலவாறு புலம்பித் தானும் அவனுடன் இறக்கத் துணிந்து, இடைச்சியர்மத்தியில் நின்று சூரியனை நோக்கி, 'செங்கதிர்ச் செல்வனே! நீ யறிய என் கணவன் கள் வனோ?' என்றாள். அவன், 'நின் கணவன் கள்வனல்லன்: அவனை அவ்வாறுசொன்ன இவ்வூரை விரைவில் தீயுண் ணும்' என்று அசரீரியாகக் கூறினன். அதனைக்கேட்ட கண்ணகி மிக்க சீற்றத்தோடும் தன்னிடமுள்ள மற்றொரு சிலம்புடனே புறப்பட்டுக் கண்டார் நடுநடுங்கும்படி வீதி வழியே சென்று ஆங்கு நின்ற மகளிரை நோக்கிப் பல

வாறு புலம்பி, வெட்டுண்டு கிடந்த கோவலனைச் சிலர் காட்டக்கண்டு அளவுகடந்த துன்பத்திலாழ்ந்து அவனை முன் னிலைப்படுத்திப் பலவாறு பிரலாபித்து அவனுடம்பைத் தழுவிக்கொள்ளவும், அவ்வளவில் அவன் உயிர்பெற்றெ ழுந்து 'மதிபோன்ற முகம் வாடியதே' என்று சொல்லித் தன் கையாலே அவள் கண்ணீரை மாற்ற, கண்ணகி அவன் பாதங்களைப் பணிந்தனள். உடனே, அவன் 'இனி நீ இங் கிரு' என்று சொல்லி அவ்வுடம்பை ஒழித்துவிட்டுத் தேவ ருலகம் எய்தினன்.

இங்கே இவ்வாறு நிகழப் பாண்டியன் மனைவி தான் கண்ட தீச்சகுனங்களைத் தன் கணவனுடன் பேசிக்கொண் டிருக்கும் நிலையிலே, கண்ணகி பயங்கரமான பெருஞ்சீற்றத் துடன் அரண்மனைவாயிலை யடைந்து, வாயில்காவலனால் தன் வரவை அரசனுக்கு அறிவித்தனள். அரசன் அநுமதி கிடைத்ததும் அவன்முன் சென்று, அவன்கேட்பத் தன் ஊர் பெயர் முதலியவற்றையும், ஆராயாது கோவலனைக் கொல்வித்த அவனது கொடுங்கோன்மையையும் பெருந் துணிவுடன் எடுத்து மொழிந்தனள். இதனைக்கேட்ட பாண் டியன் 'கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று — வெள்வேற் கொற்றங்காண்' என்றுகூற, கண்ணகி தன் கணவன் கள்வ னல்லன் என்பதைக் காட்டும்பொருட்டுத் 'தன் சிலம்பினுள் ளேயிருக்கும் பரல் மாணிக்கமாம்' என்றாள். இதுகேட்ட அரசன் 'நன்று! தேவிசிலம்பின் பரல் முத்து' என்றான். உடனே, அவற்றின் உண்மையைச் சோதிப்பதற்காகக் கோவலனிடமிருந்த சிலம்பு வருவிக்கப்பட்டது. அதனைக் கண்ணகி வாங்கித் தன்கையால் உடைக்கலானாள். உடைக் கவும் அதனுள்ளிருந்த மாணிக்கப்பரல் பாண்டியனது வாயடியிற்சென்று தெறித்தது. அதுகண்டு அரசன் பதை பதைத்து—"இழிந்த பொற்கொல்லன் சொல்லைக்கேட்ட

கொடுங்கோலனாகிய யானே அரசன்! யானே கள்வன்! அந்தோ! மிக்க புகழ்படைத்த இவ்வருமந்த அரசகுலம் என்னால் பெரும்பழியடைந்ததே; என் ஆயுள் இப்போதே அழியக்கடவதாக'' என்றுகூறிப் புலம்பி மனமுடைந்து தானிருந்த சிங்காதனத்தே வீழ்ந்து உயிர்விட்டனன். தன் கணவனிறந்தசெய்தி யறிந்ததும் அத்துக்கமாற்றாது உத்தம பத்தினியாகிய அவன்கோப்பெருந்தேவியும் உடனுயிர்நீங்கினள்.

இங்ஙனம், கண்ணகி, தன்கணவன் கள்வனல்லன் என்பதைப் பாண்டியன்முன் வழக்காடி மெய்ப்பித்து, முன்கொண்ட கோபஞ் சிறிதுந்தணியாளாய், 'நான் பத்தினியாயிருப்பது உண்மையாயின் இவ்வூரை அழிப்பேன்' என்று வஞ்சினஞ்செய்துகொண்டு அரண்மனையைவிட்டுப் புறப்பட்டாள். புறப்பட்டு, மதுரையினுள்ளே பிரவேசித்துத் தன் இடக்கொங்கையைத் திருகியெடுத்து அதனை அந்நகரின் மீதெறிய, அவள் சொல்லியவண்ணமே அந்நகருள் தீப்பற்றிக்கொண்டு பலவிடங்களையும் எரித்தது. அதன் வெம்மையை ஆற்றாத மதுரையின் அதிதேவதையானவள் கண்ணகிமுன் வந்துநின்று, அவளைநோக்கி, "யான் இந்நகரின் தெய்வம்; உனக்குச் சிலவுண்மைகூற வந்தேன்; அவற்றைக் கேட்பாயாக; இந்நகரத்தில் முன்பிருந்த பாண்டியர்களுள் ஒருவரேனுஞ் சிறிதுங் கொடுங்கோன்மை உடையவரல்லர். இந் நெடுஞ்செழியனும் அத்தன்மையனே; ஆயினும் இத்துன்பம் உனக்கு வந்தவரலாற்றைக் கூறுவேன்; கேட்பாயாக; முன்பு கலிங்கநாட்டுச் சிங்கபுரத்தரசனாகிய வசு என்பவனும், கபிலபுரத்தரசனாகிய குமரனென்பவனும் தம்முட்பகைகொண்டு ஒருவரையொருவர் வெல்லக் கருதியிருந்தனர். அப்போது சிங்கபுரத்துக் கடைவீதியிற் பண்டம் விற்றுக்கொண்டிருந்த சங்கமனென்னும் வணிகனை, அந்

நகரத்தரசனிடம் தொழில் செய்துகொண்டிருந்த பரத னென்பவன், இவன் பகைவனுடைய ஒற்றனென்று பிடித்து அரசனுக்குக்காட்டி அவனைக் கொலைசெய்துவிட்டான். அப்போது அச்சங்கமன் மனைவியாகிய நீலி யென்பவள் மிக்க துபாமுற்றவளாய்ப் பதினான்குநாள் பலவிடத்தும் அலைந்து, பின்பு ஒரு மலையின்மீதேறிக் கணவனைச் சேர்தற்பொருட்டுத் தன்னுயிரை விட நினைந்தவள், 'எமக்குத் துன்பம் விளைத்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைவார்களாக' என்று சாபமிட்டிறந்தனள். அப்பரதனே கோவலனாகப் பிறந்தான். ஆதலால் நீங்கள் இத்துன்பம் அடைந்தீர்கள். இற்றைக்குப் பதினான்காவது நாளில் பகல்சென்ற பின்பு, நீ உன் கணவனைக்கண்டு சேர்வாய்'' என்று சொல்லி அவளைத்தேற்றி மதுராபதியாகிய அத்தெய்வஞ் சென்றது. பின்பு கண்ணகி மதுரையை விட்டுநீங்கி, வையைக் கரைவழியே மேற்றிசைநோக்கிச் சென்று சேரநாடு அடைந்து நெடுவேள்குன்றம் அடிவைத்தேறி ஒரு வேங்கைமரத்து நிழலிலே நிற்க, பதினான்காந்தினத்துப் பகல்சென்றபின்பு, அங்கே தெய்வவடிவோடு வந்த கோவலனைக் கண்டு களித்து அவனுடன் விமானமேறித் தேவர்கள் போற்றும்படி விண்ணுலகடைந்தாள்.

இவ்வளவே, சிலப்பதிகாரத்தின் புகார்மதுரைக் காண்டங்களிற் சிறப்பித்துக் கூறப்படும் வரலாற்றின் சுருக்கம். மூன்றாவதான வஞ்சிக்காண்டமென்னும் பகுதியில், கண்ணகி விண்ணுலகஞ் சென்றதைக் கண்ணாரக்கண்ட வேடுவர்கள் திரண்டு, அவ்விசேடத்தைத் தம்மரசனாகிய செங்குட்டுவனுக்குத் தெரிவித்ததுமுதலிய செய்திகள் விரித்துக் கூறப்படுகின்றன. அவற்றைச் 'செங்குட்டுவன் வடயாத்திரை' யிற் கூறுவோம்.

---

## 11. மணிமேகலை வரலாறு.

காவிரிப்பூம்பட்டினத்திலே பெருங்குடிவாணிகர் மரபில் உதித்த கோவலனுக்கு, மாதவியென்னும் நாடகக்கணிகையிடம் மணிமேகலை என்பவள் பிறந்திருந்தனள். இவள் தாயாகிய மாதவி, தன் காதலனான கோவலன் மதுரையிற் கொலையுண்டிறந்தது கேட்டுத் தன்குலத்தொழிலை முற்றும் வெறுத்துப் பௌத்த முனிவராகிய அறவணவடிகளைச் சரணமடைந்து அவரால் வாய்மை நான்குஞ் சீலமைந்தும் உபதேசிக்கப்பெற்றுப் பௌத்த சங்கத்தைச் சேர்ந்து பிக்ஷுணியாயினள். அவள் மகள் மணிமேகலையோ, தன் தாயுடன் பழகிவந்ததனாற் சிறுபிராயத்திலே பௌத்ததருமங்களை அறிதற்கேற்ற உணர்ச்சிபெற்றிருந்தாள். ஒருநாள் மணிமேகலை, தாயின்கட்டளைப்படி தன் தோழியாகிய சுதமதியுடன் பூக்கொய்து வருவதற்கு உபவனஞ்செல்ல, ஆங்குத் தன்னை விரும்பிவந்த சோழன் - கிள்ளிவளவன் மகனாகிய உதயகுமரனுக்கு அஞ்சியவளாய், ஆங்கிருந்த பளிக்கறையொன்றிற் பதுங்கியிருந்து அவன் போனபின்பு வெளியே வந்தாள். வந்தபின்னர், அவள் குலதேவதையான மணிமேகலாதெய்வம்[1] தோன்றி, மணிபல்லவம் என்னுந்தீவிற்கு அவளை அழைத்துக்கொண்டு போயிற்று. அத்தீவிற்சென்ற மணிமேகலை ஆங்குள்ள புத்தபீடிகைக்காட்சியால் தன் பழம்பிறப்பில் நிகழ்ந்த விசேடங்களை அறிந்ததோடு, அத்தெய்வம் அறிவுறுத்திய மூன்றுமந்திரங்களை உணர்ந்து, முற்பிறப்பில் தன் கணவனாகவிருந்த இராகுலன் என்

---

1. உலகபாலரான தேவர்களால், மணிமேகலை என்பாள் சமுத்திரதேவதையாக நியமிக்கப்பட்டு, தருமசீலர்கள் கடலிடையே கலங்கவிழ்தல் முதலியவற்றால் வருந்துமிடத்து, அவர்களை உற்ற சமயங்களிற் காத்துதவும்படி ஆணையிடப்பட்டிருந்தனள் என்பதும், அம்முறையே, அந்தணனான சங்கன் என்பவனும்,

பவனே இப்பிறப்பில் உதயகுமரனாக வந்தான் என்பதையும் அத்தேவதையால் உணர்ந்தனள். பின்னர், அப்பீடிகையின் காவற்றெய்வமான தீவதிலகையின் உதவியால் அங்கேயுள்ள கோமுகியென்னும் பொய்கையை அடைந்து, அதிலிருந்த அமுதசுரபி என்னும் அக்ஷயபாத்திரம் தன் கையில் வரப்பெற்று, அப்பாத்திரத்துடன் தன் நகராகிய புகாரை யடைந்து, அறவணவடிகளிடஞ் சென்று நிகழ்ந்தது கூறி வணங்கினாள். அம்முனிவர், ஆபுத்திரன் வரலாற்றையும், அவனுக்கு மதுரையிற் சிந்தாதேவி அளித்த அமுதசுரபியே அவள்கையிற் புகுந்ததையும், அப்பாத்திரத்தாற் பசித்தவுயிர்கட்கு உணவளித்தலின் சிறப்பையும் மணிமேகலைக்கு உணர்த்தினர். அவர் கூறியவாறே, உணவளித்தற்பொருட்டு, தான்பெற்ற அமுதசுரபியைக் கையிலேந்தினளாய் மணிமேகலை வீதியிற்செல்ல, அவளது அக்ஷயபாத்

மஹாஜனகன் என்ற அரசகுமாரனும் கலங்கவிழ்ந்ததாற் கடலில் வருந்திநின்றபோது. ஏழாநாளில் அம், மணிமேகலாதெய்வத்தாற் காக்கப்பட்டனர் என்பதும் புத்தஜாதகக் கதைகளால் தெரியவருகின்றன (Prof. E. B. Cowell's Jataka, No. 442, 539). இந்து-சைனா, சீயம், பர்மா, இலங்கைமுதலிய பரதேசங்களிலும் மணிமேகலாதெய்வத்தின் வரலாறுகள் வழங்குவனவாம். அவற்றினின்று கன்னியாகுமரிக்குக் கிழக்கேயுள்ள தீபங்களெல்லாம் இந்த சமுத்திரதேவதையின் பரிபாலனத்துக்கு உட்பட்டிருந்ததென்பதும், மேற்கூறியவாறு புண்ணியசீலர்க்கு இவள் ஆபத்தில் உதவிவந்ததோடு புத்தபகவானிடம் பத்திமிக்கவளாய் அப்பகவற்குப் பல சைத்யங்கள்கட்டி வழிபட்டுவந்தவள் என்பதும் பிறவும்அறியலாகும் (யாம் எழுதிய "மணிமேகலையும் புத்தஜாதக்மும்" என்றகட்டுரை பார்க்க—கலைமகள், ஸி. 2). கோவலனின்முன்னோருள் புண்ணியசீலனை வணிகனொருவன் மேற்கூறியவாறே கடலிடை வருந்திநின்றபோது, ஏழாநாளில் அத்தெய்வம் காத்தளித்த நன்றிபாராட்டியே மணிமேகலை என்ற அத்தெய்வப்பெயரை அவன் தன்மகளுக்கு அவள் பிறந்த பத்தாநாள் இடச்செய்தனன் என்று சாத்தனாரும இளங்கோவடிகளுங் கூறுவர் (மணிமே. 29, 14-31; சிலப். 15, 28-37).

திரத்தில் உத்தமபத்தினியாகிய ஆதிரையென்பவள் வந்து முதலிற் பிச்சையிட்டனள். பின்பு மணிமேகலை அப்பாத்திரத்தினின்று எடுத்துதவிய ஒருபிடியமுதால், காயசண்டிகையென்னும் வித்யாதரியின் யானைத்தீப்பிணியைப் போக்கி, அப்பாத்திரத்தில் மேன்மேலும் அமுதுவளரப்பெற்று, அந்நகரிலுள்ள உலகவறவியென்னும் அம்பலத்தையடைந்து, அங்கேவந்த எல்லாவுயிர்களின் பசியையும் போக்கி, அவ்வறஞ்செய்தலையே நித்தநியமமாகப் பூண்டிருந்தனள். அங்ஙனமிருக்கும்போது, சோழன்மகனான உதயகுமாரன் தன்னை விரும்பி மறுமுறை அவ்விடம்வர, அதனையறிந்த மணிமேகலை அவன் தன்னையறிந்துகொள்ளாவண்ணம் வித்யாதரமங்கையாகிய காயசண்டிகையின் வடிவங்கொண்டு அந்நகரத்துச் சிறைச்சாலையை அடைந்து ஆங்குப் பசித்திருப்பவர்க்கெல்லாம் உணவளித்து அதனை அறச்சாலையாக்கினாள். அப்போது அவ்விடத்துந் தன்னை விடாதுதொடர்ந்த உதயகுமரன், காயசண்டிகையின் கணவனாகிய வித்யாதரனால் தன் மனைவியை விரும்பிவந்தவனென்று கருதி வாளால் வெட்டப்பட்டு வீழ்ந்ததுகண்டு மனங்கலங்கிப் பின்பு கந்திற்பாவையென்னுந் தெய்வந்தேற்றத் தேறி, உதயகுமரன் றந்தையாகிய சோழனால் ஐயத்தின்மேற் சிறைவைக்கப்பட்டு, அவன்மனைவி இராசமாதேவியின் முயற்சியாலே அச்சிறையினின்றும் விடுபட்டனள். பின் மணிமேகலை, காவிரிப்பூம்பட்டினத்தினின்று சாவகநாட்டுள்ள நாகபுரத்தையடைந்து, அதனரசனான புண்ணியராசனோடு மணிபல்லவஞ் சார்ந்து, அங்குள்ள புத்த பீடிகையை அவனுக்குக்காட்டி அதனால் அவ்வரசனது பழம்பிறப்பை அவனுக்கறிவித்தாள். அக்காலத்துக் காவிரிப்பூம்பட்டினம் கடல்கொள்ளப்பட்டதென்ற செய்தியையும், தன்தாயான மாதவியும் அறவணவடிகளும் வஞ்சிமாநகரிலிருத்தலையும் தீவதிலகையால் அறிந்து, அவ்

வஞ்சிநோக்கிச் சென்று, முதலில், செங்குட்டுவனால் எடுப்பிக்கப்பட்ட கண்ணகிகோட்டமடைந்து தாயாகிய அப்பத்தினிக்கடவுளைத் தரிசித்துத் தன்னெதிர்காலச்செய்திகளை அக்கடவுளால் அறியப்பெற்றபின், செங்குட்டுவன் ஆளும் அந்நகரினுள்ளே பிரவேசித்தாள்; பிரவேசித்தவள் அதன் வளங்களையெல்லாங் கண்டு மகிழ்ந்து, ஆங்கு வசித்த சமய வாதிகள் பலரோடும் அளவளாவி அவ்வச்சமயத் திறங்களை அறிந்துகொண்டனள். அதன்பின்பு, அந்நகரத்துள்ள பௌத்தவிகாரத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த கோவலன் தந்தை மாசாத்துவானைக்கண்டு பணிய, அவன், அவள் தாயும் அறவணவடிகளுங் காஞ்சிமாநகரஞ் சென்றிருத்தலையும் அவ்வடிகள் அவட்குத் தருமோபதேசஞ்செய்ய எண்ணியிருத்தலையுங் கூறியதோடு, அந்நாட்டில் மழையின்மையால் உயிர்கள் வாடுதலின், அமுதசுரபியுடன் அவள் ஆங்குச் செல்லவேண்டிய ஆவசியகத்தையும் மணிமேகலைக்கு வற்புறுத்தினன். அவற்றைத் தன் பாட்டன்வாய்க் கேட்டதும் அவள் வஞ்சியினின்றும் உடனேபுறப்பட்டுக் காஞ்சிமாநகரமடைந்து, அந்நகரிற் பசியால் வருந்தி வாடிய உயிர்கட்கெல்லாம் உணவளித்துத் தன் தாயுடன் அறவணவடிகளையும் ஆங்குக் கண்டு வணங்கி, அவ்வடிகளால் பௌத்தமத தருமங்களனைத்தும் உபதேசிக்கப்பெற்றுப் பின் முத்திபெறுதற்பொருட்டு அக்காஞ்சியிலேயே தவஞ்செய்துகொண்டிருந்தனள்.

மேற்கூறிப்போந்த இரண்டுசரித்திரங்களும் செங்குட்டுவன் காலத்தனவாய் அவன்சம்பந்தம்பெற்ற வரலாறுகள் பலவற்றை அறிவிக்கக் கூடியனவாயிருக்கின்றன. இவ்விரண்டையும்பற்றிய நூல்களுள், சிலப்பதிகாரத்தின் இறுதிப் பகுதியான வஞ்சிக்காண்டமுழுதும், கண்ணகியின் படிவஞ் சமைக்கவேண்டி இமயமலையிற் கல்லெடுத்துக் கங்கையில்

அதனைநீராட்டுவதற்கும், அம்முயற்சியில் தன்னை இகழ்ந்த ஆரியவரசரை வெற்றிகொள்ளுதற்குமாகச் செங்குட்டுவன் நிகழ்த்திய வடநாட்டு யாத்திரையையும், அதன்பின் நிகழ்ந்த அச்சேரன் செய்திகளையும் மிகுதியாகக் கூறுவது. ஆதலின் அக்காண்டத்தே இளங்கோவடிகள் கூறியிருப்பவை பெரும்பாலும் இவ்வாராய்ச்சிக்குப் பெரிதும் உபகாரமாயிருந்தலால், அவ்வடிகளது செய்யுணடையை ஏற்றபெற்றி வசனநடைப்படுத்துகின்றோம். இக்காண்டமானது—(1)குன்றக்குரவை, (2) காட்சிக்காதை, (3) கால்கோட்காதை, (4) நீர்ப்படைக்காதை, (5) நடுகற்காதை, (6) வாழ்த்துக்காதை, (7) வரந்தருகாதை என ஏழு பிரிவுகளாக இளங்கோவடிகளால் வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

---

5-ம் அதிகாரம்

## செங்குட்டுவனது

# வடநாட்டியாத்திரை.

### 1. குன்றக்குரவை.

வேடுவர் தங்கள் குறிச்சியில் கண்ணகிபொருட்டுக் குரவைக் கூத்தாடியது.

கண்ணகி தன் கணவனையிழந்த பெருந்துயரோடும் வையைக் கரைவழியே மேற்றிசைநோக்கிச் சென்று, நெடுவேள் குன்றத்தை அடைந்து ஆங்கு ஒரு வேங்கைமரத்தின்கீழே நிற்ப, அவ்விடத்திருந்த மலைவேடுவரிற்சிலர் அக்கண்ணகியைநெருங்கி அவளைநோக்கி 'மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க - முலையிழந்து வந்துநின்றீர் யாவிரோ?' என்று கேட்ப, அதற்கவள் சிறிதும் அவ

ரைச் சினவாமலே, 'மணமதுரையோ டரசுகேடுற வல்வினை வந் திருத்தகாலைக்—கணவனையங் கிழந்துபோந்த கடுவினை யேன் யான் என்றாள்.' இங்ஙனம் கண்ணகிகூற, மலைவாணர் கேட்டு அஞ்சி அவளை வணங்கிநின்றபோது, தேவர்குழாம் ஆங்கு வந்து மலர்மழை பொழிந்து அங்குள்ளவர் கண் முன்பே கண்ணகிக்கு அவள் காதற்கணவன் கோவலனைக் காட்டி, அவளையும் உடனழைத்துக்கொண்டு விண்ணுலகஞ் செல்வதாயிற்று. இவ்வற்புத நிகழ்ச்சியை நேரிற்கண்டு வியப்பும் உவப்புங்கொண்ட அவ்வேடுவர், 'இங்குவந்து நின்ற மாதராள் நம் குலத்துக்கே ஒரு பெருந் தெய்வ மாவள்; இவள்பொருட்டு நாம் குரவையாடிக் கொண்டாடு வோம்' என்று, தம்மவரையெல்லாம் ஒருங்கழைத்து—

"சிறுகுடியீரே! சிறுகுடி யீரே!
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே!
நிறங்கிள ரருவிப் பறம்பின் தாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே!
தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்
குறிஞ்சி பாடுமின் நறும்புகை யெடுமின்
பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்
ஒருமுலை யிழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே"

என்று ஆர்ப்பரித்தெழுந்து, மலைநாட்டு முறைப்படி குர வைக்கூத்தாடியும், அதற்குரிய பாடல்களைப்பாடியும் பெருஞ் சிறப்புச் செய்தார்கள். இங்கு இங்ஙனம் நிகழ்ந்தது.

---

## 2. காட்சிக்காதை

கண்ணகியின் வரலாறறிந்த செங்குட்டுவன்
அப்பத்தினியின் படிவஞ் சமைத்தற்குரிய சிலையை
இமயத்தினின்றும் எடுத்துவர எண்ணியது.

இமயவரம்பன் - நெடுஞ்சேரலாதன் தோன்றலாகிய செங்குட்டுவன் வஞ்சியிலுள்ள இலவந்திகை [1] வெள்ளி மாடம் என்ற மாளிகையில் தன்தேவி இளங்கோவேண்மாளுடன் [2] வசித்துவந்த காலையில், 'மஞ்சுசூழுஞ் சோலைகளை யுடைய மலைவளத்தைக் கண்டுகளிப்போம்' என்று கருதியவனாய்—அரமகளிருடன் விளையாடலை விரும்பிய தேவேந்திரன் பூங்கா முதலியவற்றை யானைகள்மேற் புதியவாக நிருமித்து நூற்றுநாற்பதியோசனை தூரம் பரப்பி ஐராவதத்தில் ஆரோகித்துச் செல்பவன்போல—தன் பெரும்பரிவாரங்கள்சூழச் சென்றான். சென்று, திருமாலின் மார்பிடையே விளங்கும் முத்தாரம்போன்று பல்வகை மரங்களால்

1. இலவந்திகை - நீராவி; நீராவிப்பக்கத்துள்ள வெள்ளி மாடம் என்க.

2. 'இளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி' எனவரும் மூலத்துக்கு அரும்பதவுரையாசிரியர் "இளங்கோவேண்மாள் பெயர்; நன்னன் வேண்மாள், உதியன் வேண்மாள் என்பது போல; வேண்மாளுடனிருந்து இளங்கோவை அருளப்பாடிட்டு என்றுமாம்" என்றெழுதினர். இதனல், மனைவி வேண்மாளுடனிருந்த செங்குட்டுவன், தம்பி இளங்கோவடிகளையும் அங்கு அழைக்கலாயினன் என்று அத்தொடர்க்கு உரைகூறுவதும் அவ்வுரையாசிரியர் கருத்தாதல் விளங்கும். இளங்கோவடிகள் தம் தமையனுடன் அங்குத் தங்கியிருந்தவ ரென்பது பதிகத்தாலும் தெரியவருதலால், பிற்கூறியதும் பொருந்துவதேயாம்.

அழகுமிக்க மலையை ஊடறுத்துக்கொண்டு இழியும் பேரியாறு என்னும் ஆற்றங்கரையின் மணல்மிக்க எக்கரிலே தங்குவானாயினன். அக்காலத்தே, குன்றக்குரவை நிகழ்த்தும் மலைமகளிர் பாடல்களும், அம்மலையில் முருகபூசைசெய்யும் வேலனதுபாட்டும், தினைமா இடிப்போருடைய உலக்கைப் பாட்டும், தினைப்புனங்களினின்றெழுகின்ற ஒலியும், தேனெடுக்குங் குறவர் நிகழ்த்தும் ஓசையும், பறையோசைபோன்ற அருவியின் ஒலியும், புலியோடு பொருகின்ற யானையின் முழக்கமும், தினைப்புனங்காத்தற்காக மரங்களின் மேலிடத்தமைத்த பரண்மிசை இருப்போருடைய கூப்பீடுகளும், யானைபிடிக்கும் இடங்களிலே குழியில்வீழ்ந்த வேழங்களைப் பாகர் பழக்கும் சத்தமும் ஆங்குச்சென்ற சேனைகளது ஆரவாரத்தோடு கலந்தொலித்தன. அந்நிலையில், மலைவாணராகிய வேடுவர் பலர் ஒருங்குகூடி—

"யானைவெண் கோடு மகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும்[1] மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளும் அணியரி தாரமும்
ஏல வல்லியும் இருங்கறி[2] வல்லியும்
[3]கூவை நூறுங் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனுந் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும்[4] பலவின் பழங்களும்
காயமுங்[5] கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையி னிருங்கனித் தாறும்
ஆளியி னணங்கும்[6] அரியின் குருளையும்

1. மான்மயிராகிய வெண்சாமரை. 2. கரிய மிளகுக்கொடி.
3. கூவைக்கிழங்கின் மா (Arrow-root flower). 4. பச்சிலைமாலை.
5. வெள்ளுள்ளி. 6. அணங்கு - குட்டி.

வாள்வரிப்[1] பறழும் மதகரிக் களபமும்[2]
குரங்கின் குட்டியும் குடாவடி யுளியமும்[3]
வரையாடு[4] வருடையும் மடமான் மறியும்
காசறைக் கருவும் மாசறு [5]நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியும் தேமொழிக் கிள்ளையும்''

போன்ற பண்டங்களைத் தம் தலைமேலே தாங்கிக்கொண்டு—வஞ்சிமாநகரில் அரசனது சமயம்பெறாது தத்தம் திறைகளுடன் அரண்மனைவாயிலிற் காத்துநிற்கும் பகையரசர்போல, அம்மலைவாணர் செங்குட்டுவன் திருமுன்பு வந்துநின்று, 'ஏழ்பிறப்படியேம், வாழ்கநின் கொற்றம்' என்று அவனடி பணிந்து, "வேந்தர் வேந்தே! யாம் வாழும் மலையின்கண்ணே காட்டுவேங்கையின் கீழே மங்கையொருத்தி ஒரு முலை யிழந்தவளாய்ப் பெருந்துயரோடும் வந்துநிற்க, தேவர்கள் பலரும் அவ்விடம்வந்து அம்மங்கைக்கு அவள் காதற் கொழுநனைக் காட்டி, அவளையும் உடனழைத்துக்கொண்டு எங்கள் கண்முன்பே விண்ணுலகஞ்சென்றனள்;[6] அவள் எந் நாட்டாள் கொல்லோ, யாவர் மகளோ, அறியேம். இது பெரியதோர் அதிசயந் தாராநின்றது; தேவரீர் நாட்டில் நிகழ்ந்த இதனை அறிந்தருளல் வேண்டும்" என்று, தாங்கள் நேரிற்கண்ட செய்திகளை அரசனுக்குக் கூறி அவனை வாழ்த்திநின்றனர்.

அப்போது அரசனது பெருஞ்சிறப்பினையும், மலைவளத்தின் மாட்சியையுங் கண்டு வியப்பும் உவப்பும் அடைந்து உடனிருந்த தண்டமிழாசானாகிய மதுரைச்சாத்தனார், (கோவலன் கொலையுண்டது முதலாய செய்திகள் தம்மூரில்

---

1. வாள்வரி-புலி. 2. யானைக்கன்று. 3. குடாவடியுளியம் - பிள்ளைக்கரடி. 4. ஒருவகை மலைமான். 5. காசறைக்கரு - கத்தூரிக்குட்டி. 6. இச்செய்தி சிலப்பதிகாரப்பதிகத்துக் கண்டது.

நிகழ்ந்தவற்றை நேரில் அறிந்தவராதலால்) செங்குட்டுவனை நோக்கி "வேந்தே! யானறிவேன் அது நிகழ்ந்தவாற்றை" என்று தொடங்கி, தன்தேவியின் சிலம்பைத்திருடிய கள்வனென்று கண்ணகிகணவனைப் பாண்டியன் கொலைபுரிவித்ததும், அஃதறிந்த கண்ணகி பெருஞ்சினங்கொண்டு பாண்டியன்முன் சென்று வழக்காடி வென்றதும், பாண்டியன் தேவிமுன்பு மற்றொரு சிலம்பை வீசியெறிந்துவிட்டுக் கண்ணகி வஞ்சினங்கூறித் தன் ஒருமுலையைத் திருகிவீசி, அதினின்றெழுந்த தீயால் மதுரைமூதூரைச் சுட்டெரித்ததும், சிங்காதனத்திருந்து கண்ணகியின் வழக்கைக்கேட்டநெடுஞ்செழியன் தான்செய்த கொடுங்கோன்மைக்கு ஆற்றாது மனமுடைந்து தன் ஆசனத்தே வீழ்ந்திறந்ததும், இங்ஙனம் பாண்டியன இறக்கவும் அவன்கோப்பெருந்தேவி அக்கடுந்துயர் பொறுளாய்க் கலக்கங்கொள்ளாதே 'மன்னவன் செல்வழிச் செல்க யானெனத், தன்னுயிர்கொண்டு அவனுயிர் தேடினள் போல்' உடனுயிர்விட்டதும் விளங்கக்கூறிவிட்டுப்பின், 'பாண்டியனது கொடுங்கோன்மை இத்தன்மைத்து என்பதைத் தலைமைவேந்தனாகிய உன்னிடத்துக் கூறவந்தவள்போலத் தனக்குரிய சோணாடுசெல்லாது நின்னாடு அடைவாளாயினள் அந்நங்கை' என்று, நடந்தவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் உரைத்து அரசனை வாழ்த்திமுடித்தனர்.

இங்ஙனம் பாண்டியனுக்கு நேர்ந்த தீவினைத்திறங்களையெல்லாங்கேட்ட செங்குட்டுவன், வருத்தமிக்கவனாய்ச் சாத்தனாரை நோக்கி—"புலவீர்! தான் செங்கோலினின்று வழுவிய செய்தி எம்மையொத்த அரசர்செவிகளிற் சென்றெட்டுவதற்குமுன்பே பாண்டியன் உயிர்நீங்கியசெயல், அவனது தீவினையால் வளைக்கப்பட்ட கோலை உடனே நிமிரச்செய்து செங்கோலாக்கிவிட்டது. அரசராயுள்ளார்க்கு, நாட்டில் மழை காலத்திற்பெய்யாதாயின் அச்சம்; உயிர்கள் தவறு

செய்யுமாயின் அச்சம்; கொடுங்கோற்கஞ்சி மன்னுயிர்களைக் காத்தற்குரிய உயர்குடியிற்பிறத்தலிற் றுன்பமல்லது சுகமேயில்லை'' என்று கூறிவிட்டுத் தன் தேவியை நோக்கி ''நன்னுதால்! கணவனுகிய பாண்டியனுடன் தன்னுயிரை நீத்த அவன் கோப்பெருந்தேவியும், சினத்துடன் நம் நாடுநோக்கி வந்த கண்ணகியும் ஆகிய இவ்விருபெரும்பத்தினிகளுள்ளே யாவர் வியக்கத்தக்கவராவர்?'' என்று உசாவ, அதற்கு வேண்மாள், 'தன் காதற்கணவனது துன்பத்தைக்காணுது உயிர்நீத்த பாண்டியன்பெருந்தேவி விண்ணுலகத்தே பெருந்திருவுறக் கடவள். அதுநிற்க; நம் நாட்டை நோக்கிவந்த பத்தினியை நாம் வழிபடுதல் இன்றியமையாதது' என்று கூறினள். அதுகேட்ட அரசன் அவள் கூறியதை விரும்பியேற்றுத் தன் அமைச்சரை நோக்கவும், அவர்கள், 'நம் நாடு நோக்கிவந்த அப்பத்தினிக்கடவுட்குப் படிவஞ்சமைத்தற்குரிய சிலையைப் பொதியமலையினின்றேனும் இமயமலையினின்றேனும் எடுத்துவருதலே தக்கதாம். ஆயின், பொதியத்தினின்று கொணர்வதைக் காவிரியினும், இமயத்தினின்று கொணர்வதைக் கங்கையினும் நீராட்டித் தூய்மைசெய்வித்தல் மிகப் பொருத்தமுடையதாகும்' என்று கூறினர். கூறக்கேட்ட செங்குட்டுவன் 'பொதியமலையிற் கல்லெடுத்துக் காவிரியில் நீராட்டல் பெருவீரராகிய சேரரின் குடிப்பிறந்த எங்கட்குச் சிறப்பைத்தருஞ் செய்கைபன்று; ஆதலால் இமயத்திலிருந்து கல்லெடுப்பித்துக் கங்கையில் நீராட்டி வருதலே நம் பெருமைக்கேற்றதாம். இமவான் நம் விருப்பத்துக் கிணங்கானுயின்[1] இங்குநின்றும் வஞ்சிமாலை சூடிய சேனைகளுடன் சென்று புறத்துறைக்கமைந்த நம் வீரச்

---

1. அப்பக்கத்தவர் நம் கருத்துக் கிணங்காது தடுத்துநிற்பராயின் என்பது கருத்து.

செயல்கள் பலவற்றையும் ஆங்கு அவற்குக் காண்பிப்பேன்." என்று வீராவேசத்துடன் கூறினன்.

இங்ஙனம் செங்குட்டுவன் கூறிய வீரமொழிகளைக் கேட்ட வில்லவன் கோதை என்ற சேனாபதி அரசனை வாழ்த்திக்கொண்டு கூறுவான்:—"வேந்தர்வேந்தே! நம்மையொத்த வேந்தரான சோழபாண்டியர் நம்மோடு பகைத்துக் கொங்கர்செங்களத்தே தம் புலிக்கொடியையும் மீனக்கொடியையும் போரிலிழந்து ஓடினராயினும், அச்செய்தி திக்கயங்களின் செவிவரை சென்று பரவலாயிற்று. கொங்கணர் கலிங்கர் கருநடர் பங்களர் கங்கர் கட்டியர் வடவாரியர் இவருடன் தமது தமிழ்ப்படை கலந்துபொருத செருக்களத்தில் தாம் யானையைவிட்டுப் பகைவரையழித்த அரியசெய்கை இன்னும் எங்கள் கண்களைவிட்டு நீங்கவில்லை. அன்றியும் எம் கோமகளாய் விளங்கிய தம்தாயைக் கங்கையிற் நீர்த்தமாட்டிவந்த அக்காலத்தே, எதிர்த்துவந்த ஆரியவரசர் ஆயிரவர்முன் தாம்ஒருவராகநின்று பொருதபோர்க்கோலத்தைக் கடுங்கட்கூற்றமும் விழித்தவண்ணமே வியந்து நோக்கியதன்றோ? நீர்சூழ்ந்த இந் நிலவுலகத்தைவென்று தமிழ்நாடாக்க வேண்டித் தாம் வடநாட்டில் யாத்திரைசெய்யக் கருதின், ஆங்கு நம்மை எதிர்ப்பவர் யாருமே இல்லைஎன்பது உறுதி. இமயமலைக்கு எங்கோனாகிய நீவிர் செல்லக்கருதியிருப்பது பத்தினிக்கடவுளைச் சமைத்தற்குரிய சிலையின்பொருட்டேயாதலால், ஆங்குவாழும் அரசர்க்கெல்லாம், வில் கயல் புலி இவற்றை இலச்சினையாகக் கொண்ட நம் திருமுகத்தை முன்னே விடுத்தருளல் வேண்டும்'' என்று கூறினன். அதுகேட்ட அழும்பில்வேள் என்னும் அமைச்சன் "இந் நாவலந்தீவில் நம்பகைவராயுள்ளாருடைய ஒற்றர்கள் இவ் வஞ்சிமாநகரைவிட்டு நீங்குபவரல்லர். அவ் வொற்றுக்களே பகை

யரசர்செவிகளில் நம் வடநாட்டியாத்திரைபற்றிய செய்திகளை அறிவிக்கத்தக்கன. அதனால் நம் செலவை, இவ்வூரிற் பறையறைந்து தெரிவித்தலொன்றே போதியது'' என்று உரைக்கச் செங்குட்டுவனும் அதற்கு உடம்பட்டனன். பின்னர்ப் பேராற்றங்கரையினின்று புறப்பட்டு அரசன் தன் பெரும் பரிவாரங்களுடன் வஞ்சிமாநகரடைந்தான். அடைந்ததும், யானைமேல் முரசேற்றப்பெற்றுச் செங்குட்டுவனது வடநாட்டியாத்திரைபற்றியும், அதனிற் பகையரசர் வந்து பணியாவிடில் அவர்க்குநேருங் கேடுகளைப்பற்றியும்,

''வாழ்க [1] எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதோ றூழி யுலகங் காக்கென[1]
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்தோர்
கற்கொண்டு பெயருமெங் காவல னாதலின்
வடதிசை மருங்கின் மன்ன ரெல்லாம்
இடுதிறை கொடுவந் தெதிரீ ராயின்
கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையுங்
கேட்டு வாழுமின் [2] கேளீ ராயின்
தோட்டுணை [3] துறக்குந் துறவொடு வாழுமின்
தாழ்கழன் மன்னன் தன்றிரு மேனி [4]
வாழ்க சேனாமுகம்''

என்று கூறி, ஊரெங்கும் பறை அறையப்பட்டது.

---

1. 'வாழ்க' என்பதுமுதற் பறையறைகின்றார் வார்த்தை.

2. 'எதிரேற்றுக் காணீராயின், கடலுட்புக்கும் மலையினேறியும் வாழுமின் என்பார், இரண்டுவார்த்தையுங் கேட்டு வாழுமின் என்றார்' என்பது அரும்பதவுரை. 3. தோட்டுணை—மனைவியர்.

4. 'திருமேனியாகிய சேனாமுகம்; சேனாமுகம் அரசனுக்குச் சிறந்தமையின், திருமேனி என்றார்' என்பது அரும்பதவுரை.

## 3. கால்கோட் காதை

செங்குட்டுவன் வடநாட்டிற்செய்த பெரும்போரும், இமயஞ் சென்று பத்தினிக்குக் கல்லெடுப்பித்ததும்.

இங்ஙனம் வஞ்சிமாநகரிற் பறையறையப்பட்டபின்னர், சேரர்பெருமானான செங்குட்டுவன் அன்றுமாலையில், ஆசான் பெருங்கணி அமைச்சர் தானைத்தலைவர்கள் ஒருங்குகூடித் தன்னை வாழ்த்தியவராகி யாத்திரையில்நடத்தற்குரிய ஆணைகளைக் கேட்டுநிற்கத், தான் சிங்காதனத்தே வீற்றிருந்து சேனாபதிகளை நோக்கி அடியில்வருமாறு கூறுவானாயினான்:—"ஆரியமன்னர் பலரும் தம் நாட்டில்நிகழ்ந்த சுயம்வரமொன்றன்பொருட்டுக் குழுமியிருந்த இடத்தே—'தென்றமிழ் நாடாளும்வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து - மின்றவழு மிமயநெற்றியில் விளங்குவிற்புலி கயல்பொறித்தநாள் - எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லைபோலும்'—என்று நகைத்திகழ்ந்தனர் என்று, தீர்த்தயாத்திரை செய்துகொண்டு இங்குவந்த இமயத்தாபதரால் அறிந்தேன்.[1] அவ் விழிமொழி நம்பாலே தங்குமாயின், அஃது எனக்குமட்டு மன்றி என்போன்ற சோழபாண்டியராகிய தமிழ் வேந்தர்க்கும் இகழ்ச்சிவிளைக்கக் கூடியதன்றோ? ஆதலின், அங்ஙனம் இகழ்ச்சிசெய்த வடதிசைமன்னரது முடித்தலையில் பத்தினிக்கடவுளைச் சமைத்தற்குரிய கல்லை ஏற்றிக்கொண்டு வருவேன். அங்ஙனஞ் செய்யாது என் கைவாள் வறிதேவருமாயின், என்னோடு முரணிய பகையரசரை நடுங்கச்செய் தடக்காமல், வளந்தங்கிய என்னாட்டுக்குடிகளை வருத்துங் கொடுங்கோலனாகக் கடவேன்'—என்று அப் போத்தாணியிற்

---

1. இச் செய்தி, 29 - வது வாழ்த்துக்காதையின் உரைப் பாட்டுமடையிற் கண்டது.

சினத்துடன் வஞ்சினங்கூறினன். இங்ஙனம் அரசன் கூறியதைக் கேட்ட ஆசான் (புரோகிதன்) 'இமயவரம்ப! வடவரசர், (சோழபாண்டியரையன்றி) நின்னை இகழ்ந்து கூறினவரல்லர்; நீ இங்ஙனம் வஞ்சினங்கூறுவதற்கு நின்னோடு எதிர்க்கும் மன்னரும் உளரோ? ஆதலால் கோபந்தணிக' என்று அவன் சீற்றத்தைச் சமனஞ்செய்வானாயினன். உடனே, சோதிடம் வல்லானாகிய மௌத்திகன்[1] எழுந்து நின்று 'அரசே! நின் வெற்றி வாழ்வதாக; இவ்வுலகிலுள்ள பகையரசரெல்லாம் நின் அடித்தாமரைகளைப் பணியத்தக்க நன்முகூர்த்தம் இதுவே; நீ கருதிய வடதிசையாத்திரைக்கு இப்போதே எழுவாயாக' என்றான். இந் நிமித்திகன் வார்த்தையைக்கேட்ட செங்குட்டுவன் உடம்பட்டு, உடனே தன் வாளையுங் குடையையும் அந் நன்முகூர்த்தத்தில் வடதிசைப்பெயர்த்து நாட்கொள்ளும்படி ஆணையிட்டனன். அவ்வாணை பிறந்ததும், போர்வீரரது ஆரவாரத்தோடு முரசங்கள் பூமி அதிரும்படி ஒலித்தன. பகைவர்க்கு வேதனைவிளைக்குஞ் சேனைகள், மணிவிளக்குக்களுடனும் துவசங்களுடனும் முன் செல்லவும், ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும்[2] அரசாங்கத்தை நடத்தும் கருமவினைஞரும் கணக்கியல் வினைஞரும் தருமவினைஞரும் தந்திரவினைஞரும் தம் அரசனை 'செங்குட்டுவன் வாழ்க' என்று கூறவும், பட்டவர்த்தனமாகிய களிற்றின் பிடர்மேல் ஏற்றப்பட்ட அரசவாளும் வெண்கொற்றக்குடையும் வஞ்சிப்புறத்

1. மௌஹூர்த்திகன் என்ற வடசொல்லின் திரிபு.

2. ஐம்பெருங்குழு - அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணரென்போர். எண்பேராயத்தை, 'கரணத் தியலவர் கரும விதிகள், கனகச் சுற்றங் கடைகாப் பாளர், நகர மாந்தர் நளிபடைத் தலைவர், யானை வீர ரிவுளி மறவர், இனைய ரெண்பே ராய மென்ப' என்பதனலறிக (திவா).

துள்ளகோட்டையிற் புகும்படிசெய்து செங்குட்டுவன் தன் அத்தாணிமண்டபத்தை அடைந்தான். அன்றிரவில், போர் விருப்பத்தாற் களிப்புற்றுத் தன்னுடன் வருதற்கிருக்கும் சேனைகளுக்கும் தானைத்தலைவர்க்கும் பெருஞ்சோறளித்து உபசரித்து உற்சாகப்படுத்தி, மற்றொருவேந்தனைக்கொற்றங் கொள்ளப்புகுங்கால் தன்கொள்கைக்கேற்ப வஞ்சிமாலையை மணி முடியிலணிந்து, மறுநாட்காலையில் யாத்திரைக்குச் சித்தமா யிருந்தனன் செங்குட்டுவன். அன்றிரவு இங்ஙனம் கழிந்தது.

பொழுதுவிடிந்ததும், அரண்மனையிலே அரசரிடுதற் குரிய திறைகொணர அழைக்கும் காலைமுரசம் முழங்கியது. அதுவே யாத்திராகாலமாதலால், காலைக்கடன்களையெல்லாம் முடித்துச் சித்தனாயிருந்த சேரன் - செங்குட்டுவன், தான் வழிபடும் சந்திரசடாதாரான சிவபிரானது திருவடிநிலைகளை வலங்கொண்டு வணங்கி, யாவரையும் வணங்காததும் வஞ்சி மாலைசூடியதுமான தன்சென்னியில் தரித்துக்கொண்டு, அந் தணர்கள் வளர்க்கின்ற அக்கினிகோத்திரங்களையும் தொழுது பின், தன் பட்டவர்த்தனக் களிற்றின்மேல் உரிய நன்முகூர் த்தத்திலே ஆரோகித்தனன். அப்போது, 'குடவர் கோமா னாகிய செங்குட்டுவன் கொற்றங்கொள்வானாக' என்று வாழ்த்தினவராய், ஆடகமாடமென்னுங் கோயிலில் அறி துயிலமர்ந்தருளுந் திருமாலின் பிரசாதத்துடன்வந்து சிலர் அரசன்முன் நிற்க, தான் சிவபிரான் பாதுகைகளைச் சென்னி யிற் றாங்கியிருந்தமையால், அத்திருமால் பிரசாதத்தை வாங் கித் தன் மணிப்புயத் தேந்தியவனாய் அங்கிருந்தும் பெருஞ் சிறப்புடன் பிரயாணிப்பானாயினன். அவன் செல்லும்போது நாடகமடந்தையர்கள் ஆடரங்குகடோறும் நெருங்கிக் கூடி நின்று இருகையும் கூப்பிக்கொண்டு, 'வெற்றி வேந்தே! போர்க்களிற்றின்மேல் வெண்கொற்றக்குடைநீழலில் கண்

களிகொள்ளத் தோன்றும் நின்காட்சி எங்கட்கு என்றும் இன்பம்பயந்து விளங்குவதாக' என்று துதித்தனர். சூதரும் மாகதரும் வைதாளிகரும் செங்குட்டுவனது வெற்றிப்புகழ் தோன்றும்படி வாழ்த்திக்கொண்டு உடன்சென்றனர். யானை வீரரும் குதிரைவீரரும் வாட்படைதாங்கிய மறவர்களும் தங்கள்வேந்தனது வாள்வலியை ஏத்தி ஆர்ப்பரித்தனர். இங்ஙனமாக, அசுரர்மேற் போர்குறித்து அமராவதியி னின்று நீங்கும் இந்திரன்போல, உலகமன்னவணுகிய செங் குட்டுவனும் வஞ்சிமாநகரினின்றும் புறப்பட்டு, தூசிப்படை யானது கடற்கரையைத்தொடும்படி பரவியதன்சேனைகளால் மலைகளின்முதுகு நெளியவும், நாட்டில் நிலைத்த வழியுண் டாகவுஞ்சென்று, இறுதியில் நீலகிரி என்ற மலையின் நெடும் புறத்தில் அமைக்கப்பட்ட பாடியைப் பெரும்பரிவாரங்களு டன் அடைந்து, தன் பட்டவர்த்தனக் களிற்றினின்றும் இழி ந்து, வீரரெல்லாம் ஆர்ப்பரித்தேத்தக் காவல்மிக்க தன்னிருக் கையிற் புகுந்து அமளிமிசைத் தங்கி இளைப்பாறலாயினன்.

இங்ஙனம், அரசன் இளைப்பாறிய சிறிது நேரத்துக் கெல்லாம் அந்தரசாரிகளாகிய முனிவரர் சிலர், ஆங்குவந்த வேந்தர்பெருமானைக் காண்போமென்று கீழேயிறங்கி அர சிருக்கையை நோக்கி ஒளிமிக்கமேனியுடன் வரவும், அவ ரைக்கண்டதும் உண்டான சேனைகளின் ஆரவாரத்தாற் செங்குட்டுவன் முனிவர்வருகையை அறிந்து, அமளியினின் றெழுந்து வந்து அவரடி வணங்கிநின்றனன். நின்ற அரசனை நோக்கி அம்முனிவர்கள் "சிவபிரான் திருவருளால் வஞ்சிமா நகரில் தோன்றிய அரசே! யாங்கள் பொதியமலைக்குச் செல் கின்றோம். இமயகிரிவரை செல்வது நின்கருத்தாதலால், ஆங்குவாழும் அருமறையந்தணர்களைத் துன்பமின்றிக் காப் பது, நின் கடமையாகும்" என்று கூறிச் செங்குட்டுவனை

வாழ்த்திச் சென்றனர். சென்றபின்னர், கொங்கணநாட்டுக் கூத்தர்களும், கொடுங்கருநாடர்களும் தத்தங் குலத்திற் கேற்ற கோலமுடையவராய்க் குஞ்சியில் தழைத்த மாலை யணிந்து அழகுவாய்ந்த தம் மகளிருடன் வசந்தகாலத்துக் குரிய வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டும், குடகுநாட்ட வர் தம் மகளிருடன் கார்காலத்தைப்பற்றிய குரவைப்பாடல் களைப் பாடிக்கொண்டும், தங்கள் சுற்றத்தோடு அலங்கார மாக ஓவர்கள்[1] அரசனை வாழ்த்திக்கொண்டும் சேரனவை முன்னே தோன்றினர். இவர்களது ஆடல் பாடல்களை யெல்லாங் கண்டு உவந்து, தன் தலைமையாடலாசிரியன் தெரி வித்த முறைப்படியே அன்னோர்க்கெல்லாம் அவர்கள் எதிர் பாராத சிறந்த அணிகலன்களைச் சம்மானித்துச் சேரர் பெருமான் வீற்றிருந்தான். அந்நிலையில் வாயில்காவலன் செங்குட்டுவன் திருமுன் வந்து நின்று, "அரசே! நாடக மகளிர் நூற்றிருவரும், குயிலுவர் (வாத்தியகாரர்) இருநூற் றெண்மரும், தொண்ணூற்றறுவகைப் பாசண்டத்துறைகளி னும் வல்லவரும் நகைவிளைத்து மகிழச்செய்பவருமான வேழம்பர் நூற்றுவரும், நூறு கொடிஞ்சி நெடுந்தேர்களும், ஐந்நூறு களிறுகளும், பதினாயிரம் குதிரைகளும் இன்ன இன்னசரக்கென்று எழுதப்பட்டு யாத்திரைக்குவேண்டிய வடநாட்டுப்பண்டங்கள் ஏற்றப்பட்ட சகடங்கள் இருபதி னாயிரமும், தலைப்பாகையுடையவர்களும் சஞ்சயன் என்பவ னைத் தலைமையாகக் கொண்டவர்களுமான சட்டையிட்ட பிரதானர் ஆயிரவரும் நின்வாயிற்கண்ணே வந்து காத்திருக் கின்றனர், அறிந்தருள்க" என்றான். எனலும் "அவர்க ளுள்ளே, சஞ்சயனுடன் நாடகமகளிரும் கஞ்சுகமுதல்வரும் (பிரதானரும்), குயிலுவரும் இங்கு வரக்கடவர்" என்று அரசன் ஆணையிட, அன்னோருடன் அத்தூதர்தலைவன்

1. ஏத்தாளர் என்பர் அரும்பதவுரையாசிரியர்.

அரசவைபுகுந்து செங்குட்டுவனை வணங்கி வாழ்த்தியவனுய் உடன்வந்தவரையெல்லாம் அரசனுக்கு முறைப்படி காட்டிப் பின்னர், "தேவரீர் வடநாடுசெல்வது பத்தினிக்கடவுளைச் சமைத்தற்குரிய சிலையொன்றின் பொருட்டேயாயின், 'இமய மலையிற் கல்லெடுப்பித்துக் கங்கையாற்றில் அதனை நீர்ப்படை செய்துதர யாங்களே வல்லோம்' என்று, தேவரீருடன் வேற்றுமையின்றிக் கலந்த நட்பரசராகிய நூற்றுவர் கன்னரும் தெரிவித்திருக்கின்றனர்" என்றறிவித்து வாழ்த்தி நின்றனன். அதுகேட்ட செங்குட்டுவன் 'நன்று, வடநாட்டரசனை பாலகுமரன்மக்களாகிய கனகன் விசயனென்ற இருவரும் தம்நாக்களைக் காவாதவராய், விருந்தொன்றிலே வடவரசர் பலருடன்கூடித் தமிழ்வேந்தரான எம்முடைய ஆற்றலறியாது இகழ்ந்துரையாடினராம்; அதனால் பத்தினிக்குக் கல்லெடுப்பித்தலோடு அவரிடம் நம்மாற்றலைக் காண்பித்தற்காகவும் இச்சேனை கூற்றத்தைத் தன்னுடன் கொண்டு செல்லா நின்றது; இச்செய்தியை நம் நட்பினராகிய அக்கன்னர்க்குத் தெரிவித்து, ஆங்குக் கங்கைப்பேரியாற்றை நம் சேனைகள் கடத்தற்குவேண்டிய மரக்கலங்களை அவருதவியால் சித்தஞ்செய்வதற்கு நீவிர் முன்புசெல்லக் கடவீர்" என்று கற்பனைசெய்ய, சஞ்சயனும் (அவ்வாணையைச் சிரமேற்கொண்டு தன்றுணைவருடன்முற்படப்) போயினன். அவன்போனதும், நாவன்மைபடைத்த தூதுவரான கஞ்சுக முதல்வர் ஆயிரவரும் பாண்டியர் முதலிய அரசரிட்ட சந்தனம் முத்து முதலிய திறைகளைக்கொண்டுவந்து நின்றனர். அவர்க்குச் சேரன் தன் இலச்சினையிட்ட திருமுகங்களைக் கண்ணெழுத்தாளரைக்கொண்டு[1] எழுதுவித்து அத்தூதர்கள்கையிற்கொடுத்து அரசரிடம் அவற்றைமுறைப்படிசேர்ப்பிக்குமாறு ஆணையிட்டு அவர்களையும் அனுப்பினன். அவர்க

1. கண்ணெழுத்தாளர்—திருமுகமெழுதுவார்.

ளெல்லாம் போயினபின்னர், சேரர்பெருமான், மற்றைய மன்னர் தன் வெற்றிச்சிறப்பை ஏத்தும்படி பெரும்பரிவாரங் களுடன் நீலகிரிப்பாடியினின்றும் நீங்கி வடநாடு நோக்கிப் பிரயாணஞ் செய்யலானன்.

இங்ஙனம், தன் பெருஞ்சேனைகளுடன் சென்ற செங் குட்டுவன் முடிவில் கங்கைப்பேரியாற்றை நெருங்கினன். ஆங்கு, முன்னரே சென்றிருந்த சஞ்சயனுல் நூற்றுவர்கன் னர் உதவிகொண்டு கங்கையைச் சேனைகள் கடத்தற்கு வேண்டிய மரக்கலங்கள் சித்தஞ்செய்யப்பட்டிருந்தன. அப் பேரியாற்றை அடைந்த சேரர்பெருந்தகை தன் முழுப்பரி வாரங்களுடனும் கடந்து அவ்வாற்றின் வடகரையை அடைந் தான். அப்போது தம் நட்பாளனுகிய செங்குட்டுவனை அந் நாடாளும் நூற்றுவர்கன்னர் எதிர்கொண்டு உபசரித்தனர். அவருபசாரத்தைப் பெற்றுச் செங்குட்டுவன் அங்குநின்றும் புறப்பட்டுத் தன் பகைவரது நாடாகிய நீர்வளமிக்க உத்தர தேசத்தை அடைந்து பாசறையில் தங்கலாயினன். இங் ஙனம் சேரவரசன் பெரும்படையுடன் தம் தேசத்தில் பாடியிறங்கிய செய்தி தெரிந்ததும், அந்நாட்டரசர்களான உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் என்ற எல்லா வடவேந்தரை யுந் துணைக்கொண்டு கனகவிசயரென்ற ஆரியவரசர், தமிழ ராற்றலைக் காண்போமென்று செருக்கிப் பெருத்த சேனை யுடன் போர்க்கோலங்கொண்டு எதிர்ந்தனர். இங்ஙனம் வட வரசர் திரண்டுவருதலும், இரையைத்தேடி வேட்டைக்குச் சென்ற சிங்கமொன்று யானைப் பெருங்கூட்டத்தைக் கண்டு உள்ளம்பூரித்துப் பாய்ந்தவாறுபோல, தன்னை எதிர்த்து வந்த வடவேந்தரது சேனைகண்டு களித்து, அவற்றின்மேல் விழுந்து செங்குட்டுவன் பொருவானயினன். வடவரும் தமிழரும் பொருதுநின்ற அப்பெரும் போரில், துகிற்கொடி

களின் பந்தர்களாற் சூரியகிரணங்கள் மறைப்புண்டன. கொடும்பறைகளும் சங்கங்களும் நீண்ட கொம்புகளும் பேரிகைகளும் கஞ்சதாளங்களும் பயிர்க்கண் முரசங்களும் திக்குகளினின்று எதிரொலியுண்டாகும்படி ஒலித்தன. வில் வேல் கேடயம் இவற்றைக்கொண்ட மறவர்களும், தேர்வீரர் யானைவீரர் குதிரைவீரர்களும் கலந்தெதிர்த்த அப்போர்க் களத்தில் பூமிதெரியாமலெழுந்த புழுதியானது யானைக் கழுத்திற் கட்டிய மணிகளின் நாக்களிலும் கொடிகளிற்கட்டிய சங்குகளின் நாக்களிலும் புகுந்து அவற்றை ஒலிக்கா வண்ணஞ் செய்துவிட்டன. தூசிப்படைகள் தம்மிற் கலந்து புரிந்த அப்போரிலே தோளுந்தலையுந் துணிபட்டு வேறாகிய வீரரது உடற்கும்பலிற் றுள்ளியெழுந்த குறையுடலாகிய கவந்தங்கள், பேயினது தாளத்துக்கொப்பக் கூத்தாடின. அப்பிணக்குவியலினின்று வழிந்தோடும் ஊன்கலந்த குருதியிலே, கூட்டங்கொண்ட பேய்மகளிரது நாக்களெல்லாம் ஆடலாயின. இங்ஙனம் ஆரியவரசரது சேனைவீரரை அக்களத்தே கொன்றுகுவித்து அவரது தேர் யானை குதிரைகளில் ஆட்களில்லையாகச்செய்து நூழிலாட்டிய[1] சேரன் - செங்குட்டுவன், எருமையூர்தியுடைய கூற்றுவன் உயிர்த்தொகுதியை ஒரேபொழுதினுள் உண்ணவல்லவன் என்பதனைப் பகைவர்க்கு அறிவித்துத் தும்பைசூடி விளங்கினான். இவனது சினவலையின்கண்ணே, தம் நாவைக்காவாது தமிழரசரையிகழ்ந்த கனகவிசயர் தம் தேர்வீரர்கள் ஐம்பத்திருவருடன் அகப்பட்டுக்கொண்டனர். மற்றப் பகைவர்களோ தத்தம் ஆயுதங்களை எறிந்துவிட்டுச் சடை, காஷாயவுடை, சாம்பல் இவற்றைத் தரித்த சந்நியாசிகளாகவும் பீலி கைக்கொண்ட சைன முனிவராகவும், பாடகராகவும், பற்பல வாத்தியகாரராகவும், ஆடுவோராகவும் தாந்தாம்வல்லதுறைக்

1. நூழிலாட்டு - பகைவரைப் போரிற் கொன்றுகுவிக்கை.

கேற்ற வேடம்பூண்டு வேண்டுமிடங்களிலே பதுங்கியொளித்தனர். இவ்வாறு வடவரசர்கள் நடுநடுங்கும்படி, களிறுகளே எருதாகவும், வாளே பிடிக்குங் கோலாகவும், பகைவீரர்களே சூட்டடிக் கதிர்களாகவுங்கொண்டு, வாளையுடைய தான் உழவனாகநின்று அப்போரிலே [1] அதரிதிரித்துக்கலக்கினன் செங்குட்டுவன். இவ்வரசனது மறக்களத்தைப் புகழ்ந்து, பேய்களெல்லாம் நெடியகைகளைக் கரியதலைமிசை உயர்த்தி அசைத்தனவாய், திருமால் பாற்கடல் கடைந்தபோது நிகழ்த்திய தேவாசுரயுத்தத்தையும், அவன் இலங்கையில் நடத்தியபோரையும், தேரூர்ந்து நிகழ்த்திய அவனது பாரதச் செருவையும் இதனோடு ஒருசேரவைத்துப் பாடி வாழ்த்திக் குரவைக்கூத்தாடியதுடன்—இப்போர்க்களத்தே பகைவரது தலைமுடிகளையே அடுப்பாகவும், பிடர்த்தலைகளையே தாழியாகவும், வலயமணிந்த தோள்களையே துடுப்பாகவும் கொண்டு துழாவிச்சமைத்த ஊன்சோற்றைப் பேய்மடையன் அவ்வப்பேயின் தகுதியறிந்து பரிமாற வயிறார உண்டு களித்துத், தருமயுத்தத்தால் தமக்கு இத்தகைய பெருவிருந்து செய்த செங்குட்டுவனை 'ஊழியளவும் வாழ்க' என்று வாயார வாழ்த்துவனவும் ஆயின.

இங்ஙனமாக, ஆரியப்படையைவென்று தானினைத்த காரியங்களுளொன்றை முடித்துக்கொண்ட செங்குட்டுவன் தன் தானைத்தலைவனாகிய வில்லவன்கோதையை நோக்கி, 'வடதிசையுள் வேதநெறியை வளர்ப்பவரும் நித்தியாக்கினி பேணுதலையே பெருவாழ்வாக உடையவருமாகிய அந்தணப் பெரியோரைச் செல்லுமிடங்களிலெல்லாம் போற்றிக் காக்கக்கடவீர்' என்றுகூறி வெற்றிபெற்ற வேற்படையுடன் அவனையேவி, பத்தினிக்கடவுளைப் பொறித்தற்குரிய சிலையை இமயமலையினின்று கொணரச்செய்து தனக்குச் சிறந்த அவ்வினையையும் முடித்துக்கொண்டனன்.

1. நெற்களத்திற் கடாவிட்டுழக்குதல்.

## 4. நீர்ப்படைக்காதை.

[செங்குட்டுவன் பத்தினிப்படிவத்தைக் கங்கைநீராட்டியதும், தன்னாடு திரும்பியதும்.]

மேற்கூறியவாறு, கூற்றுவனுக்குத் தொழில் பெருகும்படி உயிர்த்தொகைகள் கொல்லப்படுதற்குக் காரணமாயிருந்த தேவாசுரயுத்தம் பதினெட்டாண்டிலும், இராமராவணயுத்தம் பதினெட்டு மாதத்தும், பாரதயுத்தம் பதினெட்டுநாளினும், செங்குட்டுவனும் கனகவிசயரும் புரிந்த போர் பதினெட்டு நாழிகையினும் முடிந்தனவென்று உலகோர் இப்போரையும் கூட்டி யெண்ணிக்கொள்ளும்படி, தமிழரது ஆற்றலையறியாது தன்னுடன் மலைந்த ஆரியப்படைகளைப் போரில் ஒருபகற்குள்ளே அழித்துவிளங்கிய சேரன் - செங்குட்டுவன், சினமிக்க தன் சேனைகளால் பத்தினிக்கடவுட்குரிய சிலையை இமயத்தினின்று மெடுப்பித்தபின்னர், போர்க்கோலங்கொண்டெழுந்த கனகவிசயரது கதிர்முடிமேல் அச்சிலையையேற்றிக்கொண்டு அதனை நீராட்டித் தூய்மைசெய்தற்பொருட்டுக் கங்கைப்பேரியாற்றின் வடகரைவந்து சேர்ந்தான். அவன் அங்குவந்ததும், அப்பத்தினிச்சிலை அரசனாணையின் வண்ணம், ஆகமம்வல்லோரால் கங்காநதியில் முறைப்படி நீராட்டப்பட்டது. (அது முடிந்தபின்னர்ச் சேனையுடனும் பரிவாரங்களுடனும் சேரர்பெருமான் நாவாய்கள்மூலம் அப் பேரியாற்றைக் கடந்து அதன் தென்கரையிற் பிரவேசித்தனன்.) அம்மகாநதியின் தென்கரை வெளிப்பரப்பிலே, ஆரியமன்னரும் நட்பாளருமாகிய கன்னரால் செயசீலனைகவருஞ் சேரர்பெருந்தகை படைகளுடன்வந்து தங்குதற்கென்று — அரசர்க்குரியகோயிலும் அழகியமண்டபங்களும் அத்தாணியும் பூம்பந்தரும் உரிமைப்

பள்ளியும் பூஞ்சோலையும் தாமரைப்பொய்கையும் ஆடரங்கு களும், மற்றும் பெருவேந்தர்க்கு வேண்டியனவெல்லாம்-- மிகவும் அழகுபெற அமைக்கப்பட்டிருந்தன. செங்குட்டு வன் தென்கரை புக்கதும் அவ்வழகியபாடியில் தன்பரிவா ரங்களோடுஞ் சென்று தங்கினன்.

இங்ஙனம் பாடியிற்றங்கிய பின் சேரர்பெருமான், எதிர்த்த மாற்றரசரது மனவூக்கங் கெடும்படி போரில் தம் அரிய வீரச்செயல்களைக் காட்டி வீரசுவர்க்கமடைந்தவர் களும், அப்போரிலே அடர்ந்துழக்கித் தலையுந்தோளும் விலை பெற அறுபட்டுக்கிடந்தவர்களும், வாளாற்செய்யும் வினைக ளெல்லாஞ்செய்து பகைவரை அழித்துமுடிந்தவர்களும், உற வினரோடு தம்மகளிரும் உடன்மடியும்படி வீழ்ந்தவர்களு மாகிய இறந்துபட்ட வீரர்களுடைய மைந்தரையும், தூசிப் படையில் நின்று மாற்றுரையழித்து வாகைமாலை சூடியவர் களும், பகைவரின் தேர்வீரரைக்கொன்று அவர்களுடைய குருதியோடு பொலிந்துநின்றவர்களும், பகைவரது கருந் தலைகளைக் கூற்றுவனுங் கண்டிரங்கும்படி ஒருசேர அறுத்து வெற்றிபெற்றவர்களும், கவசஞ்சிதைய மார்பில் விழுப்புண் பட்டு மாற்றுரைப் புறங்கண்டு மீண்டவர்களும் ஆகிய (இற வாத) எல்லாவீரர்களையும் 'தன்னிடத்து வருக' என் றழைத்து, அவர்களடைந்த வெற்றிக்கு அறிகுறியாக அவர் கட்கெல்லாம் பொன்னலாகிய வாகைப்பூக்களை, தான் பிறந்த நாளிற் செய்யும் பெருங்கொடையினும் மிகுதியாக நெடும்போ திருந்து கொடுத்து வெகுமானித்தான். இங்ஙனம் பனம் பூவைத் தும்பைமாலையுடன் சூடிப் புலவர்பாடுதற்குரிய புறத் துறைகளெல்லாம் முடித்துச் செயசீலனகச் சேரன் - செங் குட்டுவன் தன்னரசிருக்கையில் வீற்றிருக்கும்போது, மாட லன் என்னும் மறையவன் ஆங்கு எதிர்பாராதே வந்து நின்று அரசனை ஆசிகூறி வாழ்த்திவிட்டு 'எங்கோவே!

மாதவியென்னும் நாடகக்கணிகையின் கடற்கரைப்பாட லானது, கனகவிசயரது முடித்தலைகளை இங்ஙனம் நெரித்து விட்டது; இது வியக்கத்தக்கதாம்' என்று ஒரு விநோத வார்த்தையைக் கூறினன். இதனைக்கேட்ட செங்குட்டுவன் அவன் கருத்தை அறியாதவனாய், 'நான்மறையாளனே! பகைப்புலத்தரசர்பலரும் அறிந்திராத நகைச்சொல்லொன் றை இங்குவந்து என்முன்கூறினை; நீ சொன்ன உரைப்பொ ருள் யாது? விளங்கச்சொல்லுக' என்றான்: எனலும் அம் மறையவன் சொல்லலுற்றான்.

"சூடவர்கோவே! காவிரிப்பூம்பட்டினத்தில் நிகழ்ந்த கடல்விளையாட்டிற்குத் தன் காதலனாகிய கோவலனுடன் சென்றிருந்த மாதவியென்னும் நாடகக்கணிகை கருத்து வேறுபடப் பாடிய கானல்வரிப்பாட்டுடன் ஊழ்வினையும் உடன்சேர்ந் துருத்தமையால் கோவலன் அக்கணிகையை வெறுத்துப்பிரிந்து, தன்மனைவி கண்ணகியை உடனழைத் துக்கொண்டு மதுரைமாநகரம் புக்கான்; புக்கவன், அந்நகரத் தரசனான பாண்டியன் உயிர்நீத்து விண்ணுலகடையும்படி கொலையுண்டனனன்றோ? அங்ஙனங் கொலையுண்ட கோவல னின் கற்புடைமனைவியானவள் உன் நாட்டை அடைந்தமை யாலன்றோ, அப்பத்தினி இப்போது வடதிசையரசருடைய மணிமுடியிலேறி விளங்குவாளாயினள்" என்று, முன் நிகழ்ந்த கோவலன்சரிதத்தைச் சுருங்கக்கூறிப் பின்னும் செங்குட்டுவனை நோக்கி, 'வேந்தர்வேந்தே! யான் ஈண்டு வரு தற்கு அமைந்த காரணத்தையும் கேட்பாயாக; அகத்திய முனிவருடைய பொதியமலையை வலஞ்செய்துகொண்டு கன் னியாகுமரித்துறையிற் றீர்த்தமாடி மீண்டுவருகின்ற யான், என் ஊழ்வினைப்பயன் போலும், பாண்டியனது சிறப்ப மைந்த மதுரைமாநகரம் சென்றேன். அங்கே நான் தங்கி யிருந்தபோது, பாண்டியன் தன் கணவனை அநியாயமாகக்

கொல்வித்த கொடுங்கோன்மையைத் தன்சிலம்பைக்கொண்டு அவ் வரசனுக்கு விளக்கி வழக்கில் வென்றாள் கண்ணகி என்றசெய்தி ஊர்முழுதும் பரவியது. இக்கொலைச்செய்தி கேட்ட ஆய்ச்சியர் தலைவியாகிய மாதரி, இடைத்தெருவிலுள்ள தாதெருமன்றத்தினின்றும் எழுந்து சென்று, 'இடைக்குலமக்காள்! அந்தோ, அடைக்கலப்பொருளை இழந்துகெட்டேன்; கோவலன் குற்றமுடையவனல்லன்; அரசனே தவறினான்; செங்கோலும் வெண்குடையும் இங்ஙனம் பிழைபடவும் நேர்ந்தனவோ!' என்றலறி இரவின் நடுச்சாமத்தே எரியிற்புகுந்து மாய்ந்தனள். கோவலன் கண்ணகி இருவரையும் தம்முடனழைத்துக்கொண்டு மதுரை வந்த கவுந்தியடிகள், கோவலனை அரசன் கொலைசெய்தது கேட்டதும் உண்டாகிய பெருஞ்சீற்றமானது அவ்வரசனது மரணத்தால் தணிந்ததாயினும், 'என்தொடர்பால் இவர்கட்கு இக்கொடுவினை வந்ததுபோலும்' என்றிரங்கி உண்ணா நோன்புகொண்டு உயிரைவிட்டனள். அன்றியும், கண்ணகியின் சீற்றத்தால் மதுரைமாநகரம் எரிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் மதுரையில் நேரிலுணர்ந்த யான், பின்பு என் ஊராகிய காவிரிப்பூம்பட்டினம் சென்று, என்னண்பனான[1] கோவலன் கொலைமுதலியவற்றால் யானடைந்த துயரங்களை ஆங்குள்ள பெரியோர்கட்கு உரைக்கலாயினேன். அவ்வாறு உரைத்த செய்தி சிறிதுசிறிதாக ஊரெங்கும்பரவி முடிவில் கோவலன்தந்தை மாசாத்துவானுக்கு எட்ட, அவ்வணிகர் தலைவன், தன்மைந்தனுக்கும் மருகிக்கும் பாண்டியனுக்கும் நேர்ந்த கொடுந்துன்பங்களைச் சகியாதவனாய், இல்லறத்தை

1. கோவலனுக்கு இவன் நண்பனென்பதும், மதுரையில் அவனுடன் இவ்வந்தணன் அளவளாவியதும் இந்நூல் 38-ம் பக்கத்துக் காண்க.

வெறுத்துத் தான்படைத்த பெரும்பொருளனைத்தையும் உத்தமதானங்களிற் செலவிட்டுப், பௌத்தசங்கத்தார் இருக்கையாகிய இந்திரவிகாரத்தைச்சார்ந்து, அங்கே பிறப் பறத் தவஞ்செய்துகொண்டிருக்கும் முனிவர் முந்நூற்று வரைச் சரணமடைந்து துறவியாயினன். அம் மாசாத்து வான் மனைவியாகிய கோவலன்தாயோ, தன் செல்வப்புதல் வனுக்கு நேர்ந்த விபத்தைப் பொறுதவளாய் அளவிறந்த துயரால் நொந்து உயிர்விட்டனள். இனிக் கண்ணகியின் தாதையான மாநாய்கன், தவமுனிவராகிய ஆசீவகரை யடைந்து தன்பெரும்பொருள்களாற் புண்ணியதானங்களைப் புரிந்து துறவுபூண்டனன். அவன் மனைவியாகிய கண்ணகி யின்தாய் சிலநாள்களுள்ளே உயிர்நீத்தனள். இச்செய்தி யெல்லாங்கேட்ட கோவலன்கணிகையாகிய மாதவி பெரிதுந் துக்கித்து, துன்பம்விளைவிக்கும் பரத்தையர்கோலத்திலே தன்மகள் மணிமேகலையைப் புகவிடாதபடி தன் தாயான சித்திராபதிக்குக் கூறிவிட்டு, மாலையுடன் தன் கூந்தலையுங் களைந்து பிக்குணியாகிப் பௌத்தவிகாரமடைந்து தருமோப தேசம் பெற்றனள். இங்ஙனமாக, யான் மதுரையிலிருந்து கொணர்ந்த கொடுஞ்செய்திகேட்டவர்களுள் இறந்தவர்சில ரும் உண்மையால் அப் பாவவிமோசனத்தின் பொருட்டுக் கங்கையாடவெண்ணி இங்குவரலாயினேன்; இதுவே என் வருகையின்காரணம்; வேந்தே! நீ வாழ்க' என்று அம்மாடல் மறையோன் முன்னிகழ்ந்தவையெல்லாம் விளங்கச் செங் குட்டுவனுக்குக் கூறிமுடித்தனன்.

இவையாவுங் கேட்டிருந்த அவ்வஞ்சிவேந்தன் 'நான் மறையாள! பாண்டியன் தான்புரிந்த கொடுங்கோன்மையை நினைந்து உயிர்நீத்தபின்னர் அப் பாண்டிநாட்டில் நிகழ்ந்த விசேடம் என்னை?' என்று உசாவினன். மாடலனும் அர சனைநோக்கி, 'சோழர்குடிக்குரிய தாயத்தாரொன்பதின்மர்

தம்மிலொன்றுகூடி நின் மைத்துனச்சோழனாகிய கிள்ளியோடு பகைத்து அவனது இளவரசியலையேற்று ஏவல்கேளாது சோணாட்டைப் பெரிதும் அலைத்துவந்தகாலையில், அவ்வொன்பதின்மருடனும் பொருது ஒருபகலில் அவர்களை யழித்து மைத்துனனது ஆஞ்ஞாசக்கரத்தை ஒருவழிப்படுத்து நிறுவிபவனும், பழையன்என்பானது காவன்மரமாகிய வேம்பினை அடியோடு வெட்டியழித்த வாள்வலமுடையவனும் ஆகிய போந்தைக்கண்ணிப் பொறையனே! கேட்டருள்க; கொற்கை நகரத்தே இளவரசாய் விளங்கிய வெற்றிவேற்செழியன் என்பவன் (தன்னாட்டுக்கு நேர்ந்த தீங்கினையறிந்து பெருஞ்சினங்கொண்டு) ஒருமுலைகுறைத்த திருமாபத்தினியாகிய கண்ணகிக்குப் பொற்கொல்லர் ஆயிரவரை ஒருபகலிற் பலியிடுவித்து, பின் தன்னரசனை இழந்துவருந்தும் புகழ்பெற்ற மதுரைமூதூரில் தென்னாட்டாட்சிக்குரிய தாய்த் தொன்றுதொட்டுவருஞ் சிங்காதனத்தே—தெய்வத்தன்மைவாய்ந்த ஒற்றையாழியந்தேர்மேற் காலைச்செங்கதிர்க்கடவுள் ஏறி விளங்கியவாறுபோல—சந்திரவமிசத்தோனாகிய அவ் விளஞ்செழியன் ஏறி விளங்குவானாயினன்; அரசே! நீடு வாழ்க' என்று முடித்தான். கங்கைக்கரைப்பாடியிலே செங்குட்டுவன் இவற்றையெல்லாம் (நெடுநாட்களுக்குப்பின் மாடலன் வாயினின்றும்) கேட்டறிந்து வியப்புற்றிருந்த காலையில், விரிந்தஞாலத்தைப் பேரிருள் விழுங்கும்படி வந்த மாலைக்காலத்தே, செந்தீப் பரந்ததுபோன்ற மேலைத்திசை விளக்கமெய்த அந்திவெண்பிறை தோன்றியது. அங்ஙனம் பிறையெழுந்தபடியைப் பெருந்தகையான செங்குட்டுவன் நோக்கினன். அப்போது பக்கத்திருந்த நிமித்திகர் தலைவன் 'வேந்தர் வேந்தே! வஞ்சியினின்றும் தேவரீர் புறப்பட்டு இன்றோடு முப்பத்திரண்டு மாதங்களாகின்றன' என்று, சமயோசிதமாகக் கூறி வாழ்த்தினன்.

அவன்கூறியதைக்கேட்ட செங்குட்டுவன், அக்கங்கைப்பாடியில், குத்துக்கோலுடன் கூடிய கண்டத்திரைகளால்[1] ஒழுங்காகநிரைக்கப்பட்டுப் படங்குகளையே மதிலாகவுடைய தேர்வீதியுள்ளே, சிறிதும் பெரிதுமாய்க் குன்றுகளைக் கண்டாற்போல்விளங்கும் உறையுள்களமைந்த முடுக்கின் ஒருபக்கமாகச்சென்று, சிற்பவேலைப்பாடு மிக்கதும் சித்திரவிதானமமைந்ததுமான அத்தாணிமண்டபத்தை அடைந்து, ஆங்குள்ள பொற்சிங்காதனத்தே வீற்றிருந்து வாயில்காவலரால் மாடலமறையோனை ஆங்கழைக்கச் செய்தனன். அவன் வந்ததும், செங்குட்டுவன் அவ்வந்தணனை நோக்கி 'என் மைத்துனனாகிய சோழனுடன் பகைத்த இளங்கோவேந்தர் போரில் இறந்தபின்னர், அச்சோணாட்டரசனது கொற்றமும் செங்கோலும் கேடின்றியுள்ளனவோ' என்று உசாவ, மாடலனும் அரசனைவாழ்த்தி 'வேந்தே! தேவரும் வியப்பத் தூங்கெயில் மூன்றையும்[2] எறிந்தவனது வேல்வெற்றியும், குறுநடையுடைய புறவின் பெருந்துயரமும் அதனைத் துரத்திவந்த பருந்தினிடும்பையும் ஒருங்கு நீங்கத் தன் உடம்பையே அரிந்து துலையிற்புகுந்தோனது[3] செங்கோலும் மாறுபடுங்காலமும் உண்டாமோ? காவிரியாற் புரக்கப்படும் சோணாட்டுவேந்தற்குத் துன்பக்காலத்தினுங் கேடில்லை' என்று கூறினன். இவ்வாறு மாடலன் சொல்லக்கேட்டுச்

---

1. இது பல்வண்ணத்திரை எனவும்படும். (சீவக. 647 373.)

2. இவன் ஆகாசத்திற் சரித்துவந்த அசுரர்களது மூன்றெயில்களையும் அழித்தவனென்று தமிழ்நூல்களிற் புகழப்படுவன். (சிலப். பக். 555, கீழ்க்குறிப்பு.

3. சிபிச்சக்கரவர்த்தி (சிலப். பக் 483, கீழ்க்குறிப்பு). முன்னவனும் இவனும் சோழவமிசத் தலைவர்களாதலால், இன்னோர் செயல்களைச் செங்குட்டுவனுடைய மைத்துனச் சோழன்மேல் ஏற்றி உபசரித்தாரென்க.

செங்குட்டுவன் மகிழ்வுற்று அவனைப் பெரிதும் உபசரித்துத் தன்னிறையளவாக ஐம்பதுதுலாம்பாரம் பொன்னை அம்மறையவற்குத் தானஞ்செய்து . வெகுமானித்தனன். அது முடிந்ததும் சேரர்பெருமான் தன் யாத்திரைக்கு உதவி புரிந்த ஆரியவரசராகிய கன்னர் நூற்றுவரையும் அவருடைய சிறப்புமிக்க நாட்டுக்குச் செல்லுமாறுவிடுத்துப் பின் தன் தூதுவராயிரவரை அழைப்பித்துத் தமிழரது போராற்றலை யறியாது போர்க்கோலங்கொண்டுவந்து தோற்றுத் தாபத வேடம் பூண்டொளித்த இராசகுமாரரைத் தமிழரசரான சோழபாண்டியர்க்குக் காட்டிவருமாறு ஆணையிட்டு அவர்களை முற்படவே பயணப்படுத்திவிட்டுப் பின் தன் இளைப்பு நீங்கப் பள்ளிமேவித் துயில்கொள்வா ருயினன். இங்கு இவ்வாறுக —

சேரராசதானியாகிய வஞ்சிமாநகரிலே செல்வமிகுந்த அரண்மனையுள் வானையளாவிப் பொன்மயமாக விளங்கும் அந்தப்புரத்தே, முத்துக்களாலாகிய சல்லியும் தூக்குமிவைகளால் முழுதும் வளைக்கப்பட்டதும், விசித்திரவிதானம் அமைந்ததும், மணிநிரைகளை இடையிடையே வகுத்து வயிரமழுத்தப்பெற்ற பொற்றகட்டினொளி ஒழுகப்பெற்றதும், இறுகக்கட்டப்பெற்றுப் புடைதிரண்ட பொற்காலையுடையதுமான அழகிய பெரிய அமளிக்கட்டிலின்மேல், புணர்ச்சியுற்ற அன்னங்களின் புளகிப்பால் வீழ்ந்த இளமயிரிறகுகளைச் செறித்து இரட்டையாக விரிக்கப்பெற்ற பள்ளியிடையே, கோப்பெருந்தேவியாகிய இளங்கோவேண்மாள் நெடுநாட் பிரிவால் தூக்கமென்பதின்றித் துன்புற்றிருந்த நிலையில், அத்துயரைச் செங்குட்டுவனது வடநாட்டு வெற்றியை அறிந்தவராகிய செவிலிமார்கள் 'அன்னுய்! காதற் கொழுநனைப் பிரிந்திருந்ததனல் உண்டான நின்கவலையை இனி யொழியக்கடவாய்' என்று கூறிப் பாசுரங்களோடு

தொடுத்துப் பல்லாண்டு பாடுவாராயினர். அவ்வாறே, அரசிக்கு ஊழியஞ்செய்யுங் கூனருங் குறளருஞ் சென்று அடிவணங்கித் 'தேவி! எம்பெருமான் வந்துவிட்டனன்; இனி நீ முகமலர்ச்சியுடன் கூந்தலில் நாளொப்பனைபெற்று நலம்பெற விளங்குக' என்றார். இங்ஙனம் ஆயத்தார் பெருந்தேவியின் பிரிவாற்றுநிலையை ஒருசார் ஆற்றிநிற்க, மலைகளிற் புனங்காவல்செய்யுங் கானவன் ஆங்கு மூங்கிலிற்கட்டப்பட்ட தேனையுண்டு களித்து அக்களிப்பால் கவண்விட்டுக்காவல் புரிதலை நெகிழ்ந்தமையின், அச்சமயமறிந்து செழித்தபுனக் கதிர்களை உண்ணுதற்குவந்த பெரிய யானைகள் நல்ல துயிலடையும்படி மலைமகளிர் புனப்பரண்மேலிருந்துகொண்டு 'வடதிசைச்சென்று வாகையுந்தும்பையுஞ் சூடிய போர்க்களிறுகள் திரும்பும்வழி சுருங்கக்கடவது' என்று பல பண்களிற் பாடிய குறிஞ்சிப்பாட்டுக்களும், 'வடவரசரது கோட்டைகளைத் தகர்த்துக் கழுதைகளை ஏரிலே பூட்டியுழுது வெள்வரகினை விதைத்த உழவனாகிய குடவர்கோமான் நாளை வந்து விடுவான்; ஆதலாற் பகடுகளே! நுகம்பூண் டுழுவீராக; பகைமன்னரைச் சிறைநீக்கும் அவன் பிறந்தநாளொப்பனையும் வருகின்றது' என்று பாடும் உழவரது ஒலியமைந்த பாடல்களும், அரசனது ஆனிரைகளைக் காக்கும் கோவலர்கள், குளிர்ந்த ஆன்பொருநையாற்றில் நீராடுமகளிரால் விடப்பட்ட வண்ணமுஞ்சுண்ணமும் மலரும் பரந்து இந்திரவிற்போல் விளங்குகின்ற பெரிய துறையருகிலுள்ள தாழைக்கோடுகளின்மேல் இருந்துகொண்டு, தம் பசுக்களை அப் பெருந்துறையிற் படியவிட்டுத் தாமரைக்குவளைப் பூக்களைத் தலையிற்சூடியவராய் 'ஆனிரைகாள்! வில்லவனாகிய நம் வேந்தன் வந்தனன்; அவன் இமயப்பக்கத்தினின்று கொணர்ந்த பெருத்த பசுநிரைகளோடு நீரும் நாளைக்கூடி மகிழக்கடவீர்' என்னுங் கருத்துபபட ஊதும் ஆபாது

வேய்ங்குழலோசையும், வெண்டிரைகளால் மோதப்பட்ட கடற்கரை மணற்பரப்பிலுள்ள புன்னைமரத்தின்கீழ் வலம்புரிச்சங்கமீன்ற நன்முத்துக்களை கழங்காகக்கொண்டு ஆடும் இளமகளிர் அவற்றைத் தங் கைகளில் ஏந்தியவராய், நெடுநாட்பிரிந்த நம்மரசியோடுகூடி மகிழும்படி வானவணுகிய நம் வேந்தன் மீண்டனன்; அவன் சூடிய தும்பையையும் பனம்பூவையும் வஞ்சிமாநகரையும், நங்கைமீர்! நாம் பாடுவோமாக' என்று இன்சொல்லினராய்ப்பாடிய அழகியபாடல்களுமாக நால்வகை நிலங்களினின்றும் எழுந்த இன்னிசைகளைக்கூர்ந்து கவனித்துக்கொண்டு உறங்காதிருந்த கோப்பெருந்தேவியானவள், தன் கைவளைகளைச் செறித்தணிந்து கொள்ளவும், நகரில் வலம்புரிச்சங்கங்கள் வலமாகவெழுந்து முழங்கவும், முத்துமாலைகளமைந்த வெண்கொற்றக்குடையின்கீழ் வாகைபணிந்த சென்னியோடும் சேரன செங்குட்டுவன் தன் பட்டவர்த்தனக்களிற்றின்மேல் விளங்கியவனாய், குஞ்சரங்கள் பூட்டிய இரதங்களுடன், கோநகர்முழுதும் வந்தெதிர்கொள்ள வெற்றித்தானையுடன் வஞ்சிமூதூரிற் பிரவேசஞ்செய்வானாயினன்.

———

## 6-ம் அதிகாரம்

### செங்குட்டுவன்

# பத்தினிக்கடவுளைப் பிரதிஷ்டித்தல்

### 5. நடுகற் காதை.

தண்மதிபோன்றதும் பொன்னாலியன்றதுமான வெண் கொற்றக்குடையால் மண்ணகத்தைக் குளிர்வித்த நிலந்தரு திருவினெடியோனாகிய செங்குட்டுவன், விசயம் விளங்கும் அவ் வஞ்சிமாநகரிற் புக்கபின்னர், மகளிரெல்லாங்கூடித் திருவிளக்குக்களைக் கொணர்ந்துநின்று மலர்களைப் பலியாகத் தூவி 'உலகமன்னனாகிய நம்மரசன் நீடுவாழ்க' என்றேத் தும்படி, மாலைக்காலமும் வந்தது. பலரும் தொழத்தக்கதும் மலர்கள் விரிதற்குக் காரணமாகியதுமான அவ்வழகிய காலத் தே பனம்பூங்கண்ணியைப் பூமாலையோடணிந்தவர்களும் தம் அரசனது போர்வினையை முடித்தவர்களுமான வாள்வீரரது யானைக்கோடழுத்தினவும் வேல் கணைவாள்களாற் கிழிப் புண்டு புண்பட்டனவுமான மார்புகளை, அவர்கள்வீரபத்தினி யர் தம் அழகிய தனவெம்மையால் வேதுகொண்டு ஆற்று வித்தனர். இங்ஙனம் ஆற்றுவிக்க அவ்வீரர்கள் மன்மத பாணம் பாய்ந்தவர்களாய், 'இம்மகளிருடைய கடைக்கண் களாகிய தூது முன்பு நமக்குப் பாசறைக்கண்ணே வருத்தஞ் செய்ததாயினும், இம் மாலைக்காலத்தே அதற்கு மருந்து மாகியது' என்று புகழ்ந்தேத்த, அதுகேட்டு அம்மகளிர் தம் பவளவாயினின்று நிலவெழக் கடைக்கண்ணோக்குடன் புன்சிரிப்பாகிய விருந்தூட்டி மகிழ்வித்தனர். மற்றுமுள்ள இளைஞரான வீரர்கள் இசைவல்ல மகளிரது இன்பக்கடலி லாடத், தங்குலைந்த கோலத்தைக் கண்ணாடியாற் றிருத்திக் கொண்டு யாழ்தழுவிக் குறிஞ்சிப்பண்ணை இனிதுபாடிய அந் நங்கையரால் கானவிருந்து செய்யப்பெற்றனர்.

இங்ஙனம், அவ்வழகிய மாலைக்காலமானது வீரர்க்கெல்லாம் இன்பவிருந்தயர்வித்துப் பின், சேரன் - செங்குட்டுவன் குடிகளது குறைதீர்த்தல்வேண்டி வெளிப்போதருங் காலத்து விளங்கும் அவனது திருமுகம்போல, உலகந் தொழும்படி தோன்றிய பூர்ணசந்திரனை அவ் வஞ்சிமூதூர்க்குக் காட்டித் தான் நீங்கியது. அப்போது மைந்தரும் மகளிருந் தன்னாணைப்படியே நடக்குமாறு ஐங்கணைக்கிழவனான மன்மதன் அரசுவீற்றிருந்த நிலாமுற்றங்களும் பூம்பள்ளிகளும், ஆடரங்குகளும், மலர்ப்பந்தர்களும், மஞ்சங்களும், விதானமமைந்த வேதிகைகளும் அத்தண்கதிரால் விளக்கமுறுவனவாயின. கடல்சூழ்ந்த இவ்வுலகிற்கு இடைநின்று விளங்கும் மேருப்போல, அவ் வஞ்சிமாநகரின் நடுவுநின்றோங்கும் பொன்மயமான அரண்மனையிலுள்ள நிலாமுற்றமாகிய மணியரங்கில் அப்பூர்ணசந்திரனது காட்சியைக்காணவேண்டி, மகளிர் தம் வளைக்கைகளில் விளக்குக்களை ஏந்திப் பல்லாண்டுபாடி ஏத்திக்கொண்டு ஒருபுடை வரவும், மத்தளம் யாழ்களுடன் பண்கனிந்த பாடலிசைகள் ஒருசார் பரவவும், கூனருங் குறளருங் கஸ்தூரி வெண்கலவைச் சாந்தங்களை ஏந்தினவராய் ஒருபுடை செல்லவும், பெண்கோலம்பூண்ட பேடியர் வண்ணஞ் சுண்ணம் மாலையிவற்றைத் தாங்கிவரவும், பூவும் நறும்புகைகளும் வாசனைப் பண்டங்களும் பரவவும், ஆடை கண்ணாடி அணிகலன்களைக் கொண்டு சேடியர் சூழவும் இவ்வாறாக எழுந்தருளிய தன் தன்மபத்தினியாகிய இளங்கோவேண்மாளோடுங்கூடி வேந்தர்பெருமானான செங்குட்டுவன் அம்மணியரங்கினை அடைந்து அதனில் வீற்றிருப்பானாயினன்.

அப்போது, மறையவர்நிறைந்த பறையூர்வாசியும், கூத்தில் வல்லவனுமாகிய சாக்கையன் ஒருவன் அரசன்முன் வந்து நின்று, சிவபிரான் திரிபுரங்களை எரித்தவிடத்தே

உமையவளை ஒரு பாகத்துக்கொண்டு ஆடிய கொட்டிச் சேதம்[1] என்னுங் கூத்தினை அப்பெருமான் ஆடியமுறையே நடித்துக் காட்ட, குடவர்கோமானும் கோப்பெருந்தேவியும் அதனைக்கண்டு மகிழ்ந்தனர். இங்ஙனம் இவ்விருவரது நன்கு மதிப்பும்பெற்று அக்கூத்தச்சாக்கையன் விடைபெற்று நீங்கியபின்னர்ச், செங்குட்டுவன் தேவியுடன் அந்நிலாமுற்றத்தைவிட்டுப் புறப்பட்டு அரசிருப்பாகிய பேரோலக்க மண்டபத்தை அடைந்தான். அடைந்தபின்னர், நீலன் முதலாய கஞ்சுகமாக்கள் மறையோனான மாடலனுடன் அவ்விடம் வந்து, வாயில்காவலரால் தம்வரவை மன்னனுக்கறிவித்து, அவனாணைபெற்று உட்சென்று அரசனைவணங்கிச் சொல்லுகின்றார்:— "வெற்றி வேந்தே! தேவரீர் எங்களுக்கிட்ட கட்டளைப்படியே; சோழர்களின் பழமைதங்கிய தலைநகரத்துச்சென்று, அங்கே வச்சிரம் அவந்தி மகதநாட்டரசரால் அளிக்கப்பெற்ற பந்தருந் தோரணவாயிலுங் கொண்ட சித்திரமண்டபத்தில் வீற்றிருந்த செம்பியர்பெருமானைக் கண்டு, வடநாட்டுப் போரில் அகப்பட்ட ஆரியமன்னரை அவ்வேந்தனுக்குக் காட்டி அவனடிகளை வணங்கினேம்.

---

1. இது, கொடுகொட்டி, கொட்டி எனவும் வழங்கும்; 'திரிபுரந் தீமடுத்தெரியக்கண்டு இரங்காது கைகொட்டி நின்றாடுதலிற் கொடுமையுடைத்தாதல் நோக்கிக் கொடுகொட்டி என்று பெயர் கூறினார்' என்பர் அடியார்க்குநல்லார் (சிலப். 6-43). "திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும், பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும், செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவும், செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும், பாடகம் பதையாது சூடகந் துளங்காது, மேகலை யொலியாது மென்முலை யசையாது, வார்குழை யாடாது மணிக்குழ லவிழா, துமையவ ளொருதிற னாக வோங்கிய, இமையவ னாடிய கொட்டிச்சேதம்" எனச் சாக்கையனாடிய இக்கூத்தினியல்பை இளங்கோவடிகள் கூறியவாறு காண்க.

அஃதறிந்த அவ்வரசன் 'போர்க்களத்தே பேராண்மை காட்டிப்பொருது தம் வாளையும் குடையையும் அக்களத்தே இட்டு உயிர்தப்பியோடிய வேந்தரைப் போரிற்பிடித்துக் கொண்டுவருதல் ஒரு வெற்றியாகாது' என்று தன் தேர்ப் படைத்தலைவனை நோக்கிக் கூறினன். பின்னர் அரசே! அவன் தலைநகரைவிட்டு நீங்கி மதுரைசென்று பாண்டியனைக் கண்டோம். 'அமர்க்களத்தே தங்கள் குடைக்காம்பை நட்டுவத்தலைவர் போலக் கையிலேபிடித்துக்கொண்டு இமயப் பக்கத்துள்ள குயிலாலுவம் என்னும் போர்க்களத்தைத் துறந்து புறங்கொடுத்து, ஆங்குள்ள சிவபிரானை வணங்கியவராய்த் தவக்கோலங்கொண் டோடின ஆரியமன்னர்கள்மேல் இவ்வாறு மிக்க சிற்றங்கொண்ட அரசனது வெற்றி இதுவரை யில்லாத புதுமையாகும்' என்றான் அப்பாண்டியன்" எனச் சேரர்பிரானுக்குத் தூதர்தலைவனான நீலன் அவ்வேந்தர்கூறிய வார்த்தைகளைச் செப்பிநின்றனன். இவற்றைச் செவியுற்ற செங்குட்டுவன், தன்வெற்றியை அவ்வரசர்கள் இகழ்ந்ததனாற் கோபம்பெருகித் தாமரைபோன்ற கண்கள் தழனிறங்கொள்ள நகைசெய்தனன். இங்ஙனம் அரசனுக்குச் சோழபாண்டியர்மேற் சிற்றம்பெருகுதலை மறையவனாகிய மாடலன் கண்டு அச்சபையிலெழுந்துநின்று 'வேந்தர் வேந்தே! நின்வெற்றி விளங்குவதாக' என்றேத்திப் பின் வருமாறு கூறுகின்றான்:—"மிளகுக்கொடி வளரும் மலைப் பக்கத்துறங்கும் யானைக் கூட்டங்களையுடைய பகைவரது வியலூரையழித்தும், ஆத்திமாலையுடையவரும் சோழர்குடியினருமாகிய ஒன்பதின்மருங் கூடிவிளைத்த பெரும்போரை நேரிவாயில் என்ற ஊரில் வென்றும், பெரிய தேர்ச்சேனைகளுடன் இடும்பாதவனத்துத்தங்கி ஆங்குவிளைந்த போரைக் கடந்தும், நெடுங்கடலில் மரக்கலங்களைச் செலுத்தியும், சினத்துடன் தன்மேல் எதிர்த்துவந்த ஆரியமன்னரைக் கங்

கைக்கரையிற் செயித்தும் இங்ஙனம் வெற்றிமாலைசூடி, உயர்ந்தோர் பலருடன் பழகி அறியவேண்டுவனவற்றை அறிந்த அரசரேறே! நீ வாழ்க; நின் சீற்றம் அடங்குவதாக; நின் வாழ்நாட்கள் ஆன்பொருநையாற்று மணலினும் அதிகமாக விளங்குக; யான் கூறுஞ் சொற்களை இகழாது கேட்டருள வேண்டும்; உலகங்காத்தலை மேற்கொண்டுவிளங்கும் உனது சிறந்த ஆயுட்காலத்தே ஐம்பதியாண்டுகள்வரை கழிந்தும் நீ அறக்களவேள்வியைச் செய்யாது எப்போதும் மறக்கள வேள்வியே செய்துவருகின்றாய்; வீரவேந்தர் செய்தற்குரிய வினைகளையெல்லாம் முற்றச்செய்து கொற்றவாளை வலத் தேந்திநிற்கும் உன்னுடைய தலைநகரத்தில் முன்னிருந்த புகழ்மிக்க உன் முன்னோரிலே,

1. "கடற்கடம் பெறிந்த காவல னாயினும்[1]
விடர்ச்சிலை பொறித்த விறலோ னாயினும்[2]
நான்மறை யாளன் செய்யுட் கொண்டு
மேனிலை யுலகம் விடுத்தோ னாயினும்[3]
போற்றி மன்னுயிர் முறையிற் கொள்கெனக்
கூற்றுவரை நிறுத்த கொற்றவ னாயினும்[4]
வன்சொல் யவனர் வளநா டாண்டு
பொன்படு நெடுவரை புகுந்தோ னாயினும்[5]
இகற்பெருந் தானையொ டிருஞ்செரு வோட்டி
அகப்பா வெறிந்த அருந்திற லாயினும்[6]
உருகெழு மரபி[6]னயிரை மண்ணி
இருகட னீரு மாடினே னாயினும்[7]
சதுக்கப் பூதரை வஞ்சியுட் டந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோ னாயினும்"[8]

---

1. இவ் வடிகளிற் கூறப்பட்ட செங்குட்டுவன்முன்னோர் செயல்களைப் பதிற்றுப்பத்துப்பாடல்களிலும் பதிகங்களிலும் கண்ட சேரர்செய்திகளோடு ஒப்பிடும்போது, பல (3, 6. 7) ஒருவர் செய்கைகளாகவும், சில (8)செங்குட்டுவனுக்குப் பிற்பட்ட சேரர் செயலாகவும், பரம்பரைமுறை பிறழ்ந்தும் காணப்படுகின்றன. இதனால், செங்குட்டுவனுக்கு முன்னோர்களை,இவ் வடிகளைக்கொண்டு ஒழுங்குபடுத்தல் அருமையாகும்.

புகழ்பெற்ற இவர்களில் ஒருவரும் இப்போது இல்லாமையின், இவ்யாக்கை நிலையற்றதென்பதை நீயே உணர்வாய்; இவ்வுலகிற் பெருவாழ்வுடையராகிய செல்வரிடத்தே அச்செல்வந்தானும் நிலையாதென்பதை வெற்றியாளரான தமிழரசரையிகழ்ந்த இவ்வாரியமன்னரிடத்தில் நீயே கண்டனையன்றோ? இனி இளமைநிலையாதென்பதை அறிஞர் உனக்கு உரைக்கவேண்டுவதேயில்லை; என்னெனின், செங்கோல் மன்னனாகிய நீயும் உனது நரைமுதிர்ந்த யாக்கையைக் காண்கின்றாய். தேவயோனியிற் பிறந்த ஒரு நல்லுயிர் அதனிற்றாழ்ந்த மக்கட்பிறவிக்குத் திரும்பவுங் கூடும்; மக்கள்யாக்கையிற் பொருந்திய ஆன்மா அவ்வாறே விலங்குடலையெடுத்தலும், அவ்விலங்குடலையெடுத்தது துக்கமிக்க நரககதியை அடைதலும் உண்டாம். ஆதலால், இவ்வுயிர்கள் ஆடுகின்ற கூத்தரைப்போல ஓரிடத்தே ஒருகோலங்கொண்டு நிலைத்தல் ஒருபொழுதுமில்லை. தான் செய்கின்ற கருமங்கட்கேற்ப உயிர்கள் அவ்வக்கதியை அடையுமென்பது குற்றமற்ற அறிஞரது மெய்யுரையாகும்; ஆதலால், இவற்றை நன்குணர்ந்து, எழுமுடியாரந் தாங்கிய வேந்தே! வழிவழியாக நின்னுணை வாழ்வதாக; யான் இவற்றைப் பிறர்போலப் பொருட்பரிசில் காரணமாக உன்பாற் சொல்லவந்தவனல்லேன். மற்று, நல்வினைப்பயனால் உத்தமசரீரம்பெற்ற ஒரு நல்லுயிர், செய்ய வேண்டிய கருமங்களைச் செய்தலின்றி, இவ்வுலகத்துப் பிறந்திறப்போரெல்லாரும் போம்வழியிலேபோய் வீணேகழிதலைப் பொறாதவனாக யான் இவைகூறினேன். ஆதலின், அறிவுமுதிர்ந்த அரசே! வீட்டுநெறி அளிக்கும் யாகவேதியர்கள் காட்டுகின்ற வேதவழிப்படியே அரசர்க்கோதப்பட்ட பெருவேள்விகளை நீ செய்தல் தகும். அவ்வறங்களை நாளைச் செய்வோம் என்று தாழ்ப்போமாயின், கேள்வியளவேயான இவ்வான்மா நீங்கிவிடுதலுங் கூடுமன்றோ? தம் வாணாளை

இவ்வளவென்று வரையறுத்துணர்ந்தோர் கடல்சூழ்ந்த இவ்வுலகில் ஓரிடத்தினும் இலர். ஆதலால் யாகபத்தினியாகிய இவ்வேண்மாளுடன் கூடி, அரசரெல்லாம் நின்னடி போற்ற அவ்வேள்வியை உடனே தொடங்கி ஊழியளவாக உலகங் காவல்புரிந்து, நெடுந்தகாய்! நீ வாழ்வாயாக" என்று அம் மறையவன் உபதேசித்தனன்.

இவ்வாறு, மாடலன், செங்குட்டுவனது செவியே வயலாக வேதம்வல்ல தன்நாவைக்கொண்டுழுது உத்தமதர்மங்களாகிய வித்துக்களை விதைத்தமையின், அவ்விதைகள் அப்போதே விளைந்து பக்குவம்பெற்ற உணவாய்ப் பெருகவும் அவற்றை விரைந்துண்ணும்வேட்கை அவ்வரசனுக்கு உண்டாகியது. அதனால், சேரர்பெருமான், வேதவழிப்பட்ட தர்மங்களை நன்கறிந்த சிரௌதியாகிய வேள்வியாசிரியர்களுக்கு, மாடலமறையோன் கூறிய முறையே, யாகசாந்திக்குரிய விழாவைத் தொடங்கும்படி ஆணையிட்டனன். பின்னர்த் தன்னாற் சிறைப்படுத்தப்பட்ட ஆரியமன்னராகிய கனகவிசயரைச் சிறையினின்று விடுவித்து, பொய்கை சூழ்ந்ததும் குளிர்ச்சிதங்கிய மலர்ச்சோலைகளுடையதுமாகிய **வேளாவிக்கோமந்திரம்** என்னுமாளிகையில் அவர்களை வசிக்கும்படி செய்வித்துத் தான் நிகழ்த்தும் யாகமுடிந்ததும் அவரை அவரது நாட்டுக்கனுப்புவதாக அறிவித்து, அதுவரை அவ்வாரியவரசர்க்கு வேண்டிய உபசாரங்களைச்செய்து வருமாறு **வில்லவன்கோதை** என்னும் சேனபதிக்கு மகிழ்ச்சியுடன் கட்டளையிட்டான். அவ்வாறே, **அழும்பில் வேள்** என்னும் அமைச்சனேடு ஆயக்கணக்கர்களையேவி, நீர்வளமிக்க மூதூர்களிலே சிறைப்பட்டவரை விடுவித்துச் சிறைச்சாலைகளைத் தூய்மைசெய்யவும், அரசிறை செலுத்தாது கடன்சுமந்த நாடுகளில் அவ்விறைதவிர்க்கவும் ஆணையிட்டனன்.

இங்ஙனம், சேரர்பெருமான் ஆணையிட்டபின், உலக முற்றுந் தொழுகின்ற பத்தினியாகத் தான்(கண்ணகி) விளங்குதலால், 'அருந்திற லரசர் முறைசெயி னல்லது - பெரும் பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது' என முன்னோருரைத்த மொழியினுண்மையை ஆத்திமாலைசூடிய சோழனைக்கொண்டு விளக்கியும்[1], செங்கோல் வளையுமாயின் அரசர் உயிர்வாழார் என்ற உண்மையைத் தென்னுடாளும் பாண்டியனைக்கொண்டு விளக்கியும், தாங்கொண்ட சபதம் நிறைவேறினாலல்லது தம் கொடுஞ்சினந் தணியார் அரசரென்பதை ஆரியவரசர் அறியும்படி குடதிசையாளுஞ்சேரனைக்கொண்டுவிளக்கியும், மதுரைமாநகரம் எரிந்து கேடடையும்படி கொடிய அழலைக் கொங்கையினின்று விளைவித்தும் இங்ஙனம் அருஞ்செயல்களைப் புரிந்து சேரநாட்டை அடைந்து வேங்கைமரநீழலில் தங்கிய பத்தினி நங்கையின் பொருட்டு, அந்தணர் புரோகிதன் நிமித்திகர்தலைவன் தபதிகள் இவர்களுடன் சென்று அழகுபெற வகுத்த பத்தினிக்கோயிலிலே, இமயத்தினின்று கொணர்ந்த சிலையில் கைத்தொழிற்றிறமையால் முற்றுவிக்கப்பெற்ற பத்தினிக் கடவுளின் பிரதிமைக்கு, வேலைப்பாடுமிக்க அணிகலன்களெல்லாம் பூட்டியலங்கரித்துப் பூப்பலியாகிய அருச்சனைகள் புரிந்து திக்குத்தேவதைகளையும் கடைவாயிலிலே தாபித்து, வேள்வியோமங்களும் உற்சவங்களும் நாளும் நிகழுமாறு கடவுண்மங்கலமாகிய பிரதிஷ்டை நிகழ்த்தும்படி ஆகமம் வல்ல அறிஞர்க்குச் சேரன் - செங்குட்டுவன் கற்பனைசெய்தனன்.

---

1. கற்புடையாட்டியாகிய கண்ணகியின் கணவனை நல்வழிப்படுத்தாத குறை சோழனிடம் உள்ளமையால், இவ்வாறு கூறினர். "நன்னடை நலகல் வேந்தற்குக் கடனே" (புறம். 312), "மாதவர் நோன்பு மடவார் கற்புங், காவலன் காவ லின்றெனி னின்றால்" (மணிமே. 22:208) என்ற முன்னோர் கூற்றுக்கள் அறியத்தக்கன.

# 6-வது வாழ்த்துக்காதை

கண்ணகியின் உற்றார் அவள்கோயிற்கு வந்ததும் அவருடன் செங்குட்டுவன் பத்தினியை வாழ்த்தியதும்.

மேலே கூறியவாறு, குமரிமுதல் இமயம்வரை தன் ஆணைநடாத்தி உலகாண்ட சேரலாதனுக்குச் சூரியவமிசத்துச் சோழன்மகள் பெற்ற மைந்தனும், முன்னொருகாற் கொங்கருடன் போர்புரியவிரும்பிக் கங்கையாற்றுக் கரைவரை படையெடுத்துச் சென்றவனுமாகிய சேரன்-செங்குட்டுவன் ஆரியரிடத்தேகொண்ட சினத்தோடுந்திரும்பித் தன் தலைநகரான வஞ்சியுள்வந்து தங்கியிருந்தகாலத்தே, வடநாட்டு ஆரியவரசர்பலர் அப்பக்கத்துநடந்த திருமணமொன்றன் பொருட்டுக் கூடியிருந்தவிடத்தில், 'தமிழ்நாடாளும் வேந்தர் போர்விரும்பிப் படையெடுத்துவந்து இங்குள்ள ஆரியவரசர்களை வென்று இமயவரைமேல் தங்கள் இலச்சினைகளாகிய வில் புலி மீன்களைப் பொறித்துச்சென்றகாலங்களில், எங்களைப்போலும் பெருவேந்தர்கள் இப்பிரதேசத்தில் இருந்திலர் போலும்' என்று தம்மில் ஒத்துப்பேசித் தமிழரசரை இகழ்ந்து நகையாடியசெய்தியை ஆங்கிருந்துவந்த மாதவர் சிலர் சொல்லக்கேட்டு—இயற்கையிலுருள்கின்ற உருளையொன்றைக் குணிலைக்கொண்டு செலுத்தியதுபோல—பத்தினிப் படிமத்தின்பொருட்டு இமயக்கற்கொணரவேண்டும் என்ற எண்ணம் அவ்வரசனுள்ளத்தைக் கிளரச்செய்தமையால், உடனே தன்படைகளைத் திரட்டிச்சென்று ஆரியநாட்டரசரைப் போரில்வென்று அவர்முடித்தலையில் அப்படிமத்துக்குரிய இமயக்கல்லைச் சுமத்திக்கொண்டு அங்கிருந்து திரும்பி, வெற்றிமகிழ்ச்சியுடன் கங்கையாற்றிற் றங்கி அக்கல்லைக் கங்கையாட்டித்தூய்மைசெய்து தன் சினநீங்கி

வஞ்சிமாநகரமடைந்து வேந்தர்பலருந் தொழத்தக்கபடிமஞ் செய்வித்துப் பத்தினிக்கடவுட்குக் கடவுண்மங்கலமாகிய பிரதிஷ்டை புரிந்தபின்பு, அக்கோயிலில் அரசரெல்லாம் தத்தம் திறைகளைக் கொண்டுவந்து வணங்கும்படியும் செய்வித்தனன்.

இஃது இங்ஙனம் நிகழ, மதுரைமாநகரில் முன்னைவினையாற் கோவலன் பொற்கொல்லனாற் கொலைபுண்ண அது கேட்ட அவன்மனைவி கண்ணகி, துன்பமிக்குக் கண்ணீர் பெருக்கிப் புழுதியிற்புரண்ட கூந்தலைவிரித்துத் தருமதேவதையைப் பழித்துக்கொண்டு பாண்டியன் முன்சென்றுவழக்காட, அவளது துக்கத்தைக்கண்டு பொறாத அவ்வரசன் தன் செங்கோல் கோடியதுபற்றி உயிர்நீத்ததை மாடலன் என்னும் மறையவன்மூலங் கேள்வியுற்று, அத்துயர்க்காற்றாது கோவலன் தந்தை துறவுபூண்டமையும் அவன் தாய் இறந்தமையும் அறிந்து மிகவும் துக்கித்து, கண்ணகியின் செவிலித்தாயும், அடித்தோழியும்[1], சாத்தன்கோயிலில் வாழும் தேவந்தியென்னும் பார்ப்பனத்தோழியும் ஆகிய மூவருஞ் சேர்ந்து கண்ணகியைக்காணவேண்டி மதுரைக்கு வரவும் அப்பத்தினியின் சீற்றத்தால் அந்நகரம் வெந்தசெய்தியை அறிந்து, தான் அடைக்கலமாகப்பெற்ற கோவலனை இழந்து அத்துன்பம்பொறாமல் உயிர்விட்ட மாதரியின்மகள் ஐயை என்னும் இடைக்குலமகளையடைந்து அவளுடன்சேர்ந்து மதுரைநீங்கி வையைக்கரைவழியேசென்று மலைமீதேறிச்சென்று, செங்குட்டுவனால் பிரதிஷ்டிக்கப்பெற்ற கண்ணகிகோட்டத்தையடைந்து அப்பிரதிஷ்டையைச்செய்து சிறப்பித்து நின்ற அச்சேரனை ஆங்குக்கண்டு அவனுக்குப் பத்தினியோடு தமக்குள்ள தொடர்புகளை முறையே உரைத்தனர். உரைத்த

1. தலைமைத்தோழி.

பின், அம்மங்கையர் மூவரும், கண்ணகியின் துயர்பொறாது அவள் நற்றாயும் தம்மாமியும் உயிர்நீத்ததும், மாமனாகிய மாசாத்துவானும், தந்தை மாநாய்கனும், கோவலன் காதற்கணிகை மாதவியும், அவள்மகள் மணிமேகலையும் துறவுபூண்டதுமாகியசெய்திகளை அப்பத்தினிக்கடவுள்முன் சொல்லிப் பின்னர்த் தம்முடன்வந்த ஐயையை அக்கடவுட்குக்காட்டி 'நின்னை அடைக்கலமாகப் பெற்று அவ்வடைக்கலப்பொருளைக் காத்தோம்பமுடியாமல் உயிர்துறந்த மாதரி என்னும் இடைக்குல முதியாளின் மகளையும், தோழீ! நீ காண்பாயாக' என்று கூறியழுது அரற்றிநின்றார்கள். இங்ஙனம் இவர்கள் அரற்றிநின்றபோது, பொற்சிலம்பும் மேகலாபரணமும் கைவளைகளும் வயிரத்தோடுகளும் மற்றும்பல அணிகளும் அணிந்துகொண்டு மின்னற்கொடிபோன்ற உருவமொன்று மீவிசும்பிற் றோன்றியது. அதனைக்கண்ட செங்குட்டுவன், 'இஃது என்னே!' என்று பெரிதும் அதிசயமடைந்தான். அப்போது அவ்வரசனுக்குக் கண்ணகி தன் கடவுணல்லணி காட்டியதோடு, தன்னைக்காணவந்தமகளிரை நோக்கித் 'தோழிகாள்! தென்னவனாகிய பாண்டியன் குற்றமுடையவனல்லன். அவன் தேவேந்திரன்கோயிலில் நல் விருந்தாய் விளங்குகின்றான். நான் அவ்வரசன் மகள் என்றறியுங்கள். முருகன்வரைப்பாகிய குன்றிலே விளையாடல் புரிதலினின்றும் யான் நீங்கேன். என்னோடு என் தோழிகளாகிய நீவிரெல்லீரும் சேர்ந்து விளையாட வருதிர்' என்று தன் பழைமைகொண்டாடி அப்பத்தினி கூறினள். இங்ஙனம் பத்தினிதெய்வம் நேர்நின்றுகூற அவற்றைக் கேட்டிருந்தவராகிய வஞ்சிமகளிரும் செங்குட்டுவன் ஆயத்தாரான மகளிரும் வியப்புற்றுத் தங்களிற்கூடி, அத்தெய்வத்தையும் அத்தெய்வஞ் சஞ்சரித்த தமிழ்நாடாளும்அரசர் மூவரையும் அம்மானை கந்துகம் ஊசல்வரிகளாலும் வள்ளை

(உலக்கை)ப்பாட்டாலும் பலவாறு வாழ்த்திக்கொண்டு பாடினர்.[4] முடிவில் 'சேரன்-செங்குட்டுவன் நீடூழிவாழ்க' என்று அத் தெய்வவுருவமும் அரசனை வாழ்த்தியது.

## 7-வது வரந்தருகாதை

பத்தினி செங்குட்டுவனையும் பிறரையும் அநுக்கிரகித்தது.

வடதிசையை வென்றுவணக்கிய சேரலர்பெருமான் செங்குட்டுவன், பத்தினிக்கடவுளது தெய்வவுருவை மேற்கூறியவாறு தரிசித்தபின்னர், தேவந்திகையென்னும் பார்ப்பனியைநோக்கிச் 'சிறிதுமுன்னர் நீங்கள் அழுதரற்றிக்கொண்டு பத்தினிமுன்பு கூறிய மணிமேகலையென்பவள் யார்? அவள் இளமையிலே துறவுபூண்டதற்குக் காரணம் யாது? சொல்லுக' என்று கேட்டனன். தேவந்தியும், கணிகையர்குலத்துள் உயர்ந்தவளான மணிமேகலையின் துறவைக் கூறத்தொடங்கி—"அரசே! நின்வெற்றி பெருகுக: நின்னுடு பெருவளஞ்சுரப்பதாக; கோவலனுக்கு மாதவிவயிற்றுதித்த மணிமேகலை என்பவள் கன்னிப்பருவமுற்றதற்கேற்ற அறிகுறிகளெல்லாம் நிரம்பினளாயினும், காமக்குறிப்புச் சிறிதேனும் இல்லாதவளானாள். அதனால், நட்டுவனார் கூத்து முதலியன பயில்வியாமையின், குலத்தலைவர்களாகிய செல்வர்கள் அவளைக் கொள்வதற்கு நினைந்திலர். இங்ஙனமாதலறிந்து மணிமேகலையின் பாட்டி சித்திராபதி, தன்மகள் மாதவிக்கு அவள் நிலைமைகூறி மனவருத்தமடைய, தாயின் கருத்துக்கிணங்காத அம்மாதவிமணிமேகலையைஉடனழைத்துக்கொண்டு அவளைக் கணிகையர்தொழிலிற் புகவிடாது, மன்மதன் தானினைத்த எண்ணம் பழுதாகித் தன்கருப்புவில்லையும் மலர்வாளிகளையும் வெறுநிலத்தெறியும்படி, மணிமேகலையின் கூந்தலை மாலையுடன் களைவித்து இந்திரவிகாரமடைந்து பௌத்ததருமத்தே சேர்த்தாள். இச்செய்தி

கேட்ட அரசனும் நகரத்தாரும், கிடைத்தற்கரிய நன்மணியைக் கடலில் வீழ்த்தவர்போற் பெருந்துன்பமடைந்தனர். மணிமேகலை தன் வைராக்கியத்தைச் சங்கத்தாரான அறவணவடிகளிடம் சென்றுகூறிப் பிக்ஷுணியாயமர்ந்த செய்தியை, அவ்வடிகளே அன்போடும் எமக்குக் கூறியருளினர். இவ்வாறு, இளம்பருவத்தே மணிமேகலை தன் அழகிய கோலத்தை அழித்துத் துறவுபூண்டனளாதலின், நான் கதறி அழலாயினேன்" என்று முன்னடந்த வரலாறுகளை அரசற்குக் கூறிமுடித்தாள்.

பின்னர்ச் சாத்தனென்னுந் தெய்வம் திடுக்கென்றேறியதனல் ஆவேசங்கொண்டு, அத்தேவந்தி, மலரணிந்த கூந்தல் குலைந்து பின்வீழவும், புருவந்துடிக்கவும், செவ்வாய் மடிப்பொடு சிரிப்புத்தோன்றவும், மொழிதடுமாறவும் முகம் வியர்க்கவும், செங்கண் சிவக்கவும், கைகளைவீசியோச்சிக் கால்பெயர்த்தெழுந்து, பலருமின்னதென்று தெரியவாராத அறிவுமயக்க முடையவளாய் நாவுலர்ந்து தெய்வம்பேசும் பேச்சுக்களைக் கூறிக்கொண்டு செங்குட்டுவன் திருமுன்பு இருந்த மாடலனைநோக்கி "மாடல! யான் பாசண்டச் சாத்தன். இப்போது இத்தேவந்தியின்மேல் ஆவேசித்துள்ளேன். பத்தினிக்கடவுளின் பிரதிஷ்டையைத் தரிசித்தற்கு இங்கு வந்துள்ள இளமகளிருள்ளே அரட்டன்செட்டியின் இரட்டைப்பெண்களும் ஆடகமாடத்தில் அரவணைக்கிடந்த திருமாலைப் பூசிக்கும் சேடக்குடும்பியின்[1] இளம்பெண்ணும்

---

1. சேடக்குடும்பி என்பதற்குத் திருவடிபிடிப்பான் என்றுபொருள் கூறுவர், அரும்பதவுரைகாரர் (பக்-584). திருவடிபிடிப்பான் - அருச்சகன்; திருமாலின் திருவடிநிலையை (ஸ்ரீசடகோபம்) தாங்குபவனாதலின் இப்பெயர் பெற்றான். 'நடுவிற்கோயிற் றிருவடி பிடிக்கும் ஸ்ரீதரபட்டனும்' என்னும் சாஸனப்பகுதியாலும் இப்பெயர்வழக்கின்பொருள் விளக்கமாதும், (South Indian Inscripitons, Vol. iii; p. 84.)

ஈங்கிருக்கின்றனர். மங்கலாதேவியின் கோயிற்பக்கத்துள்ள மலையிடத்தே, மயிற்கல்லின் பிடர்த்தலையினின்று இழிகின்ற நீரால் நிரம்பும் சுனைகள்பலவற்றுள் இடையிலிருப்பதும், வெண்கடுகும் முருக்கம்பூவும்போன்றநுண்ணியகற்களோடு மாவைக் கரைத்ததொத்துவிழும் நீருடையதுமாகிய சுனையிற் புகுந்து நீராடுவோர் பண்டைப்பிறப்பின் செய்திகளை அறிந்தோராவர்என்பதுபற்றி, அம்மங்கலாதேவிகோயிலின் வாயிலிலே நீ இருந்தபோது, அந்நீருள்ள கரகத்தை 'இது நீ கொள்ளத்தக்கது' என்று நான் உன்பாற் கொடுத்தேனன்றோ? உறியிலமைந்த அந்நீர்க்கரகமும் இப்போது உன் கையின்கண்ணே உள்ளது. சந்திராதித்தர் உள்ளவளவும் அந்நீரின் கடவுட்டன்மை ஒழியாது. இக்கரகத்துநீரை ஈங்குள்ள இவ்விளம்பெண்கள் மூவர்மீதும் தெளிப்பாயாயின், இன்னோர் முற்பிறப்பினை அறிந்தோர் ஆவர்; இதன் உண்மையை நீயே சோதித்துப் பார்" என்று கூறினள்.

இங்ஙனம், சாத்தனுவேசிக்கப்பெற்ற தேவந்தியின் வார்த்தைகளைக் கேட்டதும், செங்குட்டுவன் மிகவும் விம்மிதமுற்றுப் பக்கத்திருந்த மாடலன்முகத்தை நோக்கினன். அப்போது அவ்வந்தணன் மகிழ்ச்சியுற்றவனாகிச்செங்குட்டுவனை வாழ்த்தி—'அரசே! இது கேட்பாயாக; மாலதி என்னும் பார்ப்பனமாது தன் மாற்றாள் குழந்தையை எடுத்துப் பால்கொடுக்கும்போது பழவினைவயத்தால் பால்விக்கி அக்குழந்தை இறக்கவும், அதன்பொருட்டு ஆற்றாளாய்ப் பெருந்துன்பமடைந்து, பாசண்டச்சாத்தன்கோயில்சென்று அத்தேவன்பால் வரங்கிடந்தாள். அவளது பெருந்துயர்க்கிரங்கி அச்சாத்தன் இறந்த குழந்தையுருக்கொண்டு வந்து 'அன்னாய்! யான் வந்தேன்; இனி உன் துயரொழிக' என்று கூறவும், அம்மாலதியும் உரிமைத்தாயும் தம்கணவன் மகிழ

ச்சியுறும்படி அதனைவளர்க்கக் காப்பியம்[1] என்னும் பழங்குடி பொலிவடைய வளர்ந்து, பக்குவம் வந்ததும் அப்பிள்ளை இத்தேவந்திகையை மணந்து இவளோடு எட்டியாண்டு இல்லறம் நடத்திவந்தான். இவ்வாறு நிகழுங்கால், ஒரு நாள், தன் மனைவியாகிய இவட்கு அச்சாத்தன் மூவாத தன் தெய்வவுருவை வெளிப்படக்காட்டித் தன் கோட்டத்திற்கு வரும்படி இவளுக்குக் கட்டளையிட்டு மறைந்தனன்[2]. மறைந்தவன், நான் மங்கலாதேவியின்[3] கோட்டத்திலிருக்கும் போது அந்தணனுருக்கொண்டு வந்துதோன்றி, உறியிலமைந்த இக்கரகத்தை என்கைக்கொடுத்து இதனைச்சேமமாக வைத்திருக்கும்படி எனக்குக் கூறிச்சென்றான். அங்ஙனஞ் சென்றதுமுதல் இதுவரை அவன் திரும்ப என்பால் வந்திலன்; அதனால் இக்கரகத்தைத் தவறவிடாது என்னுடன் கொண்டுவந்தேன். இவ்வாறுதலால், அச்சாத்தனென்னுந் தெய்வமே தன் பார்ப்பனியாகிய இத்தேவந்தியின்மேல்

---

1. இது, பார்ப்பனரது பழைய கோத்திரங்களுள் ஒன்று. தொல்காப்பியர், பல்காப்பியர், வெள்ளூர்க்காப்பியனார் முதலிய பழம் புலவர்கள் இக்குடியினராவர். 'காப்பியத்தொல்குடி' என்று இளங்கோவடிகள் கூறியது காப்பியக்குடி என்ற ஊரையன்று. ஊராயின் 'தொல்'என்ற அடையை இடையில் அமைக்காது தொல்காப்பியக்குடி என்று கூறுவர். அதனால் இது குடிப்பெயரே என்க.

2. இங்ஙனமே, கண்ணகியின் பார்ப்பனத்தோழியான தேவந்தியின் வரலாற்றை, இளங்கோவடிகள் கனாத்திறமுரைத்த காதையில் விரித்துக் கூறுவர்.

3, 'மங்கலமடந்தை கோட்டம்' என்பதற்கு, மங்கலாதேவி கோயில் என்பர் அரும்பதவுரைகாரர். இக்கோட்டம், விருத்தாசலத்துக்கு வடமேற்கே 9-மைலில், மங்கலம் என்ற ஊரிலுள்ள துர்க்காதேவி கோயில் என்று தெரிகின்றது. இத்தேவி, பக்கத்துள்ள ஜில்லாக்களில் வசிப்பவர்களாலும் வணங்கப்படும் பிரபல தேவதை என்பதும், எருமைக்கடாப்பலி இவ்வம்மனுக்கு விசேடமாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது என்பதும் அறியத்தக்கன.

இப்போது ஆவேசித்து இக்கமண்டலநீரைத் தெளிக்கும்படி கூறினான். வேந்தர்வேந்தே! இங்குள்ள இச்சிறுமியர்மேல் இதனீரைத் தெளித்துச் சாத்தன்கூறிய அவ்வுண்மைகளை நாம் இனியறிவோம்" என்று அம் மாடலமறையோன் நிகழ்ந்த வரலாறுகளைக்கூறித் தான் கொணர்ந்த கமண்டல நீரை அங்கிருந்த பெண்கள் மூவர்மேலும் புரோக்ஷித்தனன். உடனே, அச்சிறுமிகட்குத் தங்கள் பழம்பிறப்புணர்ச்சி வந்தடையவும், அம்மூவருந் தனித்தனியாக அடியில்வருமாறு புலம்பலானார்கள்:—

(முதற் சிறுமி) "யான்பெற்ற மகளே! யாவரும் புகழத் தக்க உன்கணவன் கூடாவொழுக்கத்தனாய்உன்னை இகழ்ந்து நின்ற நிலைமைக்கு வருந்துகின்ற உன் தாயாகிய யானும் அறியாமலே அந்நியநாடுசென்று, உற்றாரொருவரும் இல்லாதவிடத்தில் தன்னந்தனியையாய்க் காதற்கணவனுடன் கடுந்துயரடைந்தனையே" என்றரற்றினள்.

(இரண்டாஞ்சிறுமி) "யான்பெற்ற மகளாகவும், என் துணைத்தோழியாகவும் என் துயர்நீக்கிவந்த பெண்ணே! என்பால் வாராயோ? என்னுடன்கூடவேயிருந்துவந்த கண்ணகியை அழைத்துக்கொண்டு, நடுநிசியில் பெருந்துயரத்தோடு சென்றனையே; இதனை நினைக்குந்தோறும் என்னெஞ்சம்

---

இக்கோயிலில், உயிர்ப்பலி விரும்பாத 'மங்களாச்சி' என்ற வேறொரு தேவதையும் உண்டு. மதுரை ஜில்லா, கம்பங்கூடலூரில் உள்ள சாஸனமொன்றால், கொல்லமாண்டு 844 (கி. பி. 1669)-ல் குலசேகரர் என்ற மலையாளவரசர் மங்கலாதேவியம்மன் முதலிய தேவதைகளின் ஆலயங்கட்கு ஷை கூடலூரில் பூமிகள் அளித்தனர் என்றசெய்தி கூறப்படுகின்றது (Ep. Rep. 420 Of 1907). பத்தினிப் பிரதிஷ்டைக்கு முன்பே, மங்கலமடந்தை கோட்டத்தில் சாத்தனால் தான் கரகநீர் பெற்றதாக மாடலன் கூறியதனால், அக்கோட்டம் செங்குட்டுவன் கட்டிய பத்தினிச் சேட்டத்தின் வேறென்பதே பெறப்படும்.

வருத்தமிக்குப் புலம்புகின்றது; இத்துயரம் என்னாற் பொறுக்கக்கூடவில்லை; என் அருமை மகனே! என்பால் ஒருகால் வாராயோ" (என்று கதறினள்).

(மூன்றாஞ் சிறுமி) "இளையோனே! நீ என்மனையில் தங்கியிருந்த காலத்தே வையையாற்றில் நீராடச்சென்றிருந்த நான் திரும்பிவந்தபோது ஊர்ச்சிறுவரால், ஐயோ! உன் துக்கசம்பவத்தைக் கேட்டேன். கேட்டதற்கேற்ப, மனையில்வந்து நான் பார்த்தபோது நின்னைக் கண்டிலேன். எந்தாய்! என்னையறியாது எங்குச்சென்றனையோ! (என்றழுதாள்).

இவ்வாறாகக் குதலைமொழிபேசும் சிறுமியர் மூவரும் முதியோர் பேசும் பேச்சால் செங்குட்டுவன் திருமுன்பே அக்கோட்டத்தின் முன்றிலிலிருந்து அரற்றியழவும், போந்தைமாலையணிந்த அவ்வேந்தர்பெருமான் வியப்புற்று மாடலன் முகத்தை மறுமுறையும் நோக்க, அரசனது குறிப்பறிந்து அவனை ஆசிர்வதித்தவனாய் அம்மறையவன் கூறுவான்:—"அரசே! (ஒரு காலத்தில் மதயானை கைக்கொண்டதனால் உயிர்போகும்நிலைமையிலிருந்த) அந்தணனொருவனது பெருந்துயரம் ஒழியும்படி அவனை அந்த யானையின் கையிலிருந்து தப்புவித்துத் தானே அதன் கையினுட் புகுந்து, கொம்புகளின்வழியாக அதன் பிடர்த்தலையிலேறி வித்தியாதரன்போல விளங்கித் தன்னருஞ்செயலைக் காட்டிய கோவலனது[1] அன்புடைமனைவிமேல், இம்மூவர்மகளிரும் பெருங்காதல் வைத்தவராதலால், விண்ணுடுசென்ற அவரோடு தாமுஞ் செல்லத்தக்க நல்லறத்தை இன்னோர் செய்யாது போயினர். அதனால், இவர்களுள் முதலிருவர் கண்ணகியின் பாற் பேரன்புடையராய், அரட்டன்செட்டி மனைவிவயிற்றில்

---

1. இவனது இவ்வரிய செயலை அடைக்கலக்காதை (42 58) யிலும் இளங்கோவடிகள் கூறினர்.

இரட்டைகளாகச் சேர்ந்து, அப்பத்தினி அஞ்சாதனுகிய வஞ்சிமூதூரிற் பிறந்தனர்: ஆயர்முதுமகளாகிய மாதரி முற்பிறப்பிற் கண்ணகிபால் வைத்த காதன்மிகுதியாலும் திருமால்பொருட்டுக் குரவையாடிய விசேடத்தாலும், ஆடகமாடத்திற் கோயில்கொண்ட சேஷசாயியாகிய அப்பெருமானது திருவடிபிடிப்பான்குலத்திற் சிறுமகளாகத்தோன்றினள். இதனுல் நல்லறஞ்செய்தவர் பொன்னுலகடைதலும், ஒன்றிற் பற்றுவைத்தோர் பூமியில் அப் பற்றுள்ளவிடத்தே பிறத்தலும், அறம்பாவங்களின் பயன் அடுத்து விளைதலும், பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் புதியனவன்றித் தொன்மைப்பட்டன என்பது நன்கு விளங்கும். இடபாரூடனுகிய சிவபிரான் திருவருளா லுதித்துப் புகழ்மிகுந்த மன்னவனுக நீ விளங்குதலால், அரசே! முற்பிறவியிற்செய்த தவப்பயன்களையும் பெரியோர் தரிசனங்களையும் கையகத்துப்பொருள்போலக் கண்டுமகிழப்பெற்றுய்; ஊழியூழியாக இவ்வுலகங்காத்து வேந்தே! நீ வாழ்வாயாக" என்று கூறி, தம்முன்பு அழுதுபுலம்பிய அவ்விளம்பெண்கள் மூவரும் முற்பிறப்பில் முறையே கண்ணகியின் தாயும், கோவலன் தாயும், ஆய்ச்சியாகிய மாதரியுமாயிருந்த செய்திகளைச் செங்குட்டுவனுக்குத் தெளிய மாடலன் விளக்கினுன்.

இவற்றைக்கேட்டுப் பெரிதும் வியப்புற்ற சேரர்பெருமான், பாண்டிநாட்டுத் தலைநகரான கூடன்மாநகரம் எரியுண்ணும்படி தன் தனமுகத்தைத் திருகியெறிந்த அப்பத்தினியின் கோயிற் படித்தரங்களுக்கு வேண்டிய பூமியளித்து நித்தியாராதனை நிகழ்ந்துவருமாறுசெய்தும், பூவும்புகையும் கந்தவர்க்கங்களுமாகிய திருப்பணிநடத்திவரும்படி தேவந்தியை நியமித்தும் அப்பத்தினிக்கடவுளை மும்முறைவலஞ்செய்து வணங்கிநின்றுன். இங்ஙனம் இவனிற்க, சிறைநீங்கி

உபசரிக்கப் பெற்ற கனகவிசயரென்னும் ஆரியவேந்தரும், ப்ண்டே வஞ்சியிற்சிறைப்பட்டு இப்போது விடுபட்ட மன்ன ரும் குடகநாடாளும் கோங்கிளங்கோசரும் மாளுவவேந்தரும் கடல்சூழ்ந்த இலங்கைக்கு அதிபனான கயவாகுவேந்தனும் அப்பத்தினிதேவியை வணங்கியவர்களாய் "தேவீ! எங்கள் நாட்டிற்கும் எழுந்தருளிவந்து, சேரர்பெருமான் செய்தபிர திஷ்டையிற்போல நாங்கள் செய்யும் பிரதிஷ்டைகளிற் பிர ஸந்நையாகி எங்கட்கும் அருள்புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். இங்ஙனம் அவர்கள் வேண்டிநின்றபோது, 'தந்தேன், வரம்' என்று ஒரு தெய்வவாக்கு ஆங்கு யாவருங் கேட்ப எழுந்தது. அதுகேட்டுச் செங்குட்டுவனும் ஏனை யரசர்களும் சேனைகளும் வியப்புற்று, வீட்டுலகத்தையே நேரிற் கண்டவர்போல ஆரவாரித்துத் துதித்தனர். பின் னர், அரசரெல்லாம் தன் அடிவணங்கியேத்த, தத்துவ ஞானியாகிய மாடலனுடன் சேர்ந்து, அப்பத்தினிக் கோட் டத்து யாகசாலையினுள்ளே சேரன் - செங்குட்டுவன் பிரவே சிப்பானாயினன். இங்ஙனம் அரசன் சென்றபின் யானும்[1] ஆங்குச் செல்லலானேன்; அப் பத்தினிக்கடவுள் தேவந் திகைமேல் ஆவேசித்தவளாகி என்முன்னர் எழுந்துநின்று, "மூதூராகிய வஞ்சிமாநகரத்தே அத்தாணி மண்டபத்தில் உந்தையாகிய சேரலாதனோடு நீ சேர்ந்திருந்தகாலையில், நிமித்திகனொருவன் வந்து நின்னைப் பார்த்து, அரசுவீற் றிருத்தற்குரிய இலக்கணம் நினக்கேயுண்டென்றுகூற, 'என் தமையனான செங்குட்டுவனிருப்பநீ முறைமைகெடச்சொன் னாய்' என்று அந்நிமித்திகனை வெகுண்டுநோக்கி, தமையனான செங்குட்டுவனுக்கு மனத்துன்பம் நேராதவாறு குணவாயி லிடத்துள்ள முனிவர்முன்வந்து துறவு பூண்டு, அந்த

1. இளங்கோவடிகள் தம்மைக்கூறங் கூற்று.

மிலின்பமாகிய மோக்ஷஸாம்ராஜ்யத்தை ஆளநிற்கும் வேந்தனல்லையோ, நீ" என்று, முன்னிகழ்ந்ததும் இனி நிகழ்வதுமாகிய என்னுடைய வரலாறுகளையும் உரைத்தருளினாள். இங்ஙனமுரைத்த இமையோரிளங்கொடியாகிய பத்தினிதேவியின் பெருமைதங்கிய இச்சரிதத்தை விளங்கக்கேட்ட திருத்தகு நல்லீர்!

"பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின் [1]
ஊனூண் டுறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி [2] நீங்கன்மின்
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி [3] ரோம்புமின்
அறமனை [4] காமி னல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் [5] விரகினி லொழிமின்
இளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
உளநாள் வரையாது [6] ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்"

மேற்கூறியவாறு, கண்ணகியின்பொருட்டு இமயத்திற் கல்லெடுக்கச்சென்ற செங்குட்டுவன், வடநாடு சென்று தன்

---

1. பரிகரியுங்கள்.
2. மெய் வார்த்தை.
3. மரிக்குநிலையில் உள்ள உயிர்.
4. மனையறம்.
5. பயனில்சொற் கூறுவோர் கூட்டம்.
6. உள்ள நாள்களை வீணாக்காமல்.

பகைவரைப் போரில் வென்று கல்லெடுப்பித்து, அதனைக் கங்கைநீராட்டி இரண்டேமுக்கால் வருஷங்கட்குப்பின் தன்னூர் புகுந்து பத்தினியைப் பிரதிஷ்டைசெய்த வரலாறுகளைச் செங்குட்டுவன் சகோதரராகிய இளங்கோவடிகளே இனிமையும் அருமையுமான தம்வாக்காற் பாடி, அப்பத்தினிக்கடவுள் தம்மை நோக்கிக் கூறிய வாக்கியங்களோடும் நூலைமுடித்திருத்தல் அறியத்தக்கது. இப்பத்தினியின் பிரதிஷ்டாகாலத்தில் வந்திருந்த வேற்றுநாட்டரசர் சிலரும் சோழபாண்டியரும், செங்குட்டுவன் செய்தவாறே, கண்ணகிக்குத் தத்தம் நகரங்களிற் கோயிலெடுத்துத் திருவிழா நடத்தியதுமுதலிய செய்திகளை அவ்வடிகள் சிலப்பதிகாரமுகப்பில் உரைபெறுகட்டுரை என்னும் பகுதியிற் கூறியிருக்கின்றனர்.[1]

---

1. (1) அன்றுதொட்டுப் பாண்டியநாடு மழைவறங்கூர்ந்து வறுமையெய்தி வெப்புநோயுங் குருவுந்தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லராயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்திசெய்ய நாடுமலிய மழைபெய்து நோயுந் துன்பமும் நீங்கியது.

(2) "அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்திசெய்ய மழைதொழிலென்றும் மாறாதாயிற்று.

(3) "அதுகேட்டுக் கடல்சூழிலங்கைக் கயவாகுவென்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டமுந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித்திங்களகவையினாங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறையெடுப்ப மழைவீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையாவிளையு ளுடாயிற்று.

(4) "அதுகேட்டுச் சோழன் - பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தருமிவளோர் பத்தினிக்கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக்கோட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே"—எனக் காண்க.

# 7-ம் அதிகாரம்

## செங்குட்டுவன் சமய நிலை

சேரன்-செங்குட்டுவன்கொண்டொழுகியமதம் பொது வாக வைதிகசமயமேயாயினும், சிறப்பாக இவனைச் சைவாபி மானமுள்ளவன் என்று சொல்லுதல் தகும். இவ்வேந்தன் சிவபெருமான் திருவருளால் உதித்தவனென்பதும், அப்பெ ருமானருள்கொண்டு விளங்கியவனென்பதும்,

> "செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
> வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்" (சிலப். 26: 98. 9.)

> "ஆனே றுயர்த்தோ னருளினில் விளங்க
> மாநிலம் விளக்கிய மன்னவன்" (சிலப். 30: 141-2.)

என்று இச்சேரன்சகோதரரே இருமுறை கூறுதலால் அறி யலாகும். இவனது சைவாபிமானத்தை அடியில்வரும் மற் றொரு செய்தியும் குறிப்பிடுவதாம். வஞ்சியினின்று வட நாட்டியாத்திரைக்குப் புறப்பட்ட அதிகாலையிலே இவ்வேந் தன், சிவபிரான் பாதுகைகளை வணங்கிவாங்கிச் சிரசில் தரித் துக்கொண்டு தன் அரசுவாவின்மேல்ஆரோகணஞ்செய்தன னென்றும், அப்போது ஆடகமாடமென்னுங் கோயிலிற் பள் ளிகொண்ட திருமால் பிரசாதத்துடன் சிலர்வந்து இவனை வாழ்த்திநிற்க, தன்முடியிற் சிவபிரான் திருவடிநிலைகளைத் தரித்திருந்தமையின், அத் திருமால்பிரசாதத்தை வாங்கித் தன் மணிப்புயத்தில் தாங்கிக்கொண்டு சென்றனனென்றும்

இளங்கோவடிகள் குறிக்கின்றார்.[1] இவற்றால், சிவபிரான்பால் இவ்வரசனுக்கிருந்த பத்திமிகுதி விளங்கத்தக்கது. ஆயினும், பிற்காலத்தரசர் சிலர்போல மதாந்தரங்களில் வெறுப்புக் காட்டுதலின்றித் தன்காலத்து வழங்கிய எல்லாச்சமயங்களை யும் ஒப்பநோக்கி ஆதரித்துவந்தவன் செங்குட்டுவனென்றே சொல்லத்தகும். இவனாட்சிக்காலத்தே, வஞ்சியில் வைதிக ரும் ஆசீவகரும்[2] சைனரும் பௌத்தரும் தம்மிற்கலந்து வாழ்ந்துவந்தனர். மணிமேகலை அந்நகர்க்குச் செல்லநேர்ந்த போது, சமயவாதியரோடெல்லாம் அவள் அளவளாவினள் என்பதனாலும் இதனை அறிக. செங்குட்டுவன் காலத்துச் சமயநிலைக்கும் இக்காலத்துநிலைக்கும் வேற்றுமை பெரிதும் உண்டு. இவ்வேந்தனுக்கு உடன்பிறந்தவரான இளங்கோ வடிகள் கொண்டொழுகிய சமயம் வைதிகமேயாயினும் சைனம்போலும் என்று அவரது வாக்கின்போக்காற் கருதப் படுகின்றது. செங்குட்டுவனுக்கும் அவன் சகோதரர்க்கும் மிக்க நட்பினரான கூலவாணிகன் சாத்தனார் கொள்கைபோ, பௌத்தமதமென்பதில் ஐயமில்லை. இனிச் செங்குட்டுவ னால் தெய்வமாக வணங்கப்பெற்ற கண்ணகியும் கோவலனும்

1. "நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி, உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி, மறஞ்சேர் வஞ்சி மாலை யொடுபுனைந்து, இறைஞ்சாச் சென்னி யிறைஞ்சி வலங்கொண்டு" (சிலப். 26: 62—67) கடக்களி யானைப் பிடர்த்தலை யேறினன், குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென, ஆடகமாடத் தறிதுயி லமர்ந் தோன், சேடங்கொண்டு சிலர்நின் றேத்தத், தெண்ணீர்க் கரந்த செஞ்சடைக் கடவுள், வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின், ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத், தாங்கினனாகி—(சிலப். 26: 60—67).

2. ஆசீவகம் - சமணசமயத்தின் பாகுபாடுகளுள் ஒன்று; இம் மதத்தினர்க்குத் தெய்வம் மற்கலியென்றும், நூல் நவகதிரென்றும் கூறுவர் (நீலகேசி. ஆசீவக. 13).

கொண்டொழுகிய மதமும் அப்பௌத்தமேயாகும். இச் செய்தி, வஞ்சிமாநகர் புகுமுன் தன்னைத் தரிசிக்கவந்த மணிமேகலையை நோக்கித் தெய்வவுருப்பெற்ற கண்ணகிக்கடவுள் தன் பின்னிகழ்ச்சிபற்றிக் கூறிய வாக்கியங்களால் நன்கறியப்படும்.[1] தான் கடைப்பிடித்தற்கு உரியதாக மாதவி சார்ந்துநின்ற சமயதருமத்தினின்றே அவள்காதலன்கொண்டொழுகிய மதமும் பௌத்தமே என்பது உய்த்துணரத்தக்கது. சைனசந்நியாசினியாகிய கவுந்தியடிகளைத் துணையாக்கொண்டு அவளால் அறநீதிகள் உபதேசிக்கப்பெற்றவனுய்த் தன்மனைவியுடன் கோவலன் மதுரைக்குப் பிரயாணித்தசெய்தியை இளங்கோவடிகள் கூறுவர்; இதனால், அக்கோவலன் சமணமுதலிய மதங்களிலும் அபிமானங்காட்டிவந்தவன் என்பது தெரியலாகும். இங்ஙனம், பௌத்தச்சார்பினரான கோவலன்கண்ணகிகளுடைய தந்தையர்கொண்ட சமயங்களோ, முறையே பௌத்தமும் ஆசீவகமும் ஆகும்.[2] அன்றியும் பௌத்தச்சார்பினளான கண்ணகிக்கு வைதிகசமயத்தவனான செங்குட்டுவன் கோயில்கட்டி, அந்தணர் புரோகிதர்களைக்கொண்டு வேள்விமுதலியன இயற்றிப் பிரதிஷ்டித்தசெயலும், பார்ப்பனியாகிய தேவந்திகையைப் பத்தினிதேவிக்குப் பணிசெய்ய நியமித்ததும் குறிப்பிடத்தகும். இவற்றால், செங்குட்டுவன் காலத்திருந்த தென்னாட்டுச்சமயநிலையை நோக்குமிடத்து அஃது இக்காலத்துப்போற் பரம்பரையொழுக்கமாகாது அவ்வவர் அறிந்துகடைப்பிடித்த

1. "பைந்தொடி தந்தை யுடனே பகவன், இந்திர விகாரமேழுமேத் துதலின், ... ...பிறவி நீத்த பெற்றிய மாகுவம், நறைகமழ் கூந்தல் நங்கை நீயும், முறைமையி னிந்த மூதா ரகத்தே, அவ்வவர் சமயத் தறிபொருள் கேட்டே, மெய்வகை யின்மை நினக்கே விளங்கிய, பின்னர்ப் பேரியோன் பிடகநெறி கடவாய்" (மணிமே. 26, 42 - 61).

2. சிலப். 27, 90 - 100.

கொள்கைமாத்திரையாகவே இருந்ததென்பது விளக்கமாகும். தந்தைமதம் மகனுக்கும் உற்றார்மதம் சுற்றத்தார்க்கும் உரியதென்ற நியதி அக்காலத்திருந்ததில்லை. ஆயினும், உறவுமுறையினும் நீதிமுறையினும் தம்முளிருந்த கொள்கை வேறுபாடுபற்றி, அவர்கள் ஒருகாலும் பிரிந்திருந்தவரல்லர் அக்காலவியல்பு அங்ஙனமாதலின், சேரன் - செங்குட்டுவன் தன்னைச்சார்ந்த அந்நிய மதத்தவரை அபிமானித்ததும் ஆதரித்ததும் வியப்புடையனவல்ல என்றே சொல்லலாம். இவ்வாறே, பிற்காலத்துத் தமிழரசரும் மதாந்தரங்களை அபிமானித்துள்ள செய்தி சாஸனங்களால் அறிந்தது.[1] இனிச் செங்குட்டுவன் தன் வைதிகச்சார்புக்கேற்ப, அந்தணரைப் பெரிதும் போற்றி அவர்கள் கூறும் உறுதிமொழிப்படியே ஒழுகிவந்தவனென்பது, மாடலனென்ற மறையவனிடம் அவன் காட்டிப்போந்த கௌரவச் செய்கைகளாக முன்பறிந்தவற்றால் விளக்கமாகும். இவன் தமிழ்வேந்தனாயினும் க்ஷத்திரிய வருணத்தவன் என்பதும், அவ்வகுப்பினர்க்குரிய யாகாதிகளை அந்தணரைக்கொண்டு செய்துவந்ததோடு[2] வைதிகதர்மங்களைப் பெரிதும் போற்றிவந்தவன் என்பதும்[3] அறியத்தக்கன.

---

1. 9-ம் நூற்றாண்டில், வேள்-ஆய்குலவேந்தான விக்ரமாதித்திய வரகுணன் என்பான் வைதிகசமயத்தவனாயினும் பௌத்த சைனமதங்களைப் பெரிதும் அபிமானித்து ஆதரவளித்திருப்பதும், (T. A. S. ii, 117), 11-ம் நூற்றாண்டினனான முதல் இராஜராஜ சோழன் பரமசைவனாயினும், நாகபட்டினத்துப் பௌத்தவிகாரத்துக்கு ஆனைமங்கலம் என்ற கிராமத்தைத் தானஞ் செய்திருப்பதும் (Tamil and Sanscrit Inscriptions, No. 30.) காண்க.

2. சிலப். 28: 175—194. 3. ஷை 26: 247—250.

## 8-ம் அதிகாரம்

# செங்குட்டுவன் சமகாலத்தரசர்

செங்குட்டுவன் காலத்தே, தமிழ்ப்பெருவேந்தர்களாகிய சோழபாண்டியரோடு அவர்கீழடங்கிய சிற்றரசர் பலரும் அறிவு திரு வாற்றல்கள் உடையராயிருந்தனர். அத்தமிழ்ப் பெரு வேந்தருள்ளும் பலகிளையினர் தத்தம் நாட்டின் ஒவ்வொரு பகுதியைப் பிரித்தாண்டு வந்தனரென்பதும் முன்னூல்களால் உய்த்தறியத் தடையில்லை. சேரரில் செங்குட்டுவன் மாற்றாந்தாயின் மக்களும், ஞாதியரான இரும்பொறைகளும் வெவ்வேறு ஊர்களைத் தலைநகரங்களாகக் கொண்டு ஆட்சிபுரிந்துவந்த செய்தி முன்னரே குறிப்பிட்டோம். இவ்வாறே சோழபாண்டியருள்ளும் இருந்தனரென்பது புறநானூறுமுதலியவற்றை நோக்குமிடத்துப் புலப்படக்கூடியதே. ஒரேபுலவர் ஒருவேந்தர்வமிசத்திற் பலரைத் தலைவராகக் கொண்டு தம்காலத்தவராகப் பாடும்படி நேர்ந்ததற்கு இதுவே காரணமாகும். இவ்வாறு கொள்ளாக்கால், தலைமையரசர்பலர் ஒரேவமிசத்தில் ஏககாலததில் ஓரிடத்தில் இருந்து ஆண்டவராகக் காணப்பட்டுச் சரித்திரவொற்றுமை பெறுவதில் மயக்கங்கொள்ள நேரும்[1]. இங்ஙனம் மூவேந்தர்வமிசங்களும் தனித்தனிக் கிளைகளுடையனவாயினும், செங்குட்டுவன்காலத்துச் சோழபாண்டியருள்ளே தலைசிறந்து நின்ற அரசர்சிலரை நாம் முன்னூல்களினின்று குறிப்பிடலாகும். அன்னோர்களை அடியில் வருமாறு காண்க:—

[சோழர்]

செங்குட்டுவன்காலத்திற் சோணாடாண்ட அரசர்கள் பலராயினும், சிறப்பாக உறையூர்ச் சோழரும் புகார்ச்சோ

1. 'சேரவேந்தர் தாயவழக்கு' என்னும் கட்டுரையுள் இதனை நன்குவிளக்கியுள்ளேம் (பக். 22-3).

மூருமென இருபகுதியினராகக் கொள்ளலாம். "மாடமதுரையும் பீடாருறந்தையும் - ஒலிபுனற் புகாருங் கலிகெழு வஞ்சியும்"[1] எனச் சோணாடு தங்காலத்தில் இரண்டு இராசதானிகள் உடையதாயிருந்ததை இளங்கோவடிகளும் குறிப்பிடுவர். செங்குட்டுவனுடைய தாயுடன்பிறந்த அம்மானும் சோழன் மணக்கிள்ளியின் மகனுமாகிய நெடுங்கிள்ளி உறையூரிலிருந்து ஆண்டுவந்தனன்.[2] இவ்வுறையூர்ச்சோழர்க்கும் புகார்ச்சோழர்க்கும் பெரும்பகைமூண்டு போர்நிகழ்ந்து வந்ததென்பது புறநானூற்றுச் செய்திகளினின்று புலப்படுகின்றது. புகார்ச்சோழரென்பார், கிள்ளிவளவனும்[3] அவன் தம்பியாகிய நலங்கிள்ளியுமாவர். கரிகாலன்காலத்து அவனது ஓராட்சிக்குட்பட்டதாகப் பட்டினப்பாலையால் அறியப்பட்ட சோணாடு, அச்சோழனுக்குப் பின்பு இருபகுதிப்பட்டது என்றும், அதனில் உறையூர்—மணக்கிள்ளிக்கும், புகார்—வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்கும் தலைநகரங்களாயிருந்தன என்றும் தெரியவருதலால், அக்கிள்ளிகள் இருவரையும் கரிகாலன்மக்களாகக் கருதற்கு இடமுண்டு. இவ்வாறாயின், மேற்கூறிய செங்குட்டுவனுக்கு மாமனான உறையூர் நெடுங்கிள்ளியும், புகார்க் கிள்ளிவளவன் நலங்கிள்ளிகளும் கரிகாலன் மகார்வயிற்றுப் பேரர்கள் ஆதல் வேண்டும். இவ்விருபிரிவினரான சோழர்க்கும் காரியாற்றங்கரையிலே பெரும்போர் மூள, அதனில் செங்குட்டுவனம்மானாகிய நெடுங்கிள்ளி இறந்தான் என்பது, 'காரியாற்றுத் துஞ்சிய' என அவன் விசேடிக்கப்படுதலாலும்[4] அப்போரிற் கிள்ளிவளவன் தம்பியே வெற்றிபெற்றவனென்பது "ஆர்புனை தெரிய லிளங்கோன் றன்னால், காரியாற்றுக்


1. சிலப்பதி. 8:3—4. 2. புறம். 44, 45, 47-ம் பாடல்கள் காண்க. 3. இவனே, மணிமேகலையிற்கண்ட சோழன் (25-14) 4. புறம் 47.

கொண்ட காவல் வெண்குடை, வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி"[1] எனச் சாத்தனர் மணிமேகலையிற் கிள்ளிவளவனைச் சிறப்பித்துக் கூறுதலாலும் புலப்படுகின்றன.[2] செங்குட்டுவன் அம்மானான நெடுங்கிள்ளி இங்ஙனமிறந்ததும், அவன் மகனான பெருநற்கிள்ளி உறையூரிற்பட்டமெய்தினன். திருக்கோவலூர்ச் சிற்றரசனும் பெருவீரனுமாகிய மலையமான் திருமுடிக்காரி[3] என்பவன் உறையூர்ச்சோழர்க்குச் சேனாபதியாகவிருந்து பேருதவிபுரிந்து வந்தான்; ஆனால், இவனும் சோழனது தௌர்ப்பாக்கியத்தால் இடையில் இறந்துவிட்டான். விடவே, ஆண்டிலிளையனாய்ப் பட்டமெய்திய பெருநற்கிள்ளிக்கு விரோதமாக அவன் ஞாதியரசரெல்லாம் வெளிக்கிளம்பிப் பெருங்கலகம் விளைப்பாராயினர். இக்காலத்தே, அவ் இளஞ்சோழன், தனக்குப் பெருந்துணைவனாகவிருந்த மலையமானது முள்ளூர்மலையில் ஓடி ஒளிக்கும்படி நேர்ந்தது. இவனை அவ்வாபத்துக் காலத்திற் காத்துவந்தவன், முற்கூறிய மலையமான்மகன் திருக்கண்ணன் என்பான்.[4] இங்ஙனம் தன் அம்மான்மகனுக்குநேர்ந்த ஆபத்தைக் கேட்டதும், செங்குட்டுவன் விரைந்துசென்று அவனுக்குப் பகைவராய்த் தோன்றிய சோழரொன்பதின்மரை உறை

1. மணி. 19. 126—28.

2. காரியாறு என்பது, கருவூர்க்கு டைக்கே காவிரியுடன் கலக்கும் மணிமுத்தாநதியின் பழம்பெயராகத் தெரிகின்றது. இந்நதியுற்பத்தியாமிடத்தில் 'காரியாறு' என்றபெயர் அதற்கு இன்றும் வழங்குதல் அறியத்தக்கது. சேரசோழபாண்டிய நாடுகளின் எல்லையாயமைந்த நதியாகிய கரைப்போத்தனாற்றுக்குக் கருவெட்டாறு என்பதும் ஒரு பெயர். இதுவே காரியாறாயின், வஞ்சியிலிருந்து சேரபாண்டியர் சோழன்மேற்படையெடுத்து வஞ்சிசூடி வந்தனர் என்ற மணிமேகலைக்கூற்றுக்குப் பெரிதும் பொருந்தும் எனலாம். 3. இவனே கடையெழுவள்ளல்களுள் ஒருவனாகிய காரி. 4. புறநானூறு 174-ம் பாட்டில் இச்செய்திகள் அழகாகவும் தெளிவாகவும் குறிப்பிடப்படுதல் அறியத்தக்கது.

யூரையடுத்த நேரிவாயிலில்நடந்த போரிலே அழித்துத் தன் ண்மைத்துனச்சோழனைப் பட்டத்தில் நிறுவினன்.[1] இச்செய்தி முன்னரும் விளக்கப்பட்டது. இங்ஙனம் செங்குட்டுவன் செய்தது, அவன் பத்தினிப்படிமத்தின்பொருட்டு வடநாடு சென்றதற்குச் சில மாதங்கட்கு முந்தியதாகும்; அஃதாவது அவனது 47-ம் வயதை ஒட்டியதாதல்வேண்டும்.[2] இவ்வாறு, செங்குட்டுவனால் உதவிபுரியப்பட்டவனே, பிற்காலத்திற் பெருவீரனாய் 'இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி' எனச் சிறப்பிக்கப்பெற்றவன் எனத் தெரிகின்றான்.[3] இவனே, செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயிலெடுத்துச் சிறப்பித்த செய்தியறிந்து தானும் உறையூரிற் கோயிலொன்றுகட்டி




1. சிலப் 27: 118—23.

2. கங்கைக்கரைப்பாடியில் இச்சேரன் மாடலனைச் சந்தித்தபோது, "இளங்கோ வேந்த ரிறந்ததற் பின்னர், வளங்கெழு நன்னாட்டு மன்னவன் கொற்றமொடு, செங்கோற் றன்மை தீதின்றோ" எனச் சோழன்செய்தியை அவ்வந்தணனிடம் உசாவியது காண்க (சிலப். 27, 159-61.).

3. புறம். 16.

அப்பத்தினிக்குத் திருவிழாவெடுத்துக் கொண்டாடியவன். செங்குட்டுவன் அம்மானையும் அம்மான்சேயையும்பற்றி யாமீண்டெழுதியவற்றிற் சில புறநானூறுமுதலியவற்றைக் கொண்டு ஊகித்தனவாம். ஆதலின், அறிஞர் அவற்றை ஏற்ற பெற்றி ஆராய்ந்துகொள்ளக்கடவர். இவற்றால், செங்குட்டு வன்காலத்துச்சோழரை மேற்காட்டியவாறு குறிக்கலாம்.

[பாண்டியர்]

இனிச் செங்குட்டுவன்காலத்து விளங்கிய பாண்டியர் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனும், அவன் தம்பியாகிய வெற்றிவேற்செழியனுமாவர். செங்குட்டுவன் சிறியதந்தையும், இமயவரம்பன்-நெடுஞ்சேரலாதன் தம்பியுமாகிய பல் யானைச்செல்கெழுகுட்டுவனும், ஆரியப்படைதந்த நெடுஞ் செழியனுக்குச் சமகாலத்தவனாகத்தெரிகின்றான்.[2] பிற்கூறிய செழியனே, கோவலனை ஆராயாமற் கொல்வித்து அவ் அநீதியை உணர்ந்ததும் தன் பெருந்தேவியுடன் உயிர்விட்டவன். "வடவாரியர் படைகடந்து,தென்றமிழ்நாடொருங்கு காணப், புரைதீர்கற்பிற் றேவிதன்னுடன், அரசுகட்டிலிற் றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்" என்று இவனைச்சிறப்பித்துக் கூறுவர் இளங்கோவடிகள்.[3] இப்பாண்டியன் பெரிய வீரனும் அரியபுலமையும் உடையவன். புறநானூற்றில் (183)—"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே" என்ற பாடல் இப் பாண்டியன் பாடியதாகும். இப்பாட்டால் இவனது பெரும் புலமையும், கல்வியில் இவன் வைத்திருந்த கௌரவமும்

1. சிலப். உரைபெறு கட்டுரை.

2. இது, சிலப்பதிகாரச் கட்டுரைகாதையில்வரும் பராசரனென்னும் பார்ப்பனன் வரலாற்றால் தெளிவாக அறியப்படும்.

3. சிலப். மதுரைக்காண்டத்தினிறுதிக் கட்டுரை.

இத்தகையன என்பது விளங்கத் தடையில்லை. இவ்வரசன் தன் திருமுன்பு வந்துநின்று கண்ணகி உரைத்த வழக்கைக் கேட்டு இறந்ததும், கொற்கையில் இளவரசாய் ஆட்சிபுரிந்து வந்த வெற்றிவேற்செழியன் தென்னாட்டாட்சிக்கு உரியவனாயினான். செங்குட்டுவன் வடக்கே யாத்திரைசென்றிருந்த காலத்தில், இச்செழியனுக்கு முடிசூட்டுவிழா நடைபெற்றதென்பது, கங்கைக்கரைப் பாடியிலே செங்குட்டுவனுக்கு மாடலன் கூறிய செய்தியால் தெரியலாகும்.[1] இப்பாண்டியன் பட்டமெய்தியதும், நன்மாறன் என்னும் வேறுபெயர் பூண்டனனென்று கருதற்கு இடமுண்டு. கோவலன் கொலையுண்டமைக்குப் பொற்கொல்லனே காரணமாயிருந்தமையால் அச்சாதியாரனைவர்மேலும் இப்பாண்டியன் பெருஞ்சீற்றங்கொண்டு, அவர்களுளாயிரவரைக் கண்ணகியின்பொருட்டுக் களவேள்விசெய்து பலியிட்டானென்றும், அதற்கு அப்பத்தினி மிகவும் உவந்தருளினளென்றும் சிலப்பதிகாரம் கூறும்.[2] இவ்வரசன் சிலகாலம் ஆட்சிபுரிந்து இறந்ததும், இவன்மகனாய்ப் பட்டமெய்தியவன் நெடுஞ்செழியன் என்பவனாகத் தோற்றுகின்றான். மிகச்சிறுவயதிலே சிறந்தவீரனென்று பேர்பெற்றவன், இச்செழியன். தன்னுடனெதிர்த்த தமிழரசர் எழுவருடன் இவன் அதிபாலியத்தில் தலையாலங்கானம் என்றகளத்துநிகழ்ந்த போரில் வெற்றிபெற்ற செய்தி முன்னூல்களிலே பெரிதும் புகழப்படுகின்றது.[3] இந்நெடுஞ்செழியனுக்குப் பின் பட்டமெய்தியவன் உக்கிரப்பெருவழுதி என்பவனாதல் வேண்டும். கடைச்சங்கமிருந்த பாண்டியருள் இவனையே இறுதியில்வைத்து நூல்கள் கூறுதல் காண்க.[4]

1. சிலப். 27: 114—138. 2. ஷை, உரைபெறு கட்டுரை.
3. புறம் - 77; அகம் - 36. சின்னமனூர்த் தாமிர சாஸனமும் இவனது இப்போர்ச்செய்தி கூறுதல் அறியத்தக்கது.
4. இறையனார் களவியல் உரைப்பாயிரம்.

இச்செழியன், கானப்பேர்[1] என்ற ஊரைக் கைப்பற்றி அதன் தலைவனான வேங்கைமார்பன் என்பவனைப் போரில்வென்றவன். எட்டுத்தொகையுள் ஒன்றாகிய அகநானூறு தொகுப்பித்தவனும் இவ்வரசனேயாவன். செங்குட்டுவன் அம்மான் சேயாகிய பெருநற்கிள்ளியும், சேரமான் மாவெண்கோவும், இவ்வுக்கிரப் பெருவழுதியும் நட்பினராயிருந்த செய்தி ஔவையார்பாடலொன்றால்[2] அறியப்படுகின்றது. இவற்றால் நம் சேரர்பெருமான்காலத்தில் ஆட்சிபுரிந்த பாண்டியரை அடியில்வருமாறு கொள்ளலாம்.

- ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன்
- வெற்றிவேற்செழியனான நன்மாறன்
  - தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
    - கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதி.

---

[சேரர் கிளையினர்]

செங்குட்டுவனுடைய மாற்றாந்தாய்மக்களையும் அவன் ஞாதியரான இரும்பொறைகளையும் 'சேரவமிசத்தோர்' என்னும் பகுதியுள் விரித்துக்கூறினேம். இவருள், மாற்றாந் தாய்ச் சகோதரரான நார்முடிச்சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும், ஞாதியராகிய செல்வக்கடுங்கோவும் பெருஞ்சேரல் என்பவனும், செங்குட்டுவன் சமகாலத்துச் சேரவா

1. இஃது, இப்போது பாண்டிநாட்டுள் காளையார்கோயில் என வழங்கும் தலமாகும். 2. புறம். 367.

சர்கள் ஆவர். பண்டை நூல்களிற் கண்ட செய்திகள் பலவற்றுக்கும் மேலே கூறிப்போந்த முறையே மிகப்பொருந்துவதென்பது, அறிஞர்களால் நுணுகி அறியத்தக்கது.[1]

---

1. காலஞ்சென்ற ஸ்ரீ. வி. கனகசபைப்பிள்ளையவர்கள் தம் '1800-வருஷத்துக்கு முற்பட்ட தமிழர்' (The Tamils 1800-years ago) என்னும் அரியநூலில், செங்குட்டுவன்மரபை முற்றும் வேறுபடக் குறித்திருப்பதோடு, ஏனைச் சோழர்வமிசத்தையும் சிறிது மாற்றியெழுதியிருக்கின்றார்கள். அவர்கள் கருத்துப்படி, செங்குட்டுவன் தந்தை—செல்வக்கடுங்கோ வாழியாதனும், தாய்—கரிகாலன் மகளுமாவர். இதற்கு மாறாக, "குடவர்கோமான் நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளியீன்ற மகன்" (பதிற்றுப் 5, பதி) 'நெடுஞ்சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன்மக ளீன்ற மைந்தன்' (சிலப். 29. உரைப்பாட்டு) என முன்னூல்களிலே செங்குட்டுவன் கூறப்படுகின்றான். அதனால், இவன்றந்தை நெடுஞ்சேரலாதனென்பதும், தாய் மணக்கிள்ளியின் மகளென்பதும் விளக்கமாகும். இனிப் பிள்ளையவர்கள், மாந்தரஞ்சேர விரும்பொறையைச் செங்குட்டுவன் மகனாகக் கருதினர். செங்குட்டுவன்மகன் குட்டுவஞ்சேரலென்பது பதிற்றுப்பத்தின் ஐந்தாவதன் பதிகத்தால் நன்கறியப்பட்டதாம். அம் மாந்தரஞ்சேரல், சேரர்கிளையினராய்க் கடன்மலைநாடாண்ட இரும்பொறைமரபினனாவன். இம்மாந்தரன் மகனாகப் பெருஞ்சேரலிரும்பொறையைப் பிள்ளையவர்கள் குறித்திருப்பதும் மாறாகும். இப் பெருஞ்சேரல், செல்வக்கடுங்கோவாழியாதன் மகனாவன். இஃது அவனைப்பற்றிய 8-ம் பத்துப்பதிகத்து வரும் 'பொய்யில் செல்வக்கடுங்கோவுக்கு வேளாவிக்கோமான் பதுமன்தேவியீன்ற மகன்' என்னுந் தொடரால் விளக்கமாம். ஆகவே, இந்நூலின் முதலிற்குறித்த முறைப்படி சேரர் மரபினரைக்கொள்ளுதலே பெரிதும் பொருத்தமென்பது உய்த்தறியத்தக்கது. இனிக் கரிகாலன் பின்பாண்ட சோழர்மரபினரை முன் குறித்தபடி இருபகுதியினராகக் கொண்டு, உறையூர்ச்சோழர் கிளையில்—மணக்கிள்ளியையும் அவன் மகனாக நெடுங்கிள்ளியையும் அவன் மகனாகப் பெருநற்கிள்ளியையும் காட்டுதலும், புகார்ச்சோழர் கிளையில்—பெருவிறற்கிள்ளியையும் கிள்ளிவளவனையும் அவன் தம்பி நலங்கிள்ளியையும் முறையே காட்டுதலும் பொருத்தமாம். மணக்கிள்ளியின் மகளும் நெடுங்கிள்ளிக் குடன்பிறந்தாளுமாகிய நற்சோணை செங்குட்டுவன்தாயென்பதும் (சிலப்.

## [வேறு அரசர்கள்]

இனிச் செங்குட்டுவன் காலத்தே தமிழ்வேந்தரல்லாத வேற்றரசர்களாகத் தெரியவருவோர்:—(1) கொங்கிளங் கோசர், (2) நூற்றுவர்கன்னர், (3) கயவாகு என்பவராவர்; இவருள்—

(1) கோங்கிளங்கோசர் என்பார் வீரத்துக்கு மிகவும் பேர்போன ஒருபழைய மரபினர். இன்னோர் சிற்றரசர் களாகவும் தமிழரசர்களது படைவீரர்களாய்[1] அவர்களால் அபிமானிக்கப் பெற்றவர்களாகவும் விளங்கியவர்கள் என்பதும், ஒற்றுமையும் சொல்தவறுமையும் உடையராய் அவற்றால் 'ஒன்றுமொழிக்கோசர்'[2] 'வாய்மொழிநிலைஇய கோசர்'[3] என நாடுபுகழ வாழ்ந்தவரென்பதும் முன்னூல்களால் அறியப்படுகின்றன. 'கொங்கிளங் கோசர்' என்பதனுள் கொங்கு என்பது மேல்கொங்குநாடும் குடகுமைசூர்ப்பகுதிகளும் அடங்கிய கங்கதேசமாகும். கங்கதேசத்து அரசர்களைக் கோங்குதேச ராஜாக்கள்[4] என்பர். 'குடகக் கொங்கரும்'[5] என்று இளங்கோவடிகளும், 'கோசர் துளுநாடு'[6] என மாமூலனாரும் கூறுவதினின்று, இன்னோரது ஆட்சி குடகு துளுநாடுகளிற் செங்குட்டுவன்காலத்தே சிறந்திருந்ததென்பது தெரியலாம். இக்கூட்டத்தவருள் 'முதுகோசர்' (அகம். 262) என்ற பகுப்பினருமுண்மையால் 'இளங்கோசர்' என

---

பதி. 1, அடியார்க்) குறிக்கத்தக்கது. பாண்டிய வமிசாவளியாகப் பிள்ளையவர்கள் குறிப்பிட்டவை, முன்னூல்களோடு பொருந்தும்.

1. சோழநாட்டுள்ள நியமம் என்பது இவர் வாழ்ந்த ஊராகவும், (அகம். 90, "இளம்பல் கோசர்நின் வாய்மொழி கேட்ப" என இவரைப் பாண்டியன் படைவீரராகவும் (மதுரைக்காஞ்சி 773-4) சங்கநூல்கள் கூறுதல் காண்க.

2. அகம்—196. 3. ஷை. 205. 4. 'கொங்குதேசராஜாக்கள் சரிதம்' என்பது, இக்கங்கர்வரலாறு கூறும் நூலாகும். 5. சிலப். 30, 159. 6. அகம் - 15.

இவர்கள்வழங்கப்பெற்றனர். 'நான்மொழிக்கோசர்' [1] என்றும் இன்னோர் வழங்கப்பெறுவர். நான்மொழி என்பதற்கு வேறு பொருள் உரைகாரராற் கூறப்படுவதாயினும், 'நாமோழிநாடு' எனத் திரிந்து நாமக்கல் சாஸனமொன்றில் புதியதாக அறியப்படுகின்றது. [2] அதனால், பண்டு அந்நாடு இக்கோசராட்சிக்குரியதாயிருந்ததென்பது பெறப்படும்.

மௌரிய சக்கரவர்த்தியான அசோகன் காலத்தே, தென்னாட்டில் சுதந்தரம் பெற்றிருந்த அரசர்கள்—சோழர், பாண்டியர், சத்யபுத்ரர், கேரளபுத்ரர், தாம்பபர்ணி (இலங்கை) அரசர் என்பவரென்று அவனது முதற்சாஸனத்தால் [3] அறியப்படுகின்றது. இக்கூற்றிற் கேற்ப, பத்தினிக் கடவுளைத் தத்தம் நாடுகளிற் பிரதிஷ்டித்து வணங்கிய வேந்தர்களைக் கூறுமிடத்தில், இளங்கோவடிகள்—சேரன், பாண்டியன், சோழன், கோசர், இலங்கைவேந்தன் என்று கூறுதல் [4] ஒப்பிடத்தக்கது. இம்முறையில், சத்யபுத்ரர் என்று அசோகசாஸனத்துக் கண்டவர் சத்தியவிரதமிக்கவராகச் சங்கச்செய்யுட்கள் சிறப்பிக்கும் கோசரே என்னலாம். அக்கோசர்க்கு உரியதாக மாமூலனார் கூறும் துளுநாடே சத்யபுத்ரர்க்கு உரியதாகச் சரித்திர நூலோர் கருதுவதும் பொருந்துதல் காண்க. கொங்கிளங்கோசர், செங்குட்டுவற்கு நட்பரசர் என்பது, கண்ணகிப் பிரதிஷ்டைக்கு அன்னோர்வந்து கௌரவித்துப்போந்த செய்தியால் தெரியலாம்.

(2) நூற்றுவர் கன்னர் என்பார், செங்குட்டுவனது வடநாட்டியாத்திரையில் பேருதவிபுரிந்தவர் என்பது முன்பே நன்கறிந்த செய்தியாம். தம் தலைவன் நடத்திய பத்தினிப் பிரதிஷ்டைக்கு வந்திருந்த அரசருள் ஒருவராக இளங்கோ

---

1. மதுரைக்காஞ்சி, 509.

2. Ep. Rep. 11, 1906. 3. அசோகனுடைய சாஸனங்கள், பக். 94. 4. சிலப். உரைபெறு கட்டுரை.

வடிகள் கூறும் மாளுவவேந்தர் என்பார் இந்நூற்றுவர்கன்னரேயாவர். என்னெனின், வடயாத்திரையில் செங்குட்டுவனுக்கு உதவிய அவர்கள், அவ் யாத்திரையின் பயனான பத்தினிப் பிரதிஷ்டைக்கு—ஏனைநட்பரசரெல்லாம் வந்து சிறப்பித்த முறையில்—வந்திருந்து சிறப்பிக்கத் தவறார் ஆதலால் என்க.

இனிச் சிலர், ஆந்திரவரசருள் சாதகர்ணி என்ற பட்டத்துடன் ஆண்ட வேந்தனொருவனே நூற்றுவர்கன்னர் என்போர் என்று கருதுவர். 'கன்னர்', 'நூற்றுவர் கன்னரும்......யாம் தருமாற்றலம் என்றனர்', 'ஆரியவரசர் ஐயிருபதின்மர்' என்று தொகையால் அறுதியிட்டுக் குழூஉப்பெயராகவே இளங்கோவடிகள் அவர்களைக் கூறுதலால், அவர் கருத்துச் சிறிதும் பொருந்தாதாம். அதனால், மாளுவநாட்டைப் பலபாகமாகப் பகுத்துக்கொண்டு தம்முள் ஒற்றுமையுடன் ஆண்ட அரசர் கூட்டத்தவராகவே அன்னோர் கொள்ளற்குரியர். கன்னர்க்கு மாளுவதேசத் தொடர்பு உண்டென்பதற்கு மற்றொரு சிறந்த சான்றும் உள்ளது.

மாளுவ தேசத்தின் கீழ்ப்பகுதியில், இப்போது நாகோட்-ஸம்ஸ்தானத்தைச் சார்ந்த மலைக்காட்டுப் பிரதேசத்திலே, பதைனி தேவி என்று எழுத்துக்குறி இடப்பட்ட கோயி லொன்று உள்ளதென்றும், இக்கோயில், கி. பி. 5-ம் நூற்றாண்டில் விளங்கிய குப்தசக்கரவர்த்திகள் காலத்துச் சிற்பத்திறமுடையதென்றும், இதனுள்ளே பழைமையாக இருந்த தெய்வம் மாறி, 10, 11-ஆம் நூற்றாண்டுகட்குரிய சைன பிம்பங்களே இப்போது காணப்படுவன என்றும், தென்னாட்டுப் பத்தினிதேவி வணக்கம்பற்றிய பழைய வழக்காறு தெரியவாராமையால், அப்பிரதேசத்தார் இப்பதைனிதேவி யாலயத்தை வேறு வேறு தெய்வத்துக்

குரியதாகக் கருதுவாராயினர் என்றும் சரித்திர அறிஞராற் கூறப்படும் செய்திகள் அருமைபெருமையுடையனவாகும்.[1] செங்குட்டுவன் நடத்திய பத்தினிப் பிரதிஷ்டைக்கு வந்து சிறப்பித்த—

"அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரு மாளுவ வேந்தரும்
கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்"

சேரனுக்கு அருள்புரிந்தாற்போலத் தங்கள் நாடுகளினும் எழுந்தருளி அருள்புரிய வேண்டுமென்று பத்தினி தெய்வத்தைப் பிரார்த்திக்கத் "தந்தேன் வரமென் றெழுந்த தொரு குரல்" என்று இளங்கோவடிகள் அத்தெய்வம் அருளியதைக் குறிப்பிக்கின்றார். இதனால், பத்தினிப் பிரதிஷ்டைகள், மாளுவ முதலிய ஆரியநாடுகளினும் இலங்கா தீவத்தினும் அந்நாட்டரசர்களால் நம் சேரன்காலத்து நடத்தப்பட்டன என்பது உய்த்தறியலாம். ஆகவே, கீழ் மாளுவதேசத்தில் உள்ள பதைனிதேவி கோயில், நூற்றுவர் கன்னரால் நிருமிக்கப்பட்டதாகவே கருதற்குப் பொருத்தம் பெரிதும் உள்ளது.

(3) கயவாகு என்பான் இலங்காதீவத்தை ஆண்டுவந்த அரசன். இவன் செங்குட்டுவனது பத்தினிப் பிரதிஷ்டைக்கு வந்திருந்து, தன்னாட்டினும்எழுந்தருளி அருள்புரிய வேண்டுமென்று அத்தேவியைப் பிரார்த்தித்தும், அவட்குத்

1. இச்செய்திகளை முதன்முதற் கண்டு வெளியிட்டவர், என் நண்பரும், சென்னை அட்வொகேட்டுயாகிய ஸ்ரீமாந். டி. ஜி. ஆராவமுத ஐயங்கார் அவர்கள். இவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்று, சென்னை—யூனிவர்ஸிடியாரால் பரிசளித்துப் பதிப்பிடப்பட்ட "காவிரி, மௌகரிகள், சங்ககாலங்கள்" (The Kaveri the Maukaris and the Sangam Age. pp. 41-2, infra.) என்ற சரிதநூலுள் இவற்றின் விவரங்காண்க.

தன் தலைநகரில் கோட்டமெடுத்து வழிபட்டும் போந்தவ னென்பது சிலப்பதிகாரத்தால் அறியப்பட்டது. நூற்றுவர் கன்னர் ஆட்சிபுரிந்த மாளுவதேசத்தில் பழைய படிவமின் றிப் பத்தினிக் கோட்டமொன்று காணப்பட்டவாறே, இலங் கையில் இன்னகோயிற்கு உரியதென்று இந்நூன்முகப் பில் அமைக்கப்பட்டுளது. மாளுவநாட்டுப் 'பத்தனிக்'கோட் டத்தைப் போலவே, இப்படிவமும் 5-ம் நூற்றாண்டுக் குப்த சக்கரவர்த்திகள் காலத்துச் சிற்பவமைதி யுடையதாகும் என்று அத்துறைவல்லோர் கருதுவர்.[2] இதனால், மாளுவக் கோயிலும் இலங்கைப்படிவமும் செங்குட்டுவன்காலத்தில் அந்நாட்டரசர்களால் அமைக்கப்பட்டவையாக வேண்டும் என்று கருதல் பொருத்தமேயாம்.

மேற்கூறிய கன்னர் கோசர் கயவாகு என்பவரன்றித் தமிழ்நாட்டில் செங்குட்டுவன்காலத்து விளங்கிய சிற்றரச ரும் பலராவர். புறநானூறு அகநானூறு முதலிய சங்கச் செய்யுட்களை ஆராயுமிடத்து, அவற்றிற் குறிக்கப்பட்ட சிற் றரசர்பலரும் இவன் காலத்தவராக, அன்றி இவன்காலத்தை ஒட்டியிருந்தவராகவே புலப்படும். அவரையெல்லாம் ஈண்

---

1. இப்படத்திற்குரிய மூலப்படிவம் இலங்கையினின்று 1830-ம் ௵ இங்கிலாந்துக்குக் கொண்டு போகப்பட்டது; இப் போது "பிரிட்டிஷ்-மியூஸி" யத்தில் உள்ளது. இதற்குப் பிரதி சாயையெடுத்து முதன்முதல் இதனை வெளியிட்டவர், டாக்டர் ஆனந்த குமாரஸ்வாமி அவர்கள். இப்பிரதிசாயையே இந்நூன் முகப்பிற் காட்டப்பெற்றுள்ளதாம்.—Dr. Ananda Comaraswami's 'Selected Examples of Indian Art' Plate, xxxiii, Pattni Devi.

2. Medieval and Modern Sculpture by Mr. V. A. Smith. p. 248.

டுக்காட்டின் விரியும். இனிச் செங்குட்டுவனுக்குப் பகையரசராய் இருந்தவரைப்பற்றி இவனது போர்ச்செய்திகூறப் பட்டவிடத்தும் பிறவிடங்களிலும் கூறியுள்ளோம். இவருள் "கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர், பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர் வடவாரியர்" - இவர்களுடன் போர்புரிந்து நம் சேரன் அடைந்த பெருவெற்றியை இளங்கோவடிகள் சிறப்பிக்கின்றார்.[1] ஈண்டுக் கங்கர் என்பவர், சேரநாட்டை யடுத்த கங்கவாடி என்ற தேசத்தைத் தழைக்காடு (Talakad) என்ற தலைநகரிலிருந்து ஆட்சிபுரிந்தவர். கட்டியர் என்பார், தமிழ்நாட்டின் பகுதியை ஆண்டுவந்த மன்னராவர். "போரடுதானைக் கட்டி"[2] "கங்கன் கட்டி"[3] 'பல்வேற் கட்டி'[4] எனச் சங்கநூல்களில் இன்னோர் கூறப்படுதல் காண்க. தமிழகத்தின் மேற்கெல்லையில் இவர் நாடு உள்ளதென்றும், இவர்நாட்டுக்கு வடக்கேயுள்ளது, வேற்றுமொழி வழங்கும் வடுகர்பூமி என்றும் தெரியவருகின்றன.[5] இவ்வடுகர் கன்னடராவர். மைசூர்ச்சீமையின் வடபாகமும், பல்லாரி அனந்தபுரப் பிரதேசங்களும் 'படக நாடு' என்றும், அப்பக்கத்தவர் படகவாரு, படக நாட்டிவாரு என்றும் இன்றும் வழங்கப்படுதல் காண்க. வடுகர்பெருமகனான எருமை என்பவனுக்கு உரியதும், அயிரியாறு ஓடுவதுமாக மாமூலனார்[6] கூறும் குடநாடு, இப்படகநாடேயாம். இந்நாட்டிற் செல்வதாக அப்புலவர்கூறும் அயிரி,[7] இப்போது அகிரி என்ற பெயருடன் துங்கபத்திரையிற் கலக்கும் நதியாகும். ஆகவே,

1. சிலப். 25, 156—9.

2. அகம். 227. 3. ஷை, 44. 4. குறுந்தொகை. 11.

5. "குல்லைக் கண்ணி வடுகர் முனையது, பல்வேற் கட்டி நன்னாட் டும்பர், மொழிபெயர் தேஎத்த ராயினும்" (ஷை; ஷை.)

6. "எருமை குடநாடு" (ஷை. 115). 7. அகம். 253.

கட்டியர் நாடு, வடுகர்குடநாட்டை அடுத்த தமிழகப்பகுதியே என்பது தெளிவாம்.[1]

## 9-ம் அதிகாரம்

### செங்குட்டுவனைப் பாடிய

# இருபெரும் புலவர்கள்.

சேரன்-செங்குட்டுவன்காலத்தே, தமிழ்நாட்டிற் புலவர் பெருமக்களாக விளங்கியவர், பலர்; இவரெல்லாம் தமிழ்ப் பேரரசர்களாலும் சிற்றரசர்களாலும் பெரிதும் அபிமானித்து ஆதரிக்கப்பட்டு வந்தவர்களே. சங்ககாலத்தனவாகிய எட்டுத்தொகை நூல்களிற் காணப்பட்ட புலவர்பெருமக்களிற் பலர், செங்குட்டுவன்காலத்தும் அவனையொட்டியும் ஒரு நூற்றாண்டுக்குள் விளங்கியிருந்தவராகவே, அன்னோர் பாடிய அரசர்முதலியவரின் தொடர்புகள்கொண்டு அறியப்.

1. இக்கட்டிபரையே, கட்டிமான், கட்டியரசர் எனச் சாஸனங்கள் கூறுவன. இடைக்காலத்துச் சோழர் ஆட்சியில் விளங்கிய கட்டிமானடிகள் (I. M. P. p. 246), கட்டிமான் அரையன் திருச்சிற்றம்பலமுடையான் (Ibid. 432) என்பார் இம்மரபினரே. கூர்ச்சரத்துக்குவழங்கும் கட்டிவார் (Kattiwar) என்பது இவர் அந்த ஆதியில் வாழ்ந்தமைபற்றி வழங்கியதென்பர் (The Tamils 1800 years ago, p. 10). விஜயநகர வேந்தர்காலத்தும் அதன்பின்பும் கட்டி முதலியார் என்று, இன்னோர் சேலப்பகுதியை ஆண்டுவந்தவர் என்பது 'சேலம் ஜில்லா கெஸட்டிய'ரால் தெரியலாம். 'பல்வேற் கட்டி நன்னாட்டும்பர்' என்ற குறுந்தொகைத் தொடரை, 'வல்வேற்காட்டினன்னாட்டும்பர்' என்று பிறழக்கொண்டு, வல்வேற்காடு என்பது பழவேற்காடு (Pulikat) ஆகுமென்றும், அதுவே தமிழகத்துக்கும் வடுகாகிய தெலுங்குநாட்டிக்கும் எல்லையாம் என்றும் நீளத் தமிழ்ச் சரித்திரம் எழுதிச்சென்றாரும் உண்டு. 'பல்வேற் கோசர்' (அகம். 113), 'பல்வேற் றிரையன்' (பெரும்பாண். 37), 'பல்வேற்றானையதிகமான்' (பதிற். 8-ம் பதி.) எனச் சங்கநூல்களில், பல்வேல்

படுகின்றனர். இங்ஙனம் இச்சேரனை அடுத்திருந்த புலவர் வரலாறுகளையெல்லாம் இங்குவிரிப்பிற் பெருகும்; ஆயினும், செங்குட்டுவனால் நேரில் அறிந்தபிமானிக்கப்பெற்ற புலவ ரிருவரைமட்டும் ஈண்டுக் குறிப்பிடல் தகும். அவராவார்:— பரணரும் சாத்தனாரும்.

[பரணர்]

இவருள்ளே பரணர் கடைச்சங்க காலத்தில் விளங்கிய புலவர் பெருமக்களுள் ஒருவர். இவரால் பாடப்பெற்ற பேரரசர்களும் சிற்றரசர்களும் பலர் என்பது சங்கநூல்க ளால் நன்கறியலாம். இதனால் அக்காலத்துவிளங்கிய தமிழ்த் தலைவரெல்லாம் இப்புலவர்பெருமானிடம் பெருமதிப்பு வைத்திருந்தவர் என்பது பெறப்படத் தடையில்லை. இப்புல வரால் பாடப்பெற்ற தலைவர்களிலே—நெடுஞ்சேரலாதன், உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி, அவன் மகன் கரிகால் வளவன், பெருவிறற்கிள்ளி, பேகன், அதிகமானஞ்சி என் போர் சிறந்தோராவர். முதலிற்குறித்த சேரலாதன் நம் செங்குட்டுவன் தந்தை என்பதனையும், இவனும் பெருவிறற் கிள்ளியும் புரிந்த பெரும்போரில் அவ்விருவருமே இறந்து கிடந்த நிலையை, இப்பரணர் உயர்வும் உருக்கமும் பெருகப் பாடியுள்ளதனையும் முன்பே விளக்கியுள்ளேம்.[1] ஏனைப் புல வர்களிடம் அருமைபாகக் காணப்படும் குணமொன்று பா

என்ற அடை அடுத்தடுத்துப் பயில்வதாதலாலும், வல் என்ற விசே டணம் வேற்காட்டுக்கு ஏற்காமையாலும், 'பல்வேற் கட்டியர்' (சிலப். 25, 157) என இவ்வாறே அக்காலநூல்களில் விசேடிக்கப் படுதலாலும், பாடமும் அதுவேபாக ஏடுகளில் உள்ளமைபாலும், பண்டைநூல் கூறுமாறு பழவேற்காட்டை அடுத்து எருமையின் குடநாடேனும் அயிரிநதியேனும் இல்லாமையாலும்—அன்னோர் பாடமும் கருத்தும் சரித்திரவுண்மைக்குச் சிறிதும் ஏற்காதன என்க.

1. இந்நூல், பக். 21.

ணரிடம் சிறப்பாகவுள்ளது. அஃதாவது—தம் காலத்தும் தமக்குமுன்னும் நிகழ்ந்த சரித்திரசம்பவங்களை விசேடமாக எடுத்துக் கூறுவதேயாம். அகத்துறைபற்றியோ புறத்துறைபற்றியோ தாம்பாடும் பாடல்களிலே, அரிய சரித்திரமொன்றை எவ்வகையினும் இடைப்புகுத்தாமற் செல்வது இவர் வழக்கமில்லை. இதனால் பழைய சரித்திரங்களை அறிந்து கொள்ளுதற்கு இப்புலவர்பெருமான் திருவாக்குப் பெருங்கருவியாவது என்னலாம். இத்தன்மையில் இவர்க்கு ஏறக்குறைய ஒப்புடையவர் மாமூலனார் என்ற புலவரே என்பது, அவர்பாடல்களால் நன்கு விளங்கும். கடைச்சங்க நாளில் இப்பரணர்க்கு ஒப்பாக விளங்கிய பெரும்புலவர் கபிலர் என்பது, 'கபிலபரணர்' எனவழங்கும் பழந்தொடரால் பெறப்படுகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த பரணர் நம் செங்குட்டுவன்காலத்திலும் சிறந்து விளங்கினர். இவர் இச்சேரனைப்பற்றிப் புகழ்ந்துள்ள செய்யுள் பதினொன்றாகும். இவற்றுள் ஒன்று, செங்குட்டுவனது போர்க்களத்தை நேரிற்கண்டு அதனை ஏர்க்களமாக உருவகித்துப் பாடிய செய்யுளாம். "பூதங் காப்பப் பொலிகளந் தழீஇப், பாடுநர்க் கிருந்த பீடுடையாள !" என்று நம் சேரர்பெருமானைவிளித்து,ஏர்ச்செயல்கள் பலவற்றை அவனதுபோர்ச்செயல்களோடு ஒற்றுமைப்படுத்தி, இப்புலவர் அப்பாட்டிற் சிறப்பிக்கும் அழகு புகழத்தக்கதாகும்.[1] இப்பாடலொழிய ஒழிந்த பாடல்கள் பத்தும், பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பகுதிக்குரியன. இவற்றில், மரக்கலத்தில் தன் வேலினையேற்றிச் செங்குட்டுவன் கடலிடைச் செய்த போராண்மையையும், இமயம்வரை படையெடுத்துச் சென்று அரசர் பலரை அடக்கிய இவனதாற்றலையும், தன் நண்பனுக்காக மோகூர்த்தலைவனைப் போரில் அலைத்த இவன் வீரத்தையும்,

1. புறநானூறு, 369.

இவனது வரையாத வள்ளன்மையையும், மற்றும் இச்சேரனது அறிவு திரு ஆற்றல்களையும் இப்புலவர்பெருமான் பெருமைபெறப் பாடியுள்ளார். இவர் பாடல்களைச் சேரர் பெருமான் கேட்டுப் பெருமகிழ்வுற்று உம்பற்காடு[1] என்னுந் தன்னாட்டுப்பகுதியின் வருவாயையும், தன்மகன் குட்டுவஞ் சேரலையும் இவர்க்குப் பரிசாக அளித்தான் என்று அப்பத்தின் இறுதிவாக்கியங் கூறுகின்றது. தன்மகனைப் பரிசளித்தான் என்பது பரணரிடம் அவனை மாணுக்கனுக்கிய செய்தியையே குறிக்கும் என்பதைமேலே குறிப்பிட்டோம்[2]. அதியமானஞ்சி என்றதலைவன் மலையமானது கோவலூரை அழித்துநின்ற சிறப்பை, "இன்றும்பரணன் பாடினன் மற்கொல்" என்று ஔவையாரும் புகழ்ந்துபாராட்டும்படி[3] உள்ளது இப்புலவர்பெருமான் பெருமை எனின், வேறு யாம் கூறற்குரியது யாது? "ஆகவும் கெடவும் பாடல்தரும் கபிலர் பரணர் கல்லாடர் மாமூலர் பெருந்தலைச்சாத்தர் இத்தொடக்கத்தோர்" என வரும் யாப்பருங்கல விருத்தித் தொடரால்,[4] இப்புலவர்போன்றார் அக்காலத்தே தெய்வத் தன்மைவாய்ந்த இருடிகள்போல மதிக்கப்பெற்று வந்தனர் என்பது தெரியலாம். இப்புலவர் வாக்காக எட்டுத்தொகை நூல்களால் தெரியவரும் பாடல்களின் தொகை 82-ஆதும். இப்பாடல்களிற்கண்ட விசேடங்களையெல்லாம் இங்கே கூறின் விரியுமாதலின், முன்னூல்நோக்கி அறிந்துகொள்க.

[சாத்தனார்.]

இனிச் சாத்தனார் என்பவரும் பரணர்போலக் கடைச்சங்கப் புலவருள் ஒருவரே; இவர் மதுரையில் நெல்லுப்

---

1. உம்பல் காடு—வேழக்காடு; வேழக்காடு என்ற பிரதேசம் கடன்மலைநாட்டு ஒன்று உண்டு (T. A. S. i. p. 188).

2. இந்நூல் 24-ம் பக்கமும், 4-ம் கீழ்க்குறிப்பும் காண்க

3. புறநானூறு, 99. 4. 93-ம். சூத்திரவுரை (பக். 351).

புல்லுமுதலிய கூலவியாபாரஞ்[1] செய்துவந்தமையால், மது ரைக் கூலவாணிகன் சாத்தனார் எனப் பெயர்பெற்றனர். சங் கத்தில் அரங்கேற்றற்பொருட்டுப் பிறர் பாடிவரும் நூல்களிற் குற்றங்காணுந்தோறும் அவற்றுக்கு மனம்பொறாது தம் விதியைநொந்து தலையிற் குத்திக்கொண்டு வந்தவர் இவ ரென்றும், அதுபற்றிச் சீப்பிடித்த சிரமுடையரானமையின், சீத்தலைச்சாத்தனார் என வழங்கப்பெற்றார் என்றும் சரித் திரங் கூறுவர். இவர்க்குத் தலைநோவு தாங்கக்கூடாவண் ணம் இருந்ததென்பதும், அது திருவள்ளுவரது முப்பாலைக் கேட்டபோது முற்றும் நீங்கியதென்பதும்—

"சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—சாந்தும்
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு"

என்னும் மருத்துவன் தாமோதரனார் வாக்கால்[2] அறியப்படும். இப்பாட்டில் சாத்தற்கிருந்த உள்ளார்ந்த தலைநோவு, அதற் குரிய மருந்தாலும் தீராதநிலை கூறப்படுதல் தெரியலாம். உரையாசிரியர் முதலியோர்---"சீத்தலைச் சாத்தன், கொடும் புறமருதி என்பன சினைப்பெயரோடு தொடர்ந்துவருமுதற் பெயர்" என்று எழுதுவர்.[3] இதனால் சீப்பிடித்த தலையினரா யிருந்தவர் சாத்தனார் என்பது பெறப்படும். இவற்றி னின்று, அத்தலைநோவின் கொடுமை தாங்காது தம் தலை யைக் குத்திக்கொண்டு புண்ணாக்கிவந்தவர் இப்புலவர் என் பதும், இவ்வாறு உள்ளும் புறம்புமிருந்த தலைக்குத்துநோவு கள் திருவள்ளுவரது முப்பாலைக் கேட்டதும் நீங்கினவென் பதும் உய்த்தறியலாகும். இவ்வரலாறே, பிறர் பாடலிற் குற்றங் காணுந்தோறும் தம் தலையைக் குத்திக்கொண்டு வந்

1. கூலம் ஆவன—நெல்லுப் புல்லு வரகு தினை சாமை இறுங்கு தோரை இராகி என்பன.

2. திருவள்ளுவமாலை, 11. 3. தொல். சொல். 171, இளம்பூ.

தவர் என்றும், அது முப்பால் கேட்டபோது நீங்கியதென்றும் பிற்காலத்திற் கதைவேறுபட வழங்கலாயிற்று. இக்கதையே உண்மை வரலாறுயின், சாத்தனர் தம் தலையைக் குத்திப் புண்ணாக்கியதனால் உண்டான குத்துநோவுக்கு, மருத்துவன்தாமோதரனர் மருந்து வேறுகூறுவர். சிந்தி நீர்க்கண்டம், சுக்கு, தேன் மூன்றும் உள்ளான நோவுநீங்கமோத்தற்கு உரியனவேயன்றி, வெளிப்புண்ணுக்கிடும் மருந்தாகாமை காண்க. இம்மூன்றன்ஸ்தானத்தில் வள்ளுவனரது முப்பால் சாத்தனர்க்கு மருந்தாக உதவின என்பது அவர் பாடற்கருத்து. இனி, சீத்தலை என்ற அடை, சாத்தனரது ஊரைக் குறிப்பதென்று கருதுவாருமுண்டு.[1] இக்கருத்து ஏற்புடையதுபோலத் தோற்றினும், சினையடுத்த முதற்பெயர்க்குச் சீத்தலைச்சாத்தன் என்பதை முன்னேரெல்லாம் உதாரணங் காட்டுதலால், அஃது ஒருதலையாகத் துணிதற்கு உரியதன்றென்க.

இச்சாத்தனர் பௌத்தமதச் சார்புடையவர் என்பது, மணிமேகலையில் அம்மதவிஷயங்களை உள்ளார்ந்த உருக்கத்துடன் மிகவழகாகப் பாடுதலாலும், ஏனைய மதங்களை அவ்வாறு கூருமையாலும் அறிஞர்கள் எளிதில் அறியற்பாலது. இப்புலவர் பௌத்தசமயநூலில் ஆழ்ந்த அறிவும் ஆராய்ச்சியும் படைத்தவர் என்பதும், பல நாடுகளினும் சஞ்சரித்து வந்தவர் என்பதும், முற்காலத்து வழங்கிய சமயநூல்கள் பலவற்றினும் தருக்கமுதலாய சாத்திரங்களினும் பிறவட நூல்களினும் மிக்க பயிற்சியுடையார் என்பதும் இவரது காப்பியத்தால் தெளிவாகக் கூடியன. மணிமேகலையின் செய்திகளாக இவர் கூறியவை பல புனைந்துரைகளேயாகும்.

---

1. அவர், திருச்சிராப்பள்ளி ஜில்லா, பெரும்புலியூர், (Perampalur) தாலுகாவில் சித்தலி என்றுள்ள ஊரைச் சீத்தலையாகக் கொள்வர். (நற். முக. 38).

புத்த ஜாதகக்கதைகளை அடியொற்றியே தம் நூற்கதையை அமைத்தவர்[1] இப்புலவர் என்பது அவ்விரண்டனையும் நோக்குவார்க்கு விளக்கமாம். கோவலன் கொலையையும், கண்ணகியின் சிற்றத்தால் விளைந்த மதுரைக்கேட்டினையும், கோவலன்மகளான மணிமேகலை துறவையும் இப்புலவர் நேரில் நன்கறிந்தவர். செங்குட்டுவன் தன் பெரும் பரிவாரங்களுடனும், சகோதாருடனும் பேரியாற்றங்கரையில் தங்கியிருந்தபோது இப்புலவர்பெருமான் அவ்விடஞ்சென்று அச்சேரனைக் கண்டு, அவனது செல்வப் பொலிவை நோக்கி வியப்பும் உவப்பும் அடையலாயினர். அப்போது மலைவாணர் பலர் திரண்டுவந்து, தங்கள் மலைச் சார்பையடைந்து கண்ணகி சுவர்க்கம் புக்க செய்தியைச் செங்குட்டுவற்குத் தெரிவிக்க, இச்சாத்தனுர், தாம் மதுரையிலிருந்தபோது நிகழ்ந்த அவள் வரலாறுகளையும், அந்நகரில் சிவபிரானது வெள்ளியம்பலத்தே ஒருநாளிரவு தாம் படுத்திருக்குங்கால், கண்ணகி ஆங்குவர அவள்முன் மதுரைமாதெய்வம் வந்து தோன்றி, அவளுக்கு நேர்ந்த துன்பத்தின் காரணமான முன்வினைச்செய்தியைக் கூறியபடியையும் தாம் நேரிலறிந்தவாறு அவ்வரசனுக்கு விரித்துரைத்தனர்.[2] இவர் தெரிவித்த செய்திகளைக் கொண்டே இளங்கோவடிகள் கண்ணகியின்சரித்திரத்தைச் சிலப்பதிகாரம் என்னும் சிறந்த காப்பியமாகப் பாடுவாராயினர். செங்குட்டுவனது ஐம்பதாம்வயதில் பத்தினிப் பிரதிஷ்டை நிகழ்ந்ததென்பதும், அக்காலத்தேதான் கோவலன்மகள் மணிமேகலை துறவுபூண்டனள் என்பதும் மேலே அறியப்பட்டன. துறவு பூண்டபோது மணிமேகலை பக்குவதசை அடைந்திருந்தவள்

1. யாம்எழுதிய 'மணிமேகலையும் புத்தஜாதகமும்' என்ற கட்டுரை பார்க்க (கலைமகள், தொகுதி-1, பக். 159).

2. சிலப். பதிகம், 40—9.

என்பது சாத்தனார்வாக்கால் தெளியப்படுதலின், 12-பிராயத்துக்கு மேற்பட்டவளாகவே அவளைக் கொள்ளலாகும். சாத்தனார் கூறியபடி, மணிமேகலையின் வாழ்க்கைச்சரிதம் முழுதும் நிகழ்வதற்குக் குறைந்தது ஐந்தாறுவருஷமாவது சென்றிருத்தல் கூடியதே. ஆயின், அம்மணிமேகலை முடிவாகக் காஞ்சிசென்று அறவணவடிகளால் உபதேசிக்கப்பெற்று அங்கே 'பவத்திற மறுகென...நோற்ற' காலத்துஅவள் 17, 18-பிராயமுடைய மங்கைப்பருவத்தளாய் இருந்தனள்எனல் வேண்டும். எனவே, அதுவரையுள்ள அவள்சரிதமெல்லாம் அறிந்து சாத்தனார் தம் நூலைப் பாடிமுடித்தது, பத்தினிப் பிரதிஷ்டை நடந்து பலவாண்டுகட்குப் பின்பே என்பதுபெறப்படுகின்றது. இம் மணிமேகலைநூல் முடிவுற்றபின்னரே இளங்கோவடிகள் தம்நூலை இயற்றலாயினர் என்க. இதனை "மணிமேகலைமே லுரைப்பொருண்முற்றிய சிலப்பதிகாரம்" என்ற அவ்வடிகள் வாக்கே தெளிவுறுத்தவல்லது. கண்ணகி மணிமேகலை இருவர் சரிதைகளையும் இளங்கோவடிகளே பாடக் கருதினரென்றும், சாத்தனார் மணிமேகலைதுறவைப் பாடி முடித்துவிட்டமைதெரிந்து சிலப்பதிகாரத்தைமட்டும் அவரியற்றினர் என்றும் அடியார்க்குநல்லார் தம் பதிக உரையிற் குறிப்பிடுதலுங் காண்க. எனவே, சாத்தனார் தம் நூலை முடித்த சில்லாண்டுகட்குப் பின்பே சிலப்பதிகாரம் முடிவுற்றதென்பது தெளிவாம். சாத்தனார் தாம் பாடிய மணிமேகலையை இளங்கோவடிகளைத் தலைமையாகக்கொண்ட அவைக்கண்ணே அரங்கேற்றினரென்பதும், அடிகளும் தம் சிலப்பதிகாரத்தைச் சாத்தனார்முன்பு அரங்கேற்றினர் என்பதும் அவ்விருவரும்பாடிய பதிகங்களால் வெளியாகின்றன. இவற்றால்[1] இளங்கோவடிகளது நட்புரிமையை—கோவலன் கொலைநடந்த காலமுதல், மணிமேகலை காஞ்சியில் நோற்

1. மணிமே. 26, 77—90.

றிருந்த பின்பும்—உடையராயிருந்தவர் சாத்தனார் என்பது தெரியலாம். இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் பேருதவி யாயிருந்து தம் அழகிய காவியங்களை அமைத்து முடித்தவர் என்பது, அவற்றிற் கண்ட சொற்பொருள்வழக்குக்கள் தொடர்கள் சரித்திரமுதலியவற்றின் ஒற்றுமைகளால் தெளியக்கூடியது. மணிமேகலை, முடிவாகக் கச்சிபுகு முன் வஞ்சிமாநகர் வந்தபோது. ஆரியவரசரைவென்று பத்தினிப் பிரதிஷ்டை செய்த சேரன்-செங்குட்டுவன் ஆங்கு ஆட்சிபுரிந்துவந்த சிறப்பைச் சாத்தனார் அழகாகக் கூறுவர். இதனால் சேரவரசர்தொடர்பு அப்புலவர்க்கு நெடுக இருந்துவந்தமை வெளியாகும்.

இவ்வாறு செங்குட்டுவனாலும் அவனிளவலாலும் சாத்தனார் அபிமானம் பாராட்டப்பெற்றனராயினும், பாண்டிநாட்டை வெற்றிவேற்செழியன் ஆளத்தொடங்கியகாலத்து, அவனாலும் இவர் கௌரவிக்கப்பெற்றவரென்றே தோற்றுகின்றார். தன் தமையனான ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் கோவலனைக் கொலைசெய்வித்ததுகாரணமாக இறந்ததும், இவ்வெற்றிவேற்செழியன், நன்மாறன்என்ற வேறுபெயருடன் அவனரசுரிமையைஅடைந்தனன். இது, சாத்தனார் இந்நன்மாறனைப் பாடிய பாடலொன்று புறநானூற்றில் (59) காணப்படுதலினின்று கருதக்கூடியதாம். இப்பாண்டியன் 'சித்திரமாடம்' என்றவிடத்தில் இறந்தவனாதலின் 'சித்திர மாடத்துத் துஞ்சிய' என்னும் அடையுடன் பிற்காலத்தில் வழங்கப்பட்டான். நக்கீரனார்முதலியோராற் பாடப்பெற்றவனாகிய அந்நூலிற் காணப்படும் 'இலவந்திகைபள்ளித் துஞ்சிய' நன்மாறனின் இவன் வேறானவன். நற்றிணை அகம்புறமுதலிய தொகைநூல்களிலே இச்சாத்தனாராற் பாடப்பட்டனவாகக் காணப்படுஞ் செய்யுட்கள் சில உண்டு. இச்செய்யுட்களின்வாக்கும் மணிமேகலைவாக்கும் வேறு

பட்டன என்று கருதி, அம்மணிமேகலையும் அதனுடன் தொடர்புடைய சிலப்பதிகாரமும் காலத்தாற் பிற்பட்டனவாகக் கருதுவாரும் உண்டு. ஆயின், அக்காவியங்களினும் தொகைநூல்களினும் நன்குபழகிய அறிஞர்க்குச் சொற்பொருண் மரபுகளாலும், இலக்கணவமைதிகளாலும் பிறவழக்கங்களாலும் அவ்விரண்டும் சிறிதும் வேறுபட்டன வல்ல என்பதும், ஆயினும் காப்பியச் செய்யுளமைதிக்கும், அகத்திணை புறத்திணைபற்றிய பாட்டமைதிக்கும் எளிதும் அரிதுமான நடைவேறுபாட்டைப் பண்டைச்சான்றோர் கையாண்டுவந்தனர் என்பதும் விளங்கத்தடையில்லை. சங்க காவியங்கள் வடசொற்களையும் வடமொழிவழக்குக்களையும் பெரிதும் வழங்குவனவாயிருத்தற்கு, அக்காவியச் செய்திகள் நகரத்தொடர்புடையனவாகவும், தொகைநூல்கள் அங்ஙனம் வழங்காமைக்கு அவை நாட்டுத்தொடர்புடையனவாகவும் பெரும்பான்மை உள்ளதே காரணமாகும். ஆகவே, அரசநீதி சமயதன்மம் வருணச்சிரமநிலை வாணிகவியல்பு முதலியன கூறப்புக்க சிலப்பதிகார மணிமேகலைகளின் போக்கு நாகரிகமுறைக் கேற்பவும், அகம் புறமுதலிய திணைப்பாடல்களின்போக்கு தமிழ்மரபுக்கும் நாட்டுமுறைக்குமேற்பவுமமைந்து, சொற்பொருண்மரபுமுதலியவற்றால் ஒத்தவாயினும், நடையமைதியில் அவை சிறுவேறுபாடு கொள்ளலாயின என்பதே பொருத்தமென்க. இது நிற்க.

செங்கற்பட்டுஜில்லா திருக்கச்சூர்க் கச்சபேசுவரர் ஆலயத்தின் வெளிப்பிராகாரத்துத் தெற்குத்திருமதிலிற் கண்ட சாஸனமொன்றில்—பொய்யாமொழிமங்கலம் என்ற ஊர் பெருநம்பி என்ற முத்தமிழாசிரியர்க்கு உரியதென்றும், இவர் பெருந்தமிழ்ப்புலவர் என்றும், சாத்தனுர் வமிசத்தில் உதித்தவர் என்றும், கடிகையார் என்ற மரபினரைச் சார்ந்த

வர் என்றும் கூறப்படுகின்றன.[1] இச்செய்திகளுள், இப்புல வர்க்கு முன்னோராகக் கூறப்பட்ட சாத்தனார், மணிமேகலை யாசிரியரோ என்றுகருதற்கு இடமுண்டு; அடைமொழி யின்றிச் சாத்தனார் என்று தனிப்படக் கூறத்தக்க பழம்புல வர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரே யாதல் காண்க. இனிச் சிலர், மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரையும், சித் தலைச் சாத்தனாரையும் வேறாகக் கருதுவர். அகநானூறு, (229, 320), புறநானூறு (59) முதலிய தொகை நூல்க ளிலே மதுரைக் கூலவாணிகன் சித்தலைச் சாத்தனார் என இப்புலவர் தெளிவாக விசேடிக்கப்படுதலால், சாத்தனார் இருவராகக் கொள்வார்கூற்று வலியுடையதன்று என்க.

## 10-ம் அதிகாரம்

## செங்குட்டுவன் அரசியல்

நம் சேரர்பெருமானது அரசாங்கமுறைகளை இனி நோக்குவோம். பொதுவாகச் சொல்லுமிடத்து, செங்குட்டு வன் காலத்தனவாகிய சங்கநூல்களிலே அரசியன்முறைக ளாக அமைந்தவையாவும் நம் வேந்தனுக்கும் உரியவை யென்றே சொல்லலாம். அவ்வாறு கூறப்பட்ட அரசியல் களை விடாது இங்கு விவரிப்பதாயின் இவ்வதிகாரம் அளவு கடந்துவிடும். அதனால், வேற்றுநூல்களுட் புகாமல், செங் குட்டுவன் சம்பந்தமான செய்யுட்களிலிருந்து தெரியவரும் விசேடச்செய்திகளைமட்டும் இங்கு விளக்குவோம்.

நம் சேரர்பெருந்தகை, சங்ககாலத்துத் தமிழ் வேந்த ருள்ளே சிறந்து விளங்கியவன். இவன் தந்தை நெடுஞ்

1. Ep. Rep. No. 301 of 1909.

சேரலாதனும், இவன் முன்னோரும் வடவாரியருடனும் அயலரசருடனும் அடுத்தடுத்துப் போர்புரிந்து வந்தவ ரென்று தெரிதலால், அவரது பகைமையெல்லாம் இவனுக்கும் இருந்தன என்றே தெரிகின்றது. அதனால், கடல்வழி யாகவும் தரைவழியாகவும் பகைவர் தன்னெல்லையினுட்புகு வதைத் தடுப்பதற்கேற்ற கப்பற்படையும் தரைப்படையும் இவன் உடையனாகவேயிருந்தான்.

"சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவா யோட்டிய ஞான்றைப்
பிறர்கலஞ் செல்கலா தனையேம்" (புறநா. 126.)

என, மரக்கலப்படையின் மாட்சியால் கடற்றலைமையை அக்காலத்தே செங்குட்டுவன் வகித்திருந்த சிறப்பை இவன் பெயர்கூறாது வியந்தனர், மாறோகத்து நப்பசலையார் என்ற புலவர். கடற்படையைக் கொண்டு இவன் ஒருகாலத்துச் செய்த வீரச்செயலையும், அதுபற்றி இவன் "கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்" என வழங்கப்பட்டதனையும் இவனது போர்ச்செயல்கள் கூறியவிடத்தே விளக்கினோம். இவ்வேந்தனது தரைப்படையும் அங்ஙனமே அளவாலும் ஆற்றலாலும் மேம்பட்டிருந்தது. பத்தினிக்குப் படிமச்சிலை எடுத்தற்கும், ஆரியவரசரை வெற்றிகோடற்குமாக இவன் வடக்கே சென்றுவந்த முப்பத்திரண்டுமாதம்வரை இவ னாட்டிற் குழப்பமொன்றும் இல்லாதிருந்ததோடு, குடிகளெல்லாம் இவனாட்சியில் மகிழ்ச்சிமிக்கவர்களாய்த் தம் அரசன்வெற்றியைத் தமக்குரிய பெருமையாகவே கொண்டு மகிழ்ந்தனர் என்றுந் தெரிகிறது.[1]

செங்குட்டுவனது அரசியலில், முற்காலமுறைப்படி அமைச்சர், புரோகிதர், சேனைபதியர், தூதுவர், சாரணர் என்ற ஐவருமே சிறந்திருந்தவர்கள். இவர்களை அரசர்க்

1. இந்நூல், 72-3—ம் பக்கம்.

குரிய ஐம்பெருங்குழு என்பர் முன்னோர்.[1] இவர்களன்றிக் கருமவினைஞர், கணக்கியல்வினைஞர், தருமவினைஞர், தந்திரவினைஞர், பெருங்கணி என்ற அரசியல்நிர்வகிக்குந் தலைவரும் இருந்தனர்.[2] கருமவினைஞர் என்போர் தேசத்தின் ஆட்சியை நடத்துவோரென்றும், கணக்கியல்வினைஞர் என்போர் தேசத்தின் அரசிறைவருவாய்களைக் கவனிக்கும் அதிகாரிகளென்றும், தருமவினைஞர் நாட்டினறங்களைப் பாதுகாப்போரென்றும், தந்திரவினைஞர் படைகளின் தலைமை வகிப்போர் என்றும், பெருங்கணி அரசனது காரியங்கட்குரிய காலங்களையும் நிமித்தங்களையும் கணித்துரைப்போன் என்றும் அறியத்தக்கன. இவரெல்லாம், அரசனது மந்திராலோசனைக்கு உரியவராவர். செங்குட்டுவனது தரைப்படைக்குத் தலைமைவகித்த வீரன் வில்லவன்கோதை என்பான். இவனே செங்குட்டுவனது வடயாத்திரையில் அவனுடைய சேனைகளை நடத்திச்சென்று ஆரியவரசருடன் நிகழ்ந்த பெரும்போரில் வெற்றிபெற்றவன்; "வில்லவன் கோதையோடு வென்றுவினை முடித்த - பல்வேற் றானைப் படை" என்றார், இளங்கோவடிகளும்.[3] இவனைப்போலவே தேசவருவாயின் தலைமையைவகித்த அமைச்சன், அழும்பில் வேள்[4] என்பவன். இவன் அழும்பில் எனப்படும் வளம் படைத்த நாட்டின்[5] தலைவன்; இவனுக்கு 'வானவிறல்வேள்'

---

1. மேற்படி 57-ம் பக்கக் கீழ்க்குறிப்பு.
2. சிலப். 26, 40—1.
3. சிலப். 26, 251—2.
4. சிலப். 28, 204—5.
5. 'அழும்பி லன்ன அறாஅ யாணர்' (அகநா: 44). 'அழும்பிலன்ன நாடிழந்தனரும்' (மதுரைக்காஞ்சி, 344—5) என இந்நாட்டின்வளம் முன்னூல்களிற் சிறப்பிக்கப்படுதல் காண்க. 'அழும்பில் - பாண்டிநாட்டின்கண்ணதோர் ஊர்' என்பர் அகநானூற்று

என்ற பெயரும் வழங்கியது.[1] இவ்வமைச்சன் செங்குட்டுவற்குச் சமயோசிதமாகச் சூழ்ச்சியுரைக்க வல்லனாயிருந்தவன்.[2] இனி, நம் வேந்தனது தூதுவருள்ளே தலைமை வகித்தவன் சஞ்சயன் என்றும், இவனுக்கு அடுத்தபடியிலிருந்தவன் நீலனென்றும் தெரிகின்றன.[3] இவர்களின் கீழடங்கிய தூதுவரெல்லாம் தம்மரசனிடமிருந்து வேற்றரசரிடம் அரசியற்செய்திகளை அறிவித்து வருதற்குரியர்; அன்றியும் யுத்தத்திற்கு அரசனுடன்சென்று அதற்கு வேண்டிய காரியங்களை நிர்வகிக்கவும் வல்லவர். இன்னோர் அரசன்திருமுன்பு அடுத்தடுத்துச் சென்றுவருவோராதலால், சட்டையும் தலைப்பாகையுந் தவறாது தரித்திருப்பர். இவரைக் கஞ்சுகமுதல்வர் எனவும் வழங்குவர்; "சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற - கஞ்சுக முதல்வ ரீரைஞ் ஞூற்றுவர்" எனத் தம் தமையனுக்கிருந்த தூதுவரின் தொகையளவை இளங்கோவடிகள் குறித்தல்காண்க.[4] இனிச் சாரணரென்போர் ஒற்றர்களாவர். இன்னோர், இக்காலத்துப்போலவே, முற்காலத்தும் அரசர்க்குக் கண்போன்று விளங்கினவர். செங்குட்டுவனுடைய ஒற்றர்கள் அந்நியநாடெங்

---

அரும்பதவுரைகாரர். இவ்வூரும் நாடும் அம்புகோயில், அம்புநாடு என்ற பெயர்களுடன் புதுக்கோட்டைச் சீமையில் இப்போதும் வழங்குவன. அம்புகோயிலிலுள்ள சிவாலயத்துக் கண்ட சோழ சாஸனங்கள் பலவற்றிலும் அவ்வூர் அழும்பில் என்றே கூறப்படுதல் அறியத்தக்கது (Ep. Rep. 223—233 of 1914).

1. "வான் விறல்வேள் அழும்பில்" என்பது மதுரைக்காஞ்சி (344—5). சேரன் படைத்தலைவனாகிய நன்னனுக்கும் இப்பெயரே வழங்கப்பட்டுள்ளது. இதனால், சேரரது அரசியலில் தலைமை வகித்த ஒருசாரார்க்கு இப்பெயர் வழங்கிவந்ததாகக் கருதல் தகும். (யாம் எழுதிய வேளிர்வரலாறு, 66 - ம் பக்கம் பார்க்க). 2. சிலப். 25, 173—7. 3. மேற்படி. 26. 137; மேற்படி. 28. 109.

4. சிலப். 26, 137—8.

கும் சஞ்சரித்து வந்தனரென்றும், அவ்வாறே வேற்றரசரொற்றர்களும் பெருவீரனான நம்சேரனது நாட்செய்திகளைத் தெரிதற்பொருட்டு வஞ்சிமாநகரில் மறைந்துவாழ்ந்து வந்தனரென்றும் சொல்லப்பட்டுள்ளன.[1] மேற்கூறியவர்களன்றிக் கரணத்தியலவர் (கணக்கர்), கருமவிதிகள் (ஆணை நிறைவேற்றும் அதிகாரிகள்), கனகச்சுற்றம் (பண்டாரம் காப்போர்), கடைகாப்பாளர் (அரண்மனை காவலர்), நகரமாந்தர் (Citizens), படைத்தலைவர், யானை வீரர், குதிரைவீரர் எனப்பட்ட எண்பேராயத்தாரும் செங்குட்டுவன் அரசியலில் தலைமைபூண்டிருந்தனர்.[2]

செங்குட்டுவனது அரசியல்முத்திரையானது வில், கயல், புலி என்னும் மூன்றும் அமைந்ததோர் இலாஞ்சனையாகும். இதனைத் "தென்றமிழ் நாட்டுச் செழுவிற் கயற் புலி, மண்டலை யேற்றவரைக" என்பதனால் அறிக.[3] சோழ பாண்டியர் அடையாளங்களாகிய புலியையும் மீனையும் தனக்குரிய வில்லொடுசேர்த்து நம்சேரன் இலச்சினையாகக் கொண்டிருந்ததை நோக்குமிடத்து, அக்காலத்துத் தமிழ் வேந்தருள் இவனே தலைமை வகித்தவனென்பது புலப்படுகின்றது. இவ்வாறே, இவ்வேந்தன் சோழபாண்டியர்க்கும் மேம்பட்டவன் என இளங்கோவடிகள் வேறிடங்களினும் கூறுவர்.[4]

செங்குட்டுவனது தலைமையதிகாரிகளும், அந்தணர்புலவர் குடிகளும் அவனிடம்வந்து ஒன்று கூறும்போது, பேச்சின் தொடக்கத்தும் முடிவிலும் "அரசே! வாழ்க" என்று அவனை வாழ்த்துதல் பழைய முறையாக இருந்ததென்பது இளங்கோவடிகள் வாக்கால் நெடுக உணரலாகும்.

---

1. சிலப். 25. 173—6. 2. மேற்படி, 26, 38. 3. மேற்படி 25, 171—2. 4. மேற்படி. 25, 87—90, 26, 168—71.

செங்குட்டுவனுக்குத் திருமுகமெழுதுவோர் 'கண்ணெழுத்தாளர்' எனப்படுவர்; 'கண்ணெழுத்தாளர் 'காவல் வேந்தன், மண்ணுடை முடங்கலம் மன்னவர்க் களித்து'' எனக் காண்க.[1] கண்ணெழுத்து என்பது சங்கநாளில் வழங்கிய ஒருவகைத் தமிழெழுத்தின் பழம்பெயராகத் தோற்றுகின்றது. செங்குட்டுவனது வடயாத்திரையில் பண்டங்கள் ஏற்றிச்சென்ற பண்டிகள் இன்னின்ன சரக்குடையவை என்றெழுதப்பட்டிருந்தன என்பதை அடிகள் கூறுமிடத்து, "இருபதினாயிரங் - கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடமும்"[2] என்றும், புகார்த்துறைமுகப் பண்டசாலையிற் புறநாட்டு வியாபாரிகளின்பெயர்கள் மூடைகளிலே கண்ணெழுத்தில் அமைந்திருந்தன என்றும் கூறுவர். இவற்றாலும் கண்ணெழுத்து, பண்டைத்தமிழெழுத்தின் பெயரேயாதல் காணலாம். இங்ஙனமாயின், சாஸனபரிசோதகரால் வட்டெழுத்து எனப்படும் பழைய தமிழெழுத்தைச் செங்குட்டுவன்காலத்துக் கண்ணெழுத்தாகக்கொள்ளல் பொருந்தும்.[3]

---

1. ஷை, 26, 70—1.

2. 26. 136.—"வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த, கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பலபொதி" (சிலப். 5, 112).

3. கண்ணெழுத்து என்பது சித்திரவெழுத்து என்ற பொருளும் பயக்கும். சித்திரிக்குங் கோலைக் 'கண்ணெழுத்தங் கோல்' என்பர். இவ்வாறாயின், பூர்வ எகிப்தியர் வழங்கியது போன்ற சித்திரக்குறிகள் சங்கநாளில் வழங்கியன எனல் வேண்டும். இச்சித்திரக்குறிகளின் வழக்கு, 11-ம் நூற்றாண்டினும் சிறுகவிருந்ததென்பது யாப்பருங்கலவிருத்தியால் அறியப்படுகின்றது. 'வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த கண்ணெழுத்து' 'கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பலபொதி' எனப்படுதலால், இவ்வெழுத்துக்கள் எகிப்துமுதலிய இடங்களினின்று வந்த வியாபாரிகளாற் கையாளப்பட்டுத் தமிழகத்தும் வழங்கியனபோலும் (செந்தமிழ்ப் பத்தி

பழந்தமிழெழுத்தாய்ச் சாஸனங்களில்மட்டும் காணப்படும் வட்டெழுத்து நம் நாட்டில் வழக்குவீழ்ந்து பல நூற்றாண்டுகளாயினும், மலைநாட்டுள்ள சோனகர்க்குள் கோலெழுத்து என்று வழங்கப்பட்டு இன்றும் அது வழங்குகின்றதென்பர்.[1] கண்போன்றிருத்தலாற் கண்ணெழுத்து என்றும், வட்டமாகவிருந்தலின் வட்டெழுத்து என்றும், சித்திரித்தெழுதப்படுதலாற் கோலெழுத்து என்றும் ஒன்றே பல பெயர் பெற்றதென்க. செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்றுப் பாறையில் வெட்டப்பட்ட சாஸனமொன்று, சைனமுனிவரொருவர் ஐம்பத்தேழுநாள் அநசநவிரதம் (=உண்ணு நோன்பு) பூண்டு உயிர்துறந்தசெய்தியைக் குறிப்பது. அத்தமிழ்ச்சாஸனம், பிற்காலத்து வட்டெழுத்துமுறையினின்றும் சிறிது மாறிப் பழைமைகுறிப்பதென்றும் அதன் தமிழெழுத்துக்கள் ஏறக்குறையச் செங்குட்டுவன் காலத்துக்கு உரியவை என்றும் அறியப்படுகின்றன.[2] இதுநிற்க.

செங்குட்டுவன் அத்தாணிமண்டபத்தை அடைந்து அமைச்சர் முதலியவருடன் மந்திராலோசனை புரியும்போது, அவனுடைய கோப்பெருந்தேவியும் (இளங்கோவேண்மாள்) உடன்வீற்றிருந்து தன்னபிப்பிராயத்தைத் தடையின்றி வெளியிடுதற்கு உரியவளாயிருந்தனள்.[3] அரசன் தன் பெருந்தேவியுடன் அத்தாணிக்குவருமிடையிலே அரண்மனைபி

---


ரிகை, தொ-5, பகுதி 5-ல் யாம் எழுதிய 'பழைய தமிழெழுத்துக்கள்' என்ற கட்டுரை பார்க்க.)

1. Dr. Gundert's Malayalam Grammar (Art.)

2. செந்தமிழ், தொகுதி-5, பக்-410—1-ல் ஸ்ரீ: து. அ. கோபிநாதராயர் அவர்கள் எழுதிய கட்டுரை.

3. சிலப். 25. 107—114; 28, 65—6.

திருநாதர்குன்றுச் சாஸனம்



1. ஐ ம் ப த் தே ழ ன—
2. ச ன ந் நோ ற் ற
3. ச ந் தி ர ந ந் தி ஆ—
4. சி ரி க ர் நி சீ தி கை.

ஹுள்ள அரங்குகளிற் கூத்தர்கள்நிகழ்த்தும் அழகிய ஆட்டங் களைக்கண்டு மகிழ்வது வழக்கம். செங்குட்டுவனது ஆஸ் தானக்கூத்தரிற் சாக்கையர் என்போர் சிறந்தவராகக் காணப் படுகின்றனர்.[1] இச்சாக்கையர் என்ற கூத்தவகுப்பார் பிற்கா லத்தும் சோழர்காலங்களில் விளங்கியதோடு[2] மலை நாடுகளில் தம் பழைய தொழிலையே இன்றும் கைக்கொண்டு நடத்தி வருதலும் அறியத்தக்கது. அரசனது ஆஸ்தானத்தலைமைக் கூத்தன் 'கூத்துள்படுவோன்' எனப்படுவன் (சிலப். 26, 125).

நம் சேரர்பெருமானுக்கு அடங்கியிருந்த அரசர்கள் தத்தம் திறைகளைக்கொண்டுவந்து தலைநகர்ப் பெரியபண்டா ரத்திற் சேர்க்குங்காலம் விடியற்காலையாகும். அங்ஙனம் திறைகொணரும்படி அரண்மனையுள் முரசம் அறையப்பட்டு வந்ததென்று தெரிகின்றது; "ஞாலங் காவலர் நாட்டிறை பயிருங்,[3] காலை முரசங் கடைமுகத் தெழுதலும்" எனக் காண்க.

அரசனது பிறந்த நாளானது நகரத்தாரால் ஆண்டு தோறும் ஒரு புண்ணியதினமாகக் கருதிக் கொண்டாடப் படும்.[4] இப்பிறந்தநாள் பெருநாள்[5] எனவும் பெருமங்கலம் எனவும் வழங்கும். இக்காலத்தே, அரசன் உயிர்களிடங் காட்டுங் கருணைக்கறிகுறியாக மங்கலவண்ணமாகிய வெள் ளணி அணிந்து சிறைப்பட்டவரையெல்லாம் விடுவிப்பதும், இரவலர்க்கும் புலவர்க்கும் வேண்டியவாறு அளிப்பதும்,

---

1. சிலப். 28. 65-79. 2. S. I. I. Vol. ii, b. 278; iii, 379; v, 302;—இச்சாக்கையர்வரலாறு மலையாளவழக்குடன் ஒற்றுமைப்படுதலை முதன்முதற்கண்டு 'மூன்று தமிழ்க் குடிகள்' என்ற கட்டுரையுள் யாம் விளக்கியுள்ளேம் (செந்தமிழ், தொகுதி—7.)
3: சிலப். 26. 52—3. 4. மணிமே. 28. 9. 5. சிலப். 27. 44.

தன் தானைவீரர்களைத் தக்கபடி கௌரவிப்பதும் மரபாகும். இதனையே தொல்காப்பியனாரும் "சிறந்த நாளணி செற்ற நீக்கிப்—பிறந்த நாள்வயிற் பெருமங்கலமும்" என்று கூறிச் சிறப்பிப்பர்.[1] இக்காலத்தே, நகரத்தாரெல்லாம் உற்சாக மிக்கவர்களாய்த் துருத்தி முதலியவற்றால் நீர்கொண்டு இறைத்து விளையாடி மகிழ்வர். செங்குட்டுவன் செயசீல னாய் வடநாட்டினின்று திரும்பி வஞ்சிமாநகர் புக்க மறுநா ளிலும், மணிமேகலை மணிபல்லவத்தினின்று திரும்பி வஞ்சி மாநகர் புகுந்தபோதும், இச்சேரவேந்தனது பிறந்தநாள் கொண்டாடப்பட்டதென்பது தெரிகின்றது.[2] சேரவேந்த ரது பெருநாள் தமிழகமுழுதும் புகழத்தக்க சிறப்புடன் நடைபெற்றுவந்ததென்றும், அக்காலத்துப் பெரியோரும் பல சமயவாதியரும் அரசவையிற் குழுமித் தத்தம் கல்வித் திறமையைக் காட்டும் ஆரவாரம் பெருகியிருந்ததென்றும் மாங்குடிமருதனார் மதுரைக்காஞ்சியிற் கூறுதல் (524 - 6) அறியத்தக்கது. இக்காலத்தும் திருவனந்தபுர அரசர்க்குள் சென்மதினக் கொண்டாட்டம் சிறப்பாகவே நடைபெறுத லோடு, அவ்வரசர் 'மூலந்திருநாள், விசாகந்திருநாள்' எனத் தங்கள் பிறந்தநட்சத்திரங்களையே பெயர்களாகக்கொண்டு விளங்குதலும் ஒப்பிடற்பாலது.

விசேடநாட்களிலே, அரசன் ஒருதட்டிற் பொன்னும் ஒருதட்டில் தானுமாகத் துலையிலேறித் தன்னை நிறுத்து, அந் நிறுத்தபொன்னை மறையவர்க்குத் தானஞ்செய்தல் மர பாகும். செங்குட்டுவன் கங்கைக்கரையிலே பத்தினிப்படி மத்தை நீராட்டித் தூய்மைசெய்தபின்னர், ஆங்குவந்த மாட லன் என்னும் அந்தணனுக்கு மேற்கூறியபடி தானஞ் செய் தான் என்று இளங்கோவடிகள் கூறுவர்.[3] இவ்வாறு "துலா

1. தொல். பொருளதி. 91. 2. சிலப். 27, 227-9; மணி மே. 28, 9. 3. சிலப். 27, 175—6.

யாரதானம்'' செய்வது சேரர்கிளேயினரான மலேயாள அரசர்க்குள் இன்றும் நடைபெற்றுவரும் வழக்கமென்பது யாவரும் நன்கறிந்தது.

அரசன் மலேப்பிரதேசங்கட்குச் செல்லும்போது மலேவாணராகிய குன்றக்குறவர் தம் நாட்டிற் கிடைக்கக்கூடிய அரும்பொருள்களேச்சேகரித்து அவற்றைத் தலேமேற்சுமந்து கொண்டு கூட்டமாகவந்து அரசனே அடிபணிந்து அவன் திருமுன்பு காணிக்கைவைப்பர்.[1] இம்மரியாதை திருவனந்தபுரம் கொச்சி முதலிய மலேநாட்டரசர்களுக்கு இன்றும் நடந்துவருவதொன்ருகும். அப்போது மலேநாட்டுக் கூத்தர்கள் வந்து தங்களாட்டத்தால் அரசனே மகிழ்விப்பதும் அவர்கட்கெல்லாம் ஆஸ்தானத் தலேமைக்கூத்தனுன கூத்துள் படுவோன் கூறியமுறையே அரசன் பரிசளிப்பதும் பண்டை வழக்கங்களாம்.[2]

அரசன் யுத்தயாத்திரையாகப் புறப்படுமுன்னர்த் தன் படைத்தலேவர்க்கும் சேனேகட்கும் பெருவிருந்து செய்து அவர்களே மகிழ்விப்பதும் மரபாகும்; இதனேப் 'பெருஞ்சோற்றுநிலே' என்பர் தொல்காப்பியர்.[3] ''வேந்தன் போர் தலேக்கொண்ட பிற்றைஞான்று போர்குறித்த படையாளருந் தானும் உடனுண்பான்போலவந்து ஒரு முகமன்செய்தற்குத்தானே பிண்டித்துவைத்த உண்டியைக் கொடுத்தல்' என்பர் நச்சினுர்க்கினியர்.

அரசன் யுத்தத்திற்காக யாத்திரைசெய்ய நேரும்போது, குறித்த நன்முகூர்த்தத்தில் தான் பிரயாணஞ் செய்ய இயலாதாயின், தன்வெற்றிவாளேயும் கொற்றக்குடையையும் யானேமேலேற்றி மிக்க ஆடம்பரத்துடன் கோட்டைக்கு முதலில் 'பரஸ்தானம்' செய்துவைப்பது தமிழ்

1. சிலப். 25, 35—56. 2. சிலப். 26, 125—6.
3. தொல். பொருளதி. 63.

வேந்தரது பண்டை மரபாகும்.[1] இதனை நாட்கோள் என்பர் தொல்காப்பியனார்.[2] இதன் பின்பே, அலங்கரிக்கப்பட்ட அரசுவாவின்மேல் அரசன் ஆரோகணஞ்செய்து பிரயாணமாவன். இங்ஙனம் புறப்படும்போது, சிவபிரான்திருமால் முதலிய தெய்வங்களின் பிரசாதங்களை வணங்கிப் பெற்றுக் கொண்டும், நான்மறையோர் வளர்க்கும் யாகாக்கினிகளை நமஸ்கரித்தும் செல்வது வழக்கமாகும்.[3]

இங்ஙனமாக அரசன் யாத்திரைசெல்லுங் காட்சி மிக்க ஆடம்பரமும் அழகும் வாய்ந்ததாம். வழிநெடுகவும் நாடகக் கணிகையரும், சூதர் மாகதர் வேதாளிகரும், யானை குதிரை காலாள்வீரர்களும் தம்மரசனை மனமாரவாழ்த்திப் பெரிதும் ஆனந்திப்பர். இவ்வாறு செல்லுகின்ற அரசனுடன், நால்வகைச் சேனைகள்மட்டுமன்றி, நாடகமகளிரும், நகைவிளைத்து மகிழச்செய்யும் வேழம்பர்களும், வாத்தியம் வாசிப்போரும் உடன்செல்வதுண்டு. செங்குட்டுவனது வடயாத்திரையில் அளவற்ற காலாட்படையுடன் அடியிற் குறித்த சேனைகளும் பரிவாரங்களுஞ் சென்றன என்று இளங்கோவடிகள் கூறுவர்.[4]

| | | | |
|---|---|---|---|
| நாடகமகளிர் | 102 | யானை | 500 |
| குயிலுவர் (வாத்தியகாரர்) | 208 | குதிரை | 10,000 |
| | | பண்டங்களேற்றிய வண்டிகள் | 20,000 |
| நகைவேழம்பர் | 100 | | |
| தேர் | 100 | சட்டையிட்ட அதிகாரிகள் | 1000 |

இன்னின்ன சரக்குடையது என்றெழுதப்பட்ட பண்டப்பொதிகளேற்றிய சகடங்கள் இருபதினாயிரமும், அவற்

1. சிலப். 26, 33—45. 2. தொல். பொருளதி. 68.
3. இந்நூல். பக். 60. 4. சிலப். 26, 128—140.

றைக் கண்காணிக்கும் அதிகாரிகள்தொகை ஆயிரமுமாயின், நம் வேந்தனுடன்சென்ற காலாட்படையினளவு கண்க்கிடவும் கூடியதோ? இச்சேனைப்பெருக்கை வரையறுக்கவியலாமல், "தண்டத் தலைவருந் தலைத்தார்ச் சேனையும், வெண்டலைப் புணரியின் விளிம்புசூழ் போத, மலைமுதுகு நெளிய நிலைநா டதர்பட, உலக மன்னவன்" சென்றான் என்றார் இளங்கோவடிகளும்.[1] யாத்திரையிற் சேனைக்குத் தளர்ச்சியுண்டாகாது உள்ளக்கிளர்ச்சியுண்டாமாறு நாடகமகளிரும், நகைவேழம்பரும், குயிலுவரும் தங்கள் ஆடல் பாடல் அழகுகளாலும், விநோதப்பேச்சாலும், வாத்திய இசைகளாலும் மகிழ்ச்சி விளைத்தற்கு உடன்செல்வது பண்டைமரபென்பது இதனால் விளக்கமாகும்.

செங்குட்டுவன்காலத்து நடந்த போர்முறையானது தொல்காப்பியமுதலிய முன்னூல்களிற் கண்ட புறத்துறைகட்கும், பழைய தமிழ்வழக்கிற்கும் பெரிதும் ஒத்ததாகவே புலப்படுகின்றது. எனவே, செங்குட்டுவன் காலம்வரை அப்பழைய தமிழ்மரபுகள் சிறிதும் சிதைந்தனவல்ல வென்பது பெறப்படும். அம்முறைகளையெல்லாம் இங்கு விவரிப்பதாயிற் பெருகும்; இளங்கோவடிகளது வஞ்சிக் காண்டத்தைக்கொண்டு அறியற்பாலன.

போரில் வெற்றியடைந்தபின்னர், விழுப்புண்பட்டு இறவாதிருந்த வீரர்களையும், வீரசுவர்க்கம் பெற்ற சூரர்களுடைய மைந்தர்களையும் அரசன் தன் திருமுன்பு அழைப்பித்து அவர்களையெல்லாம் பெரிதும் அபிமானித்து ஊக்குதல் பழைய மரபாயிருந்தது. நம் வேந்தர்பெருந்தகை, கங்கைக்கரையில் நட்பரசரான கன்னரால் அமைக்கப்பட்ட

1. சிலப். 26, 80—83.

பாடியிற் பேரோலக்கமாக வீற்றிருந்து, மேற்குறித்த வீரர்க் கெல்லாம் பொன்னுலாகிய வாகைப்பூக்களைச் சூட்டிப்புகழ் ந்து அவர்களை உற்சாகப்படுத்திய செய்தியை இளங்கோவடி கள் அழகுபெறக்கூறுதல் அறிந்து மகிழத்தக்கது.[1] இக்கா லத்து நம்மையாளும் அரசாங்கத்தாரும் போரிற் பெருந் திறல் காட்டும் வீரசிகாமணிகட்குப் பட்டமும் பதக்கமும் (Victoria Cross) அளித்துப் பாராட்டுதல்போன்ற முறை, பழைய தமிழ்வேந்தாாற் கைக்கொள்ளப்பட்டதொன்றே என்பது இதனுல் விளக்கமாகும். இவ்வளவோ? போரிற் பகைவரைவென்று கவர்ந்த பொருள்கள் எத்துணை அருமை யும் பெருமையும் உடையனவாயினும், அவற்றைத் தம் வீரர்க்கும், போர்க்களம்பாடும் புலவர்க்கும், ஏனைய இரவ லர்க்கும் வேண்டியவேண்டியாங்கு அளித்துமகிழ்வதும் பண் டை அரசர்கொண்ட ஒழுக்கமாகத் தெரிகின்றது. நெடுஞ் சேரலாதன் இங்ஙனமே "நன்னகர் மரந்தை முற்றத் தொன் ஞர்—பணிதிறை தந்த பாடுசால் நன்கல" ங்களை வேண்டிய வர்க்கு வேண்டியாங்கு அளித்தானென்று மாமூலனரும்,[2] அச்சேரலாதன் திருமகனை செங்குட்டுவன் "பெரிய வாயினு மமரகத்துப் பெற்ற - தரிய வென்னது ஓம்பாது வீசி" னனென்று பரணரும்[3] பாராட்டியிருத்தல் குறிப்பி டத்தக்கது.

போரில் தம்பெருந்திறமை காட்டி இறந்துபட்ட வீரர் க்கு வீரக்கல் என்ற நடுகல் நாட்டி அவரைக் கௌர விக்குமுறை தொல்காப்பியமுதலிய முன்னூல்களில் விளங் கக் கூறப்பட்டுள்ளது.[4] ஆனல், தம் கணவருடன் உயிர்

1. சிலப். 27, 23—44.
2. அகநானூறு, 127.
3. பதிற்றுப்பத்து, 44.
4. தொல். பொருளதி. 60.

நீத்த பத்தினிகளுக்கு அவ்வாறு கல்லமைத்துச் சிறப்பிக்கும் வழக்கை அந்நூல்களிற் காணுதல் அரிதாம். ஆயினும் செங்குட்டுவன்காலத்தே கற்பின்மாட்சியை நிறுவிய பத்தினிகளிடம் தெய்வபாவனை வைத்து—வீரர்க்குச்செய்வது போலக்—கற்காண்டலும், கல்லெடுத்தலும், அதனை நீர்ப்படுத்துத் தூய்மைசெய்தலும், பிரதிஷ்டித்தலும், வாழ்த்துதலும் பெருமரபாயிருந்தன என்பது மேற்குறித்த வஞ்சிக்காண்டப் பகுதிகளால் நன்கறியப்படும். கண்ணகிபோன்றார்கற்பினை வீரக்கற்பு, சீறிய கற்பு, மறக்கற்பு என்றும், அவளை வீரபத்தினி யென்றும்[1] முன்னோர் கூறியதற்கேற்ப, வீரர்க்குரியதாக நடைபெற்றுவந்த நடுகல் வழக்கத்தைக் கண்ணகிமுதலியோர்க்கும் பண்டையோர் கொண்டனர் ஆவர். இவ்வாறு வீரசுவர்க்கம்பெற்ற சூரர்க்குமட்டு மன்றி, உடனுயிர்துறந்த உத்தமபத்தினிகட்கும் கல்நாட்டிவந்த வழக்கத்துக்குப் பண்டைநூலாதரவு காண்டல் அரிதாயிருப்பினும், பிற்காலத்தே அது பிரபலமாகவிருந்ததென்பது, தென்னாட்டின் பலபாகங்களிலும் அத்தகைய வீரக்கற்களும் பத்தினிக்கற்களும் விசேடமாகக் காணப்படுதலால் விளக்கமாகின்றது. பிற்கூறிய பத்தினிக்கல்லை மாஸ்திகல் என்பர் கன்னடநாட்டார்.[2]

பண்டையரசர்கள் மேற்கூறியவாறு வீரபத்தினிகளைச் சிறப்பித்தற்குரிய சிலைகளை இமயம்பொதியம்போன்ற பெருமலைகளினின்றும் எடுத்துவருதலும், அவ் வெடுத்தவற்றைக்

1. 'ஆர்ஞருற்ற வீரபத்தினி' என்பர் இளங்கோவடிகள் (பதிகம்).

2. இது, மஹாஸதிக்கல் என்பதன் மரூஉ. ஸ்ரீமாந்-கோபிநாதராயரவர்களால் இம்மாஸ்திக்கல்லின் மாதிரிகைப்படம் செந்தமிழிற் காட்டப்பட்டுள்ளமை காண்க (தொகுதி 3, பக். 88).

கங்கைகாவிரிபோன்ற புண்ணியநதிகளில் நீராட்டித் தூய்மை செய்வித்தலும், அம்முயற்சியில் இடையூறுவிளைக்கும் பகையரசரை அடக்கிமீளுதலும் வழக்கமென்பது, செங்குட்டுவன் செய்திகளினின்றுந் தெரியலாம்.

பண்டைத்தமிழ்வேந்தரது அரசியலுரிமை, பொதுவாக மக்கட்டாயமாய் மூத்தமகன்முறையில் வந்ததேயாகும். அம்மானுரிமை மருமகனுக்கு வரும் மருமக்கட்டாயம் பிற்பட்ட வழக்கேயன்றிச் செங்குட்டுவன்போன்ற சேரர்காலத்துக்குரியது அன்று. ஒருசிலர், நம் சேரன்காலத்தில் மருமக்கட்டாயமே வழங்கியதாகக்கருதி யெழுதிய கொள்கை சிறிதும் பொருந்தாது என்பதனை—'சேரவேந்தர் தாயவழக்கு' என்னுந் தனிக்கட்டுரையில்[1] தெளிவாக விளக்கியுள்ளேம்.

நம் சேரர்பெருமானது மற்ற அரசியலடையாளங்கள், சேரர்க்குப் பொதுவாக நூல்களிற் கூறப்பட்டனவெல்லாம் அமையும். செங்குட்டுவன் முன்னோர் 'எழுமுடி' என்று பெயர்பெற்ற மாலையொன்று சிறப்பாக உடையராயிருந்தனர் எனப்படுகின்றது;[2] செங்குட்டுவனும் அதனை அணிந்திருந்தவன் என்பது "எழுமுடி மார்ப"[3] என்னும் இளங்கோவடிகள்வாக்கால் தெரியலாம். அரசரெழுவரைச்[4] சேரரின் முன்னோர் வென்று அவ்வெற்றிக்கறிகுறியாக அவரது எழுமுடிபோலச் செய்யப்பட்ட மாலையை அணிந்துவந்தவராதலால், அஃது அப்பெயர்பெற்றதென்பர்.[5]

---

1. செந்தமிழ், தொகுதி-27, பகுதி, 11.—இக்கட்டுரை தனிப் புத்தகமாகவும் எம்மால் வெளியிடப்பட்டுள்ளது.
2. பதிற்றுப். 14, 16, 40, 3. சிலப். 28, 169.
4. சோழபாண்டியரும் ஐம்பெருவேளிருமாவர்.
5. பதிற்றுப். 14. உரை.



வீரக்கல்.



நடுகல்

## 11 - ம் அதிகாரம்

## செங்குட்டுவன் குணாதிசயங்கள்.

சேரன்-செங்குட்டுவன் நீதிவழுவாது ஐம்பத்தைந்து வருஷம் ஆட்சிபுரிந்தவனென்பது, பதிற்றுப்பத்துள் இவனைப்பற்றிய பதிகவாக்கியத்தால் அறியப்படுகின்றது. இவன் தந்தை நெடுஞ்சேரலாதன் தன்மக்கள் அரசுரிமையேற்றற்குரிய இளமைக்காலத்து இறந்தவனென்று தெரிதலால் உத்தேசம் 20-ம் வயதிற் செங்குட்டுவன் பட்டமெய்தியவனாயின், குறைந்தது 75-வருஷம் இவன் நிலவுலகில் வாழ்ந்தவனாதல் வேண்டும். இவ்வரசன் இரண்டாம் முறையாகச் சென்ற வடயாத்திரையில் 32-மாதங்கள் செலவிட்டனனென்றும்,[1] அவ் யாத்திரை முடித்துக்கொண்டு வஞ்சிமாநகரம் புகுந்தபோது இவனுக்கு 50-ஆம் வயது நடந்ததென்றும்[2] இளங்கோவடிகள் தெளிவாகக் கூறுகின்றார். எனவே, செங்குட்டுவன் 47-ம் வயதாரம்பத்தே அவ்வடயாத்திரை தொடங்கினனென்று தெளியலாகும். இவனது 47-ம் வயதிற்குச் சிலகாலத்துக்கு முன்புதான், தன் மைத்துனச்சோழற்கு அனுகூலனாகச் சோணாட்டில் இவன் போர் நிகழ்த்தியது. போரின்விவரம் முன்னரே விளக்கப்பட்டது.[3] செங்குட்டுவனது வடயாத்திரைக்குச் சிறிது முன்பே இவன் மைத்துனச்சோழனைப் பட்டத்தில் நிறுவியசெயல் நிகழ்ந்ததென்பது, கங்கைக்கரைப்பாடியில் மாடலனை இவன் சந்தித்தபோது, அச்சோழனது நிலைமையைப்பற்றி உசாவிப்போந்த குறிப்பாற் புலப்படும்.[4] மணிமேகலை உலகசம்பந்தத்தை யொழித்து, நோற்றற்பொருட்டு

---

1. சிலப். 27, 149. 2. ஷை. 28. 130. 3. இந்நூல், பக். 32—3. 4. ஷை. 27. 159—72.

முடிவாகக் கச்சிபுகுமுன் வஞ்சிமாநகர் வந்தபோது, ஆங்கே செங்குட்டுவன் ஆட்சிபுரிந்த சிறப்பைச் சாத்தனார் தம் நூலுள் 26 - ஆம் காதையிறுதியிற் கூறுவர். இதனால், பத்தினிப் பிரதிஷ்டைக்குப் பலவருஷங்கட்குப் பின்பும் அவ் வேந்தனாட்சி நிகழ்ந்ததென்பது பெறப்படும். நீடித்த ஆயுளுடையனான நம்சேரன், மணிமேகலை சிலப்பதிகாரங்கள் இயற்றப்பெற்றபின்னும் பலவாண்டுகள்விளங்கி, மாடலமறையவனது உபதேசத்தின் மாட்சியால் பரகதிவழிகளையே பற்றியவனாய் அமைதியுடன் ஆட்சிபுரிந்து, பின் "காலனென்னும் கண்ணிலி யுய்ப்ப—மேலோ ருலகம் எய்தினன்."

இதுகாறும் எழுதிவந்த சரித்திரத்தால் தமிழ்நாட்டின் மகோன்னத நிலைமைக்குச் செங்குட்டுவனது ஆட்சிக்காலமே சிறந்த இலக்காகவிருந்ததென்பது வெள்ளிடைமலைபோல் விளக்கமாகும். பண்டைத் தமிழிலக்கியங்களைச் சோதித்து வருமிடத்து, நம் சேரர்பெருமான்போன்ற அறிவுந் திருவும் பெற்ற பெருந்திறலரசர் தென்னாட்டில் அதிகமிருந்திலர் என்பது புலப்படத் தடையில்லை. பழைய தமிழ்வேந்தருள்ளே, இவன்றந்தை சேரலாதனும் சோழன் கரிகாற்பெருவளத்தானும் தவிர, வேறெவரும் இவனுக்கு இணைகூறத்தக்கவரல்லர்; அவ்விருவரும் தங்கள் வீரப்புகழை நாவலந்தீவு முழுதும் விரித்துநின்றவர்களாயினும், தமிழ்வேந்தர்க்கே அப்பெருமை உரியதென்பதை வடவேந்தர்கள் நன்கறியச் செய்து, அவர்கள் விரித்தபுகழை நிலைநிறுத்திய வீரசிகாமணி நம் சேரர்பெருமானே யாவன். பிற்காலத்திலே இவனுக்கிணையாகச் சொல்லத்தக்க தமிழ்வேந்தன் முதலாம் இராசேந்திரசோழன் ஒருவனே.

சேரன் - செங்குட்டுவனது உத்தம குணங்களுள்ளே இவனது தெய்வபத்தியை முதலில்வைத்துப் பாராட்டல்

தரும். சிவபிரான் திருமால் முதலிய தெய்வங்களிடத்தும் அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர்[1] முதலிய பெரியோர் களிடத்தும் இவன்வைத்திருந்த பத்தியும், மதாந்தரங்களில் இவன் கொண்டிருந்த பொதுநோக்கமும் முன்னரே அறியப் பட்டன. இவையன்றி, வீரபத்தினிகளாக விளங்கியவரிடம் இவன் காட்டிப்போந்த பெருமதிப்பும் பிரேமையும் ஈண்டு விரித்தெழுதவும் வேண்டுமோ?

பத்தினிவணக்கம் என்ற புதியசமயத்தை நாடெங்கும் பரப்பி நிலைநாட்டியபெருமை, நம் சேரர்பெருமாற்கே உரிய தென்னலாம். வீரர்க்குப்போல வீரபத்தினிகட்கும் நடுகல் அமைத்துப் பிரதிட்டிக்கும் தமிழ்வழக்கை இவ்வேந்தன் வர லாற்றினின்றே நாம் முதன்முதற் காண்கின்றோம். இதனால், இவன் செய்கைக்குப் பின்பே பத்தினிக்கல் நாட்டும் முறை தமிழகத்துப் பரவியதாகவேண்டும் என்றுகருத இடமுண்டு. செங்குட்டுவன்தாபித்த கண்ணகிவணக்கம், இவன்காலத்தே தமிழகமுழுதும் விரிவுற்றதென்பது, சோழ பாண்டியரும் கொங்கிளங்கோசரும் தங்கள்நாடுகளினும் பத்தினிக்கோட் டஞ் சமைத்து நித்தியவிழா நிகழ்த்திப்போந்த செய்தியால்[2] தெரியலாகும். இவன்காலத்துக்குப் பின்பு நெடுங்காலம் வரை அப்பத்தினிக்கோயில்களும் வழிபாடும் பிரபலமாயிருந் தன என்பதற்குரிய குறிகள் நாடெங்கும் காணப்படு கின்றன.[3]

---

1. சிலப். 26. 93—97

2. சிலப். உரைபெறுகட்டுரை.

3. நாகபட்டினத்திற்குப் புறம்பேயுள்ள மரத்தடியொன் றிற் பத்தினிதேவிக்குப் புரியும் வணக்கம் பெரிதாக உள்ளமையும், நீலகிரித் தொதுவருள் கண்ணகிவழிபாடு உள்ளமையும், கொடுங்

இப் பத்தினிதெய்வம், பிற்காலத்தே பலவிடங்களில் பகவதி அல்லது துர்க்காதேவியாகவும் சிலவிடங்களில் திரௌபதியம்மனாகவும் பெயர்மாறி வணங்கப்பட்டுவருகின்றது. கண்ணகியை—'கொற்றவையல்லள்' 'காளி...அல்லள்' என, அவள் சினமுற்றநிலையை இளங்கோவடிகள் சிறப்பித்தலாலும், பின்னோரும் காளியமிசமாகவே கண்ணகியை நாடகங்களில் வழங்கலாலும் துர்க்கையாக அவளை இக்காலத்தார் வணங்கல் ஒருவாறு ஏற்பதேயாம். இவ்வாறே, 'ஐவர்க்குந்தேவி அழியாதபத்தினி' என்றபடி உத்தமமாதர்களுள் திரௌபதியும் ஒருத்தியாக மதிக்கப் பெற்றவளாதலால், பத்தினி என்ற பொதுப்பெயர் கொண்டு, கண்ணகியை அத் திரௌபதியாகக் கருதி அதனடியாகச் சரித்திரங்களை மாற்றிப் பத்தினிதெய்வத்தைப் பின்னோர் வழிபடலாயினர் என்றே தோற்றுகின்றது. இங்ஙனம், செங்குட்டுவன் தாபித்த பத்தினிவணக்கம் தமிழ்நாட்டின்மட்டுமன்றித் தேசாந்தரங்களினும் அவன்காலத்தே பரவலாயிற்று. சேரவேந்தன் கண்ணகிப் பிரதிஷ்டை நடத்திமுடித்து வேள்விச்சாலைக்குச் செல்கின்றபோது—

"குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்"

கோளூர்ப் (Cranganore) பகவதிக்கு ஒற்றைமுலைச்சி என்ற பெயர்வழக்குஉண்மையும், பாலைக்காட்டுக்கு அணித்தானகல்லாயம் குளத்துக்கரையில் கண்ணகியின் தோழிக்குக் கோயிலுள்ளமையும், யாழ்ப்பாணத்து நாவாலிக் களையோடையிலே கண்ணகிகோட்டம் அமைந்திருத்தலும் பிறவும் அறியத்தக்கன. மதுரை ஜில்லாவிலே, விருபாட்சியை அடுத்த ஆற்றூர்ப்பிரதேசத்தில் நடக்கும் கண்ணகி திருவிழாவில், அப்பத்தினியை மண்ணால் வகுத்து வழிபடுவதும், அவ்வழிபாட்டில் கோவலற்குத் தீங்கிழைத்த தட்டானைத் தலையறுப்பதற்குப் பிரதியாக, அவருள் ஒருவனை ஆங்குத் தருவித்து அவன் தலைமயிரை அறுத்தோட்டுவதும் இன்றுமுள்ள வழக்கங்கள் என்பது தெரியவருகின்றது.

'செங்குட்டுவனுக்கு அருள்புரிந்தாற்போல எங்கள் நாடுகளிலும் எழுந்தருளிவந்து அருள்புரிய வேண்டும்' என்று பத்தினிதேவியைப் பிரார்த்தித்து நிற்க, அப்போது 'தந்தேன் வரம்' என்று அசரீரியாக அத்தேவி அருள்புரிந்துகூறியதை இளங்கோவடிகள் தம் நூன்முடிவிற் பாடுகின்றார். இவருள் மாளுவவேந்தர் என்பார், செங்குட்டுவனுடன் வேற்றுமையின்றிக் கலந்த நட்பினரான[1] நூற்றுவர் கன்னரேயாவர்; என்னை? பத்தினிச்சிலை கொணர்தற்குப் புறப்பட்ட நம்சேரனது வடயாத்திரையிற் பெருந்துணையாக நின்று அக்காரியத்தை முடித்தற்குப் பேருதவிபுரிந்த அக்கன்னர்[1] அவ் யாத்திரையின் பயனாகச் செங்குட்டுவன் தன்னகரில் நடத்திய பத்தினிப் பிரதிஷ்டைக்கு வந்து சிறப்பிக்கத் தவறாதலாலும், குடகக் கொங்கரையும் கயவாகுவையும்போலவே மாளுவவேந்தரும் இளங்கோவடிகளால் முன்னரே குறிக்கப்பட்டவராகக் கொள்ளற்குரியரன்றி, பத்தினிப் பிரதிஷ்டைக்குமட்டும் திடீரென்று வந்துசென்ற வேற்றுவேந்தராகக்கொள்ளல் பொருந்தாமையாலும், 'மாளுவ வேந்தர்' எனப் பன்மையாற்கூறப்படுதலாலும் அவ்வேந்தர் கன்னரின் வேறல்லரென்பது திண்ணமாகும். இனி, இம் மாளுவவேந்தரும், இலங்கைக் கயவாகுவும் தங்கள் நாட்டில் எழுந்தருள வேண்டியபடி பத்தினிதேவி வரந்தந்தனள்—எனவே, அன்னோரால் அத்தேவி அவர்நாடுகளிலும் பிரதிஷ்டைபெற்றனள் என்பது குறிப்பிற்பெறப்படும். இதற்கேற்ப, இலங்கையில் பத்தினிதேவியின் செப்புப்படிமமொன்று கண்டெடுக்கப்பெற்று, இப்போது லண்டன்மாநகரத்துப் பிரிடிஷ் - மியூஸியத்தில் வைக்கப்பட்டுள்ளமையும், இவ்வாறே

1. 'வேற்றுமை யின்றி நின்னொடு கலந்த, நூற்றுவர் கன்னர்' என்பர், இளங்கோவடிகள் (சிலப். 25, 148—9).

மாளுவநாட்டின் கீழ்ப்பகுதியிலே பத்தினிக் கோட்டமொன்று பழமையாகவே அமைந்துள்ள[1] செய்தியும் முன்னரே கூறப்பட்டன. மேற்கூறியவற்றால், தமிழகத்தில் மட்டுமன்றிப் பத்தினிதேவியின் வணக்கம் தேசாந்தரத்தும் தீபாந்தரத்தும்[2] பரவுதற்கு மூலகாரணமாய் விளங்கியவன் சேரர்பெருந்தகையான செங்குட்டுவன் என்பது தெரியலாம்.

இவ்வாறு தெய்வபத்தி மிக்கிருந்த நம் சேரனது ஏனை உயர்குணங்களுள்ளே அடுத்துப் புகழத்தக்கது, இவனது ஏகதார விரதமேயாம். இவனுடைய தர்மபத்தினியாகவும் பட்டமகிஷியாகவும் விளங்கிய இளங்கோவேண்மாள் என்பவளைப்பற்றி முன்னரே கூறினோம்.[3] வேளிர்குலக்கொழுந்தாகிய இத்தேவி, அறிவு திரு அழகு அமைதி முதலிய உயர்குணங்களெல்லாம் ஒருங்கு வாய்ந்திருந்ததோடு தன் நாயகனுக்கு உற்றசமயங்களில் உறுதிகூறும் ஆற்றலுடையவளாகவும் விளங்கினள். செங்குட்டுவன் பத்தினிக்கடவுளைச் சிறப்பித்ததற்கும், தன் வீரப்புகழை இமயம்வரை விரித்து வந்ததற்கும் இவ்வுத்தமிகூறிய சமயோசிதமான ஒருசொல்லன்றோ காரணமாயிற்று?[4] தன் கணவனைப் பிரியநேர்ந்த 32-மாதங்கள்வரை ஊணுமுறக்கமுங் கொள்ளாது நாளோப்பனையும் புரியாது இப்பெருந்தேவி இருந்த பிரிவாற்றுநிலை

1. இந்நூல், பக்கம், 110 - 12.

2. இப்பத்தினி, இலங்கைத்தீவில் வெவ்வேறு தெய்வமாகப் பிற்காலத்து மாறியநிலையை "ஸிலோன்—ஆண்டிக்யுடீஸ்" (Ceylon Antiquities) பத்திரிகையின் முதற்றொகுதியுள் 'பத்தினி தேவி' என்ற வியாசத்தினின்றும் அறியலாம்.

3. இந்நூல், பக். 24.

4. ஷை, பக். 53.

யையும், அவன் செயசீலனாகத் திரும்புகின்ற தறிந்ததும் இவளடைந்த பெருமகிழ்ச்சியையும் அடிகள் புகழுந்திறம் பலமுறைபடித்து ஆனந்திக்கத்தக்கது. இவ்வாறு சேரன் தன் தேவியினின்றும் பிரிந்திருந்ததனை 'மேவிய சிறப்பி னேனோர் படிமை' நிமித்தமாக(=தேவர்காரணமாக)ப் பிரிந்த பிரிவாகக்கொண்டு — "சேரன் - செங்குட்டுவனார் கண்ணகியைக் கடவுண்மங்கலஞ்செய்தற்குப் பிரிந்த பிரிவு சிலப்பதிகாரத்திற் கண்டுகொள்க" என்பர் இளம்பூரணவடிகள் (தொல். அகத். 30, உரை). இங்ஙனம் நெடுங்காலம் பிரிவாற்றியிருந்த ஒப்புயர்வற்ற கற்புடையாட்டியைத் தன் தேவியாகப் பெற்று, அவளையன்றி வேறறியாதிருந்த நம் சேரர்பெருந்தகைக்குச் சீராமமூர்த்தியன்றி வேறியாவர் சிறந்த உவமையாவர்?

சேரன் - செங்குட்டுவனது இயற்கைக்குணங்கள் பலவற்றுள்ளே அவனது வீரத்தன்மையே மேம்பட்டுவிளங்கியிருந்ததென்பது, அவன் சகோதரரும் பரணரும் அக்குணத்தையே மிகுதியும் புகழ்தலால் தெரியலாம். இவனுக்குக் காமவேட்கையினும் போர்வேட்கையே மிக்கிருந்தது என்று புகழ்வர், பிற்கூறிய நல்லிசைப் புலவர்.[1] இவ்வேந்தனது ஆயுட்காலத்தின் பெரும்பாகமும் பகைவரை அடக்குவதும் நாட்டைப்பெருகச்செய்வதுமே இவன் மேற்கொண்டிருந்த பெருங்கருமங்களாக இருந்தன. மாடலமறையோன் ஒருகாற் செங்குட்டுவனுக்கு உபதேசிக்கப்புக்கவிடத்தில், அவனது இக்குணத்தையே சுட்டி—

"வையங் காவல் பூண்டநின் னல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யா தியாங்கணும்

1. பதிற்றுப். 50.

மறக்கள வேள்வி செய்வோ யாயினை"

(சிலப். 28: 129—32.

எனக் கூறுதல் காணலாம். பரணரும் இவன் வீரத்திறத்தையே வியந்து, "அனைய பண்பிற் றனை மன்னர், இனி யாருளரோ முன்னு மில்லை" எனக் கூறினர்.[1] தமிழாது வீரத்திற் செங்குட்டுவனுக்கு அபிமானமும் மதிப்பும் அதிகமாகவே யிருந்தன. தன்னையும் மற்றைத் தமிழரசரையும் வீரக்குறைகூறி இகழ்ந்தார் என்பதுபற்றியன்றோ, இமயச் சாரலிலுள்ள குயிலாலுவம்[2] என்னும் போர்க்களத்திலே இவன் வடவரசர் பலரை வெற்றிகொண்டது?

"அமையா வாழ்க்கை யரசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவ தாயின் ஆங்கஃது
எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியுந் தரூஉம்"

(சிலப். 26: 10—12.)

"காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்முடன் கூடி
அருந்தமி ழாற்றல் அறிந்தில ராங்கெனச்
சீற்றங் கொண்டிச் சேனை செல்வது"

(ஷை. ஷை. 159—62.)

எனத் தேசாபிமானத்தைச் சிறக்கக்காட்டும் இவன்கூற்றுக்களை இளங்கோவடிகளே எடுத்துரைத்தல் காண்க. செங்குட்டுவனது வெற்றிப்புகழ் தமிழகத்தின்மட்டுமென்றி, வடநாடெங்கும் பரவியிருந்ததென்பது இவனது யாத்திரையில் நட்பரசராகிய நூற்றுவர் கன்னர் இவனுக்குச் செய்துபோந்த உதவியாலும் உபசாரங்களாலும் தெளிவாகும். பரணரும் இளமையிற் பெற்ற இவனது வடவெற்றியைப் புகழ்தல்

1. பதிற்றுப். 45.

2. குயிலாலுவம் என்பது இமயமலையின் ஒரு பகுதியாய், உத்தரதேசத்தைச் சார்ந்த ஒரு தலமாகத் தெரிகிறது. இங்குச் சிவபிரானுக்கு ஒரு கோயிலும் இருந்ததென்பது, 'இமயச் சிமயத்

காண்க.[1] ஆயின், அசோகன் சமுத்திரகுப்தன் முதலிய வட வேந்தரது தென்னாட்டு வெற்றிகளைக் குறிக்கச் சாஸனங்கள் காணப்படுதல்போலச் செங்குட்டுவனது வடநாட்டு வெற்றி குறிக்கும் சாஸனமொன்றுமே அத்தேசத்தில் இதுகாறும் காணப்படவில்லை. அதனால், இவனது வடதேசத்துப்படை யெடுப்பில் நவீனர்சிலர் ஐயுறுவர். ஆயினும், இவனுடன் பிறந்த சகோதரர் மட்டுமன்றி இவன்காலத்துப் புலவர்க ளிருவரும், அவ்வடவெற்றியைத் தெளிவாகக் கூறியிருத்த லால், அதனை எளிதிற் றள்ளிவிடுதல் எங்ஙனம் இயலும்? அன்றியும் சேரநாட்டை அடுத்திருந்தவரான கங்கவமிசத் தரசர்கள் இற்றைக்கு 800-வருஷங்கட்கு முன்னர், இமயம் வரை படையெடுத்துச்சென்று நேபாளதேசத்தைக் கைப் பற்றி அதனைப் பலதலைமுறை ஆண்டுவந்தனர் எனச் சாஸன

திருங் குயிலாலுவத்து—உமையொரு பாகத் தொருவனை வணங்கி' என்னும் இளங்கோவடிகள் வாக்கால் அறியலாம் (சிலப். 28. 102—3). புத்தரது பூர்வஅவதாரஸ்தலங்களுள் ஒன்றாகச்சொல்லப் படும் துயிலாலபுரம் என்பது இதுபோலும் (மணிமே. புத்தசரித். பக். 2. கீழ்க்குறிப்பு).

1. பதிற்றுப்பத்து 5-ம் பத்தினுள் கனகவிசயருடன் நடத்திய போரையேனும், பத்தினிப்பிரதிஷ்டையையேனும் பரணர் பாடா மையால், அவர்காலத்துக் குட்டுவனும், இளங்கோவடிகள் தமைய னாகிய செங்குட்டுவனும் வேறுபட்டவர் என்று சிலர்கருதுவர். ஆனால், பரணர் அப்பத்தினுட் குட்டுவற்குரியவாகச் சிறப்பித்துப் பாடிய மோகூர்ப்பழையன் போர், கடல்பிறக்கோட்டியது போலும் செயல் கள் தம் தமையனாகிய செங்குட்டுவற்கு உரியனவாகவே இளங்கோவ டிகள் விளங்கக் கூறியுள்ளதை அன்னோர் அறிந்திலர். இமயப்பக் கத்து ஆரியவரசரைச் செங்குட்டுவன் வென்றவனாகப் பரணர் குறிப் பிட்டது (பதிற். 43), இளமையில் அவ்வேந்தன் தன்தாயைக் கங் கைநீராட்டிவந்த காலத்து ஆரியமன்னர் பலருடன் நடத்தியதாக இளங்கோவடிகள் கூறிய போரேயாம். ஆகவே, செங்குட்டுவனது 47-ம் வயதுக்கு முற்பட்ட போர்ச்செய்திகளே, பரணரது 5-ம் பத் தினுட் பயில்வனவாயின என்பது அறியத்தக்கது.

மூலம் அறியப்படுகின்றது[1]. ஆயின், அக்கங்கரினும் வலிமையும் பெருமையும் வாய்ந்தவராய அவர் பக்கத்திருந்த சேரவரசர் வடநாட்டில் தம்வீரப்புகழ் பரப்பினர் என்று கூறும் இலக்கியப் பிரமாணங்களைமட்டும் கற்பனையாகக் கருதுவதென்னே? பிற்காலத்துத் தமிழ்வேந்தருள் முதலாம் இராசேந்திரசோழன் கங்கையும் கடாரமும் வென்று கொண்டவனென்ற சரிதம் நம்மவரால் முற்றும் நம்பப்பட்டு வருகின்றது; ஆயின், பழையசேரனொருவன் பெருவீரனாய் அதுபோன்ற காரியத்தையே செய்திருத்தலும் கூடியதன்றோ? செங்குட்டுவனது பிரஸ்தாபத்தைப்பற்றிய தென்னாட்டுச் சாஸனம் ஒன்றுமே இதுவரை காணப்படவில்லை; அதுபற்றி அத்தகைய வேந்தனொருவனே இருந்தவனல்லன் என்று கூறிவிடலாகுமோ? கடைச்சங்க நூல்களிற் கண்ட அரசரைப்பற்றிய சாஸனக்குறிப்புக்களே இல்லை என்றிருந்த காலத்து—முதுகுடுமிப்பெருவழுதி, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், கரிகாலன், கோச்செங்கணான்போன்றவரைக் குறித்த சாஸனச்செய்திகள் சிறிது சிறிதாக நம்மவர்க்குத் தெரியவருகின்றன. அதுபோலவே, செங்குட்டுவனது அருமை பெருமைகளும் நாளடைவில் வெளிப்படுதல் கூடியதே. ஆதலால், சாஸனச்சான்றுகளில்லாமைபற்றி இலக்கியச்செய்திகளையெல்லாம் புறக்கணித்துவிடுதல் கூடாதென்பதே எங்கருத்து. செங்குட்டுவன் வட

1. "It is curious that a Karnataka dynasty was set up even in distant Nepal, apparently in 1097, which was presumably of Ganga origin. The founder Nanya Deva (perhaps Nanniya-Deva), came from the South. He was succeeded dy Ganga-Deva and four others, the last of whom removed the capital to Khatmandu, where the line came to an end"—Ins. from Nepal, by Dr. G. Buhler"—(Lewis Rice's Mysore and Coorg from the Inscriptions, p. 48.)

நாட்டிற் படையெடுத்துச்சென்றதற்குக் காரணம்—தமிழ் வேந்தர்கள் தம் இலாஞ்சனைகளை இமயத்திற் பொறித்தவர்[1] என்ற பெருமையை வடவரசர்சிலர் இகழ்ந்து கூறியதனால், அப்பெருமை தங்கட்குண்டென்பதை மெய்ப்பித்தற்காகவே என்பது இளங்கோவடிகள்வாக்கால் நெடுக உணர்ந்தோம். அங்ஙனம் தமிழராற்றலை வடவர்க்கு வலியுறுத்திக் காட்டிய நம் சேரர்பெருமானது அருஞ்செயலைச் சாஸன ஆதாரமொன்றின்மைபற்றிச் சிலர் எளிதாக்கிவிடுவது அவ்வடவேந்தர் செயலினும் மிக அதிசயிக்கத்தக்கதேயாகும்!!

செங்குட்டுவன், இத்தகைய வீரச்சிறப்போடு மதிநுட்பமிக்கவனாகவும் இருந்தான். அறிஞர்பலருடன் அளவளாவி அறியவேண்டுவனவற்றை நன்கறிந்தவன் இவ்வரசனென்பது, "புரையோர் தம்மொடு பொருந்த வுணர்ந்த, அரச ரேறே"[2] எனவும், "புலவரையிறந்தோய்"[3] எனவும் தத்துவஞானியாகிய மாடலமறையோனே நம் சேரனை அழைத்தலால் அறியலாம். மதுரையிற் கோவலனைக் கொல்வித்து, அத்தவற்றையறிந்ததும் பாண்டியன் தன்னுயிர்நீத்த செய்தியைச் சாத்தனார்வாயாற் செங்குட்டுவன் முதன்முதற் கேட்டபோது அவ்வரசனதுநிலைக்கு அகம்நொந்து—

"எம்மோ ரன்ன வேந்தர்க் கிற்றெனச்
செம்மையி னிகந்தசொற் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்ந்தமை யுறுக வீங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்

1. 'தமிழ்வேந்தரது இமயப்படையெடுப்பு' என்ற கட்டுரையில் இவற்றை நன்கு விளக்கியுள்ளேம் (கலைமகள், தொ. 1).
2. சிலப். 28: 123—4.
3. ஷை, ஷை, 174.

குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லை'' (சிலப். 25: 25—104.)

என்று கூறிபோந்த வார்த்தைகள், உண்மையில் எவ்வளவு உயர்வும் உருக்கமும் உள்ளன? இளங்கோவடிகள் பேராற்றங்கரையில் தம் தமயனுடனிருந்து அவன் வாய்ப்படக்கேட்டெழுதிய அழகிய வசனங்களன்றோ இவை? இனிப் புலவர் பெருமக்களிடம் இவன் வைத்திருந்த மதிப்பும் அன்பும் முற்கூறிய "இருபெரும்புலவர்'' என்ற அதிகாரத்தால் இனிது விளங்கற்பாலன.

நம் சேரவேந்தனது செங்கோற்பெருமையும் மதிக்கத்தக்கதாம். தன்னாட்டுக் குடிகளைப் பெரிதும் அபிமானித்து ஆட்சிபுரிவதிற் பெருநோக்குடையவன் இவ்வேனென்பது, ஒரு சமயத்து இவன்செய்த சபதத்தில் "வறிது மீளுமென் வாய்வா ளாகிற் - குடிநடுக் குறாஉங் கோலே னாகுக''[1] என்று கூறியிருப்பதொன்றானே தெளிவாகும். குடிகளும் அங்ஙனமே இவன்பாற் போன்பு பூண்டிருந்தசெய்தி முன்னரே குறிப்பிட்டோம். "செங்குட்டுவ னெனும் செங்கோல் வேந்தன்...விற்றிறல் வெய்யோன் தன்புகழ் விளங்க'' என்றார் சாத்தனாரும்.[2] இவ்வேந்தனது சகோதர அபிமானத்தையும் ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடத்தகும். தன் தம்பியான இளங்கோவடிகள் முற்றத்துறந்த முனிவராயிருப்பினும், அவசியமான காலத்தன்றி அவ்வடிகளை இவ்வரசன் விட்டுநீங்கியவனல்லன்.[3] அவ்வாறே, ராஜருஷியாகிய அடிகளும் தம் தமையனிடம் பிறவிக்குற்ற அன்பைப் பெற்றிருந்தவரேயாவர். ஆனல், அதுபற்றி, மூவேந்

1. சிலப். 26. 15. 18.
2. மணிமே. 26. 77—91.
3. ஷை 25. 5. அரும்பதவுரை.

தர்க்கும் பொதுவாக ஒரு காப்பியஞ்செய்யத் தொடங்கிய தாம், நடுநிலைபிறழத் தம் தமையனை அதிகமாகப் புனைந்து கூறினவராகத் தோற்றவில்லை. அடியார்க்கு நல்லாரும் அவ்வடிகளது பொதுநோக்கை அடிக்கடி புகழ்தலுங் காண லாம்.[1] ஆனால், வஞ்சிக்காண்டமுழுதினும் செங்குட்டுவன் புகழையே அவ்வடிகள் கூறியதென்னெனின், கண்ணகி பொருட்டு அரியபெரிய செயல்களைப்புரிந்து பத்தினிவணக் கம் என்ற புதிய கொள்கையைத் தமிழகத்துத்தாபித்த பெருமை செங்குட்டுவனதே யாதலின், எடுத்துக்கொண்ட காப்பியநிலைக்கேற்ப அவனைப் பாராட்டுதலும் இன்றியமை யாததாயிற்றென அறிக.

இவ்வளவு பெருமையுடன், நம்சேரர்பெருமான் சிறிது முன்கோபம் உடையவனாகவுந் தோற்றுகின்றான். ஆயினும், பெரியோர்கூறும் நன்மொழிகளை ஏற்றுக்கொள்வதில் இவன் முந்துகின்ற இயல்புடையவனா யிருந்தனன். இவ்விஷயம் சோழபாண்டியரிடம் இவன்கோபங்கொள்ள நேர்ந்தபோது, மாடலமறையோன் கூறிய சாந்தவசனங்களை விரைந்தேற் றுக் கோபமடங்கியதும் உடனே தன்னால் வென்றுசிறை பிடிக்கப்பட்ட கனகவிசயரைச் சிறைநீக்கியதோடு, அவர் களைச் சிறைப்படுத்திய வில்லவன்கோதை என்ற படைத் தலைவனைக்கொண்டே அன்னோரை உபசரிக்க ஏவியதும், பின்னர் அம்மாடலன் கூறிய தர்மமார்க்கங்களையே அனு சரித்தொழுகியதுமாகிய வரலாறுகளால் விளங்கும். "அந் தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்—நின்றது மன் னவன் கோல்" என்றபடி நம்வேந்தன் வைதிகதர்மங்களைத் தன்னாட்டில் மட்டுமன்றித் தான் சென்ற இடங்களினும்

---

1. ஷை. 17-ம் காதை. "முந்நீரினுள்புக்கு" உரை: இந் நூல் 6-ம் பக்கத்து 2-ம் கீழ்க்குறிப்புங் காண்க.

ஆதரித்துக் காத்துவந்தவன்[1]. இக்காலத்து ஆட்சிபுரியும் சேரர்கிளையினர்க்கும் இஃது இயல்பாயிருத்தல் ஒப்பிடத் தக்கதாம்.

இனி, நம் சேரர்பெருந்தகை, குட்டுவன் எனத் தனித்தும் வழங்கப்படுவன்;[2] இவனுக்குரிய அடைசொல்லாகிய செம்மை இவனது நிறம்பற்றி வழங்கப்பட்டதாகும். இது பற்றியே, மணிகுட்டுவேன் என்றும் இவன் வழங்கப்பெற்றனன் என்று சாஸனமொன்றால் தெரிகின்றது[3]. இவன் சிறியதந்தைக்கும் குட்டுவன் என்பது பெயராயினும் 'பல்யானைச் செல்கெழு' என்பது அவனுக்கு விசேடணமாகும். [குட்டுவன் - குட்டநாட்டுக்கு உரியோன்.] இங்ஙனம் செங்குட்டுவன் என்றதற்கேற்பப் பிறரெல்லாம் கண்டு மகிழும் கட்டழகும் உடையனாகவிருந்தான். இவற்றுடன் பலமும் பருமனும் கொண்டவனாகவும் காணப்படுகின்றான். கங்

1 சிலப். 26. 247—50.

2. ௸. 26: 61. 257; பதிற்றுப். 42—50.

3. நாமக்கற் சாஸனத்தில், சேரரின் முன்னோருள் மணிகுட்டுவேன் என்பவனும் ஒருவனாகக் காணப்படுகின்றான் (Ep. Rep. 29 of 1906). நன்னூலுரையுள் (சூ. 259) தொடர்மொழியாய் நின்று ஒருபொருள் தந்த ஒருமொழிக்கு—"சேரன் திருமணக்குட்டுவன், சோழன் கரிகாற்பெருவளத்தான், பாண்டியன் நெடுஞ்செழியன்" என்பவற்றை மயிலைநாதர் உதாரணங் காட்டுவர். இப்பெயர்களுடையாருள் பின்னிருவரும் சங்ககாலத்தரசர் ஆதலால் முதலவனாகிய திருமணக்குட்டுவனையும் அக்காலத்தவனாகவே நாம் கருதலாகும். இம்மணக்குட்டுவனும் மேலே சாஸனங்கூறிய மணிகுட்டுவனும் ஒருவனென்றே கொள்ளத்தகும். மணித்தக்காளியை மணத்தக்காளி என்னும் வழக்கும் ஒப்பிடுக. மணி என்பது ஈண்டுச் செம்மணியான மாணிக்கமாம்; 'மணிவாய்க்கிள்ளை' (கல்லா. 50) என்ப. இவ்வாறாயின், சாஸனமும் மயிலைநாதரும் கூறிய தொடர்கள் செங்குட்டுவற்கு அக்காலத்தார் வழங்கிய பெயர்கள் என்று கருதல் தகும்,

4. சிலப். 26; 73.

கைக்கரைப்பாடியில் மாடலனுக்குச் செங்குட்டுவன் தன் நிறையளவு பொன்னை நிறுத்துத் தானஞ்செய்தானென்பதைக் கூறுமிடத்தில் இளங்கோவடிகள்—

"பெருமகன் மறையோற் பேணி யாங்கவற்கு
ஆடகப் பெருநிறை ஐயைந் திரட்டி
தோடார் போந்தை வேலோன் தன்னிறை
மாடல மறையோன் கொள்கென் றீத்தாங்கு'-

(சிலப். 27: 173—76)

எனக் கூறுகின்றார். இதனுள்ளே, இவனது நிறையளவாகக் குறிக்கப்பட்ட "ஆடகப்பெருநிறை ஐயைந்திரட்டி" என்பதற்கு, அரும்பதவுரையாளர் "ஐம்பதுதுலாம்பாரம் பொன்" என்று பொருள் கூறுவர். ஒருதுலாம் என்பது 100-பலமாகும்[1]; ஆகவே, 50-துலாத்துக்கு 5000-பலமாகின்றன. ஒரு பலமென்பது 3-ரூபா எடையாகவும், 6-ரூபா எடையாகவும் இக்காலத்தார் பலபடியாக வழங்குதலால், பழைய காலத்துப் பலவளவு இதுவென்று துணியக்கூடவில்லை. எனினும், குறைந்தமுறையிலே தற்காலத்து 3-ரூபா எடைப் பிரமாணத்தையே கொண்டு பார்ப்போமானால், 40-ரூபா நிறைகொண்ட பௌண்டுக் கணக்கில் 375-பவுண்டு செங்குட்டுவனது நிறையாகவேண்டும். இது சிறிது மிகுதியாகவே தோற்றுமாயினும், பழையகாலத்து மக்களுள்ளே பெருவீரனாக விளங்கிய வேந்தர்பெருந்தகையொருவனுக்கு மேற்குறித்த நிறையளவு அதிகமாகாதென்றே தெளியலாம். ஒருகால், மூன்றுரூபா நிறைக்குங் குறைந்ததாகப் பழைய பலவளவு இருந்திருத்தல்கூடுமாயின், அஃது இக்காலவியல்புக்கும் ஒத்ததாகலாம். எங்ஙனமேனும், இக்காலத்தும் 300-பவுண்டு நிறையளவுள்ள மக்களை நாம் காணக்கூடியதாகவே இருத்தலால், இளங்கோவடிகள் தம் தமையனுக்குக் குறித்த

1. பிங்கலந்தை, சூத்திரம்-2254—55.

50-துலாமளவு, புனைந்துரையன்றிப் பொருத்தமுடையதாகு மென்பதில் ஐயமில்லை. இது நிற்க; சேரன் - செங்குட்டுவனது 50 - ம் வயதில் "நாற்ப திகந்தால் நரைத்தூது வந்தது" என்ற முன்னோர்மொழிப்படி[1] அவன் நரைமுதிர்ந்தவனாகவே இருந்தனன்; "திருநெறி ரகலத்துச் செங்கோல் வேந்தே—நரைமுதிர் யாக்கை நீயுங் கண்டனை"[2] என மாடலன் இவனை நோக்கிக் கூறுதலால் இதனையறிக. சேரவரசர் பலருள்ளே, செங்குட்டுவனும் இவன்றந்தைசேரலாதனும் அதிககாலம் ஆட்சிபுரிந்தவர்கள் என்பது, பதிற்றுப்பத்தின் பதிகங்களாற் புலப்படுகின்றது.

## 12-ம் அதிகாரம்

# செங்குட்டுவன் நாடும் தலைநகரமும்.

## (1) சேர நாடு

தமிழகம், அநாதிகாலமாகவே சேரசோழபாண்டியர் என்ற மூவராட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" என்ற தொல்காப்பியனார் கூற்றால் தெளியப்பட்டது. இம்மூவேந்தர் நாடுகளை முறையே குடபுலம், குணபுலம், தென்புலம் எனவும் வழங்குவர் முன்னோர்.

"குடபுலங் காவலர் மருமான்"
"குணபுலங் காவலர் மருமான்"
"தென்புலங் காவலர் மருமான்"—(சிறுபாண்.)

எனக் காண்க. இவற்றுள், குடபுலம் என்பது, கொல்லிமலையை உள்ளடக்கிய தமிழகத்தின் மேல்பால்நிலப் பகுதியும், குணபுலம் என்பது அம்மலைக்கும் அம்மலையில் உண்

1. வளையாபதி (புறத்திரட்டு.) 2. சிலப். 28. 157—8.

டாகும் கரைப்போத்தனூற்றுக்கும் கீழ்பாலுள்ள நிலப் பகுதியும், தென்புலம் என்பது பழனிமலைத்தொடர்க்குத் தெற்கணுள்ள நிலப்பகுதியுமாகும். இதனால் சேரநாடு என்பது சேலம் கோயம்புத்தூர் நீலகிரி ஜில்லாக்களும், கடன் மலைநாடான மலையாளமும் அடங்கிய பிரதேசம் என்பது தெரியலாம். செந்தமிழ்நாட்டினைச் சூழ்ந்திருந்த நிலங்களாகப் பண்டைக்காலத்துக் கருதப்பட்ட பன்னிருநிலங்களில்—குட்டம், குடம், கற்கா, பூழி, மலாடு என்பன இச்சேரமண்டலத்தைச் சேர்ந்தன என்பதும் அறியத்தக்கது. குட்டுவன், குடக்கோ, பூழியன், மலையன் என வழங்கும் சேரரது பழம்பெயர்களால்[1], அந்நாடுகளினுரிமை அவ்வரசர்க்குண்மை விளங்கும். இச்சேரநாட்டில் அடங்கிய சேலம் கோயம்புத்தூர்ஜில்லாக்கள் கொங்குநாடு எனவும் பழமையான பெயர்கொண்டுள்ளது. இக்கொங்குநாட்டின் உரிமைபற்றியே கொங்கன்,[2] கொங்கர்கோ என்றும் சேரர் பெயர்பெற்றனர். சேரநாட்டுமலைகளுள் கொல்லியும் அயிரையும் சிறந்தனவாகும். 'பொறையன் கொல்லி' (அகநா. 238) 'அயிரைப் பொருந' (பதிற்-21) எனக் காண்க. பழனி மலைத்தொடரும் இச்சேரர்க்குரியதே. "சேரர்கொங்கு வைகாவூர் நன்னாடு" என்றார் அருணகிரிநாதரும். வையைக்கரை வழியே சென்று சேரநாட்டுள்ள நெடுவேள்குன்றமாகிய இம்மலைப்பகுதிக்கு வந்தே[3] கண்ணகி சுவர்க்கமடைந்தாள் என

1. 'குடக்கோச் சேரல்' (சிலப்.), 'இயறேர் குட்டுவன்' (சிறுபாண. 49), 'பூழியர் மெய்ம்மறை' (பதிற். 73), "சேரன்பொறையன் மலையன்" (சிலப். 29, 'ஓரைவர்') எனக் காண்க.

2. 'குடகொங்கன்' என்ப (திவ். பெரியதிரு. 6, 6, 6).

3. இதனால், வையைக்குத் தொடர்புடையவாகாத திருச்செங்குன்றூர் திருச்செங்கோடுகளை நெடுவேள்குன்றமாகக் கொள்வார் கருத்து ஏற்புடையதன்மை காண்க.

இளங்கோவடிகள் பாடுதலும் அறிக. இவற்றுள் அயிரை என்பது பழனிமலைத் தொடரையடுத்த ஆனைமலைத்தொடர்களுள் ஒரு பகுதியாம். இம்மலையில் உற்பத்தியாவதே அயிரைப்பேரியாருகிய பொன்னனியாகும். இது சேரர்தலைநகர் கூறுமிடத்து விளக்கப்படும். காவிரியின் தலையிடைப்பகுதிகளும், ஆன்பொருநை, குடவனாறு, காஞ்சி, காரியாறு, பேரியாறு, சுள்ளியம்பேரியாறு முதலிய நதிகளும் இச்சேரநாட்டில் ஓடுவனவாம்.

இவ்வாறு, நாடு மலை நதிகள் கொண்ட சேரமண்டலம், ஒவ்வொருகாலத்து விரிந்துங்குறைந்தும் இருந்திருத்தல்கூடியதே; அதனால் இதனெல்லைகளை வரையறுத்துக் கூறுதல் அரிது. செங்குட்டுவன் சங்கநாளில் விளங்கிய பெருவீரனாதலின், அவன்காலத்திலே சேரதேசம் பண்டையினும் விரிவுடையதாகவே இருந்ததாகல்வேண்டும். இவன் வென்றடிப்படுத்திய நாடுகளில் கொடுகூர் என்பதும் ஒன்று. இது மைசூர்ச்சீமையின் தென்பகுதியில் உள்ளது. இதனை இச்சேரன் வென்றான் என்றதற்கேற்பச் சாஸனமும் இதனைச் சேரமானொருவனுக்கு உரிமையாக்கிக் கூறுதல் மேலே கூறப்பட்டது.[1] இதனாலும் சேரநாடு முற்காலத்தில் அதிகவிரிவு பெற்றிருந்தமை பெறப்படும். இத்தேசத்தே மேற்குத்தொடர்ச்சிமலைக்கு உள்ளடங்கிய கடன்மலைநாட்டில் செங்குட்டுவனுக்கு உரிமை யுண்டாயினும், அதன்பகுதிகள் சிலவற்றை இவன் ஞாதியரசர் ஆண்டு வரலாயினர். அவருள் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தொண்டிப்பிரதேசத்தை நறவு என்ற நகரிலிருந்து ஆட்சிபுரிந்தவனென்பதும்,[2] செங்குட்டுவன் சிறியதந்தை பல்யானைச் செல்கெழுகுட்டுவன் குட்ட

1. இந்நூல், 29-ம் பக்கம் காண்க.
2. பதிற்றுப். 60. உரை.

நாட்டை ஆண்டுவந்தவன் என்பதும் இங்கு அறியத்தகும். இக்குட்டுவன் வமிசமில்லாதவனாய்த் துறவுபூண்டு காடுசென்றவன் என்பது இவனைப்பற்றிய மூன்றாம்பத்துப் பதிகத்தால் தெரியவருகின்றது. அதனால் இவனாண்ட குட்டநாடு இவன் தமையன்மகனும் பேரரசனுமான செங்குட்டுவனுக்கே உரியதாயிற்றெனல் வேண்டும். குட்டுவன் என்பது குட்டநாடுடைமைபற்றி வந்த பெயராதலால்,[1] நம்சேரனும் அவன் சிறிபதந்தையும் அந்நாடாட்சி பெற்றவர்களென்பது தெரியலாம். பல்யானைச் செல்கெழுகுட்டுவன் கடன்மலை நாட்டுப் பகுதியை ஆட்சிபுரிந்தவன் என்பது, சேரர்தலைநகர் கூறுமிடத்தும் விளக்கப்படும்.

---

## (2) சேரர் தலைநகர்

தமிழ்நாடாண்ட மூவேந்தருள்ளே சோழர் பாண்டியர்க்கு உறையூர் காவிரிப்பூம்பட்டினங்களும், மதுரையும் எவ்வாறு பழமையும் பெருமையும் பெற்ற தலைநகரங்களோ அவ்வாறு சேரர்க்குச் சிறந்தநகரம் கருவூர் ஆகும். "நெடுந்தேர்க்கோதை, திருமாவியனகர்க் கருவூர்"[2] என்ப. தொண்டி மாந்தை முதலிய துறைமுகநகரங்களும் சேரர்க்குச் சிறப்புடைய ஊர்களாயினும் கருவூர்க்கு அவை அடுத்த தரத்தனவேயாம். உறையூர் கோழி எனவும், காவிரிப்பூம்பட்டினம் புகார் எனவும், மதுரை கூடலெனவும் இலக்கியவழக்குப் பெற்றவாறே, இக்கருவூர் வஞ்சி[3] என முன்னூல்களால்

---

1, சிறுபாண். 49, உரை.

2. அகநானூறு, 93. 3. இப்பெயரினையே—'பூவாவஞ்சி' (புறம். 32; சிலப், 26. 50), 'வாடாவஞ்சி' (ஷை, 28. 180), பொற்கொடிப் பெயர்ப்படூஉம் பொன்னகர்'' (மணி. 26, 92) என்பன முதலாக வெளிப்படையாகப்பெற முன்னூல்கள் கூறுவன.

வழங்கப்பெறுவதாம். இதனை, "வஞ்சி கருவூர்"[1] எனத் திவாகரத்திலும் பிங்கலந்தையிலுங் கண்ட தொடராலும்—

> "தண்பொருநைப் புனற்பாயும்
> விண்பொருபுகழ் விறல்வஞ்சி" (புறம். 11)
> "வருபுனல் வாயில் வஞ்சி" (சிறுபாண். 50)

என்பன முதலியவற்றாலும், வஞ்சியென வருமிடங்களையெல்லாம் பண்டை உரையாசிரியர்கள் கருவூர் என்ற பெயரால் விளக்கிச் செல்லுதலாலும் அறியலாகும். ஆன்பொருநை என்ற நதி, இக்கருவூர்வஞ்சியைச் சூழ்ந்தும், அதன் அலைகள் அந்நகரின் கோட்டைமதிலிற்றாக்கும்படி நெருங்கியும் மணல்களைக்குவித்தும் செல்வது என்பது—

> "தண்பொருநை சூழ்தரும் வஞ்சியார் கோமான்" (சிலப். 29)
> "வஞ்சிப் புறமதி லலைக்குங் கல்லென் பொருநை" (புறம். 387)
> "கருவூர் முன்றுறைத் தெண்ணீ ருயர்கரைக் குவைஇய
> "தண்ணான் பொருநை மணலினும் பலவே" (அகம். 93.)

என்ற சான்றோர் கூற்றுக்களால் அறிந்தது. இவ்வான் பொருநை—ஆனி, வானி, ஆன்பொருந்தம், தண்பொருந்தம், சூதநதி எனவும் பெயர்பெறுவதாம்.[1]

இனி, சேரர் தலைநகரான கருவூர்வஞ்சியின் பழைய அமைப்பு முன்னூல்களில் அடியில்வருமாறு சிறப்பிக்கப்படுகின்றது. இம்மூதூரின் கோட்டைக்கு வெளியே, தேவர் கோட்டங்களும் பொதுவிடங்களும் சைனப்பள்ளிகளும் பொழில்களும் பொய்கைகளும் மிக்கிருந்ததோடு, அவ்விடங்களில் தவமுனிவரும் ஞானிகளும் கலைகள்வல்லோரும் எங்கும் நிறைந்திருந்தனர். கோட்டையைச் சூழ்ந்துள்ள புறக்குடி என்ற புறஞ்சேரியில், அரண்காவல்புரியும் படையிருப்புக்களும் அந்நியவரசர் தங்குதற்கமைந்த மாளிகைகளும் இருந்தன. கோட்டையை ஆழ்ந்தகன்ற அகழி

1. பிங்கல நிகண்டு, 4: 118.

சூழ்ந்திருந்தது. அதனிற் பலவகை முதலைச்சாதிகளும் பெருமீன்களும் நிறைந்திருந்தன. வஞ்சிமாநகருள்ளே பெருகியோடுங் கழுநீரெல்லாம் முடிவில் அவ்வகழிக்கண்ணே சென்று சேர்வதாம். இவ்வகழிக்கும் கோட்டைக்கும் இடையிலே காவற்காடொன்று உண்டு. கோட்டைமதில், பகைவரை அழிக்கத்தக்க எந்திரங்கள் பலவற்றால் மாட்சிமைபெற்றிருந்தது. அதன் வாயிலானது, வேலைப்பாடு மிகுந்து, பலநிலைகள் கொண்ட கோபுரத்தோடுங் கொடிகளோடும் வெள்ளிமலையொன்று உள்கிழிந்தாற்போல விளங்கியது. இவ்வாயிலைக் கடந்துசெல்லின், கோட்டைவாயில் காக்குங் காவலாளர் நெருங்கியுறையும் வீதிகளும், மீன்விலைஞரும் உப்புவாணிகரும் கள்விற்போரும் பிட்டுஅப்பங்கள் விற்போரும் வாசனைப்பண்டம்விற்போரும் இறைச்சிவிற்போரும் வசிக்கின்ற வீதிகளும் அமைந்திருந்தன. இவ்வீதிகளையடுத்து — மட்கலஞ்செய்யுங் குயவர், செப்புகொட்டிகள், வெண்கலக்கன்னார், பொற்கொல்லர், தச்சர், மட்பாவைசெய்வோர், தையற்காரர், மாலைகட்டுவோர், சோதிடர், பாணர்முதலியோர் தெருக்களும், சங்கறுப்போர் இரத்தினப் பணியாளர் வீதிகளும், நாடகக்கணிகையர் வீதியும், நெல்லுப் புல்லு முதலிய கூலவகை விற்போர் தெருவும், சூதர் மாகதர் வேதாளிகர் பொதுமகளிர் தெருக்களும், ஆடை நெய்துவிற்போர் பொன்வாணிகர் இரத்தின வியாபாரிகள் வீதிகளும், அந்தணர் அக்கிரகாரமும், இராசவீதியும், மந்திரிகள்வீதியும், பல்வகை அரசாங்க அதிகாரிகள் வாழுந் தெருக்களும் அப்பெருநகரில் முறையே அமைந்திருந்தன. இவையன்றி, யாவரும்வந்து தங்குதற்குரிய மரத்தடிகளும், அம்பலமும், முச்சந்தி நாற்சந்திகளும், அருவியோடும் அழகிய செய்குன்றுகளும், இளமரக்காக்களும், பொய்கைகளும், அறச்சாலைகளும், பொன்னம்பலமும், தவப்பள்ளிகளும்

விளங்கின. மிகவழகாக அமைக்கப்பட்ட பௌத்த சைத்திய மொன்றும்[1] அவ்வஞ்சியினுள்ளே திகழ்ந்தது.

சேரருடைய அரண்மனையானது அம்மூதூரின் மத்தியில் பொன்மயமானதொரு சிறுமேருவைப்போலப் பிரகாசித்தது; "நெடுநிலை மேருவிற் கொடிமதின் மூதூர், நடுநின் றோங்கிய, தமனிய மாளிகை" என்பர் இளங்கோவடிகள்.[2] அதனுள் அத்தாணிமண்டபமும் (கொலுவிருக்கை), வேத்தியன் மண்டபமும் (மந்திராலோசனைச்சபை), மணியரங்குகளும்(நடனசாலை) பிறவும் மாட்சிமைபெற்று விளங்கின. அரசன் தன்மனைவியுடன் வசந்தகாலத்தைக் கொண்டாடுதற்கென்றமைந்த 'இலவந்திகை வெள்ளிமாடம்' என்னும் தனிமாளிகை யொன்றுண்டு[3]. இஃதன்றி, நகர்ப்புறத்தே பொய்கைகளாலும் சோலைகளாலும் சூழப்பட்ட வேளாவிக்கோ மாளிகை[4] என்னும் ஓர் அழகிய மந்திரமும் அமைந்திருந்தது. இது 'வேண்மாடம்' எனவும் வழங்கப்படும்.[5] செங்குட்டுவன் மாற்றாந்தாய்ப் பாட்டனும், பொதினிமலைத் தலைவனுமான வேளாவிக்கோமான் பெயர்பெற்றிருத்தலால், இம்மாளிகை அவன் வசித்துவந்தது போலும். இவ்வழகிய மாடம் செங்குட்டுவன்காலத்தே அந்நியவரசர் தங்குதற்கென்று உபயோகப்பட்டது. திருமால் பள்ளிகொண்டருளும் ஆடகமாடம்[6] என்ற ஆலயமொன்றும் வஞ்சிப் பக்கத்திருந்ததாகும். இந்நகரம், சோழராஜதானியாகிய உறையூரினும் பெரியதாயிருந்தது என்பது 'உறையூரிற்பெரிது

1. கோவலனுக்கு ஒன்பதாந்தலைமுறைப் பாட்டனான கோவலனால் வஞ்சிநகரிற் கட்டப்பட்டதாக மணிமேகலையிற் கூறப்படும் பௌத்தசைத்தியம் இதுபோலும் (காதை-28. 23—31).

2. சிலப். 28. 48—50. 3. ஷை. 25, 4.

4 ஷை, 28. 197—8. 5, புறநா. 13. 6. சிலப். 30. 51.

கருவூர்' என்ற உரையாசிரியர் கூற்றான் உணரப்படும் (தொல். சொல், 106).

இங்ஙனம், சேரரது பழைய இராசதானியாகச் சிறப்பிக்கப்பட்ட வஞ்சியென்பது யாதென ஆராயுமிடத்து, அது, கொங்குநாட்டுத் தலங்களுள் ஒன்றும், இப்போது திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சார்ந்துள்ளதுமாகிய கருவூரே [1] என்பது தெளிவாகின்றது. முன்னூல்களிற் கூறப்பட்டவாறே, இவ்வூர் ஆமிராவதிநதிக் கரையில் உள்ளதாம்; ஆமிராவதி என்பது, ஆன்பொருநையின் வடமொழிப்பெயர்; "பொற்புமலி யாம்பிரவதி யான்பொருநை யெனவும் புகலுவரால்'' என்பது கருவூர்ப்புராணம் [2] [ஆமிரம் - மாமரம்.] "வஞ்சிப் புறமதி லலைக்கும்...பொருநை'' என்றபடி, இக்கருவூர்ப்பக்கத்து நதி "பொருநெய்'' என்று பின்னோர் எழுத்திற் காணப்படுவதும் அறியத்தகும். [3] சூதநதி என்று பிங்கலநிகண்டு இதற்கொரு பெயர்கூறுவது ஆமிராவதி என்பதோடு ஒத்தபொருளுடையதேயாம் [சூதம் - மா]. இந்நதி வராகமலையில் உற்பத்தியாகி மாமரச்சோலை வழியே செல்லுதலால், இப்பெயர்கள் பெற்றதென்பர். "வஞ்சிப் புறமதி லலைக்கும் கல்லென் பொருநை'' "தண் பொருநை சூழ்தரும் வஞ்சியார் கோமான்'' என முன்னோர் கூறியவாறே, இக்காலத்தும், இவ்வாமிராவதி கருவூரை

1. கர்ப்பபுரி என்பர் வடநூலார்.

2. இப்புராணம் இற்றைக்கு முந்நூறு வருஷங்கட்குமுன் இயற்றப்பட்டதென்பது, அதன் பாயிரச்செய்யுளால் அறியப்படுகின்றது; இனிய வாக்குடையது; நூலாசிரியர் பெயர்முதலிய வரலாறுகள் விளங்கவில்லை. இந்நூல் கூறுமாறே, பேரூர்ப்புராண முதலியனவும் ஆமிராவதியே ஆன்பொருநை எனவும், அதன்கரையினதாகிய கருவூரே வஞ்சியெனவும் தெளிவுபடக் கூறுவனவாம்.

3. செந்தமிழ், 15, 608.

யொட்டித் தென்றிசையிலிருந்து கீழ்புறமாகவோடி வடக்கே திரும்பிக் காவிரியுடன் கலக்கின்றது. இக்கருவூரே, வஞ்சி எனத் தமிழினும், வஞ்சுளாரணியம் என வடமொழியினும் வழங்கப்படுவதாம் [1]; "வஞ்சுளா ரணியம் வஞ்சி கருவூர்" என்பது கருவூர்ப் புராணம். இதற்கேற்ப, பாடல்பெற்ற இவ்வூர்ச் சிவபிரான் "திருவானிலை வஞ்சி நாயகன்" எனவும், ஆம்ராவதிக்குவடக்கே [2] கோயில்கொண்ட சிவபிரான் வஞ்சுளேச்சுரலிங்கம் எனவும், தென்றிசையில் நதிக்கரையிலுள்ள துர்க்காதேவி வஞ்சியம்மன் எனவும் இக்காலத்தும் அழைக்கப்படுதல் அறியத்தக்கது. இனிச் சாஸனவழியே நோக்கினும் கருவூர்க்கே வஞ்சிப்பெயருரியதென்பது தெளியப்படும். வீரகேரள மண்டலத்து வெங்கலநாட்டுத் திருவஞ்சி மாநகரமான முடிவழங்கு சோழபுரத்தில்" என அவ்வூர்ப் பசுபதீசுரர்கோயிலிற் காணும் சாஸனத்தொடரும் [3] "வஞ்சி ஸ்ரீவைஷ்ணவரோம்" என அவ்வூர் அரங்கநாதப்பெருமாள் கோயிலிற் காணும் சாஸனத்தொடரும், கருவூரை யடுத்த நெரூர்க்கோயிலில், குலோத்துங்கசோழன்காலத்து அமைந்த சாஸனமொன்றில்—"வெங்காலநாட்டு வஞ்சிமாநகரமான கருவூர்" என வரையப்பட்டுள்ள தொடரும், [4] அக்கருவூர்க்குக் காததூரத்தே உள்ள புகளூர் (புகழியூர்)க் குன்றில் அமைந்த பிராம்மி சாஸனமொன்றில் 'கருவூர்ப்பொன்வாணிகன்' என்றுள்ள தொடரும், அந்நகரைக் கருவூர், வஞ்சியென்று கூறுதல் காணலாம்.

---

1. வஞ்சிமரம் நிறைந்த காடாதலின் இப்பெயர் பெற்றதென்பர் (வஞ்சிமாநகர், பக். 36-9).

2. திருவானிலைப் பசுபதீசுவரர் கோயிற்குத் தென்பாலுள்ளது.

3. செந்தமிழ், தொ - 15, பக். 606.

4. Ep. Rep. Nos. 335, 349 of 1928.

கருவூர்க்கு வடகிழக்கே, ஆமிராவதி மணிமுத்தாநதி காவேரி இம் மூன்றுங்கூடுங் திருமுக்கூடல் என்ற சங்கமத் துறையொன்று உள்ளது; "வஞ்சுளா டவிக்குத் தீரகுணக் காக வாம்பிர வதிநதி மதிபோல், விஞ்சுமா மணிமுத் தாறு காவேரி மேவுழி மேவு மேவுதலால், எஞ்சலில் திருமுக்கூட லென்றிசைப்ப'' என்பது கருவூர்ப்புராணம்.[1] இம்மூந்நதி யின் கூடலே—

> "நாடுவளம் பொழிய வுலகம் புரைஇச்
> செங்குணக் கொழுகுங் கலுழி மலிர்நிறைக்
> காவிரி யன்றியும் பூவிரி புனலொரு
> மூன்றுடன் கூடிய கூட லனையை" (பதிற். 50.)

என்று செங்குட்டுவனுக்குப் பரணர் உவமித்ததாம். "மூன் றுடன் கூடிய கூடல் என்றது, அக்காவிரிதானும் ஆன்பொரு நையும் குடவனாறும் என இம்மூன்றுஞ் சேரக்கூடிய கூட் டம்'' என்பர் பதிற்றுப்பத்துரைகாரர். இதனால், காவிரி செங்குணக்காக (=நேர்கிழக்காக)ச் செல்லுமிடத்து இம் முக்கூடல் உள்ளமை பெறப்படும். மேலடியிற் கூறப்பட்ட வாறு, நாடுவளம் பொழியும்படி உலகத்தைப்புரந்துகொண்டு காவிரி நேர்கிழக்காக ஒழுகுவது, கொங்குநாட்டில் கரு வூர்க்கு வடகிழக்கே சிலநாழிகைதூரத்தில் அஃது ஆமிரா வதியுடன் கலந்தது முதலேயாகும். இதனானும், செங்குட் டுவற்குப் பரணரால் உவமை கூறப்பட்டது, சேரர்தலைநக ரான வஞ்சிமாநகர்க்குப் பக்கத்துள்ள முக்கூடலே என்பது தெளியப்படும்.

---

1. ஆம்பிராவதிச்சருக்கம். 45.—மணிமுத்தாநதி, காவிரியு டன் கலக்குமிடம் இப்போது மேற்கே சிறிது தூரத்துள்ளது. முற் காலத்து இந்நதி ஆன்பொருநையுடன் சேர்ந்து காவிரியிற் சங்கமித் ததுபோலும்.

இக்கருவூர்க்குக் கிழக்கே ஆமிராவதிக் கரையிலுள்ள அரசவனம் என்னும் பிரதேசத்தில் திருமால் பள்ளிகொண்டருளும் ஆலயமொன்றுண்டு என்று கருவூர்ப்புராணங் கூறுகின்றது.[1] அஃது இப்போது கருவூரில் அரங்கநாதப்பெருமாள் கோயில் என்று வழங்கப்படுந் தலமாயுள்ளது. ஆடகமாடம்[2] என்ற பெயருடன் திருமால் பள்ளிகொண்டருளுங் கோயிலொன்று வஞ்சிப்பக்கத்துள்ளதாக இளங்கோவடிகளாற் குறிக்கப்பட்டிருப்பது, மேற்கூறிய சந்நிதியேயாதல்வேண்டும். சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர்

---

1. ஆம்பிராவதிச்சருக்கம்.

2. ஆடகமாடம்—பொற்கோயில்; 'கூடலின்வா யாடகமாடம்' எனக் களவியலுரையில் வரும் மேற்கோட்டொடரும் (83) காண்க. இதுபோலவே வெள்ளிமாடமும் உண்டு (சிலப் 25. 4).

3. இத் திருமால்கோயில் கருவூர்வஞ்சிக்குப் பக்கத்திலிருந்ததேயாம். இஃது, அக்கோயிற் சேடக்குடும்பியின் (அருச்சகன்) மகள் முற்பிறவியிலே கோவலனை அடைக்கலம்பெற்றிருந்த மாதரி என்ற இடைக்குலமகளா யிருந்தவள் என்பதைச் செங்குட்டுவனுக்கு மாடலன் விளக்குமிடத்தே—'அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலுண்டு' என்னும் நியதிபற்றி—அம்மாதரி கண்ணகிபால் வைத்த காதன்மிகுதியாலும், திருமாலுக்குக் குரவையாடிய சிறப்பாலும் அப்பத்தினி 'அஞ்சா தணுகும், வஞ்சி மூதூர் மாநகர் மருங்கில், ஆடக மாடத் தரவணைக் கிடந்தோன், சேடக்குடும்பியின் சிறுமகளாயினள்' என்றும், அவ்வாறே கண்ணகிகோவலர்களின் தாயரும் அவ்வஞ்சிமருங்கில் அரட்டன்செட்டியின் இரட்டைப் பெண்களாகப் பிறந்தனர் என்றும் கூறிப்போந்தவாற்றாலும் (சிலப் 30, 122—140), தெய்வவுருவிற் பிரதிட்டைபெற்ற கண்ணகிக் கடவுள் தன் கோட்டத்தையடைந்த மணிமேகலையைநோக்கி "முறைமையி னிந்த மூதூரகத்தே" எனத் தான் கோயில்கொண்டது வஞ்சியே என்பதைச் சுட்டிக் குறிப்பித்தலாலும் (மணிமே. 26, 63) உய்த்தறியப்பெற்றமை காண்க. (வஞ்சிமா

"ஆடகமாடம் - திருவனந்தபுரம்; இரவிபுரம்[1] என்பாரும் உளர்" என்று எழுதினர். ஆனல், செங்குட்டுவன், பேராற்றங்கரையினின்று மீண்டு தன்னகர்வந்து ஓரேயிரவில் சித்தஞ்செய்து அடுத்தநாட்காலை வடநாட்டிற்குப் பிரயாணித்த அவசரதருணத்தில், ஆடகமாடத்துள்ளக்கோயிலினின்றுதிருமால் பிரசாதத்துடன் சிலர்வந்து அவனைக்கண்டனர் என்று சேரவடிகள் கூறுவதை[2] நோக்குமிடத்து, அக்கோயில், வஞ்சியாகிய கருவூர்க்குப் பக்கத்திருந்ததாகுமே யல்லது, உத்தேசம் 150 மைலில், 2, 3-நாட் பயணதூரமுள்ள திருவனந்தபுரம் அல்லது இரவிபுரம் ஆகாவென்பது திண்ணம்; ஆதலால், மேற்கூறிய அரங்கநாதப்பெருமாள்சந்நிதியே பழைய ஆடகமாடமாகக் கொள்ளுதல் பொருந்துமென்க.[3]

---

நகர், பக்கம், 81—5). அதனல், கண்ணகியைக் காணச்சென்ற தேவந்தி முதலியோர் "மாமலைமீ மிசையேறிக் கோமகடன் கோயில் புக்கார்" (உரைபெறுகட்.) என இளங்கோவடிகள் கூறியதற்கு, மலைவழியை ஏறிக்கடந்து அவர்கள் வஞ்சியிலுள்ள கண்ணகிகோயில் புக்கார் என்றும், 'வென்வேலான் குன்றில் விளையாட்டியானகலேன், என்னெடுந் தோழிமீ ரெல்லாரும் வம்மெல்லாம்" என அவ்வடிகள் வாழ்த்துக்காதையிற் கூறியதற்கு "நான் (என் கணவனுடன் சுவர்க்கம்புக்க) வென்வேலான் குன்றில் வந்து விளையாடுவேன், நீங்களும் அங்கே வாருங்கோள்" என அரும்பதவுரைகாரர் எழுதியதே பொருளென்றும் அறிந்துகொள்க.

1. (சிலப். 26, 62. அரும்.)—இரவிபுரமென்பது, திருவாங்கூர்ச் சீமையிலுள்ள கேரளபுரத்தைச் சார்ந்த கிருஷ்ணன்கோயில் என்ற ஊராகத்தெரிகின்றது. (T. A. S. V. p. 116).

2. இந்நூல். பக். 58.

3. கருவூர் ஸ்ரீ அரங்கநாதர்சந்நிதியை நேரிற்சென்று தரிசிக்க நேர்ந்தபோது, அக்கோயில் சிறியதாயினும் பழைமையே காணப்பட்டது; கர்ப்பக்கிருகத்துள்ளே அரவணையிற் பள்ளிகொண்

செங்குட்டுவன் சிவபிரான்பாற் பத்திமிகுதியுடைய னென்பதை முன்னமே விளக்கினோம்[1]. இளங்கோவடிகள்

---

டருளும் பெருமாள் **சாந்தாகாரம்** உடையவரென்று விசாரணையில் தெரிந்தேம். ஆனால், கர்ப்பக்கிருகத்தின் மேற்கு வெளிப்பிராகாரத்தை யாம் அடைந்தபோது, ஒரு சிறுபந்தருள் சேஷசாயியாகத் திருமாலினுருவம் வகுக்கப்பட்ட பெரிய சிலையொன்று அற்புதமாக ஆங்குக் காணப்பட்டது. அம்மூர்த்தியின் வரலாற்றை விசாரித்ததில், மடைப்பள்ளியைத் திருப்பணிக்காகப் பிரித்தபோது; பூமியின்கீழ் அவ்வழகிய சிலை அகப்பட்டுச் சிலமாதங்களே ஆயினவென்று தெரியவந்தது. இவற்றை நோக்குமிடத்து,அவ்வரவணைக்கிடந்த மூர்த்தியே செங்குட்டுவன்காலத்து "ஆடகமாடத் தரவணைக் கிடந்தோ" னாக வேண்டுமென்றும், ஏதோ காலவிசேடத்தால் அம்மூர்த்தி பூமியில் மறைந்துவிட அதற்குப் பிரதியாகச் சாந்தாகாரமூர்த்தி அக்கோயிலுள் எழுந்தருளப் பண்ணப்பட்டதென்றுங் கருதல் தகும். அக்கோயிலைச் சூழவுள்ள பிராமணத்தெரு **வித்துவக்கோட்டக்கிரகாரம்** எனக் கருவூர்ப்பக்கத்தவரால் இன்றும் வழங்கப்பட்டு வருவதாம். இதனால் வித்துவக்கோடு என்பது இக்கோயிலுள்ள கருவூர்ப்பகுதிக்கு முன்புவழங்கிய பெயரென்பது பெறப்படும். வஞ்சியின் எயிற்புறவிருக்கையை — 'தேவகுலமுந் தெற்றியும் பள்ளியும், நற்றவ முனிவரும் கற்றடங்கினரும், நன்னெறி காணிய தொன்னூற் புலவரும், எங்கணும் விளங்கிய" இடமாகச் சாத்தனார் மணிமேகலையில் (26, 71—76) கூறியவாறு, தெய்வங்கட்கும் அறிஞர்கட்கும் வாழ்விடமாய்ச் சிறந்தது ஆன்பொருநைக் கரையிலுள்ள இவ் வித்துவக்கோடேயாதல் வேண்டும். [வித்துவக் கோடு— வித்துவான்கள் வாழும் நீர்க்கரை; கோடு - கரை; குறள். 553)] குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த வித்துவக்கோட்டுப் பதிகம் இக்கருவூர்த்திருமாலைப் பற்றியதே என்பதனையும், மலையாளம் ஜில்லாவில் பட்டாம்பி ஸ்டேஷன்பக்கத்தே பாரதப்புழைக் கரையிலுள்ள **திருமற்றக்கோடு** என்ற விஷ்ணுஸ்தலத்தை இவ்வித்துவக்கோடாகச் சிலர் கருதியதற்கு இயைபு சிறிதும் இல்லையென்பதனையும் "ஆழ்வாரகள் காலநிலை" என்ற நூலின் 188—192-ஆம் பக்கங்களில் விளங்க விரித்துள்ளேம்.

1. இந்நூல், பக். 96.

வஞ்சியிலிருந்த சிவாலயத்தைப்பற்றி ஒன்றுங்கூற நேராமற் போயினும், 'ஆனேறுயர்த்தோன்' 'செஞ்சடைவானவன்' 'உலகுபொதியுருவத் தயர்ந்தோன்' எனத் தம் தமயனாற் பத்திசெய்யப்பட்ட சிவபெருமானைச் சிறப்பித்தலின், அப் பெருமானுக்கு ஆலயமொன்று அந்நகரில் அமைந்திருந்ததா கக்கொள்ளத் தடையில்லை. அவ்வூர்ச் சிவபிரானுக்குப் பசுபதீசுவரர் என்றுள்ள திருநாமத்துக்கியைய "ஆனேறு யர்த்தோன்" எனச் சிலப்பதிகாரமும், "எருதேறி யூர்வா யெழில்வஞ்சி" எனப் பரணர்வாக்காகக் கருதப்படும் சிவபெ ருமான் திருவந்தாதியும் (95) கூறுதல் ஈண்டு ஒப்பிடற் பாலது. இப்பசுபதீசுவரர் ஆலயம் கருவூர்த் திருவானிலை எனத் தேவாரப்பாடல் பெற்றிருத்தலோடு, சோழர் சாஸ னங்கள் பல கொண்டதாகவும் உள்ளது. காமதேனுவாகிய பசுவினாற் செய்யப்பட்ட ஆலயமாதலின் இதற்கு 'ஆனிலை' எனப் பெயர் வழங்கியதென்பர். இதுபற்றியே, இக்கோயிற் சிவபிரான் பசுபதீசுவரர் எனப்பட்டார். இங்ஙனம் கருவூர் க்கு ஆனிலை என்ற பெயரிருத்தல்போலவே, அவ்வூரை யடுத்துச் செல்லும் ஆமிராவதிக்கு—ஆன்பொருநை, ஆன் பொருந்தம் எனப் பசுவின் சம்பந்தமான பெயர்கள் வழங் குதல் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

இனி, வஞ்சியை மேற்கூறிய கருவூராகக் கொள்ளாது, மலைநாட்டுக் கொடுங்கோளூர் அல்லது திருவஞ்சைக்களம் என்று கருதுவாரும், அந்நாட்டு மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்துப் பேரியாற்றங்கரையிலுள்ள திருக்கரூர் [1] என்று

---

1. திருக்கரூர் (Tiru-karur), கொச்சிக்கு வடகிழக்கே 28-மைலிலும், கோதைமங்கலத்துக்கு 3-ம் மைலிலும் உள்ள தென்றும், அஃது இப்போது பாழூராயிருப்பினும் இடிந்த பல பெரிய கட்டிடங்களும் கோயிலும் உடையதென்றும் கூறுவர் (The Tamils 1800-years ago p. 15).

கருதுவாருமெனச் சரித்திரவறிஞர் பலராயினர். இவற்றுள் முதலிற் கூறியது, உரையாளரான அடியார்க்கு நல்லார்க்கும் ஒத்தகொள்கையா யிருத்தலே வியப்புத் தருவதாம்.[1] ஆனால், இவ்விரண்டுகொள்கைகளும் ஆராயுமிடத்துச் சிறிதும் பொருந்துவனவாகக் காணப்படவில்லை. முதலாவது— திருவஞ்சைக்களம் என்பது கொச்சிக்கு வடக்கே 10-மைல் தூரத்தில் சுள்ளியம்பேரியாறு மேல்கடலிற் சங்கமமாகுமிடத்து உள்ளது. இவ்வூர், பாடல்பெற்ற பழைய சிவதலங்களுள் ஒன்று. இத்தலத்தைப்பற்றிச் சுந்தரமூர்த்தி நாயனர் பாடிய பதிகத்தில்—"கடலங்கரைமேன் மகோதை யணியார்பொழில் அஞ்சைக்களத் தப்பனே" என்ற தொடரே பாட்டிறுதிதோறும் பயின்றுவருவதாம். மகோதை எனப்பட்ட கொடுங்கோளூரை அடுத்துள்ளதாதலால், இதனைக் "கொடுங்கோளூ ரஞ்சைக்களம்" என்ப.[2] எனவே, அந்நாயனர் காலத்துக்கு முன்பு அத்தலத்துக்கு வழங்கி வந்த பழையபெயர் அஞ்சைக்களம் என்பதேயன்றி வஞ்சிக்களம் அன்றென்பது விளக்கமாகும். 'மகோதையாகிய கொடுங்கோளூரினும் வஞ்சி வேறானநகரம் என்பதை—"வஞ்சியை விட்டகலஞ்சிய கோதை மகோதை" (42) "வஞ்சியுமுறந்தையுமரந்தையு மகோதையு மளிக்குமபயன் வருகவே" (63) எனக் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழில் கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தரும், "வஞ்சிக்கும் ஒதை மகோதைக்கும் மாமதுரை, யிஞ்சிக்குங் கொற்கைக்கும்" என்றுசங்கரசோழனுலாவுடையாரும் தெளிவாக்குதல் கண்டுகொள்க. இவர்கள் கூற்றால்—மதுரையுங் கொற்கையும் முறையே உண்ணாட்டுத் தலைநகரும் கடற்கரைப்பட்டினமுமாய்ப் பாண்டியர்க்

1. சிலப். பதிகம். 3, உரை.

2. தேவாரம், சுவாமிநாத பண்டிதர் பதிப்பு, பக். 1220 பாட்டு—5.

குச் சிறந்தமை போலவே—வஞ்சியாகிய கருவூரும், மகோதையாகிய கொடுங்கோளூரும் சேரர்க்குச் சிறந்தன என்பது நன்கு பெறப்படும். நல்லூர்நத்தத்தனார் சிறுபாணாற்றுப் படையுள், 'வஞ்சியும் வறிதே' 'மதுரையும் வறிதே' 'உறந்தையும் வறிதே' எனவும், நக்கீரனார் 93-ம் அகப்பாட்டில் 'சோழர்...உறந்தை' 'வழுதிகூடல்' 'கோதை திருமாவியனகர்க் கருவூர்' எனவும் மூவர்தலைநகரங்களையும் ஒருசேர அமைத்துக் கூறியது, அவை உண்ணாட்டூர்கள் என்பது விளங்கவே என்க. வஞ்சி கடற்கரையதாயின், 'தொண்டியங் கானல்' 'கடல்கெழுமாந்தை' என்றவாறு 'வஞ்சியங் கானல்' எனக் கடல்வளத்துக்குரிய அடைகொடுத்து நூல்கள் குறிப்பிட ஒருபோதுந் தவறா. அவ்வாறு ஒரு குறிப்பும் நூல்களிற் காணப்படாமை மட்டுமன்றி, அதற்குமாறாக 'வஞ்சிப்பைம் பூம்புறவின்'[1] 'வஞ்சி...பொருநை மணலினும் ஆங்கட், பல்லூர் சுற்றிய கழனி, யெல்லாம் விளையும் நெல்லினும் பலவே' (புறம். 387) எனச் சேர்தலைநகர் முல்லை மருதவைப்புக்களின் இடையிலுள்ளது என்பதே தெளிவாகக் கூறப்படலுங் காண்க. ஒருபக்கமுழுதும் கடற்கரையைக் கொண்டுள்ள கொடுங்கோளூர், கழனியெல்லாம் விளையும் பல்லூர் சுற்றியதாகாமை தேற்றமாம். இதுபற்றியே—"வருபுனல்சூழ்தரும் வஞ்சியார்கோமான்' 'வருபுனல் வாயில் வஞ்சி' என நதிக்கரையூராகவே சேரர் தலைநகரைச் செங்குட்டுவன்காலத்து முன்னோர் குறிப்பிட்டதூஉம் என்க. அத்தலைநகர் கடற்பக்கத்ததன்று என்பது வருபுனல் என்பதனால் நன்கு பெறப்படும்; வருபுனல் - நதி (திவா). "வருபுனல் வையை"[2] "வருபுனற் கற்சிறை"[3] "இருபுனலும் வருபுனலும்" (குறள்-737) என்ற சங்கநூல்வழக்குங் காண்க.

---

1. இறையனார் களவியலுரை மேற்கோள், பாட். 160.
2. சிலப். 14, 72; 30, 108. 3. மதுரைக்காஞ்சி. 725.

இனி, இந்திரவிழாவை மறந்ததனால் புகார் கடல்கொள்ளப்பட்டதெனவும், அதுபற்றி அங்கிருந்த கிள்ளிவளவன் அப்பட்டினத்தை விட்டோடினன் எனவும், அறவணவடிகளும் மணிமேகலையின்தாய் மாதவிமுதலியோரும் அக்கடல்கோளால் வருந்தாமல் வஞ்சியுட் புக்காரெனவும் சாத்தனார் கூறுவர்.[1] ஓர் ஊரைக் கடல்கொள்ளும்போது அதற்கஞ்சி அவ்வூரைவிட் டோடுவோர், கடல்கோளுக்கு எட்டாதென்று தாம் தெரிந்துகொண்ட அகநாட்டூர்கட்கே சென்றொடுங்குவரன்றி, அவ்வச்சத்துக்கே காரணமான பிறிதொரு கடற்கரையூரைப் பின்னும் அடைந்தனர் எனல் மக்களியல் புக்கும் சந்தர்ப்பத்துக்கும் சிறிதும் இயைவதன்றாம். அதனால், கடற்சம்பந்தமில்லாததும், சோணாட்டை அடுத்துள்ளதுமான வஞ்சிக்கே அவர்கள் சென்றனராதல் தெளியப்படும். (அவ்வஞ்சி கொங்குநாட்டு ஆன்பொருநைக் கரையிலுள்ள கருவூரே என்பது கூறவும் வேண்டுமோ?) இங்ஙனம் சேரர் தலைநகரம் கடற்கரைத் தொடர்பில்லாதிருந்ததை நேரில் அறிந்தே, 2-ம் நூற்றாண்டினரான தாலமி (Ptolemy) என்ற யவனாசிரியர் தாமெழுதிய பூகோளநூலில் 'கேரளபதிகளுடைய தலைநகர் கருவூர்' என்று கூறி, அதனைத் தாம் கூறிய கடற்கரையூர் வரிசையில் ஒன்றாக அமைக்காது, உள்நாட்டு நகரங்களுள் ஒன்றாகவே கூறுவாராயினர் என்பது அறியத்தகும்.[2] பழைய ரோம சக்கரவர்த்திகளான ஆகஸ்டஸ் (Augustus), டைபீரியஸ் (Tiberius), கிளாடியஸ் (Claudius) முதலியோர் நாணங்கள் இக்கருவூரிற் கண்டெடுக்கப்பட்டவற்றாலும்[3] இத்தலைநகரின் பழைமைபெருமைகள் நன்கு விளங்கக்கூடியன.

1. மணிமேகலை, 25. 201—6.
2. The Tamils 1800-years ago.
3. Gazetteer of Trichinopoly District, p. 260.

ஸ்ரீ கனகசபைப்பிள்ளையவர்கள் மேற்குமலைத் தொடர்ச்சியையடுத்துப் பேரியாற்றங்கரையிலுள்ள திருக்கரூரே சேரர்தலைநகரான வஞ்சியாதல் வேண்டுமென்றும், அக்கொள்கைக்கேற்பப் பேரியாறே நூல்களிற் கூறப்பட்ட ஆன்பொருநையாதல் வேண்டுமென்றும் ஒரு புதிய கொள்கையைக்கூற, அதனைச் சரித்திரவறிஞர் சிலர் பின்பற்றுவாராயினர். இக் கொள்கைக்கு அன்னோர்கண்ட ஆதாரமெல்லாம், கருவூரென்ற பெயரொற்றுமை யொன்றைத்தவிர, வேறு இல்லை. ஆனால், அவர் குறிப்பிட்ட ஊர்க்கோ திருக்காரியூர் என்பதே பழம்பெயராகக் கேரளோற்பத்தி கூறும்.[1] அதனால் கருவூரோடு அதனை இயைபுபடுத்தல் ஏற்புடையதன்றாம். இனி, வஞ்சியிலிருந்த செங்குட்டுவன் 'மஞ்சுசூழ்சோலைமலை காண்குவம்' என்று தன் பரிவாரங்களுடன் புறப்பட்டுப் பேரியாற்றை அடைந்தானென்று முன்னமே சொன்னோம். இதனால், மலைவளமில்லாததோர் இடத்தே அவன் தலைநகர் அமைந்திருந்ததாதல் வேண்டுமன்றோ? மேற்குமலைத் தொடரின் அடிவாரத்துள்ளதாகப் பிள்ளையவர்கள் குறித்த ஊரே செங்குட்டுவன் தலைநகராயின், மலைவளங்காண்டல் வேண்டி அவன் பேரியாற்றங்கரை சென்றுவந்தானென்று சிலப்பதிகாரங் குறிப்பதில் வியப்புத்தான் என்னை? இதனால், வஞ்சியென்பது ஆமிராவதி அல்லது ஆன்பொருநைப் பக்கத்ததும், வளமுள்ள மலைத்தொடரைத் தன்பக்கத்துடையதாகாததுமான கருவூரேயாதல் திண்ணமென்க. இங்ஙனமாயின், இக்கருவூரிலிருந்து செங்குட்டுவன் பிரயாணித்த பேரியாற்றங்கரை உத்தேசம் 100-மைல் தூரமுடையதாகல்வேண்டும். இவ்விடத்தே ஓர் ஆசங்கை சிலராற் கூறப்படுகின்றது. அஃதாவது—மலைவளங் காணச்சென்ற

1. 'திருக்காரியூர்ப் பொன்மண்டபத்து' என்பது அதனுள் வருந்தொடர் (வஞ்சிமாநகர், 163).

செங்குட்டுவன் 100-மைல் பிரயாணித்தவனுயின், அந்நெடும் பிரயாணத்தில் அவன் இடையிற்றங்கியே சென்றிருத்தல் வேண்டும்: அங்ஙனஞ் சென்ற செய்தியை அடிகள் குறிக்கவில்லையாதலால், அரசன் சென்றுவந்த பேரியாற்றங்கரை அவன் தலைநகர்க்கு அணித்தாதல் வேண்டும்—என்பதாம்; இக்கருத்துக்கு "அரசனும் உரிமையும் மலைகாண்குவம் என்றுவந்து கண்டஅன்றே வஞ்சி புகுந்தமையானும்" என அடியார்க்குநல்லார் எழுதியதை ஆதாரமாக அவர் காட்டுவர். ஆனல், செங்குட்டுவனது நீண்ட யாத்திரையைக் கூறுமிட மெங்கும் அவன் இடையிற்றங்கிய விவரத்தையும் இளங்கோவடிகள் கூறிச்செல்லும் இயல்புடையரோ எனின், இல்லை. இதற்கு நீலகிரியினின்று செங்குட்டுவன் கங்கைக்கப்பால்வரை சென்றுவந்த நெடும்பிரயாணத்தை அடிகள் மிகச் சுருக்கிக்கூறிச் செல்வதே தக்க சான்றாகும். அன்றியும் வஞ்சியாகிய கருவூருக்கும் பேரியாற்றங்கரைக்கும் நெடுந்தூரமுண்டென்பதற்குச் சிலப்பதிகாரத்தே மற்றொரு சிறந்த சான்றுமுண்டு; இளங்கோவடிகள் தம் தமயனது பேரியாற்றியாத்திரையை வருணிக்குமிடத்தே, 'இந்திரன் விளையாடிமகிழ்வதை விரும்பி, இன்பந்துய்த்தற்குரிய பொருள்களை யெல்லாம் அமைத்து அவற்றை ஒருநூற்றுநாற்பது யோசனைதூரம் விரிந்த யானைகளின்மேலேற்றிக்கொண்டு தன் பெரும்பரிவாரங்களுடன் சென்றது போலச் சென்றான்' என்கிறார்.[1] ஈண்டு 'ஒருநூற்றுநாற்பது' என்னுந்தொடர், இந்திரனது யானைப்பரப்பின் தூரத்தைக் குறிப்பதுபோலவே, செங்குட்டுவனது யானைப்பரப்பின் மிகுதியையும் குறிப்பதென்னத் தடையில்லை. எனவே, அவனது பயணமுந் தூரமுடையது எனக் குறிப்பிடப்பட்டபடி

---

1. சிலப். 25. 9—16.

யாம். இன்றேல், நூற்றுநாற்பதென்ற எண்ணை இளங்கோவடிகள் கூறுவதற்குத் தக்ககாரணம் வேண்டுமன்றோ? அதனால், செங்குட்டுவன் சென்றுவந்த பேரியாற்றங்கரை ஒருநாளிலே தன் தலைநகர்க்குத் திரும்பிவரக்கூடிய அவ்வளவு சமீபத்தது அன்றென்பது விளக்கமாம். ஆகவே, பண்டங்களும் பரிவாரங்களும் அளவுகடந்து அவ்வரசனுடன் சென்றதற்கேற்ப, அவன் சிலமாதமேனும் அங்கேதங்கி இன்பந்துய்த்துவந்தவன் என்பதன்றிச் சில நாழிகையிருந்து உடனே திரும்பியவனென்பது பொருந்துவதன்று. வஞ்சியைக் கொடுங்கோளூராகவே கொள்ளுமிடத்தும், அக்கொடுங்கோளூர்க்கும் பேரியாற்றுக்கும்—கருவூர்க்கு அவ்யாற்றோடுள்ள தூரத்தினும்—அதிக தூரமுண்டு[1] என்பது தெரியலாம். அதனால், அடியார்க்குநல்லார் கருதியவாறு, பேரியாற்றுக்குச் சென்றவன்றே செங்குட்டுவன் வஞ்சிபுகுந்தான் என்பது, அச்சேரனது இன்பந்துய்க்கும் நோக்கத்துக்கும் இடவமைதிக்கும் சிறிதும் ஏற்புடைத்தாகாமை கண்டுகொள்க.

இனி, பேரியாற்றுக்கே ஆன்பொருநை என்பது பெயராம் என்று, தாங்கொண்ட கொடுங்கோளூர்த் தலைநகர்க்கேற்பக் கருதுவார் பிறர். பேரியாற்றங் கரையிலே வஞ்சியுள்ளதென்று நூல்கள் ஓரிடத்துங் கூறாமையாலும், ஆன்பொருநைக் கரையிலே அஃது உள்ளதாகக் கூறுதலாலும் அவ்விரண்டு யாறுகளும் வேறுபட்டவை என்பது திண்ணம். சிலப்பதிகார அரும்பத உரையாசிரியரும்—'பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை'[2] என்றவிடத்து, பேர்

---

1. அறுபதின்காத தூரம் என்பர் அடியார்க்குநல்லார் (சிலப். பதிகம் 3, உரை.)

2. சிலப். 25, 22.

யாறு—ஓர் யாற்றின் பெயர்' என்றே எழுதினுர். ஆன்பொருநையே பேர்யாருயின் 'பேர்யாறு அப்பொருநைக்கு ஒரு பெயர்' என்று எழுதுவரன்றே? காவிரிப் பேரியாறு (அகம். 181), வையைப்பேரியாறு (சிலப். பக். 512), சுள்ளியம் பேரியாறு (அகம். 159) என்பனபோல, காவிரியுடன் கலக்கும் உபநதியாதல்பற்றி ஆன்பொருநையைப் பேரியாறு என முன்னோர் வழங்காமையும் அறிக. இனி, பதிற்றுப்பத்துரைகாரரும்,[1] பழனித்தலபுராணமுடையாரும்,[2] ஆன்பொருநை கருவூர்ப்பக்கத்தே காவிரியுடன்கலந்து கீழ்கடலிற் கூடுவதைக் கூறி, அதனின் வேருக மேல்கடலிற் புகும் பேரியாற்றைக் குறிப்பிட்டுப்போந்தமை காணலாம். பேரியாற்றுக்குச் சுள்ளி யென்பது பழம்பெயரென்பதும், அது கடலுடன் கலக்குமிடத்து அமைந்ததாகக் கூறப்படும் ஊர் முசிரிஎன்பதும் முன்னூல்களால் அறியப்பட்டவை[3]. அதனுல், அம்முசிரியிருந்தவிடத்தில் பிற்காலத்துத் தோன்றிய பட்டினமே கொடுங்கோளூர் என்பதும், அது வஞ்சியாகிய கருவூருடன் எவ்வகைத் தொடர்பும் உடையதன்று என்பதும், கொடுங்கோளூர்ப் பக்கத்தே கடலிற்சங்கமிக்கும் பேரியாறும், கருவூர்ப்பக்கத்தே காவிரியுடன் கலக்கும் உபநதியாகிய ஆன்பொருநையும் முற்றும் வேறு பட்டவை என்பதும் தெளிவாதல் கண்டுகொள்க. கொடுங்கோளூர்ப் பிரதேசத்துக்கு முயிரிக்கோடு'[4] என்ற சாஸன

1. பதிற்றுப் 50, உரை.

2. வஞ்சிமாநகர். பக். 56.

3. "சுள்ளியம் பேரியாற்று வளங்கெழு முசிறி" (அகநா. 149.) [முசிறி, முசுறி என்றும் எழுதுவர்.]

4. Inscriptions of the Madras Presidency, p. 1691. 'முசிரிக்கோட்டு அஞ்சுவண்ணம்' என்ப (வஞ்சிமாநகர். பக். 56).

வழக்குண்மையால், கொற்கையின் ஸ்தானத்தில் காயற்பட்டினம் பின்புதோன்றினாற்போல, பழையமுசிரியின் ஸ்தானத்தில் பிற்பட்டுத் தோன்றியதே மகோதை என்ற அவ்வூர் என்பது தெளிவாகின்றது. இவ்வாறு சேராதுவஞ்சி அதன் பக்கத்தோடும் யாற்றால் தெளியப்பட்டவாறே, அதனையடுத்துள்ள மலையாலும் தெளியப்படும்.

"குடையலர் காந்தட்டன் கொல்லிச சுனைவாய்
தொடையவிழ் பூங்குவளை சூடான்—புடைதிகழும்
தேரதிரப் பொங்குந் திருந்துவேல் வானவன்
போரதிரிற் போந்தையாம் பூ" (புறப். வெண்பா.)

"கொல்லிப், பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து
* * *
ஒடுங்கீ ரோதி யொண்ணுத லணிகொள" (பதிற்-9, 9,).

என வரும் முன்னோர்வாக்கால், கொல்லிமலையில் அன்றலர்ந்த குவளைமுதலிய பூக்களை அணிந்து மகிழும்படி, சேரனும் அவன் தேவியும் தம் தலைநகரில் வாழ்ந்துவந்த செய்தி தெரியலாம். இஃது, அவர்கள் வாழும் வஞ்சி அக்கொல்லிமலையை அடுத்துள்ள தென்பதனைப் புலப்படுத்தத் தடையில்லை. இத்தகைய அணிமைநிலை, கொல்லிக்கு 300 மைலில் உள்ள கொடுங்கோளூர்க்குச் சிறிதும் இயையாமை கண்டுகொள்க. இவ்வியையாமைகள்பற்றிக் கொங்குநாட்டிலே உள்ள கொல்லிமலையையும் ஆற்றையும், தங்கள் கொள்கைக்கேற்ப, மேல்கடற்கரையிற் கொண்டுபோய் நாட்டிவிடப் பெரிதும் முயன்றார் பிறர். அவர்செய்கை பெருவியப்புக்கு உரியதாம். இனி, வஞ்சியாகிய கருவூர் சோணாட்டெல்லையை அடுத்துள்ள தலைநகரே என்பது, 'இவனியாரென்குவையாயின்' என்ற புறப்பாட்டால் (13) நாட்டப்பட்டதாகும்.[1]

1. வஞ்சிமாநகர் என்ற நூலிலே, கொல்லிமலையும் (பக். 138-9; 143—5), சோணாட்டெல்லையும் (பக். 27—30) சேரர்

இனி, மதுரை, உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்பனபோல, கருவூர் என்பதே சேரர்தலைநகர்க்கு உலக வழக்கினும் வழங்கும் பெயராம். இது, சோழரால் வஞ்சி முற்றப்பட்டவிடத்தும் எறியப்பட்டவிடத்தும் அவற்றைக் கூறும் புறப்பாடல்களின் கீழ்க்குறிப்பில்—"கருவூர் முற்றி யிருந்தானை" (36) "கருவூர் எறிந்தானை" (373)எனக் கூறப் படுதலாலும், அவற்றுக்குரிய பாடல்களிலே வஞ்சியென்று பாடப்படுதலாலும், பழைய உரையாசிரியர் பலரும் வஞ்சி என்பதற்குக் கருவூரென்றே உரையெழுதிச் செல்லுத லாலும்[1] விளக்கமாம். இதுபற்றியே வஞ்சிகிழார், வஞ்சிப் பூதன் என்பனபோலச் செய்யுள்வழக்கிற்குரிய சேரர்தலை நகர்ப்பெயரால் புலவர்கள் விசேடிக்கப்படாது, கருவூர் கிழார், கருவூர்ப்பூதன் என்றாற்போல உலகவழக்கிற்குமுரிய அந்நகர்ப் பெயரால் அவர்கள் விசேடிக்கப்படலாயினர்[2] என்க. கூடற்சாத்தனார், கோழி மருத்துவன் தாமோதர னார், புகார்க் காவிரிக்கண்ணனார் எனப்படாது, மதுரை உறை யூர் காவிரிப்பூம்பட்டினம் என்ற உலகவழக்கிற்குமுரிய பெயர்களால் அன்னோர் வழங்கப்பட்டிருப்பதும், மேற்கூறிய காரணம்பற்றியே என்பது எளிதில் உணரப்படும். இங்ஙனம்

---

தலைநகரான வஞ்சிக்கு அணிமையில் உள்ளன என்பதனை, மகாவித் வான் ஐயங்காரவர்கள் விளங்க விரித்துரைத்தல் அறியத்தக்கது.

1. சிலப். 25, 178—80, அரும்; புறநா. 11, 32. 39. உரை; திவாகாரம், பிங்கலந்தை.

2. கருவூர்ச் சேரமான் சாத்தன், கருவூர்ப் பெருஞ் சதுக்கத் துப் பூதநாதன், கருவூர்க் கண்ணம்பாளனார், கருவூர் ஓதஞானி, கருவூர்க் கதப்பிள்ளை, கருவூர்ப் பவுத்திரன், கருவூர்க் கோசனார், கருவூர்ப்பூதன்மகனார் எனப் புலவர் வழங்கப்படுதல் காண்க. இவ் வாறே மதுரை உறையூர் காவிரிப்பூம்பட்டினம் என்ற தலைநகர் கட்குரிய புலவரின் பெயர்களைத் தொகைநூல்களிற் கண்டுகொள்க.

செய்யுள் வழக்கிற்குரிய வஞ்சிப்பெயர், மேல்கடற்கரையில் உள்ள மகோதையாகிய கொடுங்கோளூர்க்கு உரியதென்பதே முன்னோர் கருத்தாயின், மகோதைகிழார் கொடுங்கோளூர்ப் பூதனார் என்பனபோல ஒருபுலவரேனும் விசேடிக்கப்படல் வேண்டுமன்றோ ? கொடுங்கோளூர் என்றபெயர் சங்கத்துச் சான்றோர்க்குச் சிறிதும் தெரியாததென்றாம். அதற்குக் கருவூர் என்ற பெயர்வழக்கோ யாண்டும் காணப்படாதது. கொடுங்கோளூரை அடுத்துள்ள அஞ்சைக்களத்தை வஞ்சிக்களம் என்று மயங்கி ஒரூராகக் கொண்டதனால் உண்டான தடுமாற்றமே, முசிரியின் ஸ்தானத்தில் பிற்காலத்துத் தோன்றிய அவ்வூரைப் பழையவஞ்சியாகக் கருதுவதற்கும், அக்கருத்துக்கேற்ப வேறிடங்களில் அமைந்த நதி மலை முதலியவற்றை அவ்வூர்ப்பக்கத்தே நாட்டுதற்கும் காரணமாயிற்று. நாட்டமுயன்றும், மேற்கூறியவாறு வஞ்சிக்கு வழங்கிய கருவூர் என்ற உலகவழக்குப்பெயர் கொடுங்கோளூர்க்கு இயையாமற்போனது இரங்கற்பாலது. [1]

இனிச் செங்குட்டுவனது வடயாத்திரையில், அவன் சேனைவெள்ளஞ் சென்றதைக் கூறுமிடத்து "வஞ்சிநீங்கித் தண்டத் தலைவருந் தலைத்தார்ச் சேனையும், வெண்டலைப் புணரியின் விளிம்புசூழ் போத" என இளங்கோவடிகள்பாடி

1. 'செந்தமிழ் நிலஞ்சேர்' என்ற தொல்காப்பிய சூத்திரவுரையுள், "செந்தமிழ் நிலமாவது—வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின்தெற்கும் கருவூரின்கிழக்கும் மருவூரின்மேற்குமாம் என்ப. இவ்வாறு உரைத்தற்கு ஓரிலக்கணங் காணாமையானும், வையையாற்றின் தெற்காகிய கொற்கையும், கருவூரின் மேற்காகிய கொடுங்கோளூரும் மருதயாற்றின் வடக்காகிய காஞ்சியும் தமிழ்திரிநிலமாதல் வேண்டுமாதலானும் அஃதுரை யன்றென்பார் உரைக்குமாறு" எனத் தெய்வச்சிலையார் என்ற பழைய உரையாசிரியர், கொடுங்கோளூர் கருவூரினும் வேறானதென்றே தெளிவாக்குதலுங் காண்க.

யதுகொண்டு[1] வஞ்சி கடற்கரைக்கண்ணது என்று கருது வர் சிலர்; அது பொருந்தாது. சேனையின் பரப்புமிகுதியை அவ்வடிகள் சிறப்பித்தபடியேயன்றிப் பிறிதன்றும். வஞ்சி கடற்கரையதாயின், அங்கிருந்த் தானைகளின்பெருக்கைக்கூற வந்த அவ்விடத்தே, அவை கடற்கரையின் விளிம்பைச் சுற்றிச்சென்றது என இளங்கோவடிகள்கூறியதில் பெருமையும் வியப்புமில்லை என்க. அதனால் "மலைமுதுகு நெளிய நிலைநாடதர்பட' என அடுத்துக்கூறியமுறையே உயர்வு நவிற்சியாக இளங்கோவடிகள் சிறப்பித்தபடியேயன்றி வேறன்று என்பது தெளிவாம். இனிச் செங்குட்டுவன் வடநாட்டினின்று திரும்பிவரும்போது நால்வகைநிலத்தாரும் அடைந்த மகிழ்ச்சிகளைக் கூறுமுறையில்,[2] நெய்தனிலமாக்கள் செய்தியும் கவிமரபுக்கேற்பக் கூறப்பட்டவாறன்றிக் கடற்கரைச் சம்பந்தம் பற்றியது அன்று என்பதும் அறியத்தக்கது. இவ்வாறே, "அருங்கலஞ்சுமந்து...வஞ்சி முற்றத்துத்... திறைசுமந்து நிற்குந் தெவ்வர்'[3] என்பதனுள்—கலம் என்பதற்கு மரக்கலம் எனக்கொண்ட பிறர்கருத்தும் பொருத்தமற்றதென்பதும், அணிகலமே அதன் பொருளென்பதும் அவ்வடிகளின் அரும்பதவுரையால் தெளியத்தக்கன.[4]

இனிப் பராசரன் என்னும் அந்தணன் சேரனிடம் பரிசில்பெறவிரும்பிச் சோணாட்டினின்றும் அவனகர்நோக்கிச் சென்றதைக் கூறுமிடத்து—"காடு நாடு மூரும் போகி, நீடு நீர் மலயம் பிற்படச் சென்றாங்கு" என்றும், பரிசில்பெற்

1. சிலப். 26. 80—81.
2. சிலப். 27. 220—251.
3. ஷை. 25. 33—36.
4. இவற்றின் விரிவெல்லாம் 'வஞ்சிமாநகர்' என்ற நூலின் 70—73 - ஆம் பக்கங்களிற்காணும் நுணுகிய ஆராய்ச்சியுரைகளிற் கண்டுகொள்க.

றுத் திரும்புகாலையில் பாண்டிநாட்டுத் திருத்தங்காலூரில் அவ்வந்தணன் தங்கினான் என்றும் இளங்கோவடிகள் கூறுவர்;[1] இதுகொண்டு சேரர்தலைநகர் மலையாளக் கடற்கரையதாகும் என்பாருமுண்டு; அதுவும்பொருத்தமன்று. சேரர் கிளையினர் கடன்மலைநாட்டினும் ஆட்சிபுரிந்துவந்தவர் என்பதை முன்னரே கூறினோம்.[2] மேற்குறித்த பராசரனாற் பரிசில்விரும்பி அடையப்பட்ட சேரனை—"வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த"வன் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுவர். இவன், பாலைக் கௌதமனாரைக்கொண்டு பத்துப்பெருவேள்வி நடப்பித்து முடிவில் அவர் சுவர்க்கம் புகும்படிசெய்த பல்யானைச்செல்கெழுகுட்டுவனாவன். செங்குட்டுவனுக்கு இச்சேரன் சிறியதந்தை என்பது மேலே விளக்கப்பட்டது.[3] கண்ணகிவழக்கைக் கேட்டு உயிர்நீத்த பாண்டியன் - நெடுஞ்செழியன்காலத்தவன் இச்செல்கெழுகுட்டுவன் என்பது அப்பராசரன்செய்திகளாக இளங்கோவடிகள் பாடியவற்றினின்று தெரியலாம்.[4] ஆகவே, காலமும் ஒற்றுமைப்படுதல் காண்க. இக்குட்டுவன் ஆண்டதேசம் குட்டநாடு என்பது இவன்பெயராற் பெறப்படும். படவே, அவன் தலைநகரும் அந்நாட்டதே என்பது தானே அமையும். இவற்றால் உள்நாட்டதான வஞ்சிமாநகர்க்கு உரியதன்று பராசரன் சென்றுவந்த மார்க்கம் என்பது கண்டுகொள்க.

சேரர்க்குக் கடன்மலைநாடாகிய மலையாள தேசத்தினும் ஆட்சியுரிமையுண்டாயினும், அந்நாடொன்றே சேர

1. சிலப். 23. 60—84.
2. இந்நூல், பக். 20.
3. மேற்படி, பக், 12.
4. சிலப். 23. 85—132.

மண்டலம் அன்று. அதுவே சேரநாடாகக் கொண்டமை பற்றியே, அவர்தலைநகரும் அங்குள்ள கடற்கரையூராதல் வேண்டுமென்று பிறர்கருதற்கு இடமுண்டாயிற்று. முன்பு யாங் கூறியவாறு, கொங்குநாடு சேரர்க்குச் சிறந்த பூமி என்று முன்னூல்கள் முழங்குவதை அறிந்துகொள்ளுமிடத்து, சங்கநூல் வழக்கியாவும் இணங்கத் தடையில்லை. கொங்குநாட்டைச் சிறப்பாக உடைமைபற்றியே 'கொங்கர் கோ' எனச் சேரர்க்கு ஒருபெயரை நிகண்டுகளும் முன்னூல்களும் வழங்குவனவாயின. பூழியன் குட்டுவன் என்பனவும் பூழிநாடுகுட்டநாடுகளுடைமைபற்றி அவ்வரசர்க்கு வந்த பெயர்களாம்.[1] பிற்காலத்துவிளங்கிய சேரவேந்தரும் திருமாலடியாருமாகிய குலசேகரப்பெருமாளும் தம்மைக் கொங்கர் கோன்[2] என்று கூறிக்கொள்ளுதலும், "சேரர் கொங்கு வைகாவூர் நன்னாடு" எனப் பழனிப் பிரதேசத்தைச் சேரர்க்குரிய கொங்குநாட்டுள்ளதாகவே அருணகிரிநாதர் பாடுதலும்[3] 'கொங்கன் (சேரன்), பாண்டியன், சோழராஜன்' என்றே கேரளோற்பத்தி என்னும் நூல் கூறுதலும்[4] அறிக. தெய்வப்புலவரான பொய்கையார்—"கொங்கரையட்ட களத்து" 'வஞ்சிக்கோ வட்ட களத்து[5],' எனவும், திருமங்கையாழ்வார் 'தென்னவன் குடகொங்கன் சோழன்[6]' எனவும், குலசேகரஆழ்வார் "கொங்கர் கோன்...கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன்"[7]

1. பதிற்றுப். 90. 25—27.
2. திவ். பெருமாள் திருமொழி, 3, 9.
3. திருப்புகழ். 100.
4. வஞ்சிமாநகர், பக்-161.
5. களவழி. 14, 39.
6. திவ். பெரியதிருமொழி, 6, 6, 6.
7. திவ். பெருமாள். 3, 10.

எனவும் கொங்குநாடும், அந்நாட்டு வஞ்சிநகரும், கொல்லி மலையும்,[1] சேரர்க்கே உரிமையானவை என்று மிகத்தெளிவாக அருளிச்செய்தலும் அறியத்தக்கது. இங்ஙனமாதலினன்றோ, சேரர்க்கு உரியனவாகப் பண்டை நூல்கள் கூறும் மலைநதியூர்களிற் பலவும் இக்கொங்குநாட்டே அமைவனவாயின? கொல்லிமலை அந்நாட்டுள்ளமை முன்பே விளக்கப்பட்டதாம். அதுபோல, அயிரை என்ற பெருமலையொன்றும் சேரர்க்குச் சிறந்ததாகும். இதுவே—'நேருயர் நெடுவரை யயிரை' (21) 'அயிரை நெடுவரைபோல' (70) எனப் பதிற்றுப்பத்திற் புகழப்படுவது. இது பழனிப்பிரதேசத்தைச் சார்ந்த ஆனைமலைத்தொடர்களுள் ஒன்றும். இம்மலையிற் கோயில்கொண்ட கொற்றவை, சேரர் குலதெய்வமாய் அவராற் குருதிப்பலியிட்டு வணங்கப்பட்டு வந்தவளென்று பதிற்றுப்பத்துக் கூறும் (79, 88, 90). செங்குட்டுவன் மலைவளங்காணச்சென்று தங்கிய—'பெருமலை விலங்கிய பேரியாற்றடைகரை' இவ்வயிரைமலையில் உண்டாகும் பொன்னுனி நதக்கரையேயாம். இளங்கோவடிகள் இம்மலைவளத்தைச் சிறப்பிக்குமாறே—

"மாடோ ருறையு முலகமுங் கேட்ப
இழுமென விழிதரும் பறைக்குர லருவி
முழுமுதன் மிசைய கோடுதொறுந் துவன்றும்
அயிரை நெடுவரை" (பதிற். 70)

---

1. 'கொல்லிநகர்க்கிறை' என்று குலசேகரஆழ்வார் தம்மைக் கூறுதலால் (பெருமாள், 6, 10) கொல்லிகாவலன் என்பது கொல்லியென்ற நகரைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். 'கொல்லிக்கண்ணன்' என்ற பழைய புலவர்பெயரால் (குறுக். 34) அப்பெயர் பெற்ற ஊரொன்று உள்ளமை காண்க.

எனக் கபிலரும் இம்மலையருவியொன்றன் பேரொலியைச் சிறப்பிப்பர். இன்றும் அச்சிறப்பின்படியே, அயிரையாகிய ஐவர்மலையின் அருவிவீழ்ச்சியொன்று உள்ளதாம்.[1] இம்மலையில் உண்டாகும் பொன்னானி என்ற நதப்பெயரோடு ஒத்த வடமொழிப்பெயர் பூர்ணவாகினி என்பது. பேரியாறு என்பதும் பூர்ணவாகினி என்பதும் ஒருகருத்துடையனவேயாம். இது, தான் உற்பத்தியாகும் மலையின் பெயரால், அயிரை எனவும் வழங்கப்பெறும்.[2] இந் நதத்துக்குப் பேரியாறு என்றபெயர் பண்டும் வழங்கிவந்ததென்பது, "தெய்வத்துக்கூட்ட முன்னிய புனன்மலி பேரியாறு" என வரும் பதிற்றுப்பத்துத் தொடரால் (88) தெரியலாகும். "அத்தெய்வம் (கொற்றவை)[3] கூடியுறைதலையுடைய அயிரை மலையைத் தலையாகக்கொண்டு ஒழுகப்பட்ட யாறு" என்பது இத்தொடரின் பழைய உரையாதலும் காண்க. மலையாளத்துக் குடகடலிற்கலக்கும் யாறுகளில் இதுவே பெரியதும், 'உருகெழு மரபி னயிரை' 'பெருமலை விலங்கிய பேரியாறு' என்றும், வறனுறு கோடையினும் இருகரையினும் பெருகி

---

1. இவ்வருவி 'அற்றமாங்கனிபொருந்தல்' எனப்படும். இவ்வருவிநீரே 'பொருந்தல்' என்ற பெயருடன் சண்முகநதியிற் கலக்கின்றது.

2. 'அயிரை மண்ணி' என்ற சிலப்பதிகாரத் தொடர்க்கு (28, 146—6), "அயிரை - ஓர் யாறு; அதிலே குளித்து" என்று பொருளெழுதினர், அரும்பதவுரையாசிரியர்.

3. இக்கொற்றவையை அப்பக்கத்தார் திரௌபதி யம்மனாகக் கொண்டு வழிபடுகின்றனர் என்று தெரியவருகின்றது. அயிரைமலை ஐவர்மலை (பாண்டவர்மலை) ஆயினமையின், அதற்கேற்ப, ஆங்குவாழுங் கொற்றவை அவ்வைவர்தேவியாகக் கருதப்பட்டனள் என்றே தோற்றுகின்றது.

வழியும் பெருநீர் உடையதென்றும் (பதிற். 43), கழனிகளை விளைவிப்பதென்றும் நூல்கள் சிறப்பித்துக்கூறியவற்றுக்கு ஏற்ற நதமுமாக உள்ளது. இவ்யாற்றைப் பேர்யாறு என்றே மக்கள்வழங்கிவந்தனர் என்பது ஆனைமலைக் கைபீது முதலியவற்றாலும்[1] அறியப்படுகின்றது. இத்தகைய யாற்றை உற்பத்திசெய்யும் அயிரைமலை, இக்காலத்தே ஐவர்மலை எனத் திரிந்து வழங்குவதோடு, இதன்சாரற்பகுதியொன்று முன்பு சைனர்க்குச் சிறந்த தலமாகவும், சாஸனங்கள்பல கொண்டதாகவும் உள்ளதாம்.[2] செங்குட்டுவன் மலைவளங் காணச்சென்று தங்கிய பேரியாறு கொடுங்கோளூர்ப் பக்கத்தே குடகடலுடன் கலப்பதும், சூர்ணு என வடமொழியினும் சுள்ளி எனத் தமிழினும்[3] வழங்கப்படுவதுமாகிய பேரியாறாக இதுவரை கருதப்பட்டதாயினும், மேற்கூறிய அயிரைப் பேரியாறாகவே கருதற்குப் பொருத்தம் பெரிதும் உள்ளதென்க[4] (வஞ்சிமாநகர், பக். 52-6).

இவ்வயிரையன்றி, நன்றா என்னுங் குன்றும் கொங்கு நாட்டில் சேரர்க்குரியசெய்தி முன்னரே குறிப்பிட்டுள்ளேம்

---

1. இக்கைபீதில், ஆனைமலையில் உண்டாவனவாகப் பளிங்கர் என்ற மலைநாட்டார் கூறிய பண்டங்கள் பெரும்பாலவும், குன்றக் குறவர்செங்குட்டுவற்குக் காணிக்கையாகக் கொணர்ந்த பொருள்களாகவே அமைந்திருத்தல் அறியத்தக்கது (வஞ்சிமாநகர், 54).

2. Ep. Rep. 691—705 of 1905.

3. 'சுள்ளியம் பேரியாறு' (அகநா. 149).

4. வடுகர் பெருமகனான எருமையின் குடநாட்டு உள்ளதாக அகநானூறு(253) கூறும் அயிரியாறு இவ்வயிரையின் வேறாகும். துங்கபத்திரை நதியிற் சங்கமமாவதும், அகிரி என்று இக்காலத்து அழைக்கப்படுவதுமாகிய நதியே அவ்வயிரி என்பது அறியத் தக்கது ('தமிழரும் ஆந்திரரும்' என்ற எம் உபந்நியாசத்தின் 4-5-ம் பக்கங் காண்க).

(பக்.16). அவ்வாறே, வண்டமலை என்பதொன்றும் அந்நாட்டு உள்ளது. சேரமுன்னோருள் வண்டன் என்பவன் ஒருவன்; "வண்புகழ் நிறுத்த வகைசால்செல்வத்து வண்டன்" என்பது பதிற்றுப்பத்து (31). இவனுக்குரிய குன்றாதலால் வண்டமலை எனப் பெயர்பெற்றுக் கொங்குநாட்டிற் கருவூர்க்குத் தெற்கேயுள்ளது. இனி, வானி என்ற யாறொன்று சேரனுக்கு உவமையாகப் பதிற்றுப்பத்துக் கூறும் (86). இது வடகொங்குநாட்டோடும் பவானி என்ற நதியேயாம்; "மாதவனார் வடகொங்கின் வானியாற்றின்" என்பது தேசிகப்பிரபந்தம்.[1] காரியாறு என்பதொன்றும் சேரநாட்டுள்ளதாம். மணிமேகலை கூறியவாறு—கிள்ளிவளவன் தம்பிக்கும் சேரபாண்டியர்க்கும் பெரும்போர்மூண்ட களம் இக்காரியாற்றங்கரையே; இது, கொங்குநாட்டில் ஓடும் மணிமுத்தாநதியின் உற்பத்திக்கிடமான கிளைகளுள் ஒன்றற்கு இக்காலத்தும் வழங்கும் பெயராதல் தெரியலாம். இனித் தொகைநூல்களிற் சேரநாட்டுக்கு உரியனவாகக் கூறப்படும் ஊர்கள்பலவும் இக்கொங்குநாட்டில் விளங்குவனவேயாம். ஆமூர், குறும்பொறை, (அகம். 159), பேரூர், ஆவிநன்குடி, (ஷை 382), குழுமூர் (198) கழுமலம் (44, 270) தகடூர் முதலியன காண்க. இவற்றுள், ஆமூர் என்பது, மழகொங்கத்து இப்போதும் அப்பெயருடன் உள்ளதாம். பேரூர் என்பது மேலைச்சிதம்பரம்; காஞ்சியென்ற நொய்யலாற்றங் கரையில் உள்ளமையால், 'காஞ்சிவாய்ப் பேரூர்' "பேரூர் முன்றுறை" என நூல்கள் கூறும். குழுமூர் என்பது குழுமம் என இக்காலத்து வழங்குவது. கழுமலம் என்பதுகொங்குநாட்டுள்ள நென்மலியின் பெயராகும்; அந்நென்மலிப் புராணத்தில் 'கழுமலப் பெருமை யுரைப்பா மன்றே" எனக் கூறப்படுதலுங் காண்க. கழுமலத்து யாத்த களிறு, கரி

1. பரமபதபங்கம், 53.

காலனை முடிசூட்டவேண்டிக் கருவூர்க்குத் தன்மேலே தூக்கிக்கொண்டு சென்றதென்று பழமொழியில் (62) கூறப்படும் ஊர் இதுவேயென்பது அறியத்தக்கது. சேரவமிசத்தனான அதிகமான் ஆண்ட தகடூர் இக்கொங்குநாட்டுள்ள தர்மபுரியே என்பதும், தாயாதியான இவ்வதிகனுடன் பெருஞ்சேரலிரும்பொறை போர்புரிந்து வென்றவன் என்பதும் அறியத்தக்கன. இவ்வாறே குணவாயில், அழும்பில், மங்கலாதேவிகோட்டமுள்ள மங்கலமுதலிய வேறூர்களும் சேரர்க்குச் சிறந்த தேசமான கொங்குநாட்டதாகவும் அதனையடுத்தும் உள்ளமை உரியவிடங்களிற் கூறப்பட்டன.

இன்னும், மலையாளநாட்டுக்கு ஏற்காத இயல்புகள்சில கொங்குநாட்டுக்கு உரியவாயிருத்தலும் குறிப்பிடத்தகும். சேரநாடு பசு பால்வளங்களாற் சிறந்துள்ள செய்தி சங்க நூல்களால் நன்கறியலாம்.[1]

"நல்லான் பரப்பிற் குழூஉ ராங்கண்...
உதியன்" (அகம். 168)
"கொங்க ராபரந் தன்ன செலவிற்பல்
யானை காண்பல்" (பதிற்றுப். 77)
"தன்னாட்டு...ஆபரந்தன்ன யானையோன்
குன்றே" (மேற்படி. 78)

எனக் காண்க. இவ்வாறே ஆடுகுதிரைகள் மிகுதியாக உண்டாவதும் கொங்குநாடேயாம். 'தந்நாட்டு, யாடுபரந் தன்ன மாவின்' என்ப(பதிற். 78). இவையாவும் மலையாள நாட்டுக்குச் சிறிதும் ஏற்காதவை. பெருமனிதர்க்கும் மரஞ் செடி கொடிகட்கும், வளப்பஞ்செய்கின்ற மலையாளநாடு

1. காங்கேயமாடுகள், கள்ளக்குறிச்சி கொல்லிமலை மட்டங்கள் இவற்றின்மிகுதியும் சிறப்பியல்பும் தமிழ்நாட்டார் நன்கறிந்தவை; "கவிகுளம் புகைத்த கன்மிசைச் சிறுநெறி" என்பர் முன்னோர்.

குதிரைபசுக்களுக்குமட்டுங் கொடும்பகையானமை வியப் யன்றோ? இதுபற்றி அந்நாட்டு மேலதிகாரிகள் எழுதிய குறிப்பு ஈண்டுக் குறிப்பிடற்பாலதாம்.[1] இங்ஙனமே, அதிக நெல்விளைவில்லாததும் அம்மலைநாடே என்பது பலரும்அறிவர். கழனியெல்லாம் விளையும் பல்லூர் சுற்றுதலையுடையது (புறம். 387) சேரர்தலைநகர் என்பது முன்பேவிளக்கப்பட்டது. வஞ்சிமாநகரிலிருந்த கணிகையரது தெருவருணனையை மணிமேகலைமுதலியவற்றிற் காணலாம். இக்கணிகையர்குலமே மலையாளநாட்டில் இல்லாததொன்றாம். இன்னும் வேறுபாடுகள் பலவுள. ஆகவே, சங்ககாலத்தே சேரவேந்தர்க்குச் சிறந்தனவாயிருந்த நாடும் தலைநகரும்—கொங்குநாடும் கருவூருமேயன்றிப் பிறவல்ல என்பது, எல்லாவகையாலும் தெளியப்படுமாறு கண்டுகொள்க.

இங்ஙனம் சேரர்தலைநகர் கொங்குநாட்டதே என்பது சங்ககாலத்து நூல்களால் நன்கறியக்கிடப்பவும், பிற்பட்ட தமிழ்மக்கள் அதனைப் பெரும்பாலும் மறந்துவிட்டனர் என்றே சொல்லலாம். இங்ஙனம் மறக்கப்பட்டதற்குத் தக்க காரணம் உண்டு. கொங்குநாடும் கருவூரும் சோணாடு பாண்டியநாடுகளின் எல்லையில்[2] அமைந்திருந்தமையால் சேரருடன் விவாதம் நேர்ந்தபோதெல்லாம் தமிழ்வேந்தர்க்குட் போர்நிகழ்வதற்கு அவை ஏற்ற களங்களாயின. இச்செய்தி புறநானூறு முதலியவற்றால் நன்கறியப்படும்.

---

1. Travancore Manual, Vol. iii, 16-8.

2, கருவூர்க்குக் கீழ்பால் 8 மைலில், காவிரிக்கரையில் உள்ள மதுக்கரையைச் சேரசோழ பாண்டிய நாடுகளின் எல்லையாக இக்காலத்தாரும் வழங்குவர் (Gezetteer of Trichinopoly District, p. 281.) சோணாட்டின் மேற்கெல்லை கருவூர் என்பர் யாப்பருங்கலக்காரிகையுரைகாரர் (ஒழிபியல், 7, உரை).

இப்போர்க்காலங்களில் சேரர் தம் தலைநகரைவிட்டுப் பாது காப்புக்காகக் கடன்மலைநாடான மலையாளக் கடற்கரையை அடைந்ததும் உண்டு. வேள் ஆய் என்பான் கொங்கரைக் குடகடலோட்டியவன்[1] என்று சிறப்பிக்கப்படுதலும் இக் கருத்தையே வெளிப்படுத்தல் காண்க. சங்ககாலத்துக்குப் பின், ஆற்றல்மிக்கிருந்த பாண்டியராற் கொங்கு பலமுறை படையெடுக்கப்படவும், அதன்கணுள்ள தலைநகர் அவ்வரசர் வசப்படவும் நேர்ந்தன. 7-ஆம் நூற்றாண்டிலே அரிகேசரி நெடுமாறன் என்ற பாண்டியன் கொங்குநாட்டிற் சேரர்களு டன் பல பெரும்போர்கள் நடத்தி அதன்பகுதியைக் கைப் பற்றியவன் என்பது இறையனார்களவியலுரை வேள்விகுடிச் சாஸனங்களால் அறியப்படும். அவ்வாறே, அப்பாண்டியன் மகன் கோச்சடையனைக் 'கொங்கர் கோமான்' என்றும், அவன்மகன் மாறவர்மனை 'வஞ்சிமதில் புதுக்கிபவன்' என் றும், அவன்மகன் நெடுஞ்சடையனைக் 'கொங்கர்பூமியடிப்படு த்தியவன்' என்றும் வேள்விகுடி [2]வேலங்குடிச்செப்பேடுகள் கூறுதலும் தெரியலாம். சேரர், பல்லவருதவியால் தம் தலைநகரான கருவூரைப் பாண்டியரிடத்தினின்று கைப்பற்ற முயன்ற செய்தியை, "தென்னவனைக் கன்னிமா மதில்சூழ் கருவூர் வெருவவென்றான்" எனத் திருமங்கையாழ்வாருங் குறிப்பிடுவர். இவ் ஏழெட்டாம் நூற்றாண்டுமுதற்றான்; சேரர் தம் பழையதலைநகரான கருவூரையே முற்றும் நம்பி யிராமல், மேல்கடற்கரையில் முசிரியிருந்த இடத்துத் தோன்றித் தங்கட்குச்சிறந்த துறைமுகமாயிருந்த மகோதை யாகிய கொடுங்கோளூரையும் தம் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரியலாயினர். இதற்கு இன்னும் பிற்காலத்தே— அஃதாவது சோழராதிக்கம் பெருகிநின்ற 10-ம் நூற்றாண்டு

1. புறநானூறு: 130.
2. The Madras Museum Plates of Jatilavarman.

முதல்—கொங்கு நாடும் கருவூரும் சேரரால் மிகுதியும் கைவிடப்படவே, கடன்மலைநாடான மலைபாளமே கேரள பூமியாகவும், அதன் சிறந்த துறைமுகமான கொடுங்கோளூரே சேரரது தனித்தலைநகரமாகவும் ஆயின. பகைக்கஞ்சியே சேரர் தமக்குரியதாகிய வஞ்சியைவிட்டு மகோதையாகிய கொடுங்கோளூரை அடைந்தவர் என்பதனை, "வஞ்சியை விட்டகலஞ்சிய கோதை மகோதை" எனக் கூத்தர் தாம் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழில் தெளிவாக்கலுங்காண்க. அன்றியும் ஆதித்தலைநகராய கருவூர்க்கு வழங்கிய வஞ்சிப் பெயர் இம்மகோதைக்கும் வழங்கியது.[1] கொங்குநாட்டைப் பாண்டியர்க்குப்பின் சோழர் கைப்பற்றிய பிற்காலத்தும், அதன் பகுதியான வெங்கால நாட்டுக்குக் கேரளாந்தக வளநாடு, சோழ கேரளமண்டலம் என்ற பெயர்கள் வழங்கி வந்தன என்பது கருவூர்ப் பசுபதீச்சுரர் கோயிற் சாஸனங்ளால்[2] வெளியாகின்றது. இப்பெயர்களால் சேரர்க்குரிமையாயிருந்ததே அப்பகுதி என்பதும், பின்பே அது சோழசம்பந்தம் உடையதாய் அப்பெயர்கள் பெறலாயிற்று என்பதும்

---

1. சேரமான் பெருமாணாயனார் புராணத்தே—"சேரர்குலக் கோவீற்றிருந்து முறைபுரியுங் குலக்கோ மூதூர் கொடுங்கோளூர்" எனவும் அவ்வூரை வஞ்சி எனவும் சேக்கிழார் பாடுதல் காண்க. இவ்வாறு வஞ்சிப்பெயரால் அவர்கூறியது, உபசாரமாகவே கருதத் தகும்; 'இராமனிருக்கும் இடம் அயோத்தி' என்ற வழக்குப்போல இதனையுங் கொள்க. இனி, "கொற்கையரசர் மதுரைப்பாண்டியர்' என்றவிடத்துக் கொற்கையும் மதுரையும் ஒன்றாகாதவாறுபோல, 'கொடுங்கோளூரரசர் வஞ்சிவேந்தர்' என்புழியும் கொடுங்கோளூரும் வஞ்சியும் ஒன்றாகாதாம். இத்தகைய தொடர்போன்றதினின்றே வஞ்சிப்பெயர் கொடுங்கோளூர்க்கு மாறி வழங்கியதுபோலும் என்ற அறிஞர்கருத்தும் பொருந்துவதாகும்(வஞ்சிமாநகர், 112).

2. S. I. I. Vol. iii. No. 30. 31.

வெளியாகத்தடையில்லை. கருவூரை யடுத்துத் தோரணக்கற்பட்டி (Stone Gateway), தும்பிவாடி (Elephant Stable), வேட்டைமங்கலம்[1] என்ற ஊர்களிருத்தலும், அழிபட்ட கோட்டையகழ்கள் உடைமையும். கொங்குநாட்டுப் பெருமக்களெல்லாம் தம் கொங்கிற்கருவூரைச் சேரராஜஸ்தானமென்று வாயார வழங்கிவருதலும், அந்நகரில் அகழுமிடங்களிலெல்லாம் பழைய சின்னங்கள் பலவும் அகப்பட்டுவருதலும், பிறவும்—அவ்வூரே சேரவேந்தர் வீற்றிருந்த 'திருமாவியனகர்' என்பதற்கு ஏற்ற அறிகுறிகளாகும்.

இங்ஙனம், பாண்டிய சோழர்களின் ஆதிக்கத்தால் பிற்காலத்தே சேரர் தம் தலைமைப் பிரதேசத்தைவிட்டு மேல்கடற்பக்கத்தை அடைந்தது, பிற்பட்ட பாண்டியர்கள் சோழர்முதலியோரது ஆற்றற்கஞ்சி மதுரையைக் கைவிட்டுத் தென்பாண்டிநாட்டை நாடியது போன்றதாகும். ஆயினும், ஒரோருகாலத்தே அவ்வவர் படைத்திருந்த நட்புறவு ஆற்றல்கட்கேற்ப, தம் பூர்வதேசங்களில் உரிமையுந் தலைமையும் வகிப்பதுண்டு. அம்முறையில் சேரர்க்கும் தம்பழைய உரிமைதலைமைகள் கொங்குநாட்டில் பிற்காலத்து அமைந்திருந்தன. பல்யானைக் கோக்கண்டன் தாணுரவி, கோக்கண்டன் இரவி உன்றழைக்கப்பட்ட சேரவேந்தன், 9-ஆம் நூற்றாண்டிலிருந்த முதலாம் ஆதித்த சோழனுக்கு நட்பினனாவன். இவனுடையதும் இவற்குப்பின் வீரநாராயணன், வீரசோழன், வீரபாண்டியன் என்ற சேரருடையவுமான சாஸனங்கள் கொங்குநாட்டிற் பலவிடங்களிலுங் காணப்படுவனவாம். இவற்றினின்று, இச்சேரர்க்கு அந்நாட்டிலிருந்த உரிமைதலைமைகள் தெரியவருகின்றன

1. சேரன் வேட்டையாடிவந்த இடமாதல்பற்றி இப்பெயர் பெற்றதென்பர் — Gazetteer of Trichinopoly Dist. p. 276

இவ்வருள் முதலிருவரும் தம்மைச் 'சந்திராதித்திய' குலத்தவராகக் கூறிக்கொள்ளுதலும்[1] பின்னிருவரும் சோழ பாண்டியப் பட்டப்பெயர் புனைந்திருத்தலும்[2] இவர்சாஸனங்களால் அறியவரும் புதிய செய்திகளாகும். சந்திராதித்த குலத்தவராகக் கூறிக்கொள்ளுதற்கேற்ப வீரபாண்டியதேவன் என்பான் சந்திரவமிசத்துப் பாண்டியநாமத்துடன் சூரியவமிசத்துச்சோழர்க்குரிய இராசகேசரிப்பட்டம் பூண்டிருத்தலும், வீரசோழனென்பான் சோழநாமத்தைத் தன்சிறப்புப்பெயராகச் சூடியிருத்தலும் குறிப்பிடத்தகும். செங்குட்டுவன் முன்னோருடைய மரபு இன்னதென்பது தெரியவாராத நிலையில், இவ்வேந்தர் இவ்வாறு சந்திராதித்தகுலத்தவராகத்தம்மைக் கொண்டதற்கு, சேரவமிசத்திற் பிற்காலத்து நிகழ்ந்த சம்பந்த மாறுபாடுகளே காரணமாக வேண்டும்.[3] இச்சேர மரபினரைச் சூரியகுலத்தவராகவே வழங்குவதும் உண்டு. 'வையங் காவலர் வழிமொழிந் தொழுக" என்ற புறப்பாட்டிற்கு (9) பேராசிரியர் எழுதிய விசேடவுரையில், சேரமான் கடுங்கோ வாழியாதனை 'வெஞ்சுடர் வழித்தோன்றிய அரசனைக் கொண்டு நயம்பட விளக்கிச்செல்லுதல் காண்க.[4] சூளாமணி நூலாசிரியரும் சுயம்வரச்சருக்கத்து மதுரை உறந்தை அரசர்க்கு இடையில்வைத்துக் கரபுரத்தார்[5]அரசனை சேரனை—

1. Ep. Rep. 147 of 1910; Ep. III, pp. 79-82.
2. Ibid. 657 of 1905.
3. பாண்டிய சோழ மெிசங்களினின்று, சேரர்பட்டத்துக்கு அரசர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட செய்தி கேரளவரலாறுகளால் தெரியவருதலின், அம்முறையிலேனும் பிற்பட்டமைந்த மருமக்கட்டாய முறைப்படி கேரளராஜகன்னியரை மணந்த முறையிலேனும் சந்திராதித்தகுலம் அமைந்ததுபோலும்.
4. தொல்காப்பியம், உவம. சூ. 32.
5. கரபுரம் கருவூர்க்கொருபெயர் (வஞ்சிமாநகர். பக்-113).

"கரபுரத்தார் கோமானிக் கதிர்வேற்காளை...எரிக்கதி ரோன் வழிமருகன்"
எனக் கூறுதல் இங்குக் குறிப்பிடத்தக்கது. குலசேகர ஆழ்வார் "எங்கள்குலத் தின்னமுதே யிராகவனே" எனத் தம் கண்ணபுரத்திருப்பதிகத்துப் பாடுதலினின்று, அவ்வாழ்வார் மரபும் சூரியவமிசமே என்பது உய்த்தறியப்படும். 'எங்கள் குலத்து' என்பது க்ஷத்ரியவர்ணத்தைப் பொதுப்படக் குறிப்பதென்பதினும், மேற்காட்டியவழக்குக்கேற்ப, சூரிய குலம் என்றுகொள்வதே பொருத்தமாம். இனி, முதலாம் ஆதித்தசோழற்கு நட்பினனான தாணுரவியைப் 'பல்யானைக் கோக்கண்டன்' என்று அவன் சாஸனம் விசேடிப்பது, செங்குட்டுவன் சிறியதந்தையான பல்யானைச் செல்கெழுகுட்டுவனுக்குரிய விசேடணத்துடன் ஒப்பிடற்குரியது. முதற்பராந்தகசோழன்காலத்துச் சேரனான வீரசோழனது நாமக்கல் சாஸனத்தில்[1] அவன்முன்னோர் பெயர்வரிசை தரப்பட்டுளது. அதனால் அவன்மரபு சங்ககாலத்துச் சேரருடன்தொடர்புடையதென்பது தெரியலாம். செங்குட்டுவனைக்குறிப்பதாகக்கருதற்குரிய மணிகுட்டுவன் என்றபெயர் அவன்சாஸனத்துக்கண்ட அம்முன்னோர் பெயர்களுள் ஒன்றாம். இவற்றால், கொங்குநாடு பிற்காலத்தும் சேரசம்பந்தத்தை அடியோடு விட்டொழிந்ததன்று என்பது நன்குவிளங்கும். "ஆதியந்த வுலாவாசுபாடிய சேரர் கொங்குவைகாவூர் நன்னாடதில் ஆவிநன்குடி" என்று, தங்காலத்தும் சேரர்க்குரியதாகவே கொங்குநாடு வழங்கப்பட்டுவந்ததை அருணகிரியாரும் தெரிவித்தல் காண்க.

இனிச், சிலர் சிலப்பதிகார மணிமேகலைகளில் இக்காலத்துவழங்கும் மலைநாட்டுச்சொற்களும் வழக்குக்களும் காணப்படுவதுகொண்டு, செங்குட்டுவன் தலைநகரும் அம்

1. Ep. Rep. No. 29 of 1906; Ind. Ant. Vol. ix· pp. 47-50.

மலைநாட்டிலிருந்ததாகக் கருதுவர். மலைநாட்டுவழக்கென்று அவர்கள் காட்டுவனவெல்லாம் பொதுவாகப் பழைய தமிழ் வழக்குக்களேயன்றி வேறில்லை. இஃது, அம்மலைநாட்டிற் காணப்படும் எண்ணிறந்த தமிழ்ச்சாஸனங்களால் தெளியப்பட்டது. அதனால், நங்காலத்து வேறுபட்டதுபோலவே, செங்குட்டுவன்நாளினும் அவ்வழக்குக்கள் வேறுபட்டிருந்தன என்று கருதுதல் பொருந்தாதென உணர்க. ஒருகால், சிற்சில வழக்குக்கள் மலைநாட்டுக்கே சிறப்புடையவாயினும், நம் சேரனுக்கு அம்மலைநாட்டினும் உரிமையுந் தலைமையுமுண்டாதலால், அதுபற்றி அவனைப்பற்றிய பாடல்களில் அவ்வழக்குக்கள் பயின்றன என்று கருதலும் இழுக்காது.

இதுவரை யாம் கூறிவந்த பிரபல பிரமாணங்களால், சேரராஜதானியாகிய வஞ்சியென்பது, ஆம்பிராவதிக் கரையிலுள்ள கருவூரேயென்பதும், கொடுங்கோளூரேனும் திருவஞ்சைக்களமேனும் ஆகாதென்பதும், வேறுசிலர் கருத்துப்படி, பேரியாற்றங்கரைத் திருக்காரியூரைக் கருவூர்வஞ்சியாகவும் அப்பேரியாற்றையே ஆன்பொருநையாகவும் கொள்வதற்குப் பொருத்தஞ் சிறிதுமே இல்லையென்பதும் பிறவும் நன்கு விளங்கத்தக்கன.

---

## 17 - ம் அதிகாரம்
## செங்குட்டுவன் காலம்

நம் சேரர்பெருமான் விளங்கிய காலம், மூன்றாஞ் சங்கத்துச் சான்றோர் வாழ்ந்த காலமேயாம். புலவர் பெருமக்களான பரணரும் சாத்தனாரும் செங்குட்டுவனை நேரிலறிந்து அவனது அவையைச் சிறப்பித்தவர்களாதலின், அப்புலவர்களாற் பாடப்பட்ட பிறதமிழரசர்களும், தலைவர்களும், அன்

ஞரைப்பாடிய வேறு தமிழ்ப்பெருமக்களும் நஞ்சேரர்பெருமான் காலத்தினும் அதனையொட்டிய காலங்களினும் விளங்கியவர்கள் என்பது தெரியலாகும். இம்முறையே நோக்குமிடத்து, சங்கத்துத் தொகைநூல்களிற் குறிப்பிடப்பெற்ற சான்றோரினும் தலைவர்களினும் பெரும்பகுதியினர் ஒருகாலத்தவராகவே முடிதலைக் காணலாம். எனவே, சேரன் செங்குட்டுவனது நீண்ட ஆட்சி, கடைச்சங்கத்தார் விளங்கிய காலத்தே ஓங்கியிருந்தது என்பது தெளிவாம்.

அத்தகைய கடைச்சங்ககாலம் யாது என்பதுபற்றி அறிஞர்களால் முன்னரே ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. அதற்குச் சிறந்த கருவியாயமைந்தது நம் சேரன்வரலாறேயாம். அன்னோர் ஆராய்ச்சியின் பயனாகக் கி. பி. 2-ம் நூற்றாண்டே சங்ககாலம் என்ற முடிவு வற்புறுத்தப்பட்டு, அதுவே பலருடைய கொள்கையாகவும் அமைந்தது. ஆனால் 22-வருஷங்கட்குமுன், என் ஆராய்ச்சியிற் கண்ட புதிய செய்திகள் பல அக்கொள்கைக்கு மாறுபட்டனவாயிருந்தமையால், 5-ம் நூற்றாண்டே செங்குட்டுவனும் சங்கத்துச் சான்றோரும் வாழ்ந்த காலமாதல் வேண்டுமென்று தக்க காரணங்கள்காட்டி இந்நூலின் முதற்பதிப்பில் முடிவுகட்டலானேன். அம்முடிவு அறிஞர் பலருடைய ஆராய்ச்சிக்கு உரியதாயிற்று. அவருட் சிலர் என்கருத்துக்களை ஏற்றுக் கொண்டனராயினும், வேறு சிலர் அவற்றின்மேல் விவாதம் நிகழ்த்தி வந்தனர். மற்றுஞ்சிலர் 5-ம் நூற்றாண்டுக்கும் பிற்பட்டதே சங்ககாலமாதல் வேண்டும் என்று கருதலாயினர். இவற்றுக்குரிய காரணங்களை யெல்லாம் இங்கே கூறுவது வேண்டாததாம். இவற்றுள்ளே கொண்டுநோக்குமிடத்து, யான் கண்டுவெளியிட்ட 5-ம் நூற்றாண்டுக்கொள்கையே பெரிதும் பொருத்தமுடையது என்று சொல்லத்

தடையில்லை. அதுபற்றி யான் புதியவாக அறிந்த செய்திகளுடன்வைத்து ஆராய்ந்துகண்ட முடிவினை அறிஞராது ஆராய்ச்சிக்குரியதாகத் தனியே வெளியிட விரும்புவதனால், இப்போது அதனை இந்நூலுட்சேர்க்காது நிறுத்திக்கொள்ளலாயிற்று.

## 14-ம் அதிகாரம்

# முடிவுரை

மேலே விரிவாக எழுதிப்போந்த பல அதிகாரங்களாலும், சேரன்-செங்குட்டுவனது பெருவாழ்வின் வரலாறு ஒருவாறு வெளியாகும். இச்சேரர்பெருமானது பெருமையை நோக்குமிடத்து, இவனைத் தேன்னாட்டு அசோகன் என்றே நாம் சொல்லல் தகும். அறிவாற்றல்களுடையனாய்த் தன் வாழ்நாளின் பிற்பகுதியில் மறச்செயல்தவிர்ந்து அறச்செயலே புரிந்தும், தனக்கு அபிமதமான பத்தினி வணக்கத்தை நாடெங்கும் பரப்பியும், அந்நிய சமயத்தவரைப் போற்றியும் வந்த செங்குட்டுவனை, அவ்வாறே அறச்செயல்புரிந்து பௌத்தசமயத்தைப் பரப்பிப் பரசமயத்தவரை ஆதரித்துப்போந்த அசோகனுக்கு ஒப்பிடலாகுமன்றோ? சங்கச்செய்யுட்களில் எத்தனையோ அரசர்செய்திகள் கூறப்பட்டிருப்பினும், இச்சேரன்போன்ற அறிவாற்றல் புகழ்களுடையராக அன்னோர் அறியப்பட்டிலர். அன்றியும் இத்துணைச்சிறப்பாக அவர் வரலாறுகளை ஆராய்ச்சி செய்வதற்கு இடமுமில்லை. இங்ஙனம், "புலவர் பாடும் புகழுடையோ"னாய், வீரம் நியாயம் தியாகமுதலியவற்றால் விளங்கி நின்ற இச்சேரனுக்குப்பின், இவன்மகன் குட்டுவஞ்சேரலே

பட்டமெய்தியவனுதல் வேண்டும். பிற்காலத்தே சந்திராதித்த குலத்தவராய்க் கொங்குநாடாண்ட சேரவரசர் நம் சேரன்மரபினராகவே தெரிதலையும், அச்சேரரின் முன்னோருள் ஒருவரே—திருமாலடியாரும் கொங்கர்கோனும் கொல்லிநகர்க்கிறைவருமான குலசேகரப்பெருமாள் என்பதனையும் மேலேகூறினேம். இங்ஙனம் பிற்காலத்து வாழ்ந்த சேரர் பரம்பரையோர், சங்ககாலத்துக்குப்பின் தம் பழைய பெருமையினின்று சுருங்கிவிட்டவராகவே தோற்றுகின்றனர். இவர் வலிசுருங்கியகாலத்தே, சோழபாண்டியரும் வேற்றரசராகிய களப்பிரர் பல்லவர்போன்றவரும் தென்னுட்டில் மாறிமாறி ஆதிக்கம் பெறுவாராயினர். இதனுல், சேரவரசர் தம் பழையதலைநகரமான வஞ்சிமாநகரை நெகிழவிட்டு, இயற்கையரண்பெற்ற கடன்மலைநாட்டுக் கொடுங்கோளூரில் (Cranganore) இருந்தாண்டு வந்தசெய்தி முன்னரே விளக்கப்பட்டது. அத்தலைநகரில் இருந்து கடன்மலைநாடாண்ட சேரமான்கள் பலராவர். அவருள்ளே, சிவனடியாராகிய சேரமான்பெருமாணயனுரை ஈண்டுச் சிறப்பாகக்கூறல் தகும். இத்தகைய தனித்தமிழ் வேந்தர்களின் ஆட்சியிடமாய்ச் செந்தமிழ்ப்பயிர் செழித்து வளர்ந்த அம்மலைநாடானது இக்காலத்தில் மாறியநிலையை என்னென்பேம்! அச்சேரதேசம் முன்பு சிறந்த தமிழ்நாடாகவே விளங்கியதென்பதற்கு, அங்கு அகப்பட்டுவரும் பழைய தமிழ்ச்சாஸனங்களே சிறந்த சான்றுவன. அத்தகைய நாடு, சிலநூற்றுண்டுகளுக்குள் பாஷையாலும் நடையுடைபாவனைகளாலும் வேறுபட்ட ஒரு தனித்தேசம்போல் இப்போது நிற்பது அதிசயமேயன்றோ? இவ்வாருயினும், பழைய சேரவரசரைச் சார்ந்த கிளைகள் மட்டும் இன்றும் அந்நாடாட்சி செய்துவருகின்றன. சோழபாண்டியவமிசங்கள் மறைந்துபோய்ப் பலநூற்றுண்டுகளா

லியும், சேரர்கிளையினர் சிலர் இங்ஙனம் கடன்மலைநாட்டில் தலைமை வகித்துவருவது ஓராற்றால் மகிழத்தக்கதேயாம். இம்மரபினரும் இவரால் ஆளப்படும் குடிகளும் பாஷை பழக்கவொழுக்கங்களால் வேற்றுநாட்டார்போலவே இக்காலத்தில் மாறிநின்றனராயினும், பழைய தமிழ்வழக்குக் களையும், சொற்பொருண்மரபுகளையும் அவரிடத்துப்போலச் செந்தமிழ்நாட்டுமக்களுள்ளும் நாம் காண்டலரிதென்றே சொல்லலாம். அவற்றையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும்.

முற்றும்.

---

ஸ்ரீ

# பொருட்குறிப்பு.


அக்கினிகுலம் 5
அக்கினிகோத்திரம் 58.
அகத்தியர் 67, 105.
அகநானூறு 11, 13
அகப்பா 79
அகலப்புழை 20.
அகிரிநதி 113, 183
அசரீரி 39, 143.
அசோகன் 1, 8, 109, 147
அஞ்சுவண்ணம் 174
அஞ்சைக்களம் 168
அட்சயபாத்திரம் 44
அடிகள்-இளங்கோவடிகள்
அடித்தோழி 84.
அடியார்க்கு நல்லார் 6, 33, 77
அத்தாணி மண்டபம் 93, 130, [160
அதிகமான் } 16, 19, 26
அதியமான் }
அதியேந்திர விஷ்ணுக் கிருகம் [19.
அதரிதிரித்தல் 64
அந்துவஞ் செள்ளை 17.
அந்துவஞ்சேர விரும்பொறை [15.
அந்துவன் 139
அநசன விரதம் 130
அம்புகோயில் 127.
அம்புநாடு
அம்மானைவரி 85
அமராவதி 59.
அமுதசுரபி 44.
அயிரி 182.
அயிரை (மலை) 155-6; (யாறு) 79, 156
அயிரைக் கொற்றவை 181.
அயிரையாறு 181-2.
அரசவனம் 164. [104
அரசுகட்டில்-சிங்காதனம் 17,
அரசுவா-பட்டத்தியானை 96 134.
அரட்டன்செட்டி 87, 91, 164.
அரந்தை - துயர் 95
அரிகேசரி நெடுமாறன் 187.
அரிசில் கிழார் 17.
அருணகிரிநாதர் 155, 180, 191
அரும்பதவுரையாசிரியர் (சிலப்.) 27, 153, 164, 173
அவந்தி 77.
அழும்பில் 184
அழும்பில்வேள் 54, 81.
அறமமாங்கனிபொருந்தல் 182.
அறக்களவேள்வி 79, 146.
அறவணவடிகள் 43-6, 87, 170
அறிதுயில்-யோகநித்திரை 97.
அறுகை 31.
அனசனவிரதம் 130.
ஆகஸ்டஸ் 170
ஆசீவகர் 68, 97.
ஆடகமாடம் 58, 87, 92, 96, 97, 160

ஆடித்திங்கள்விழா 95
ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 13, 14, 26, 106, 156.
ஆதித்தசோழன் 189,191
ஆதிரை 45.
ஆந்திரவரசர் 110.
ஆபுத்திரன் 44.
ஆமிராவதி 161.
ஆமூர் 184.
ஆய்குலவேந்தர் 99
ஆயக்கணக்கர் - அரசிறை அதிகாரிகள் 81.
ஆயத்தார்-மகளிர்பரிவாரம் 73.
ஆராவமுத ஐயங்கார் (டி. ஜி,) 111
ஆரியநாடு 14.
ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் 104
ஆரியவரசர் 10, 26 7, 30, 54, 72, 77, 80. 82, 110.
ஆவிநன்குடி 15, 193
ஆவியர் 15.
ஆழ்வார்கள் காலநிலை 5, 166.
ஆளி-50.
ஆன்பொருந்தம் 158, 167.
ஆன்பொருநை 73, 79, 156, 158.
ஆனந்தகுமாரஸ்வாமி (டாக்டர்)- [112
ஆனி-ஆன்பொருநை 158
ஆனிலை 167.
ஆனைமலை 156, 183:
ஆனைமலைக்கைபீது 183
ஆனைமங்கலம் 99.
இடும்பாதவனம் - இடும்பாவனம் [32, 78.
இடும்பில் 32, 78.
இந்திரவிகாரம் 69, 86, 98.
இந்திரவிழா 35. 170.
இமயத்தாபதர் 56.
இமயம் 10, 53, 59, 147.
இமயவரம்பன் 10, 25, 49, 57, [104
இமவான் 53.
இரவிதத்தன் 29.
இரவிபுரம் 165
இராகுலன் 43.
இராசகேசரி 190
இராசசூயம் வேட்டபெருநற்கிள்ளி 25-6, 103
இராசமாதேவி 45
இராசராசசோழன் 1-99.
இராசேந்திர சோழன் 1 141-
இராமராவணயுத்தம் 64-5 [148,
இருக்குவேள் 24
இருகடனீருமாடினோன் 79.
இருங்கோவேள் 24
இரும்பொறைமரபினர் 19, 26
இலங்கைக் கயவாகு 95, 111, 143
இலங்கைப்போர் 64.
இலச்சினை-முத்திரை 83.
இலவந்திகைப்பள்ளி 122
இலவந்திகை வெள்ளிமாடம் 49, 160
இளங்கோ - இளங்கோவடிகள்
இளங்கோசர் 108 [21.
இளங்கோவடிகள் 3, 25, 34, 151
இளங்கோவேண்மாள் 24, 49, 72, 76. 145.
இளங்கோவேளிர் 24.
இளஞ்சேரவிரும்பொறை 17-9
இளம்பூரணவடிகள் 145
இறையனார் களவியலுரை 169

ஈரைம்பதின்மர் 8.
உக்கிரப்பெருவழுதி 25, 106.
உண்ணுநோன்பு 68, 130
உத்தரதேசம் 62, 146
உத்தரன் 62
உதயகுமரன் 43, 45
உதியஞ்சேரல் 7, 10, 25
உதியன் 183.
உதியன்வேண்மாள் 49
உப்பு வாணிகர் 159
உம்பற்காடு 11, 117
உமையவள் 77
உயர்வுநவிற்சி 178.
உருத்தல்-கோபித்தல் 67.
உருத்திரன் 62.
உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி 115.
உரையாசிரியர் 118. 161,
உலகமன்னவன் 135.
உலகவறவி 45
உற்பாதசாந்தி 39.
உறந்தை 101. 169.
உறையூர் 32, 36, 157, 176.
உறையூர்ச் சோழர் 101
ஊசல்வரி 85.
எகிப்தியர் 129.
எண்பேராயம் 57. 128
எருமைக்கடாப்பலி 89.
எருமைகுடநாடு 115, 183.
எழுமுடி (மாலை) 80, 138.
ஏத்தாளர் 60.
ஐங்கணைக்கிழவன்-மன்மதன் [76.
ஐங்குறுநூறு தொகுப்பித்தோன் 18.
ஐம்பெருங்குழு 57
ஐயை 37, 84, 85.
ஐராவதம் 49.
ஐவர்மலை 183
ஒற்றைமுலைச்சி 142.
ஒன்பதின்மர்சோழர் 27, 78.
ஒன்பதுகுடை 33.
ஓவர் 60.
ஔவையார் 106, 117.
கங்கதேசம் 108.
கங்கர் 54, 113.
கங்கவரசர் 28, 148.
கங்கவாடி 113.
கங்கை 30, 148
கங்கைக்கரைப்பாடி 70.
கச்சி 141.
கஞ்சதாளம் 63.
கஞ்சுகமாக்கள் 77.
கஞ்சுகமுதல்வர் 60, 127.
கட்டிமுதலியார் 114.
கட்டியர் 32. 54, 113-4, 30.
கட்டிவார் 114.
கடம்பு, காவன்மரம் 11.
கடம்பின்பெருவாயில் 13.
கடல்கோள் 46, 170
கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் 30, 125.
கடல்விளையாட்டு 67.
கடலாடுதல் 35.
கடவுண்மங்கலம் 82 84, 145.
கடவுணல்லணி 85.
கடற்கடம்பு 55, 79
கடற்கரைப்பாடல் 67.
கடன்மலைநாடு 32, 155-0, 179. 187
கடாரம் 148.
கடிகையார் 123.
கடைகாப்பாளர் 57
கண்டத்திரை 71.

கண்ணகியின் தோழியர் 84;— கோயில்கள்-143;— திருவிழா 142.
கண்ணெழுத்தங் கோல் 129:
கண்ணெழுத்தாளர் 61. 129
கண்ணெழுத்து 129-30
கணக்கியல்வினைஞர் 57, 126
கணைக்காலிரும்பொறை 18, 19
கதம்ப வேந்தர் 11, 17
கந்திற்பாவை 45.
கந்துகவரி 85
கபிலபுரம் 41
கபிலர் 15. 18, 182
கயவாகு 93, 95, 111, 142-3
கர்ப்பபுரி 161
கரணத்தியலவர் 57, 128
கரபுரம் 190-1
கரிகாலன் 101, 107, 115, 141, 149, 184
கருநடர் 30, 54
கருநாடர் 112
கருமவிதிகள் 57, 128
கருமவினைஞர் 57-8, 126
கருவூர் 160, 168, 176
கருவூர்ச்சாஸனம் 162, 188
கருவூர்ப்பொன்வாணிகன் 162
கருவூர்ப்புலவர்கள் 176
கருவூர்த்திருவானிலை 160
கருவூர்ப்புராணம் 161-2
கருவூர்ப்புலவர்கள் 176
கருவூர் வஞ்சி 20, 23, 157, 158
கருவூரேறிய வொள்வாட்கோப் பெருஞ் சேரலிரும்பொறை [18
கருவெட்டாறு 102
கரைப்போத்தனாறு 102, 155
கல்லாடனார் 13, 117
கல்லாயம் 143
கலிங்கநாடு 41
கலிங்கர் 30. 54, 112
கலைமகள் 44, 119, 149
கவுந்தியடிகள் 36, 37, 68, 98
கழஞ்சு 13
கழாத்தலையார் 21
கழுமலப்போர் 18
கழுமலம் 18, 184
கள்ளக்குறிச்சிக்குதிரை மட்டம் 185
களப்பிரர் 191
களங்காய்க்கண்ணி நார்முடிச் [சேரல் 12. 3
களபம் 51
களவழிநாற்பது 18
களவேள்வி 95, 105
களையோடைக்கண்ணகி 143
கற்காநாடு 155
கற்பனை-கட்டளை 82
கன்னர் 61, 72, 110, 135
கன்னிப்போர் 28
கன்னியாகுமரி 67
கனகச்சுற்றம் 57, 128 [171
கனகசபைப்பிள்ளை (வி) 5, 107,
கனகவிசயர் 63, 65, 67, 81,
கனகன் 61, 147 [92
கா-துலாம் 14 [ளையார் 14
காக்கைபாடினியார் நச்செள்
காங்கேயமாடுகள் 185
காசறைக்கரு 51
காஞ்சியாநகரம் 46, 121, 156, 184
காஞ்சியாறு 156, 177
காஞ்சிவாய்ப்பேரூர் 184
காணம்-13, 14, 16 7

காப்பியம் (குடி) 89
காப்பியாற்றுக் காப்பியனார் 13
காப்பொன் 14
காப்புமறம்-காவல் வீரர் 17
காயசண்டிகை 44-5
காயற்பட்டினம் 175
காரி 101-2
காரியாற்றுத் துஞ்சிய நெடுங்
கிள்ளி 25 6, 101
காரியாற்றுப்போர் 101
காரியாறு 102, 156: 184
கால்கோட்காதை 47
காலமுரசம் 58
காவன்மரம் 11. 31, 79
காவிரி 163, 174
காவிரிப்பூம்பட்டினம் 34, 45,
67, 68
கானப்பேர்-காளையார்கோயில் [106
கானல்வரி 67
கிருஷ்ணன்கோயில் 164
கிள்ளிவளவன் 43, 101, 170,
184
கிளாடியஸ் 170
குட்டநாடு 155, 137. 179
குட்டுவஞ்சேரல் 24, 25, 117,
குட்டுவன் 20, 155, 180; செங்
குட்டுவன் 29, 97, 152
குடக்கோ 23, 97, 155
குடகக்கொங்கர் 108, 111,
குடகர் 60 [142-143
குடகு 60, 108
குடகொங்கன் 155, 180
குடநாடு 115, 133, 155, 182
குடபுலம் 154 5
குடவர்கோமான் 10, 73, 77
குடவறை 156, 163
குடாவடியுளியம் 51
குணபுலம் 154-5
குணவாசல் 23
குணவாயில் 93, 185
குணவாயிற்கோட்டம் 22-3
குணில்-குறுந்தடி 83
குப்தசக்கரவர்த்திகள் 14, 112
குமட்டூர்க்கண்ணனார் 11
குமரலிங்கசாஸனம் 29
குயிலாலபுரம் 147
குயிலாலுவம் 78, 147
குயிலுவர் 60, 134
குரவைக்கூத்து 39, 48, 62
குரு-வசூரி 95
குருகுலவாசம் 25 [193
குலசேகர ஆழ்வார் 166, 180
குலசேகரர்-மலையாளவரசர் 90
குலோத்துங்கன்பிள்ளைத் [தமிழ் 168, 188
குழுமம் 184.
குழுமூர் 184
குறளர் 73, 76
குறும்பொறை 184
குன்றக்குரவை 47, 50
குன்றக்குறவர் 133, 183
கூடல்-மதுரை 157 163
கூத்தச்சாக்கையன் 76-7
கூத்தர் 188
கூத்துள்படுவோன் 131, 133
கூலவாணிகன் சாத்தனார் 97
கூவைநீறு 50 [118
கூற்றுவரைநிறுத்த சேரன் 79
கூனர் 26, 73, 76
கேரளபதி 170
கேரளபுத்திரர் 8, 109
கேரளபுரம் 165
கேரளர் 2

கேரளாந்தகவளநாடு 188
கேரளோற்பத்தி 171, 180
கொங்கணக்கூத்தர் 60
கொங்கணர் 30, 54, 112
கொங்கர்கோ 187
கொங்கர்செங்களம் 27. 28, 54, [83
கொங்கன்-சேரன் 155.
கொங்கிளங்கோசர் 93, 95, 107-[108, 140
கொங்குச்சேரர் 152
கொங்குதேச ராஜாக்கள் 28;—
சரிதம் 108
கொங்குநாடு 155, 186
கொங்குவைகாவூர் 180
கொட்டி-கொடுமகொட்டி 77
கொட்டிச்சேதம் 77
கொடுகூர் 28, 156
கொடுகூர்நாடு 28, 29
கொடுங்கருநாடர் 60
கொடுங்கோளூர் 7, 142,
167, 172, 174,
கொடுங்கோளூர்ப்பகவதி 143
கொடும்பாளூர் வேளிர் 24
கொடும்புறமருதி 118
கொல்லி 155
கொல்லிக்கண்ணன் 181
கொல்லிகாவலன் 181
கொல்லிநகர் 181
கொல்லிமட்டம் 185
கொல்லிமலை 175. 181
கொற்கை 70, 105, 169, 175
கொற்றவை 181-2
கோக்கண்டன் 189
கோச்சடையன் 187
கோச்செங்கணன் 148
கோசர் 31, 108
கோடு கரை 166
கோநகர்-தலைநகர் 74
கோப்பெருந்தேவி 24, 41, 52,
53, 72, 74, 77, 130
கோபிநாதராயர் (து. அ.) 139-137
கோமுகி 44
கோலெழுத்து 129. 130
கோவலன் 9-ம் பாட்டன் 160
கோவலூர் 23, 117
கோழி 95, 157, 180
கோனாட்டு எறிச்சலூர் மாடலன்
மதுரைக்குமரனார் 37
கௌசிகன் 36
சங்ககாலம் 198
சங்ககாவியங்கள் 123
சங்கமன் 41-42
சங்கரசோழனுலா 168
சங்கன் 43
சஞ்சயன் 61-2, 127
சட்டையிட்ட பிரதானர் 60
சண்முகநதி 182
சத்திமுற்றப் புலவர் 17
சத்திய புத்திரர் 109
சதுக்கப்பூதர் 79
சந்திராதித்தியகுலம் 5, 190-1
சமுத்திர குப்தன் 147
சமுத்திரதேவதை 44
சல்வி-தொங்கல்வகை 72
சாக்கையர் 77, 131
சாத்தன் 51, 84, 87, 88
சாத்தனார் 4, 6, 23, 34, 44, 52,
117-24, 149
சாத்தனார்வமிசம் 123
சாதகர்ணி 110
சாரணர் 57, 127
சாவகநாடு 45

சாஸனமேற்கோள் 8, 19, 29, 37, 87, 89, 130, 152, 162 167, 183
சிக்கற்பள்ளி 16
சிங்கபுரம் 41
சிங்கன் 62
சித்தலி 119
சித்திர மண்டபம் 77
சித்திரமாடம் 122
சித்திரவெழுத்து 129
சித்திரன் 62
சித்திராபதி 69, 86
சிந்தாதேவி 44
சிபி 71
சிரௌதியர் 81
சிவபிரான் 58, 92, 95, 97
சிவபெருமான் திருவந்தாதி 167
சிவேதன் 62
சிறுபாணாற்றுப்படை 6, 169
சிறுபுறம்-சிறிய இறையிலி 16
சின்னமனூர்த் தாமிரசாஸனம் [105
சீத்தலை 119
சீதாதேவி 7
சீராமமூர்த்தி 145
சீறியகற்பு 137
சீனர் 5
சுக்கிரீவன் 7
சுதமதி 43
சுந்தரமூர்த்திநாயனார் 168
சுள்ளியாறு 7, 156, 174, 183
சூடகம் ஓரணி 77
சூதநதி 158, 161
சூதர் 59
சூர்ணநதி 183
சூரியவமிசம் 5, 83
சூளாமணி 190
செங்கதிர்ச்செல்வன் 39
செங்குட்டுவன் — காலத்துச் சோழர்-103; -சகோதரர்-20--சமயம்-95;-நிறை—153
செந்தமிழ்ப் பத்திரிகை 129, 130 131, 137-38. 161 2
செந்தமிழ் நிலஞ்சூழ் பன்னிரு நிலம் 155
செம்பு கொட்டிகள் - வெண்கலக் கன்னார் 159
செல்வக்கடுங்கோ வாழியாதன் 15, 19. 107
சேக்கிழார் 188
சேடக்குடும்பி-அருச்சகன் 87
சேடம்-பிரசாதம் 97 [164
சேரநாடு 154
சேரர் இலச்சினை 54;—எண்மர்-9;—கொங்கு 155
சேரமான் கடலோட்டிய வேல் கெழுகுட்டுவன் 39
சேரமான்பெருமாள்நாயனார் 188, 193
சேரமான் மாரிவெண்கோ 25;
சேரமுனி 6 [105:
சேரர்கொங்கு 180
சேரலாதன் 10, 11, 28, 83, 93, 138, 141. 154
சேரவேந்தர் தாயவழக்கு 24 138
சேரன் செங்குட்டுவனார் 2, 145
சேரன்திருமணக்குட்டுவன் 152
சேலம்ஜில்லாகெஸட்டியர் 114
சேனமுகம் 55
சைனமுனிவர் 63
சைனர் 97
சோழகேரளமண்டலம் 188

சோழர் ஒன்பதின்மர் 33, 69, 78, 102
சோழவிசாவளி 103
சோழன் செங்கணான் 18
சோழன் பெருநற்கிள்ளி 95
சோனகர் 129
டைபீரியஸ் 170
தகடூர் 16, 19, 184
தகடூர்யாத்திரை 16
தங்கால் 179
தண்டமிழாசான் (சாத்தனார்) 51
தண்டாரணியம் 14
தண்பொருந்தம் 158
தந்திர வினைஞர் 57, 126
தபதிகள்-சிற்பிகள் 82
தம்மாமி-மாமியார் 85
தமிழ்வேந்தரின் இமயப்படையெடுப்பு 149
தமிழகம் 2, 114, 154
தமிழரசர் எழுவர் 195
தமிழரும் ஆந்திரரும் 183
தமிழாற்றல் 147
தர்மபுரி 19, 185
தருமதேவதை 84
தருமவினைஞர் 57, 126
தலைச்செங்கானம் 37
தலைக்காடு 113
தலையாலங்கானம் 105, 148
தனுத்தரன் 62
தாணுமாலி 191
தாதெருமன்றம்-இடைத்தெருவில் உள்ள பொதுவிடம் 68
தாம்பபர்ணி-இலங்கை 109
தாலமி 7, 20, 170
திருக்கச்சூர்ச்சாஸனம் 123
திருக்கண்ணன் 102
திருக்கரூர் 167 71
திருக்காரியூர் 171. 162
திருச்குணவாயில் 23
திருச்செங்குன்றூர் 155
திருச்செங்கோடு 155
திருத்தங்காலூர் 179
திருநாதர்குன்றச்சாஸனம் 130
திருமங்கையாழ்வார் 187
திருமணக்குட்டுவன் 152
திருமூறறக்கோடு 166
திருமாபத்தினி 70
திருமுக்கூடல் 163
திருமுடிக்காரி 102
திருமேனி 55
திருவஞ்சிமாநகரம் 162
திருவஞ்சைக்களம் 167
திருவடிநிலை-பாதுகை 75
திருவடிபிடிப்பான் 87, 92
திருவள்ளுவமாலை 118
திருவள்ளுவர் 1, 22, 118, 152
திருவனந்தபுரத்தரசர் 132
திருவனந்தபுரம் 165
திவாகரம் 57 158
திரௌபதியம்மன் 143, 182
தீவதிலகை 44, 45
துங்கபத்திரை 111, 183
தும்பிவாடி 1[illegible]
துலாபாரதானம் 72, 133, 153
துளுநாடு 108, 109
தூங்கெயில் மூன்று 71
தெய்வச்சிலையார் 177
தென்புலம் 154. 5
தென்னாட்டு அசோகன் 195
தேசிகப்பிரபந்தம் 184
தேவந்தி 22, 84 9
தேவந்திகை 98, 139, 165

தேவாசுரயுத்தம் 64, 65
தேவாரம் 23, 168
தேனன்றுமலை 16
தொகைநூல்கள் 122-3
தொண்டி 14, 20, 157, 169
தொண்டிப்பாயில் 20
தொதுவர் 141
தொல்காப்பியம் 135, 136
தொல்காப்பியனர் 2, 6, 89,132, 133, 134, 154
தோரணக்கற்பட்டி 189
தோரணவாயில் 77
நக்கீரர் 122, 170
நகரமாந்தர் 57, 128
நகைவேழம்பர் 134
நங்கை-பத்தினி 95
நச்சினர்க்கினியர் 133
நடுகல் 133
நடுகற்காதை 47
நரிவெரூஉத்தலையார் 18
நல்லினி 10
நல்லூர்நத்தத்தனர் 170
நலங்கிள்ளி 101
நவகதிர் 97
நற்சோணை 12, 25, 27, 107
நறவு (ஊர்) 14. 20, 156
நன்மாறன் 105, 122
நன்று 16, 183
நன்றுகுன்றத்துஜீயர் 16
நன்னன் 13, 127
நன்னன் வேண்மாள் 32, 49
நாகபட்டினத்துப் பௌத்த விஹாரம் 99
நாகபட்டினத்துப் பத்தினி தேவி 141
நாகபுரம் 45
நாகோட் ஸம்ஸ்தானம் 110
நாட்கொள்ளுதல் 57
நாட்கோள் 57, 134
நாடகமகளிர் 60, 134
நாமக்கற்சாஸனம் 109, 152
நார்முடிச் சேரல் 26, 106, 191
நாவியின்பிள்ளை 51
நாளொப்பனை-அன்று செய்த அலங்காரம். 73, 146
நான்மொழிக் கோசர் 109
நான்மொழி நாடு 109
நித்தியாக்கினி 60
நிமித்திகன்-சோதிடன் 57, 93
நியமம் 108
நிலந்தருதிருவி னெடியோன் 75
நீர்ப்படை 47, 61
நீலகிரி 59, 62, 172
நீலகேசி 97
நீலன் 77, 78, 127
நீலி 42
நூற்றுவர் கன்னர் 61, 62, 72, 108 9. 110, 112, 143, 146
நூழில் 63
நெடுங்கிள்ளி 25, 26, 101
நெடுஞ்சடையன் 187
நெடுஞ்செழியன் 41, (ஆரியப் படைதந்த—) 52, 104, 179
நெடுஞ்சேரலாதன் 10, 21, 26, 30. 49, 107, 136, 137, 140
நெடுவேள்குன்றம் 42. 47, 155
நெரூர்ச்சாஸனம் 162
நென்மலி 184
நென்மலிப்புராணம் 184
நேபாளம் 147

நேரிமலை 33
நேரிவாயில் 32. 23, 78, 103
நொய்யலாறு 183
நௌரா 14
பகைவர்நாட்டைக் கழுதையேர்
பூட்டி யுழுது வெள்வரகு வித்
தல் 73
பங்களர் 30, 54. 112
பசுபதீசுவரர் 168
பட்டவர்த்தனக்களிறு 57, 58,
பட்டினப்பாலை 101. [59, 74
படகநாடு 113
படங்கு-கூடாரம் 71
பத்தினிக்கடவுள் 22, 95
பத்தினிகள் 53
பத்தினிக்கோட்டம் 82, 96
141 2
பத்தினிவணக்கம் 140 3
பதிற்றுப்பத்துரை 163, 174
பதைனிதேவி 110 112
பரணர் 4, 21, 24, 29. 31, 115
117, 136, 146, 163, 167
பரதன் 42
பரமதபங்கம் 184
பரஸ்தானம் 133
பராசரன் 104, 178 9
பராந்தகசோழன் 191
பரிமேலழகியார் 1
பல்காப்பியர் 89
பல்யானைக் கோக்கண்டன் 189
பல்யானைச்செல்கெழுகுட்டு
வன் 12, 26, 104, 152, 157,
பல்லவர் 193
பல்வண்ணத்திரை 71
பல்வேறகட்டியர் 113
பவானி 184
பழமொழி 134, 185
பழவேற்காடு 114 5
பழனி 15
பழனித்தலபுராணம் 175
பழையதமிழெழுத்துக்கள் 130
பழையன் 27. 20, 31, 32, 70
பளிக்கறை 43
பளிங்கர் 183
பறையூர்ச்சாக்கையன்-76
பாசண்டத்துறை 60
பாசண்டச்சாத்தன் 87, 88
பாடகம்-காலணிவகை 77
பாடிவிழாக்கோள்-தலைநகரில்
உற்சவம் நடத்துகை 95
பாண்டியவம்சம் 106
பார்ப்பனி 89
பாரதப்போர் 7, 60, 64-5
பாரி 15
பாலகுமரன் 61
பாலைக்கௌதமனார் 12, 79, 179
பிக்குணி-பௌத்த தவப்பெண் -
69, 87
பிங்கலந்தை 153
பிடகநெறி-பௌத்த மார்க்கம் 98
பிரமதாயம் - பிராமணர்க்குவிடப்
படும் இறையிலி 11 [98
பிராமிசாஸனம் 162
பிரிட்டிஷ்மியூஸியம் 112, 144
பிருஹத்ஸம்ஹிதை 7
பிற்றைநிலை-வழிபாடு 104
பிறந்தநாட்கொடை 66
புகழியூர் 162
புகார் 34. 44. 100 1
புகார்ச்சோழர் 101
புண்ணியராசன் 45
புத்த சரித்திரம் 147

புத்தசாதகக் கதைகள் 44, 120
புத்த பீடிகை 43, 45
புத்தர் 147
புறஞ்சேரி 158
புறத்திரட்டு 16
புறத்துறை 66, 154
புறநானூறு 82
புன்னாடு விஷயம் 28
பூப்பலி 82
பூர்ணவாகினி 182
பூழிநாடு 13, 155
பூழியன் 155
பெருங்கணி - தலைமைச் சோசியன் 56, 70, 126
பெருங்கிள்ளி 33, 95
பெருநகுடிவாணிகர் 43
பெருங்குன்றூர் கிழார் 17
பெருஞ்சேரலிரும்பொறை - 16 106, 185
பெருஞ்சோற்றுநிலை 58, 133
பெருஞ்சோறு 8
பெருந்தலைச்சாத்தர் 117
பெருநம்பி 123
பெருநற்கிள்ளி 25, 26, 33 102, 105, 106
பெருநாள் 131
பெரும்பேகன் 15
பெருமங்கலம் 131, 132
பெருவிறற்கிள்ளி 115
பேகன் 15, 115
பேடியர் 76
பேய்க்குரவை 64
பேய்விருந்து 64
பேரியாறு 7, 50, 55, 120, 150
பேராசிரியர் 190 [156, 182-3
பேரூர் 134
பேரூர்ப்புராணம் 161
பைரவன் 62
பொதியமலை 53, 59, 67
பொதினிமலை 15, 160
பொய்கையார் 18 180
பொய்யாமொழிமங்கலம் 123
பொருனெய் 161
பொறையன்சேரன் 139
பொறையன் பெருந்தேவி 139
பொன்மண்டபம் 171
பொன்வாகைப்பூச்சூட்டுதல் 66, 136
பொன்னனி 156, 182
பொன்னுலகு-சுவர்க்கம் 91
போந்தை-பனந்தோடு 91
பௌத்தசங்கம் 43 69
பௌத்தசமயம்
பௌத்தசைத்தியம் 160
பௌத்தர் 97
பௌத்தவிகாரம் 46. 69, 99
மக்கட்டாயம் 138
மகதம் 77
மகாபாரதம் 7
மகாஜனகன் 44
மகோதை 7, 168, 169, 175-7
மங்கலம்-ஓர் ஊர் 88
மங்கலாதேவி 88, 90, 185
மங்களாச்சி 90 [107.1 38
மணக்கிள்ளி 12, 14, 26, 101
மணிகுட்டுவன் 152, 191
மணிபல்லவம் 43 5, 132
மணிமேகலை-சமுத்திர தேவதை 43 4
மணிமேகலையும் புத்தஜாதகமும்-- 44, 119

மணிமுத்தாநதி 102, 163, 184, 186
மதுக்கரை 186
மதுராபதி 41 2
மதுரை 52. 67, 68, 70, 78, 100, 157, 169, 176
மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் 23. 34
மதுரைக்காஞ்சி 31, 132, 169
மதுவேள்வி 79
மயிர்க்கண்முரசம் 63
மயிலைநாதர் 152
மரந்தை 20, 136, 169
மரீசிபத்தனம் 7
மருத்துவன் தாமோதரனார் 118, 9
மருமக்கட்டாயம் 138
மருவூர் 177
மலயம் 178
மலாடு 155
மலைநாட்டரசர் 133
மலையமான் திருமுடிக்காரி 102, 117
மலையாளவரசர் 132
மலையன் 155
மழகொங்கம் 184
மற்கலி 97
மறக்களவேள்வி 79, 146
மறக்கற்பு 137
மஹாமஹோபாத்யாய ஐயரவர் [கள் 8
மாகதர் 59
மாங்குடி மருகனார் 132
மாசாத்துவான் 34. 46, 28, 85
மாடலகோத்திரம் 37
மாடலன் 37. 66, 69, 7, 77, 81, 84, 90, 99, 132, 140, 146, 150, 152 154
மாடலன்கருடன்கண்ணன் 37
மாடலன் பாண்டங் தாமோதரன் 37
மர்தரி 37, 39. 69. 84, 91 164
மாதவி 35, 36, 67, 69, 98
மாந்தரஞ்சேரலிரும்பொறை- 107 [189
மாந்தரம்பொறையன் கடுங்கோ -
மாந்தரன் 18. 107
மாந்தை 11. 20. 136. 157
மாநாய்கன் 34, 69. 85
மாமூலனார் 11. 108, 109, 116, 113, 117, 136
மாரிவெண்கோ 25, 106
மாலதி 88
மாவண்கிள்ளி 102
மாளுவநாட்டுப் பதைணி கோயில் 145
மாளுவ நாடு 110 112
மாளுவவேந்தர் 92 3, 110 1
மாறோகத்துநப்பசலையார் 126
மாஸ்திகல் 28, 137 [143 4
முசிரி (றி) 7, 187
முசுறி 174
முடிததலைக்கோப் பெருநற்கிள்ளி 15
முடிவழங்கு சோழபுரம் 162
முத்தமிழாசிரியர் 129
முதுகுடுமிப்பெருவழுதி 148
முதுகோசர் 108
முப்பால் 118 9
மும்முறை வலஞ்செயல் 92
முயிரிக்கோடு 174
முரசீபத்தனம் 7
முரஞ்சியூர் முடிநாகராயர் 7
முருகபூசை 50

முருகன்வரைப்பு 85
முள்ளூர்மலை 102
மூலந்திருநாள் 132
மூன்று தமிழ்க்குடிகள் 131
மேல்கொங்கு 108
மேலைச்சிதம்பரம் 184
மேனிலையுலகம் 79
மோகூர் 31, 116, 147
மோரியர் 31, 109
மைத்துனச்சோழன் 32, 33, 70, 102, 140
மௌத்திகன் 57
மௌஹூர்த்திகன் 57
யயாதி 5
யவனர்நாடு 79
யவனவரசர் 10
யவனாசிரியர் 14, 20
யாகசாலை 93
யாகசாந்தி 81
யாப்பருங்கலக்காரிகையுரை 186
யாப்பருங்கலவிருத்தி 219
யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை 18, 19
யானைத்தீநோய் 45
ராஜருஷி 3, 1[illegible]
ரோமசக்கரவர்த்தி 170
வச்சிரநாடு 77
வசு-கலிங்கவரசன் 41
வஞ்சிநகர் 11, 15, 19, 22, 45, 46, 59, 74, 76, 79, 83, 84, 86, 91, 93, 95, 96, 101, 122, 128, 132, 141, 157, 158, 161, 164, 169
வஞ்சிநாயகன் 162
வஞ்சியம்மன் 162
வஞ்சியர்குலபதி 19
வஞ்சுளாரணியம் 162
வட்டெழுத்து 8, 129, 30
வடகொங்கு 14
வடுகர் 103, 83
வண்டமலை 184
வண்டன் 184
வரந்தருகாதை 47, 86
வருபுனல் 169
வராகமலை 161
வராகமிகிரர் 7
வரிப்பாட்டு 60
வரையாடுவருடை 51
வலம்புரிவலமெழுதல் 74
வள்ளி 47
வள்ளுவர்முப்பால் 118
வள்ளைப்பாட்டு 86
வளையாபதி 54
வாகைப் பெருந்துறை 13
வாயிற்புறம்-நேரிவாயில் 33
வாழ்த்துக் காதை 47
வான்மீக ராமாயணம் 1, 7
வானவன்-சேரன் 5, 74, 174
வானவிறல்வேள 126-7
வானி-ஆன்பொருநை 158: பவாணி 184
வானுறை-சுவர்க்கவாழ்வு 179
விக்கிரமாதித்த வரகுணன் 99
விசயநகரவேந்தர் 114
விசாகந் திருநாள் 132
விசயன் 61, 147
விசித்திரன் 62
விடர்ச்சிலை பொறித்த சேரன் 55, 79
விடுகாதழகிய பெருமாள் 19
வித்தியாதரன் 91
வித்துவக்கோட்டக்கிரகாரம் 166

விதூவக்கோடு 166
வியலூர் 32.
விருத்தாசலம் 84
வில்லவன் கோதை 54, 64, 81, 126, 151
விழாக்கோள் 95
விழாவணி-உற்சவச்சிறப்பு ,96
விழுப்புண் 66, 135
வீரக்கல் 136
வீரக்கற்பு 137
வீரகேரளமண்டலம் 162
வீரசோழன் 189
வீரநாராயணன் 189
வீரபத்தினி 137, 142
வீரபாண்டியன் 189
வெங்காலநாடு 162, 188
வெள்ளணி 131
வெள்ளிமாடம் 49, 164
வெள்ளியம்பலம் 120
வெள்ளைக்கோட்டி 94
வெளிப்படையணி 157
வெற்றிவேற் செழியன் 70, 95, 105, 122
வெள்ளூர்க்காப்பியனார் 89
வெளியன் வேண்மான் 10
வேங்கை மார்பன் 109
வேட்டைமங்கலம் 189
வேண்மாடம் 15, 53. 160
வேண்மாள் 24, 25, 53
வேத்தியன் மண்டபம் 160
வேம்பு (காவன்மரம்) 32, 70
வேலங்குடிச்செப்பேடு 187
வேலன் 50
வேழக்காடு 117
வேள் ஆய் 187
வேள்பாரி 15
வேள்விகுடிச்சாஸனம் 187
வேள்விச்சாலை 22, 141
வேளாவிக்கோமந்திரம் 81
வேளாவிக்கோமாளிகை 160
வேளாவிக்கோமான் பதுமன் 12, 14, 15, 26, 107. 138
வேளிர் வரலாறு 15, 127
வேழம்பர் 60, 134
வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி 20, 101
வைகாவூர் 155, 191
வைதாளிகர் 59
வைதிக தர்மம் 99
வையை 36, 39. 42, 47, 17
ஸ்ரீ சடகோபம் 87
ஸ்ரீதரபட்டன் 87
ஸிலோன் ஆண்டிக்யுடீஸ் 14
ஹரிவம்சம் 5
ஹிரண்யகேசி சூத்திரம் 37
Ananda Comaraswami-11
Augustus-170
Bhandarkar (Dr.)-14
Buhler (Dr. G )-148
Ceylon Antiquities-144
Claudius-170
Eary History of India-8
Cowell's Jataka-44
Epigraphia Indica-24, 109, 152 [190
Ep.Rep-24, 90 109, 127, 183,
Gazetteer of Salem Dist-114
Cazetteer of Trichinopoly-171, 189
Gundert (Dr.)-13
History of Deccan-14
Indian Antiquary-29

Inscriptions of the Madras Presidency-174
Kattiwar-114
Kaveri the Maukharis aud the Sangam age-111
Lewis Rice (Mr.)-148
Malayalam Dictianary 13,130
Mediaeval and Modern Sculpture 112, 145
Madras Museum Plates-137
Mysore and Coorg from the Inscriptions-11, 148
Patini Devi-112
Ptolemy 20, 170
Pulikat-114
Selected Examples of Indian Art-112
Smith (Dr. V. A.)-87, 112, 19, 37
South Indian Inscriptions-131, 188
Talakad 113
Tamil ant Sanscrit Inscriptions-99
The Tamils 1800 years ago-5, 114, 107, 167, 170
Tiberius-175
Travancore Archaeological Series 99, 117, 165
Travancore Manual-186
Victoria Cross-136

R. G. Press, G. T., Madras.